தமிழ் நாட்டுச் சிறுகதைகள்

சக்தி வேல்

18

"அகிலன்"

...லயன்ஸ்

தமிழ்நாட்டுச் சிறுகதைகள்

தொகுதியின் பெயர்	ஆசிரியரின் பெயர்
1 மங்கையர்க்கரசியின் காதல்	மகரிஷி வ. வே. ஸு. ஐயர்
2. நீல மணி	கி. வா. ஜகந்நாதன், பி. ஓ. எல்.
3. கன்யாகுமாரி	த. நா. குமாரஸ்வாமி, பி. ஏ.
4. சந்தனக் காவடி	கி. ஜ. ரா.
5. கனகாம்பரம்	கு. ப. இராஜ்கோபாலன், பி. ஏ.
6. சக்ரவாகம்	ந. சிதம்பர சுப்பிரமணியம்
7. தோட்டியை மணந்த அரசகுமாரி	தி. நா. சுப்பிரமணியன்
8. பவழ மாலை	பி. எம். கண்ணன்
9. வெண் தாமரை	வி. எஸ். ராமகிருஷ்ணன், பி. ஏ.
10. அழகி	க. நா. சுப்பிரமண்யம்
11. லக்ஷ்மி கடாக்ஷம்	ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன்
12. ஜடாதரன்	கே. எஸ். வேங்கடரமணி
13. குழலோசை	ஸரோஜா ராமமூர்த்தி
14. வாடா விளக்கு	சு. குருஸ்வாமி, பி. ஏ., எல். டி.
15. குழந்தையின் மனம்	வித்துவான் த. நா. ஸேநாபதி
16. பிள்ளை வரம்	"பே. தூரன்"
17. தேவகி	"குகப்ரியை"
18. சக்திவேல்	"அகிலன்"
19. மோகினி	வேங்கடலக்ஷ்மி
20. போகிற வழியில்	ந. நாராயணன், பி. ஏ.
21. வஸந்தா	கமலா பத்மநாபன்
22. ஆலமரத்துப் பிள்ளையார்	"புதுமைப்பித்தன்"
23. பட்டுப் புடைவை	"லக்ஷ்மி"
24. பட்டாசுக்கட்டு	"வல்லிக்கண்ணன்"
25. வைரடோலக்	"ஆண்டாள்"
26. சொர்ந்தளிக்கும் பாசம்	A. M. ரஷீத், B. Sc. (Hon
27. ஐ. வி. எஸ். பிள்ளை	வி. எஸ். கிருஷ்ணமூர்த்தி
28. கோகில கானம்	P. K. முத்துஸ்வாமி
29. பொறுமை	து. ரா.
30. புதிய ஒளி	சகுந்தலா ராஜன்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை. 4

தமிழ்நாட்டுச் சிறுகதைகள் - 18

சக்தி வேல்

முதலிய கதைகள்

27-5-76
31-5-76

"அகிலன்"

எழுதியவை

சுவாமி சுத்தானந்த பாரதியார்

சிறப்புரை தாங்கியது

அல்லயன்ஸ் கம்பெனி

மயிலாப்பூர் :: சென்னை - 4

1946

மலிவுப் பதிப்பு ரூ 2-0
உயரிய பதிப்பு ரூ. 2-8

கதைக் கோவை

தொகுதி I

40 எழுத்தாளரின் கதைகள் 40

தொகுதி II

50 எழுத்தாளரின் கதைகள் 50

தொகுதி III

60 எழுத்தாளரின் கதைகள் 60

தொகுதி IV

75 எழுத்தாளரின் கதைகள் 75

தொகுதி V

தயாராகிறது.

*

Printed at Vinodhan Press from form 1 to 11th & the remaining at Rajan Electric Press for Q. H. M. S. 109 - 46.

உள்ளுறை

முகப்புப் படம்

"அகிலன்"

முகவுரை

ஏழு வருஷங்களுக்கு முன்பு கதை எழுத ஆரம்பித்ததி லிருந்து இன்றுவரை எழுதிய கதைகளில், கிடைத்தவற் றில், பிடித்தவைகளை இத்தொகுதியில் சேர்ந்திருக்கிறேன். பல்வேறு சமயங்களில், மாறுபட்ட மனோ உணர்ச்சிகளு டன் எழுதப்பட்டவை. கதைகளைச் சேகரிப்பதில் ஆசிரிய, எழுத்தாள நண்பர்கள் மிகவும் உதவி செய் திருக்கிறார்கள்.

கதைகள் 1, 13 'சக்தி'யிலும், 2, 4, 15 'கல்கி'யிலும், 3, 8, 21 'இந்திரா'விலும், 6, 9, 18, 20 'கலைமகளிலு'ம் 7, 12, 22 'அணிகலத்'திலும், 10, 11, 19, 23 'கலை வாணி' யிலும் வெளிவந்தவை. இவற்றைப் புத்தகத்தில் சேர்த் துக் கொள்ள அனுமதியளித்த மேற்கண்ட பத்திரிகாசிரி யர்களுக்கு என் நன்றி.

இதற்கு முன்னுரை தருவதற்கு இசைந்த சுவாமி சுத்தானந்த பாரதியார் அவர்களுக்கும், இதைச் சிறந்த முறையில் வெளியிட்டிருக்கும் அல்லயன்ஸ் கம்பெனி யாருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

கதைகளின் தன்மைபற்றி நான் ஒன்றும் சொல்வதற் கில்லை; அது வாசகர்களாகிய உங்களைப் பொறுத்தது.

என் அன்னைக்கு இப்புத்தகத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

'அகிலன்'

சிறப்புரை

கதை, கவிதை இரண்டும் கலைத்தோழிகள்; கவிதை கனவில் உதித்துக் கருத்தைத் தொடுவது; கதை கண்ணில் உதித்து வாழ்வைத் தொடுவது; இரண்டும் வாழ்வுத் தோட்டத்தில் கைகோத்தாடும் தோழிகளே. கதை பிறந்தது தமிழிலேதான் என்னலாம். பத்துப் பாட்டிலும் எட்டுத்தொகையிலும் நாலைந்து வரிகளை ஆழ்ந்து பார்த்தாலும் இன்பக்கதை தோன்றும். வள்ளுவர் காமத்துப் பாலில், உயர்ந்த கவிச்சுவையுடன் கதை நயம் பின்னிக் கிடக்கிறது. தமிழின் அகப்பொருளிலக்கியங்களெல்லாம் கதைப் போக்காகவே அமைந்துள்ளன. இந்தியக் கதைகளே உலகின் முந்திய கதைகள். மேற்கே ஈசப் கதைகள் தோன்று முன்பே இங்கே இதோபதேசமும் பஞ்ச தந்திரமும் கதாசரித் சாகரமும் இருந்தன. என்றும் நமது இந்தியக் கலைக்கு கதையிலக்கியங்கள் நல்ல வளமை தந்திருக்கின்றன.

இன்றும் அப்படியே. இன்று தமிழ் புதுமை பெற்று இனிய எளிய அழகிய நடையுடன், சுதந்தரமாக மறுமலர்ச் சிச் சோலையில் ஓடி விளையாடுகிறது. அதை இனி யாரும் கரடுமுரடான வழியில் இழுக்கமுடியாது. தமிழ் ஒரு புதிய சரள மதுர கம்பீரமான வழிகண்டு இன்று உல்லாசமாக நடக்கிறது. இந்த உல்லாச நடை கதையிலக்கியங்களாலேதான் உருவானது.

கல்கி, புதுமைபித்தன், கு. ப. ரா, பிச்ச மூர்த்தி முதலியோரின் கதைகள் உள்ளத்தை அள்ளும் உயிரோவியங்களாகும்.

இந்த வரிசையில் நமது அகிலத்தின்கதைகளையும்வைத்து மதிக்கலாம். அகிலக்கதைகள் அகில உலக வாழ்வின் மூலை முடுக்குகளிலெல்லாம் புகுந்து நயங்களை அள்ளி வருகின்றன. வீட்டிலும் தெருவிலும், நாட்டிலும் பூத்த

அனுபவ மலர்களே அகிலத்தின் சிறுகதைகள். அவர் தமிழ் சலசல வென்று தடையில்லாமல் நடக்கிறது. காட்சிகள் முன்பின் வளையாமல் நேரான அருவிபோலச் செல்கின்றன. ஆண் பெண் வாழ்க்கையை ஊன்றிப் பார்த்து, தமது வாழ்வின் அனுபவங்களையும் கலந்துகொண்டு சரியான இடத்தில் சரியான வர்ணந்தீட்டிக் கதைச் சித்திரத்தைக் கவர்ச்சியுடன் அமைக்கிறார். சக்தி வேல், சாவிலே வாழ்வு, நிலவொளி, கோஷா, பெற்ற மனம், தாமரைப்பூ, மேக சஞ்சாரம், கடவுளின் பிரதிநிதி முதலிய கதைகள் நல்ல சிறுகதைகளின் நல்ல பிரதிநிதிகள். இக்கதைகளை எல்லோரும் படிக்கவேண்டும்.

தமிழ் நாட்டுச் சிறுகதை இலக்கியத்திற்குப் பெருந்தொண்டு புரியும் ஸ்ரீ குப்புசாமி ஐயர் இக்கதை வெளியிட்டால் தமிழன்னைக்கு மற்றொரு மாணிக்கத்தைச் சூட்டியவராவார். எந்தாய் வாழ்க.

சுத்தானந்த பாரதி.



'' அகிலன் ''

1

சக்திவேல்

குடை கவிழ்ந்தாற்போல் பம்பலிட்டு வளர்ந்திருக்கிறதே அந்தப் பிரம்மாண்டமான பழைய காலத்து ஆலமரத் தடியில்தான், நாலு மூலைச் சதுரமான செம்பூராங்கல் மேடைமீது கம்பீரமாக நிற்கிறது சக்திவேல். வேலுக்கு அருகே, மண்ணால் செய்யப்பட்டுக் கரிப்புகை சூழ்ந்து கிடக்கும் ஒரு விளக்கு மாடம். மாடத்துக்கு அப்பால் சாம்பிராணித் தூபம் போடுவதற்காகப் பெரிய இரும்புக் கொப்பரை. அந்தக் கொப்பரைக்கு நேர் உயரே, சற்று ஒதுப்புறமாக ஒரு வெண்கல மணி. ஆல மரத்தின் முரட்டுக்கிளை யொன்றிலிருந்து பித்தளைச் சங்கிலியின் உதவியால் அந்த மணி தொங்கிக் கொண்டிருக்கிறது.

சக்திவேல் கோவிலில் வருஷம் ஒரு முறை திருவிழா. பக்கத்துக் கிராமங்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வந்து சாமிக்குப் பால் பொங்கலிட்டுக் கொண்டாடு வார்கள். அந்தத் திருவிழாத்தான் இன்றைக்கும்.

இன்று காலை திருவிழாக் கூட்டத்தில் யாரோ ஒரு பெண்ணை, சரவணமுத்து கண்டான். சரவணமுத்து சபல சித்தம் படைத்தவன் அல்ல. எத்தனையோ பெண்களை அவன் கண்டிருக்கிறான். எவளையும் கணத்தில் மறந்துவிடுவதுதான் அவன் சுபாவம். ஆனால், இவளை மட்டில், அவ்வளவு சுலபமாய் அவனால் மறக்க முடியவில்லை. "சீ! இதென்ன மூடத்தனம்!" என்று தனக்குத் தானே பல முறை சொல்லிக்கொண்டான்; சிரித்துக் கொண்டான். அங்கும் இங்கும் அலைந்து தன் அலுவல்களைச் செய்து கொண்டிருந்தான். ஆனால், அவன் மனது தான் அவளை மறக்க முயன்றுகொண்டிருந்தது; கண்கள் மட்டில், அவளை மறுமுறை சந்திக்கமாட்டோமா என்று ஆவல் கொண்டிருந்தன. எவளைக் கண்டாலும், அவளாயிருக்குமோ என்று முகத்தை ஏறிட்டுப் பார்ப்பான். வேறாயிருக்கக்கண்டு, சட்டென்று வேறுபுறம் திரும்பிக்கொள்வான். "சீ! என்ன முட்டாள்தனம்?" என்று மறுபடியும் சொல்லிக்கொள்வான்.

இரவு பத்துமணிக்கு மேல், கோவிலுக் கெதிரே, ஒரு மணல் பொட்டலில், ஒரு கருங்கல் மீது, ஆயாசம் தீர உட்கார்ந்திருந்தான். அவன் மனம் நிலைகொள்ளாமல், ஏக்கம் நிறைந்திருந்தது. கிராமாந்தரப் பெண்கள் நிலாப் பாட்டுப் பாடிக்கொண்டே, கும்பல் கும்பலாய்க் கும்மியடித்துக்கொண்டிருந்தார்கள் :

பட்டப்பகல் போலே — நிலவொளி
பாய்ந்து வருகையிலே
வெட்ட வெளிதனிலே — நினையே
வேண்டினேம் வேலவனே!

ஆரம்பத்தில் இந்தப் பாட்டை ஒரு பெண்பிள்ளை மாத்திரம் தனிக்குரலில் பாடினாள். அவள் பாடி முடித்தவுடன், பிற பெண்களெல்லாம் அதையே திரும்பவும்

சேர்ந்தாற்போல் பாடினார்கள். பாட்டு அமுத வெள்ளம் போல் சுற்றிலும் பரவி ஒலித்தது. சரவணமுத்துவும் அதிலே லயித்துப்போனான்.

"முதல் முதலில் பாட்டைத் தொடங்குகிறாளே அந்தப் பெண்மாத்திரம், நாம் இன்று காலையில் சந்தித்த அந்த அழகியா யிருந்தால்!...ஆஹா! என்ன இனிமையான குரல்!..." என்று அவன் எண்ணினான்.

அடுத்த நிமிஷம், தான் அசட்டுத்தனமாய் மனக் கோட்டை கட்டுவதாக அவன் கருதினான். ஆனால், அவ் விதம் அவனால் மனக்கோட்டை கட்டாமல் இருக்கவும் முடியவில்லை. மெல்ல அவன் எழுந்தான். கும்மியடிக்கும் அந்தப் பெண்கள் கூட்டத்தின் அருகே சென்றான். பாட்டை ஆரம்பித்து வைக்கும் அந்தப் பாடகி எவளாய்த் தான் இருக்கும் என்று பார்க்க முயன்றான். விசித்திரம்! விசித்திரம்! இவள் அவளே தான்; காலையில் அவன் கண்ட குமரிதான் இந்தப் பெண்களின் மத்தியில் நின்றுகொண்டு அலட்சியமாகப் பாட்டைத் தொடங்கினாள்! இதைக் கண்டவுடன் அவன் உள்ளம் குதூகலத்தோடு ஆகா யத்தில் பறப்பதுபோல் தோன்றியது. பேசாமல் அந்த இடத்தை விட்டு வெளியேவந்து மீண்டும் பாறையின் மேல் துண்டை விரித்துப் போட்டுப் படுத்துவிட்டான்.

2

சரவணமுத்து காட்டுப்பட்டியில் காடு காவல் மேஸ்திரி கறுப்பத் தேவனிடம் சேவகனா யிருக்கிறான். கொஞ்சம் நிலபுலம் உண்டு. அவன் தகப்பனுக்கும் காடு காவல் வேலைதான். அவனுக்கு வயதாகி அவன் உப காரச்சம்பளம் பெற்ற பின்பு, அதே வேலையை இப் போது சரவணமுத்து பார்த்து வருகிறான். இதுவரையில் சரவணமுத்து இரண்டு மேஸ்திரிகளின் கீழே வேலை பார்த்து வந்திருக்கிறான். அவர்களுக் கெல்லாம் இவன்

மீது அலாதிப் பிரியம். இப்போது வந்திருக்கும் கறுப்பத் தேவன் மூன்றாவது மேஸ்திரி. தேவனின் குணங்கள் ஒன்றும் தனக்குப் பிடிக்கவில்லையென்று, ஆரம்பத்திலிருந்தே சரவணமுத்து தன் தகப்பனிடம் புகார் செய்திருக்கிறான்.

ஒரு நாள் அந்திநேரம். காட்டுப்பட்டியை அடுத்த மலைச்சரிவில், உசிலமரத்து நிழலில், கறுப்பத்தேவனை உட்காரச் சொல்லிவிட்டு, தான் மாத்திரம் காட்டுக்குள் சுற்றிப் பார்த்துவிட்டு வருவதற்காகச் சரவணமுத்து புறப்பட்டான். கறுப்பத்தேவன் பக்கத்திலிருந்த சுனைத் தண்ணீரை அள்ளிக்குடித்துவிட்டு, நடந்த களைப்புத்தீர அங்கேயே சற்று அயர்ந்து படுத்தான். திறந்த வெளியாயிருந்ததால், சரியாகத் தூக்கம் வரவில்லை.

காட்டுக்குள் சென்ற சரவணமுத்து நாலாபக்கமும் போய்ப் பார்த்துவிட்டு, கையில் கருங்காலிக் குச்சி ஒன்றை நறுக்கிச் சீவிக்கொண்டே, மெதுவாகத் திரும்பினான். காட்டுக் கொடிகளில் கண் விழித்து நோக்கும் விதம் விதமான மலர்களையும் அந்த மலர்களைச் சுற்றிச் சுழன்று கொண்டிருந்த வண்டினங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டும், ஏதோ ஒரு ராகத்தைச் சீட்டியடித்துக்கொண்டும், அடிமேல் அடிவைத்து நடந்துகொண்டிருந்தான்.

அவன் நடை திடீரென்று தடைப்பட்டது. ராகமும் அப்படியே பாதியில் நின்றுவிட்டது. சந்தடி செய்யாமல் உற்றுக் கேட்டான். ஏதோ ஒரு குரல்; தீனமான ஒரு பெண்ணின் குரல்; பரிதாபமாகக் கதறும் அபயக் குரல்!

சரவணமுத்துவின் கால்கள் ராட்சச வேகம் பெற்றுவிட்டன. கல்லையும் முள்ளையும் பாராமல், குரல் வந்த திக்கை நோக்கிப் பிசாசுபோல், அந்தக் காட்டின் மத்தியில் ஓடினான். குறுக்கே நின்ற புதர்களில் கால்கள் உரசி ரத்தம் பீறிட்டுக்கொண்டு வந்தது.

சரவணமுத்து அந்தச் சத்தம் பிறந்த இடத்தை நெருங்கிவிட்டான். அங்கே அவன் கண்டதென்ன? கறுப்பத்தேவன் எவளோ ஒரு பெண்பிள்ளையை முரட்டுத் தனமாகக் கையிலே பிடித்திருந்தான். அவனது இரும்புப் பிடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக, அந்தப் பெண் அலறியவண்ணம் திமிறிக்கொண்டிருந்தாள்.

"என்ன மிருகத்தனம்! தேவனு இப்படிப்பட்ட அடாத செய்கைக்குத் துணிந்தான்! அவள் யார்...அந்தப் பெண்?...யாரா யிருந்தா லென்ன? உதவியற்றுத் தனியே தவிக்கும் ஒரு பெண்தானே!"

சரவணமுத்து புலிபோல் கறுப்பத்தேவன் மீது பாய்ந்து அவனைக் கீழே தள்ளினான். அடுத்த கணம் கறுப்பத்தேவனின் முகத்தில் பளிர் பளிரென்று எண்ணற்ற அறைகள் மாறி மாறி விழுந்தன. ஒரு வழியாக அவன் பேச்சு மூச்சற்றுப் பிரக்ஞை இழந்தவுடன், அவனை அந்த இடத்திருந்து, சிறிது தூரத்தில் புரட்டித் .தள்ளி விட்டு, "உஸ்...அப்பாடா!" என்று தரையில் உட்கார்ந்த படியே. சரவணமுத்து பெருமூச்சு விட்டான். அவன் பார்வை அங்கே நின்றுகொண்டிருந்த பெண்ணின்மேல் இப்போதுதான் விழுந்தது.

அவனுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. வைத்த கண் வாங்காமல் அவளையே நோக்கிவிட்டு, "நீ சக்திவேல் திருநாளைக்கு வந்திருந்தே, இல்லையா?" என்றான்.

பிரமித்து நின்ற அந்தப் பெண், "ஆமாம், வந்திருந் தேன்" என்று மெலிந்த குரலில், நன்றிகனியப் பதி லளித்தாள்.

"நிலாக் கும்மியின்போது நீதானே ஆரம்பத்தில் பாடினது?"

"ஆமாம்,"

"சரி...நீ இங்கே எப்படி இந்த நேரத்திலே தனியா வந்தே? காட்டுக்குள்ளே உன்னைப் போல் ஒருத்தி தனியே வரலாமா?"

"வீட்டிலே அப்பனுக்கு உடம்பு சரியில்லே. ரெண்டு சுள்ளிக் குச்சி கொண்டு போவோமின்னு வந்தேன். இங்கே வந்தா இந்த மாதிரி ..." என்று கூறி, அதற்கு மேல் ஒன்றும் சொல்ல முடியாமல் தலைகுனிந்து கண்ணீர் விட்டாள்.

"அது கிடக்கட்டும்; நீ எந்த ஊரு? உங்க ஆயா உன்னைத் தனியே விட்டுட்டு வீட்டிலே என்ன செய்யரு? உனக்குத்தான் புத்தி வேண்டாம்? என்ன துணிச்சல் உனக்கு!"

"நான் இருக்கிறது பொன்னம்பட்டி. எனக்கு ஆயா இருந்தா நான் ஏன் இப்படித் தனியா வர்ரேன்? அது தான் செத்துப் போயிட்டுதே."

இன்னும் அநேகம் கேள்விகளை அவளிடம் கேட்க வேண்டுமென்று தோன்றியது சரவணமுத்துவுக்கு. ஆனால், அவைகளையெல்லாம் அவன் அவளிடம் கேட்கவில்லை. கேள்விகள் அவன் நெஞ்சில் துடிதுடித்துக் கொண்டிருந்தனவே யல்லாமல், வெளிவர அவைகளுக்குத் தைரியம் இல்லை.

"சரி, பெண்ணே பதனமாய் வீட்டுக்குப் போ. போவியா? இல்லை. நான் கொண்டுவந்து விடட்டுமா?"

"வேண்டாம். நானே போறேன்" என்றாள். ஆனால் அவள் நகரவில்லை. தலை குனிந்த வண்ணம் தயங்கித் தயங்கி நின்றாள்.

"ஏன் நிக்கிறே?"

"நீங்க யாருன்னு சொல்லலியே! ... இந்தப் படு பாவியை உங்களுக்கு முன்னாடியே தெரியுமோ?"

சரவணமுத்துவுக்குத் தன் விவரங்களை அவள் கேட்டதில் அடங்காத களிப்பு, தன்னையும் தேவனையும் பற்றிய தகவல்களை அவளுக்குத் தெரிவித்தான்.

“ஆமாம்: அந்தச் சக்திவேல் திருவிழாவில், என்னைக் கண்டது உங்களுக்கு என்ன இவ்வளவு ஞாபகம்?”என்று அவள் கேட்டாள். அந்தக் குரலிலே சிறிது செருக்கும் வெட்கமும் தோய்ந்திருந்தன.

“அதுவா... அது எனக்குத் தெரியாது” என்று சொல்லிக் கல கல என்று சிரித்தான் சரவணமுத்து.

பிறகு. அவள் நடந்தாள்.

“இந்தா, உன் பேர் என்ன ?” என்று கேட்டான் சரவணமுத்து.

அவள் பாதி திரும்பியும் திரும்பாமலும், “மீனுன்னு கூப்பிடுவாங்க” என்று சொல்லிக்கொண்டே அகன்ருள்.

“மீனு! மீனு!” என்று தனக்குத்தானே உச்சரித்துக் கொண்டு திரும்பிய சரவணமுத்து, “இந்தச் சனியனை எப்படி வீட்டிலே கொண்டுபோய்ச் சேர்ப்பது?” என்று எண்ணினுன். அப்போதுதான் அவன் உடம்பு கொஞ்சம் நடுங்கியது.

எப்படியோ தேவனை வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்தான்.

3

கறுப்பத்தேவன் சும்மா விடுவானு? அவன் தன் வேலைத்தனத்தைக் காண்பித்துவிட்டான். சரவணமுத்து வின்மேல் பொய்க் குற்ற மொன்று சாட்டி, அதற்கு வேண்டிய சாட்சியங்களையும் தயார் செய்து, அவனைப் பற்றி மேல் அதிகாரிகளுக்கு எழுதினுன். ஒரு பெரிய காட்டு மரத்தை வெட்டிப் பக்கத்து ஊரில் ஒருவனிடம் சரவணமுத்து விற்றுவிட்டதாக, அவன் பழி சுமத்தினுன்.

மேல் அதிகாரிகளிடமிருந்து உடனே உத்தரவு வந்து விட்டது. சரவணமுத்துவை வேலையை விட்டு நீக்கியிருப்பதாகவும், அவன் மீது கோர்ட்டில் வழக்குத் தொடரப்போவதாகவும், அவனைப் பிடித்துப் போலீசாரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றும், அதில் கண்டிருந்தது. அதன்படியே சரவணமுத்து போலீசாரிடம் ஒப்புவிக்கப்பட்டான். அதிகாரிகள் அவன்மீது வழக்குத் தொடர்ந்தார்கள். சரவணமுத்துவுக்கு ஒரு வருஷக் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. சரவணமுத்து சிறையில் அடைபட்டான்.

மறுநாள் சாயங்காலம் காட்டுப்பட்டியில் சக்திவேல் சன்னதியில் மூன்று பேர் நின்றுகொண்டிருந்தார்கள். சரவணமுத்துவின் தகப்பன், மீனு, அவள் தகப்பன் இந்த மூன்று பேரும்தான். தன் மகனுக்கு நேர்ந்த கஷ்டத்தைச் சரவணமுத்துவின் தகப்பனால் பொறுக்க முடியவில்லை. சக்தி வேலை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டே பொங்கிப் பொங்கி அழுதான். தள்ளாத வயசில் அவன் இப்படி அழுதுகொண்டிருப்பதைக் காண, மற்ற இருவருக்கும் சகிக்கவில்லை. அவர்களும் அவனோடு சேர்ந்து கதறினார்கள். அவன் வாய்விட்டுப் புலம்பத் தொடங்கினான்:

"அட சக்தி! எனக்கு விவரந்தெரிஞ்ச காலத்திலேயிருந்து உன்னைத்தாண்டா நம்பியிருக்கேன். மனிசத் துணையாலே ஆகாத காரியம் உன்னாலே ஆகுமின்னு நினைச்சதெல்லாம் பொய்யாப் போச்சேடா! ஒரு பாவமும் அறியாத என் மகனை இப்படிச் சிறையிலே தள்ளிட்டானுகளே பாவிகள்! உன்னையே கதியின்னு உன் காலடியிலே கிடக்கிற என்னை நீ இப்படிச் சோதிக்கலாமா?" என்று கூறி, அப்படியே சுருண்டு விழுந்தான்.

மீனுவுக்கும் அந்தச் சக்தி வேலின்மேல் கோபங்

கோபமாய் வந்தது. நம்பினவர்களை நட்டாற்றில் கை விடுவதற்கு ஒரு தெய்வமிருந்தால், அதைப்போல் தெய்வமொன்று இல்லாதிருப்பதே மிகவும் உத்தம மென்று அவள் கருதினாள். "அட சக்தி! நீ மாத்திரம் அடுத்த வருசத்துக்குள் இத்தனை அக்கிரமத்துக்கும் காரணமான அந்தக் கறுப்பத்தேவனை ஒழிக்காமலிரு, அப்புறம் சொல்கிறேன் உன்னை! நீ சக்தியுள்ள தெய்வ மாயிருந்தால், உனக்கு இந்தப் பேர் நிலைத்து நிற்கவே னுமா யிருந்தால், அடுத்த வருசம் இதே நாளைக்குள் அந்தப் பாழும் பயல் மேஸ்திரி மண்ணோடு மண்ணாய்த் தொலையவேண்டும்! இல்லாவிட்டால் நீ சக்திவேலில்லை; சாதாரணத் துருப்பிடித்த இரும்பு வேல்தான்! காடு காவலுக்காகச் சரவணமுத்து தன் வீட்டு மூலையில் சார்த்தி வைத்திருந்தாரே, அந்த மாதிரி மழுங்க வேல்!" என்று மீனா தனக்குள் கறுப்பத்தேவனின் மீதிருந்த வயிற்றெரிச்சலை யெல்லாம் சக்தி வேலின்மேல் திருப்பி, அதோடு சபதமும் போட்டாள்.

4

மீனாவைச் சந்திப்பதற்கு முன்பு சரவணமுத்துவைச் சிறைக்கனுப்பி யிருந்தால், அவனுக்குச் சிறைவாசம் ஒன்றும் அவ்வளவு கஷ்டமா யிருந்திருக்காது. ஆனால், இப்போதோ அவனுக்குத் தனிமையில் கண நேரப் பொழுது போவதுகூட ஒரு யுகமா யிருந்தது. தினந்தினம் பொழுது விடிவதையும், இரவு வந்து மறைந்து அடுத்த நாள் கீழ்வானம் வெளுப்பதையும், மிக ஆவலோடு எதிர் பார்த்திருந்தான். அவனுடைய சிறை நண்பர்களிடமெல்லாம் தனக்கு ஒரு வருஷம் முடிய இன்னும் எத்தனை நாட்கள் போகவேண்டும் என்று கேட்பதுதான் வேலை.

ஒருமுறை அவன் தந்தை அவனைக்காண அனுமதி வாங்கிக்கொண்டு சிறைக்கு வந்திருந்தான். சரவணமுத்து

அவனைப் பார்த்துக் கேட்ட முதல் கேள்வி இதுதான்: "மீனு சுகமா யிருக்காளா?"

."இப்போகூட உன்னைப் பார்க்கணுமனுதான் அவ இங்கே வரேன்னு பிடிவாதம் பிடிச்சா! நான்தான் கூட்டி வரலை" என்றான் தகப்பன்.

"ஏன் கூட்டி வரப்படாது? அடுத்ததரம் மறந்திடாமல் அழைச்சுக்கிட்டு வா" என்றான் சரவணமுத்து.

ஆனால், அடுத்த தடவை அவர்கள் பார்க்க விரும்பிய போது, அனுமதியே கிடைக்கவில்லை.

5

ஒவ்வொரு நாளாகக் கழிந்து, ஒரு வருஷமுடிவு நெருங்கிவிட்டது. நாட்கள் செல்லச் செல்ல ஒருவிதத்தில் மீனுவுக்குச் சொல்லமுடியாத சந்தோஷம். ஆனால், அந்தச் சந்தோஷத்தை அவளால் பூரணமாக அனுபவிக்க முடியவில்லை. அவளுக்குச் சக்திவேல் சாமியின்பேரில் எல்லையற்ற ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது.

"இன்னும் அந்த மேஸ்திரி முதலில் இருந்தது போலவே ஒரு குறையும் இல்லாமல் இருக்கிறானே! அப்படியானால் நாம் அன்றைக்கு வேண்டிக்கொண்டோமே. அது தெய்வந்தானா? அல்லது அத்தனையும் பொய்யா? அந்தப் பழிகாரனுக்கு இன்னும் ஏன் ஒரு கேடும் இல்லை?" என்று மீனு உள்ளக்குள்ளே பொருமிக் கொண்டாள்.

இன்று இரவோடு அவள் சாமியை வேண்டிக் கொண்டு ஒரு வருஷம் ஆகப்போகிறது. இந்தக் கடைசி நாளிலும் முக்கால்வாசிப் பொழுதுக்குமேல் ஒரு பலனும் காணமல் சென்றுவிட்டது. இன்னும் சில மணி நேரந் தான் பாக்கி, இந்தக் குறுகிய நேரத்தில் எதுவும் விசேஷ சம்பவங்கள் நடந்துவிடக் கூடுமென்று மீனு கிஞ்சித்தேனும் நம்பவில்லை. "ஒரு வருஷ காலமாய் ஒன்றுஞ்

செய்யமுடியாத இந்தக் கையாலாகாத தெய்வம் இனிமேல் தான் கறுப்பத்தேவனைப் புரட்டித் தள்ளிவிடப் போகிற தாக்கும்!" என்று நினைத்துக்கொண்டு, தன் வஞ்சம் தீர்த்துக்கொள்ளச் சத்திவேல் கோவிலுக்குத் தனியே காளி தேவிபோல் வந்துசேர்ந்தாள்.

கோவிலில் இரவின் நிசப்தம் பயங்கரமா யிருந்தது. வழக்கமாக வந்து கூடும் காக்கைக் கூட்டங்கள் கூட எப்போதோ உறங்கிவிட்டன. என்று மில்லாதபடி யாரோ அன்று அங்கே விளக்குப் போட்டுவிட்டுப் போயிருந்தார்கள். மாடத்துக் குள்ளிருந்த அந்த அகல் விளக்கின் தீபம் காற்றின் வேகத்தால். அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. இவை ஒன்றையும் சட்டை செய்யாமல், மீனு சக்திவேலுக் கருகில் நின்றுகொண்டு, தன் மனக்கசப்பை யெல்லாம் படபடப்போடு கொட்டித் தீர்த்தாள். நிசப்தத்தைத் தகர்த்துக்கொண்டு அவள் குரல் உக்கிரமாய்க் கிளம்பியது.

"அட சக்தி! உனக்கு சக்தியிருந்தால் நான் சொல்கிற தைக் கேட்டுக்கொள்; இனிமேல் உனக்கு இங்கே வேலை கிடையாது! எங்கேயாவது ஜனங்களில்லாத இடத்துக்கு ஓடிப்போ! உன்னைக் கையெடுத்துக் கும்பிடுகிறார்களே, அத்தனை பேரும் மூடர்கள்! உனக்குத் திருவிழாக் கொண் டாடுகிறவர்களும் அப்படித்தான்! போதும்! உன்னை நம்பி நாங்கள் மோசம் போனதெல்லாம் போதும்! நீ எங்களைக் காப்பாற்றியதெல்லாம் போதும்! இனி நீ எங்களுக்குச் செய்யவேண்டிய உதவி, நீ இந்த இடத்தை விட்டுச் சொல்லிக்கொள்ளாமல் ஓடிப்போவதுதான்! நீ இருக்கிற இடத்திலே எவனாவது வழிப்போக்கன் வந்து இளைப்பாற லாம் ... வெட்கங்கெட்ட தெய்வமே! இனி உன்னைக் கை யெடுத்துக் கும்பிட்டால் நான் மறு ஜாதி!... உன்னை நினைத்து நினைத்துக் கதறுகிறாரே அந்தக் கிழவர், அதைக்

கேட்டாவது உன் நெஞ்சு இளக வேண்டாமா? உன்னைப் போல் உன் நெஞ்சும் இரும்புதானோ? அவர் ஜயிலிலே யிருந்து வந்தவுடன், அந்தப் பாவிப் பயல் அவருக்கு இன்னும் என்ன தீங்கு செய்யப் போகிறானோ?"

மீனா கடவுளை முழு வேகத்தோடு தாக்கிக்கொண்டு நின்ற இந்தச் சமயத்தில், ஆலமரத்தின் இலைச் சருகு களில் சரசர என்று ஒரு சத்தம் கேட்டது. தன்னுடைய பேச்சை நிறுத்தாமல், சத்தம் வந்த திக்கில் மெதுவாகத் திரும்பிப் பார்த்தாள். ஏதோ சிறிது தூரத்தில் நிழலை ஒத்த ஓர் உருவம் தட தட என்று ஓடுவதுபோல் தெரிந்தது. அதைப் பார்த்தவுடன் கணப்பொழுது மீனாவின் இருதயம் திக்கென்று துடிப்பற்று நின்றது. அடுத்த நிமிஷத்தில் அதைப்பற்றிக் கவலைப்படாமல், அவள் மேன்மேலும் கடவுள்மீது வசை மாரி பொழிய ஆரம்பித்தாள். சத்தம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டேபோய்க் கடைசியில் முற்றிலும் நின்றுவிட்டது.

மீனா வீட்டுக்குத் திரும்பியபோது, அவள் தாழி டாமல் சாத்திவிட்டு வந்திருந்த வீட்டுக் கதவு அப்படியே இருந்தது. சந்தடி செய்யாமல் உள்ளே நுழைந்து, விரித்துக் கிடந்த படுக்கையில் படுத்துக்கொண்டாள். இரண்டு நாட்களாக அவளும் அவள் தகப்பனும், சரவண முத்துவின் வீட்டில்தான் வாசம், சரவணமுத்துவை வரவேற்பதற்காக, அவர்கள் அங்கே வந்து தங்கி யிருக்கிறார்கள்.

மீனாவுக்கு அதன் பிறகு தூக்கமே வரவில்லை. சக்திவேல் கோவிலில் தன் கண்ணில்பட்ட விபரீதமான நிழலுருவத்தைப் பற்றியும், மறு நாள் தான் சந்திக்கப் போகும் தன் சரவணமுத்துவைப் பற்றியுமே திரும்பத் திரும்ப எண்ணிக்கொண்டு, இரவு கழியும் வரை விழித்திருந்தாள்.

6

அடுத்த நாள் சூரியோதயத்துக்குள் ஊரெங்கும் இதே பேச்சு. முதல் நாள் இரவு கறுப்பத்தேவன் பக்கத்துக் கிராமத்திலிருந்து சக்திவேல் சன்னதி வழியாகத் தனியே வந்து கொண்டிருந்தானும். ஆலமரத்தடியில் வந்தவுடன், அவனை என்னவோ அரட்டியது போலிருந்ததாம். பயந்து போய் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தானும், ஓட ஓடச் சத்தம் அவனைத் தொடர்ந்து வருவதுபோல் இருந்ததாம். வழியிலேயே வாயாலும் மூக்காலும் ரத்தம் கக்கிச் சோர்ந்து விழுந்து மாண்டுவிட்டானும். அவன் முதுகிலே வேல் குத்தியதுபோல் ஒரு காயமும் இருந்ததாம். இப்படி ஊர் ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். இதையெல்லாம் கேட்ட மீனு யாருடனும் பேசவில்லை. வெகு நேரம் மௌனமாய் வீட்டிலே உட்கார்ந்திருந்தாள். பின்பு, குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு, நெற்றியில் குங்குமம் இட்டுக் கொண்டு, கையில் தேங்காய் பழத்தட்டுடன் சக்திவேல் கோவிலுக்குப் பயபக்தியுடன் புறப்பட்டாள். அங்கே புஷ்பத்தால் தெய்வத்தை நன்ருக அலங்கரித்த பிறகு, தேங்காய் உடைத்துவைத்து, சாம்பிராணி சூடத் திபாராதனை செய்வித்து, தான் செய்த பிழையை மன்னிக்கும்படி வேண்டினுள். அவள் கண்கள் அரை குறையாய்த் திறந்திருந்தன. அவைகளினின்றும் கண்ணீர் பொங்கி ஊற்றெடுத்தோடியது. மண்டியிட்டவாறே, ஈசனை மனங் கனியத் தொழுதுகொண்டிருந்தாள்.

அப்போது, மேலே இருந்த வெண்கல மணியிலிருந்து 'டாண்...டாண்!' என்ற ஓசை கணீரென்று எழுந்தது. மீனு ஆச்சரியத்தோடு நிமிர்ந்து மேலே நோக்கினுள். அங்கே மரக்கிளையில் சாய்ந்த வண்ணமே குறும்புப்

பார்வையோடு நின்றுகொண்டிருந்தான் சரவணமுத்து. அவன் உதடுகள்,

சுற்றி நில்லாதே, போ! — பகையே
துள்ளி வருகுது வேல்!

இந்தப் பாட்டின் அடியை மெதுவாகப் பாடிக் கொண்டிருந்தன.

மீனு நிகைத்து நின்ருள். என்னவோ ஒரு பயமும் ஏக்கமும் அவளைப் பிடித்து ஆட்டின. 'அப்படியானல்...?'' என்று ஏதோ கேட்க வாயெடுத்தாள். இதற்கு மேல் வார்த்தைகள் வெளிவரவில்லை.

சரவணமுத்து கல கல என்று பேய்போல் சிரித்தான். ''ஆமாம், மீனு! ஆமாம். துருப்பிடித்த சக்தி வேலை நான் சுத்தம் செய்துவிட்டேன்'' என்ருன்.

''என்ன காரியம் செய்தீர்கள்?'' என்று கத்தினுள் மீனு. அவள் உடலம் நடுங்கியது. அவள் கண்கள் வெறித்து விழித்தன.

சரவணமுத்து மெல்ல நெருங்கி, அவளை யணைந்து, முகம் திருப்பி, ''மீனு! ஏன் இப்படி விழிக்கிறே? நடந்தது நடந்துவிட்டது, இந்தச் சீமையில் இனி எனக்கு இட மில்லை. உன்னைப் பார்க்கவே இந்நேரம் இங்கே நின்றேன். இனி நான் கண்காணுத சீமைக்குப் போய் வாழவேண் டியதுதான். போகுமுன் எனக்கு ஒரே ஒரு வரம் கொடு. ஒரே ஒரு முத்தம்...'' என்ருன்.

மீனு உணர்வற்ற மரம்போல் அவசமாய் நின்ருள்.

சரவணமுத்து தன் விருப்பத்தைப் பூர்த்தி செய்து கொண்டான். பிறகு, கண்ணீருடன் அவளைவிட்டு நகர்ந் தான். அவன் கண் மறையும் தூரம் செல்லும் வரையில், கல் சிலைபோல் நின்ற அவள், அவன் மறைந்ததும்,

"ஐயோ! போகாதே! என்னைவிட்டுப் போகாதே! ' என்று அலறினாள்.

இல்லை; அவன் போய்விட்டான். இனி என்று வருவானோ?

2

சரஸியின் ஜாதகம்

ஒரு நாள் மாலை விளக்கு வைக்கும் சமயம். வெகு நேரம் நடந்த களைப்புடன் ஒரு கிராமத்தின் சமீபத்தில் வந்து கொண்டிருந்தேன். எதிரே வீடுகள் இருப்பது தெரிந்ததும் களைப்பு இன்னும் அதிகமாவது போலத் தோன்றியது. அத்துடன் கால் வலியும் சேர்ந்துகொண்டதால் அடிமேல் அடி வைத்து மெதுவாக நடந்துசென்றேன்.

ஊருக்கு வெளியே அதன் எல்லையில் ஒரு பழைய வீடு இருந்தது. இரண்டு பக்கங்களிலும் திண்ணைகள். உள்ளேயிருந்து விளக்கு வெளிச்சம் மங்கலாக வெளியே தெரிந்தது.

திண்ணையில் சற்று உட்கார்ந்து இளைப்பாறிவிட்டுப் பிறகு ஊருக்குள் செல்லலாம் என்ற எண்ணத்துடன் அருகில் சென்றேன். அதே சமயத்தில் கதவைத் திறந்து கொண்டு ஒரு பெரியவர் வெளியே வந்தார். வந்தவர் ஒரு முறை என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, "வாங்கோ; உட்காருங்கோ ; எங்கேயிருந்து வருகிறீர்கள் ? " என்று கேட்டார்.

"வழிப்போக்கன் : சற்று இளைப்பாறிப் போகலாம் என்று உட்கார்ந்தேன்" என்றேன்.

"ஆஹா, அதற்கென்ன ? உள்ளேதான் வந்து உட்காருங்களேன்" என்று உபசரித்துப் பெரியவர் என்னை உள்ளே அழைத்துப் போனார்.

வீட்டில் அவரையும் ஒரு சிறு குழந்தையையும் தவிர வேறு ஒருவரையும் காணோம். குழந்தை முழங் காலை மடித்துக்கொண்டு கையைத் தூக்கித் தூக்கி வைத்தபடி தரையில் தவழ்ந்து கொண்டிருந்தது. வீட்டில் எங்கே பார்தாலும் ஒட்டடையும் சிலந்திக் கூடுகளும் தொங்கிக் கொண்டிருந்தன. அத்துடன் வெகு நாளைய கரிப்புகை யும் சூழ்ந்திருந்ததால் அந்த வீட்டைப் பற்றி என் மனதில் கலவரம் ஏற்பட்டது.

சற்று நேரம் குழந்தையின் விளையாட்டில் கவனத் தைச் செலுத்தினேன். பிறகு, கிழவரைப் பார்த்து, "பையன் உங்களுடைய பேரப் பிள்ளையோ?" என்றேன். உடனே, "ஏன் இந்தக் கேள்வி கேட்டோம்" என்று தோன்றிற்று.

கிழவர் முகத்தை ஒரு மாதிரி வைத்துக்கொண்டு, "இவனுக்குத் தாயும் நான்தான்; தகப்பனும் நான் தான்" என்றார் சலிப்புடன்.

நான் ஒன்றும் புரியாமல் விழித்துப் பார்க்கவே, கிழவர் மேலும் தொடர்ந்து, "குழந்தை என்னுடையது தான்; பிறந்ததிலிருந்தே தாய்முகம் காணக்கொடுத்து வைக்கவில்லை. இந்தச் சிசுவால்தான் இன்று வரையில் வீட்டில் விளக்கெரிந்து கொண்டிருக்கிறது. இல்லா விட்டால்........" என்று பாதியில் நிறுத்தினார்.

அவருடைய குரல் பரிதாபகரமாக இருந்தது. கஷ் டத்தில் அடிபட்டவர்போல் தோன்றியதால் ஆறுதலான வார்த்தை ஏதாவது சொல்லலாமென்று, "குழந்தை மூக்கும் முழியுமாய் அழகாய் இருக்கிறான்" என்றேன்.

"அதற்கென்ன? அவன் அம்மாவின் அழகு அவனுக்கு வராமல் எங்கே போகும்?" என்றார்.

மேலே பேச முடியாமல் அவர் குரல் தழுதழுத்தது.

அந்தக் குழந்தையின் நெற்றி, புருவம், கண்கள். யாவையும் எங்கேயோ பார்த்த ஞாபகம் எனக்கு உண்டாயிற்று. எப்போது, எவ்விடத்தில் என்பது சரியாக நினைவிற்கு வரவில்லை.

என் நெஞ்சு வேகமாக அடித்துக்கொண்டது. அந்தக் குழந்தையின் முகத்திலிருந்துகொண்டு அதே மாதிரியான இன்னொரு முகம் என்னைப் பார்த்துப் புன்னகை புரிவது போல் தோன்றிற்று. என் மனத்தில் தோன்றிய சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொள்ளவேண்டித் துடிதுடித்தேன். ஆனால் எப்படிக் கேட்பது? ஒருவாறு சமாளித்துக் கொண்டு, "குழந்தை தாயாரைக் கொண்டிருப்பதாகவா சொல்கிறீர்கள்? தாயாரும் இந்த ஜாடையாகத்தான் இருப்பாளோ?" என்றேன்.

"ஆம், சரஸ்வதி என்றால் சாக்ஷாத் சரஸ்வதி தேவியேதான். அவள் இருந்தாள்; வீட்டில் ஒளி இருந்தது. அவள் போய்விட்டாள்; வீட்டின் ஒளியும் போய்விட்டது. இனி ஒரே இருள் மயந்தான்..."

சரஸ்வதி! பெயரைக் கேட்டவுடன் ஒருகணம் இதயம் பட்டென்று நின்று, மீண்டும் படுவேகத்துடன் புறப்பட்டது. குழந்தையை வாரி எடுத்து உச்சி மோர்ந்தேன். வருஷங்களின் எல்லையைத் தாண்டி நினைவுப் பறவை சிறகடித்தது.

2

சரஸி அடுத்த வீட்டுப் பெண். ஆனால் எங்கள் வீட்டில்தான் அவளுக்குச் சதாகாலமும் இருப்பு. அம்மாவுக்குப் பெண் குழந்தை கிடையாது. அந்தக் குறையை நிவர்த்தி செய்ய வந்தாள் சரஸி.

அவளுக்குத்தான் அம்மாவின் செல்லம் அதிகம். நேரத்திற்கு ஒரு பூச்சூடி, உடை உடுத்து உடுத்து அழகு பார்ப்பாள். அவளைப்பற்றி என்னிடமும் அப்பா

விடமும் பெருமையாய்ப் பேசுவதில் அம்மாவுக்கு ஆனந்தம்.

நான் அப்போது பத்தாவதுபடித்துப் பரீக்ஷை தேறி விட்டேன். மேல் படிப்புக்குப் பட்டணம் புறப்படுவதற்கான ஆயத்தங்கள் நடந்து கொண்டிருந்தன. மறுநாள் பொழுது விடிந்தால் கிளம்பவேண்டும். பெட்டி படுக்கைகளைச் சரிபார்த்துக்கொண்டு அறையில் உட்கார்ந்திருந்தேன்.

அறைவாசலில் நின்று யாரோ தேம்பும் சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். சரஸி கண்ணும் கண்ணீருமாய் நின்றுகொண்டு பாவாடைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொண்டிருந்தாள்.

"ஏன் சரஸி, அழுகிறாய்?"

"நீ பட்டணத்துக்குப் போகப் போறாயாமே!"

"ஆமாம், அதற்காக?"

"நானும் உன்னோடு வரேன் கோபு!"

"நீயா? நீ அங்கெதற்கு?" என்றேன் ஆச்சரியத்தோடு.

"உன்கூடப் படிப்பதற்காகத்தான்!"

"அடி அசடே! உனக்கு என்னடி அங்கே படிப்பு வைத்திருக்கிறது? இதற்காக யாரும் அழுவார்களோ? உனக்குப் பட்டணத்திலிருந்து என்ன வாங்கிக்கொண்டு வரவேண்டும் சொல்" என்றேன்.

சரஸ்வதியின் வருத்தமெல்லாம் மறைந்து, அவளுக்குச் சிரிப்புக்கூட வந்துவிட்டது. தலையை ஒரு புறமாகச் சாய்த்துக்கொண்டு, என்னைப் பார்த்துவிட்டு வெளியே ஓடிவிட்டாள்.

அடுத்த வருஷம் நான் ஊருக்கு வந்தபோது சரஸ்வதி

எங்கள் ஊரில் இல்லை. அவளுடைய தகப்பனார் வேறொரு ஊருக்கு மாற்றலாய்ப் போய்விட்டார்.

3

நான்கு வருஷங்கள் சென்றன.

பி. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டு என் சொந்த ஊருக்கு வந்திருந்த சமயம். ஒரு நாள் சாயந்தரம் புத்தகமும் கையுமாய், குளத்தங்கரை அரசமரத்தடியில் உட்கார்ந்து கதை படித்துக்கொண்டிருந்தேன்.

அப்போது இடுப்பில் குடத்துடன் ஒரு பெண் படிக்கட்டுகளில் ஏறிக் குளத்தை விட்டு வெளியே வந்தாள்.

அவள் முகம் சற்று நிமிர்ந்ததும் ஆச்சரியத்தை என்னால் அடக்க முடியவில்லை. கண்களை அகல விழித்துக் கொண்டு பார்த்தேன். சந்தேகமே இல்லை!

"சரஸி......!" என்றேன் ஆவலுடன். சரஸி தலை நிமிர்ந்து என் முகத்தைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் பயத்துடன்கூடிய ஆர்வம் பிரகாசித்தது.

"என்னைத் தெரியவில்லையா உனக்கு?" என்றேன். அவளுடைய இதழ்கள் பேச முயன்றன; ஆனால் வார்த்தைகள் வெளி வரவில்லை. மெதுவாக ஒரு புன்னகையால் பதிலளித்துவிட்டுத் தலையை மறுபடியும் கவிழ்த்துக்கொண்டாள்.

"என்ன சரஸி! பேசமாட்டாயா? என்னிடம் பேசுவதற்குக்கூடவா உனக்கு வெட்கம் வந்து விட்டது?..." என்றேன் என்னை அறியாமலே.

பதில் உடனே வரவில்லை; அச்சத்தோடு சரஸி ஒரு பார்வை பார்த்தாள்.

"உங்களைத் தெரியாமல் என்ன? அப்பாகூட பென்ஷன் வாங்கிக்கொண்டு இங்கேயே வந்துவிட்டார்.

மேல வீதியில் புது வீடு வாங்கிக்கொண்டு குடியிருக்கிறோம்" என்று கீழே குனிந்தபடியே கூறிவிட்டுத் தன் வீடு நோக்கிச் சென்றாள்.

அன்று மாலை சரஸ்வதியின் வீட்டுக்கு நான் சென்றபோது கூடத்தில் உட்கார்ந்து தலை வாரிக்கொண்டிருந்தாள் சரஸி.

சந்தடி செய்யாமல் பின்னால் நின்று சில விநாடிகள் அவளைப் பார்த்துக்கொண்டிருந்தேன். நான் வந்ததைக் கவனியாமல் அவள் ஒரு பாட்டை முணுமுணுத்துக்கொண்டே தன் வேலையில் ஈடுபட்டிருந்தாள். அப்பொழுது பின்புறத்திலிருந்து ஒரு கரம் என் தோளை மெதுவாகப் பிடித்தது.

எனக்கு உடம்பெல்லாம் குப்பென்று வேர்த்தது. தேள் கொட்டிய திருடனைப்போல் சங்கோசத்துடன் திரும்பினேன். சிரித்துக்கொண்டே என் பின்னால் நின்றார் சரஸ்வதியின் தந்தை.

"என்ன கோபு! உன்னைத் தேடிக்கொண்டுதான் நான் உன் அப்பாவிடம் போயிருந்தேன். நீயே இங்கு வந்துவிட்டாய். வா; உட்கார்; எதைப் பார்த்துக்கொண்டிருந்தாய்?" என்று அவர் கேட்டார்.

சரஸி கடைக் கண்ணால் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டுச் சமையலறைக்குள் போய்விட்டாள்.

"நீ அடிக்கடி சரஸியைப் பற்றி விசாரித்துக்கொண்டிருந்தாயாமே; அதைத்தான் உன் அப்பா என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தார். நான்கூட அவளுடைய ஜாதகத்தை இப்போதுதான் அவரிடம் கொடுத்துவிட்டு வந்திருக்கிறேன். எல்லாம் ஈசுவர ப்ராப்தம்போல் திருப்தியாக முடியவேண்டும்" என்றார் சரஸியின் தகப்பனார்.

எனக்குச் சந்தோஷம் தாங்கவில்லை. அதன் பிறகு

அவர் பேசிய வார்த்தை ஒன்றுகூட என் காதில் விழ வில்லை.

4

இரண்டு தினங்களுக்குப் பிறகு, சரஸ்வதியின் தகப்பனாரும் என்னுடைய தகப்பனாரும் எங்கள் வீட்டில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்குத் தெரியாமல் நானும் நின்று கவனித்தேன்.

" சரஸியின் ஜாதகத்திற்குக் குழந்தையே பிறக்காதாம்; இதற்கு வேறு பரிகாரமும் கிடையாதாம்" என்றார் என் தந்தை.

சரஸியின் தகப்பனாருடைய முகம் வெளுத்தது. பதில் பேசாமல் பிரமை பிடித்தவர்போல் என் தந்தையைப் பார்த்தார். அந்த ஒரு விநாடியில் என் தலையில் ஆயிரம் இடிகள் சேர்ந்து விழுவனபோலத் தோன்றியது. "எந்த ஜோசியன் இதை இவ்வளவு நுணுக்கமாய்த் தெரிந்து சொன்னவன்? அந்தத் திரிகால ஞானியை என் முன்னே அழைத்துவந்து அதை மறுபடியும் ஒரு முறை சொல்லச் சொல்லுங்கள்" என்று கத்தலாமா எனத் தோன்றியது. ஆனால் ஆத்திரமும் படபடப்பும் அதிகமாயிற்றே தவிர, அப்பாவின் முன்பு ஒன்றும் சொல்லத் தைரியம் வரவில்லை.

" அப்படியானால்?..." என்று இழுத்தார் சரஸியின் தந்தை.

" அதற்கு நாம் என்ன செய்யலாம்? எல்லாம் தலையெழுத்தைப்போல் நடக்கும்; நம்முடைய எண்ணத்தில் என்ன இருக்கிறது? வேறு பெண் பார்க்கப் போகிறேனென்று தெரிந்தால் கோபுகூட என்மீது வருத்தப்பட்டுக் கொள்வான்" என்றார் என் தகப்பனார்.

என்னால் அங்கே நிற்க முடியவில்லை. மனம் இடிந்து போய், ஒன்றும் தோன்றாமல் அருகிலிருந்த நாற்காலியில் விழுந்தேன்.

ஊரெல்லாம் இதே பேச்சாகிவிட்டது. சரஸ்வதியின் தலையில், 'குழந்தை பிறக்காது' என்பதை மட்டும் அந்தப் பிரம்மா அழுத்தமாக எழுதியிருந்தாலும்!

இந்த வதந்தி காரணமாகச் சரஸிக்குக் கல்யாணம் ஆவதே ரொம்பக் கஷ்டமாய்ப் போய்விட்டது. நான் மறுபடியும் பட்டணம் சென்ற பிறகு, அவளை வயசான கிழவர் ஒருவருக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்தாகி விட்டது என்று கேள்விப்பட்டேன். அதனால் அப்போது எனக்கு உண்டான மனத் துயருக்கு அளவே இல்லை. வாழ்க்கையிலேயே ஒரு வெறுப்பு உண்டாகிவிட்டது.

* * * *

பெரியவர் திரும்பவும் பேசினார்.. அவருடைய குரல் எங்கேயோ வெகு தூரத்திலிருந்து பேசுவதுபோல் என் காதில் ஒலித்தது :

"எந்த ஜோசியனோ, ஒரு பிருகஸ்பதி, 'சரஸ்வதிக்குக் குழந்தை பிறக்காது' என்று சொல்லி யிருந்தாலும், கல்யாணத்துக்குப் பிறகுதான் எனக்கு அந்தச் செய்தி தெரிந்தது. அந்த ஜோசியனுடைய வார்த்தையைப் பொய்யாக்குவதற்குத்தானோ, என்னவோ, அவள் இந்த வீட்டுக்கு வந்த ஒரு வருஷத்திற்குள் இவன் பிறந்தான். ஆனால் சரஸ்வதிதான் என்னை மோசம் செய்துவிட்டாள். இவனை என் கழுத்தில் கட்டிவிட்டு, ஆறு மாதத்துக் கெல்லாம் இறந்துபோனாள்!"

இவ்விதம் சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் ஒரு துக்கச் சிரிப்புச் சிரித்தார். அந்தச் சிரிப்பின் எதிரொலி வீடெல்லாம் கேட்டது.

அது எதிரொலிதானோ? அல்லது மறு உலகிலிருந்து சரஸ்வதிதான் சேர்ந்து சிரிக்கிறாளோ?

3

சாவிலே வாழ்வு*

செத்துப்போன மனிதர்களுடன் பேசுவ தென்பது கந்தசாமிக்கு ஒரு சர்வ சாதாரணமான காரியமாகத் தோன்றியது. அதிகம் சொல்லப்போனால் அந்த மாதிரித் துறையில் அவனுக்கென்றே ஒரு நிபுணத்துவம் இருந்தது என்றுகூடச் சொல்லிவிடலாம்.

முக்கியமாக அவனுடைய தினசரி வாழ்வின் ஆதாரம் முழுதுமே செத்துப்போனவர்களின் உதவியால்தான் அவனுக்குக் கிடைத்தது. ஆகையால் தன் குடும்பத்தைப் பஞ்சம் பழுதில்லாமல் காப்பாற்றிவந்த அந்த உயிரற்ற மனிதர்களிடம், அவன் ஒருவிதத் தனி விசுவாசம் கொண்டிருந்தான்.

கந்தசாமியின் தொழிலுக்கு 'ஒரு நேரம் பொழுது' கிடையாது. எந்தச் சமயமாயிருந்தாலும் சரி; பட்டப் பகல், நடு இரவு, காற்று மழை இவற்றையெல்லாம் அவன் கொஞ்சங்கூடச் சட்டை செய்யமாட்டான்.

தன்னுடைய 'பேசா நண்பர்களை'க் கண்டவுடனேயே அவனுடைய உற்சாகம் உணர்ச்சியை மீறிவிடும். ஓட்டமாய் ஓடி, ஒரு நொடிப்பொழுதில் குடிசையிலிருந்து மூங்கில் தடியை எடுத்துக்கொண்டு வந்து, அவர்களைக் 'கவனிக்க' ஆரம்பித்துவிடுவான்.

தன்னைப்போலப் பேசக்கூடிய ஆசாமிகளோ, உணர்ச்சியுள்ள மனிதர்களோ பக்கத்தில் இருக்கும்வரையில் அவனுடைய நடை முறை பாவனைகளெல்லாம் ஒரு விதமாக இருக்கும்; மிகவும் அடக்க ஒடுக்கமாகத் தாழ்மை

*சிறுகதைப் போட்டியில் பரிசுபெற்ற கதை.

யுடன் நடந்துகொள்வான். அவர்கள் கொஞ்சதூரம் அப்படிக் கண் மறைவாகப் போய்விட்டாலோ, அப்புறம் கந்தசாமியின் பாடு கொண்டாட்டந்தான்.

முதல் முதலில் தனிப்பட்ட முறையில் அவர்களுடைய க்ஷேமலாபங்களை விசாரிப்பான். அதற்குப் பிறகு, குழந்தை குஞ்சுகள், அண்ணன் தம்பிகள், சொத்து சுதந்திரம் முதலியவைகளைப்பற்றிக் கேள்வி அம்புகள் சரமாரியாகக் கிளம்பும்.

மூச்சு விடாமல் தன்னுடைய கேள்விகளை அடுக்கிக் கொண்டே போவானே ஒழிய, ஒருகாலும் அவர்களது பதிலை எதிர்பார்ப்பதில்லை. நண்பர்களும் அதற்குத் தகுந்தாற்போல் அசதி மறதியில் கூடத் தப்பித்தவறி வாய்திறந்துவிட மாட்டார்கள்.

அப்படி அவர்கள் எப்போதாவது பதிலளிக்கும்படியான நிலைமை வந்துவிட்டால், நிச்சயம் கந்தசாமிக்குக் குலைநடுக்கம் எடுத்துவிடும். அவ்வித அசந்தர்ப்பங்களில் கண்ணை மூடிக்கொண்டு அவர்களுடைய தொடர்பை ரத்து செய்துகொள்ளுவதுமன்றி, தன்னுடைய வேலைக்குக்கூட ராஜிநாமாக் கொடுக்கத் தயங்கமாட்டான்.

* * * *

இருவார காலமாகக் கந்தசாமியின் தொழிலில் சரியான சுறுசுறுப்புத் தட்டவில்லை; படுமோசமாகப் படுத்துவிட்டது. கந்தசாமியின் வீட்டுக்காரி செல்லம்மாளின் முகமும் முன்போல இல்லாமல் மலர்ச்சியற்றுச் சுருங்கியிருந்தது.

"அட கடவுளே" என்று முனகிக்கொண்டே ஆற்றங்கரையில் உட்கார்ந்திருந்தான் கந்தசாமி. அவனுக்குப் பொழுதே போகவில்லை; என்னவோ தான் ஒரு சோம்பேறியாக மாறிவிட்டதாக நினைத்துக் கொண்டான்.

வெறுங்கையுடன் குடிசைக்குத் திரும்பலாமென்றாலோ ... அதுவும் சரியான யோசனையாகப்படவில்லை. பின்னே என்னதான் செய்கிறது? எங்கேதான் போகிறது? ...சேச்சே! இந்த ஒரு சாண் வயிறு வளர்க்க மனிதன் படுகிற பாடு!......ஹூம்...

எழுந்து மணலைத் தட்டிவிட்டு அங்குமிங்கும் கொஞ்ச நேரம் நடந்து கொடுத்தான். கடைசியில் "ஆண்டவன் இன்னைக்கும் படி அளக்கல்லே; வீட்டுக்குத்தான் போய்த் தொலைக்கணும்; வேறே வழியைக் காணோம் ..." என்று நொந்துகொண்டே குடிசைப் பக்கம் புறப்பட்டான்.

வழியில் இருந்த காளிகோயிலில் என்றுமில்லாதபடி விளக்கு வெளிச்சம் தெரிந்ததால், "ஒரு கும்பிடுதான் போடுவோமே; காசா, பணமா?" என்று உள்ளே விக்கிரகத்தை எட்டிப் பார்த்தான்.

அங்கே அவனுடைய மனைவி செல்லம்மாள் தலைவிரி கோலமாய் உட்கார்ந்துகொண்டு காளியிடம் முறையிட்டுக்கொண்டிருந்தாள். "அடி காளியாத்தா! ஏண்டி எங்களைச் சோதனை பண்றே? ஒரு நாளா, ரெண்டு நாளா?...எட்டு நாளா எங்க பொளப்பிலே மண்ணடிச் சுட்டியே...நான் வாயும் வயிறுமா இருக்கிறது கூடவா ஒனக்குத் தெரியல்லே...இன்னைக்கோ?...நாளைக்கோ...!"

கந்தசாமிக்கு ஒரு பக்கம் வருத்தமாக இருந்தாலும் மற்றொரு புறம் சந்தோஷம் தாங்க முடியவில்லை. மனைவியை அழைத்துக்கொண்டு வீட்டிற்குக் கிளம்பினான்.

"என்ன செல்லம்மா! இன்னைக்கோ நாளைக்கோன்னு சொன்னியே அது என்ன?" என்றான்.

வெட்கம் வந்துவிட்டது அவளுக்கு; "அது என்னமோ ஒண்ணு! காசில்லாத சமயத்திலே அதுவேறே வந்து....." என்று இழுத்தாள்.

"செல்லத்துக்கு ஒரு பயல் பொறக்கப் போருன்; அது தானே சங்கதி!" என்று பெருமையாகச் சொல்லிவிட்டு, அவளைப் பிடித்து இழுத்துக்கொண்டே குடிசைக்குள் நுழைந்தான்.

* * * *

இன்னும் ஒரு வாரம் கழிந்தது; பொழுது சரியாக விடிவதற்குள்ளேயே கந்தசாமிக்கு ஒரு பெரிய இடத்துக் 'கிராக்கி' வந்து சேர்ந்தது. அன்றைச் சோற்றிற்கு அவனுக்கு ஒரு செத்துப்போன 'அண்ணே' கிடைத்தார்.

மூங்கில் தடியுடன் அதிகார தோரணையில், அவரிடம் தன் கேள்விகளை ஆரம்பித்தான்:

"என்ன அண்ணே! நீ எந்த ஊரு? என்ன சாதி?... ஒன்னோட குலங் கோத்திரமென்ன?"

"..................."

"உனக்குப் பெண்சாதி இருக்காளா? எத்தனை பேரு? பிள்ளை குட்டி உண்டா?—ஆண் எத்தனை? பெண் எத்தனை?"

"......................."

"ஏண்ணே நீ இந்த வயசிலே செத்துப் போய்ட்டே? அட பாவமே! ஆசாமியைப் பாத்தா, நல்ல வாட்ட சாட்டமா.....குண்டுக்காளை மாதிரி...... . ...! உனக்கு என்னண்ணே அப்படி நோவு!"

"........ ... ."

"நீ பெரிய சொத்துக்காரனுமே! மாடிமேலே மாடி வச்சு, வீடு மேலே வீடு கட்டினியாமே?...இப்போ ஒன் கையிலே தம்பிடிக்கு வழியுண்டா?......சொல்லு அப்படி ஏதாச்சும் வச்சிருந்தா அதையும் எங்கிட்டே கொடுத்திரண்ணே!"

அவனுடைய 'அண்ணே' ஒரு பதிலும் பேசாமல் விறகுப்படுக்கையிலிருந்து கொஞ்சம் மேலே எப்பினர்.

அவ்வளவுதான்! கந்தசாமியின் மரியாதைப் பேச்செல்லாம் எங்கேயோ போய் ஓடி ஒளிந்துகொண்டது.

"அடத் தடியா! முண்டிப் பாக்கிறயோ? நீ மாத்திரம் மேலே கிளம்பு, எலும்பை முறிச்சு எம்பது துண்டாப் போட்டுர்றேன்."

படீர் படீரென்று மூங்கில் கழியால் நாலு போடு போட்டு விட்டு, "ஆளைப் பாரு ஆளை! மெத்தையிலே தூங்கின ஐயாவுக்கு விருட்டிக்குள்ளே தூங்கப் புடிக்கல்லியோ?" என்று உறுமினன்.

அதைக் கண்டு பயந்துதானே என்னவோ அப்புறம் அந்த 'அண்ணே' அந்தப் பக்கம் இந்தப்பக்கம் புரளவே இல்லே. வெகு சீக்கிரத்தில் சாம்பலோடு சாம்பலாய்க் கலந்துவிட்டார்! கந்தசாமியின் வேலேயும் முடிந்து விட்டது.

கையில் ஒண்ணேகால் ரூபாயும் நாலு முழத்துண்டு ஒன்றையும் எடுத்துக்கொண்டு குடிசைக்குள் நுழைந்தான்.

"ஒனக்கு ஒரு பயல் பொறந்திருக்காண்டா!" என்று பொக்கைப் பல்லேக் காட்டிக்கொண்டே ஒரு கிழவி அவனே வரவேற்றாள்.

"அண்ணே முகத்திலே முழிச்ச அதிஷ்டந்தான் போலேருக்கு..." என்றான் கந்தசாமி.

4

நிலவொளியில்

தோட்டத்துக் கிணற்றின் சிமெண்டுத் தளத்தின்மேல், பால் போல் பொழியும் நிலவொளியில், சாய்வு நாற்காலியை எடுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தேன். தெற்குப் பக்கத்திலிருந்து வந்த காவேரியின் குளிர்ந்த காற்று தோட்டம் முழுவதும் மெதுவாக வீசிக்கொண்டிருந்தது.

என் மனம் என்னவோ அன்றைக்கு என்றுமில்லாதபடி கட்டற்று இருந்தது. வெகு காலமாகச் சிறை வாழ்க்கை அநுபவித்த கைதி ஒருவன் ஒரு நாள் மாத்திரம் விடுதலை பெற்று, அவ்விடுதலை இன்பத்தில் முழுகியிருப்பதைப்போல் நானும் முழுகியிருந்தேன். என் நினைவுகளும் கனவுகளும் என்னிடமிருந்து வெகு தூரத்தில் சென்று பூரண சந்திரனின் உருவத்தில் ஐக்கியமாகிவிட்டன.

ஆபீஸில் ஜமாபந்தி வேலைகளையெல்லாம் ஒரு வழியாக அன்றுதான் முடித்துவிட்டு வந்தேன். இன்னும் கொஞ்ச நாட்களுக்கு வேலைத் தொந்தரவு அவ்வளவு அதிகமாக இருக்காது. இந்த ஆறுதலால் எழுந்த உற்சாகந்தான் எனது அப்போதைய கட்டற்ற தன்மைக்குக் காரணமோ என்னவோ ?

வானத்துச் சந்திரனழகில் சொக்கியிருந்த என் கண்கள் வெகு நேரம்வரை அவ்விடத்தை விட்டு அகலவே இல்லை. நேரம் போனதே தெரியாமல் அப்படியே மெய்ம் மறந்து இருந்துவிட்டேன்.

" எஜமான் !" என்ற குரல் பின்புறத்திலிருந்து கேட்டவுடன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

கச்சேரிச் சேவகன் சிங்கமுத்து குனிந்தபடியே கும்பிடு போட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தான்.

"என்ன சிங்கமுத்து! என்ன சமாசாரம்?' என்றேன்.

"ஒண்ணுமில்லிங்க, இன்னிக்கிப் பக்கத்து ஊரிலே நாடகம். அவ இம்சை பொறுக்க முடியல்லே. அதனாலே......"

"அதனாலே— ?"

"இன்னிக்கிக் கச்சேரிக் காவலுக்கு ராமனை வரச் சொல்லியிருக்கேன். அவனோட முறையிலே நான் காவல் பார்த்துக்கிறேன்."

"சரி, போயிட்டு வா!"

கும்பிட்ட கையை எடுக்காமல், வந்த வழியில் திரும்பி விட்டான் அவன்.

அவன் அந்த இடத்தை விட்டுப் போய் ஐந்து நிமிஷத்துக்கு மேலாகிவிட்டது. ஆனால் அவனுடைய வார்த்தைகளில் ஒன்று மாத்திரம் திரும்பத் திரும்ப என் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருந்தது. "அவ இம்சை பொறுக்க முடியல்லே. அதனாலே – ?"

அந்த வார்த்தைகளை அவன் சொல்லும்போது அவன் முகத்தில் ஏற்பட்ட குழைவைப் பார்க்கவேண்டுமே! இன்னும் அந்த பாவம் என் கண்முன் நிற்பதுபோல் இருந்தது.

சிங்கமுத்துவுக்கு வயசு அறுபதுக்கு மேலாகி விட்டது. இதுவரையில் ஆணோ, பெண்ணோ அவனுக்கு ஒரு குழந்தைகூடப் பிறக்கவில்லை. எவ்வளவோ பேர் அவனிடம் மறு கல்யாணம் செய்து கொள்ளும்படி சொல்லிவிட்டார்கள். அவனுடைய மனைவி தேவானையே இதைப் பல தடவை அவனிடம் கூறியிருக்கிறாள். ஆனால்

இதற்கெல்லாம் சிங்கமுத்து கொஞ்சமேனும் அசைந்தால் தானே!

"எனக்கு இனிமே கட்டையோடேதான் மறு கல்யாணம்! - எனக்குப் பிள்ளையும் வேண்டாம், கொள்ளியும் வேண்டாம்; அவ ஒருத்தியே போதும்" என்று பெருமையோடு சொல்லிக்கொள்வான்.

சிங்கமுத்து என்னிடம் வந்து சொல்லிக்கொண்டு போய் ஒரு நாழிகைப் பொழுதுக்குமேல் இருக்கும். அவனும் தேவானையும் இந்நேரம் நாட்கம் பார்க்கப் புறப்பட்டிருப்பார்கள். நான் மாத்திரம் முன்போலவே தனிமையில் உட்கார்ந்திருந்தேன்.

"அதிசயமான தம்பதிகள்!" என்று அவர்களைப் பற்றி நினைக்கும்போது திடீரென்று என்னுடைய சொந்த தாம்பத்ய வாழ்க்கையின் ஞாபகம் வந்தது.

"ஏன், இதுவும் அதிசயந்தான்!" என்று என்னுள்ளே யிருந்து ஒரு குரல் என்னைப் பரிகசிப்பதாக உணர்ந்தேன்.

என் மனைவி செல்லம் தன் தாயார் வீட்டுக்குப் புறப் பட்டுச் சென்று பதினைந்து நாட்களுக்கு மேலாகிறது. இன்றுவரை அவளிடமிருந்து ஒரு கடிதமும் வரவில்லை. இனியும் அவளிடமிருந்து ஒரு கடிதத்தையும் நான் எதிர் பார்க்கவில்லை. அப்படி ஏதாவது எதிர்பாராத விதமாக வந்துவிட்டாலும் ஒருகாலும் அதற்குப் பதிலெழுதுவ தில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டிருந்தேன்.

அவள் ஊருக்குப் புறப்படுவதற்கு முதல் நாள் சாயந்தரம்; ஆபிஸிலிருந்து சலித்துக் களைத்துப்போய்த் திரும்பி வந்தேன். அன்று ஆபிஸில் ஒரு குமாஸ்தா வுடன் ஏதோ ஒரு முக்கிய விஷயமாகப் பிரமாதமான சண்டை. கச்சேரி முடிந்து வெளியே வரும்போது, என்று மில்லாத வெறுப்புடன் வண்டியில் ஏறினேன்.

வீட்டில் வழக்கம்போல் அவளுடைய அலங்காரம் ஏகப்பிரமாதமாக இருந்தது. தலை மயிரைத் தளதள வென்று வாரிப் பின்னிக்கொண்டு, அதில் ஒரு சேர் மல்லிகைப்பூவைச் செருகியிருந்தாள். அவளுடைய உடலைச் சுற்றியிருந்த ஜரிகைக்கரை, ரோஸ்நிறப் புடைவை அவளது அழகுக்கு அழகு செய்தது. குலுங்கும் வளைக்கரத்தால் ஒரு கோப்பையில் சுடச்சுட டீயைக் கொண்டுவந்து வைத்தாள்.

வைத்தவுடன், "என்னவோ மாதிரி இருக்கிறீர்களே, ஏன்?" என்றாள் பரிவோடு.

"ஒரு மாதிரியும் இல்லையே, நன்றாகத்தானே இருக்கிறேன்."

"ஊஹூம்! என்றும் போலில்லை. என்னமோ மனசிலே வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்."

"அதெல்லாம் ஒன்றும் இல்லை."

"ஒன்றுமில்லை என்றால் முகம் ஏன் இப்படியிருக்கு?"

"எப்படியிருக்கு?"

"கண்ணாடியைக் கொண்டுவந்து காண்பிக்கட்டுமா? என்னைக் கண்டு, பிடிக்காவிட்டால் பிடிக்கவில்லை என்று சொல்லுங்களேன்! எதற்காக முகத்தைத் தூக்கிக் கொண்டு இருக்கிறீர்கள்? என்னுடன் பேசுவதென்றால் உங்களுக்குப் பாஷாணமாயிருக்கிறதோ?"

"ஆமாம்; பாஷாணந்தான்!"

"அதுதான் தெரிந்து கிடக்கிறதே?"

"எதுதான் தெரிந்து கிடக்கிறது?"

"எதுவாயிருந்தால் உங்களுக்கென்ன? அதை ஏன் நீங்கள் கேட்கிறீர்கள்?"

"ரொம்ப சரி; என்னோடு பேச வேண்டாம்!"

"நான் ஒன்றும் பேச வரவில்லை."

"போய் வேலையைப் பார். இங்கு நிற்காதே!"

சுட்டெரித்து விடுவதுபோல் என்னை வெறித்து நோக்கினாள் செல்லம். அவளுடைய முகமெங்கும் குப்பென்று ரத்தம் பாய்ந்து சிவந்தது.

திடீரென்று, "நாளைக்கு நான் ஊருக்குப் புறப்பட வேண்டும்; காலையில் கட்டாயம் அனுப்பி வையுங்கள்" என்று அறையில் புகுந்து துணி மணிகளை எடுத்துப் பெட்டிக்குள் வைக்க ஆரம்பித்தாள்.

"தாராளமாகப் புறப்படேன்! நான் என்ன உன்னை அனுப்பி வைப்பதற்கு? உன்னுடைய தம்பிதான் இருக்கிறானே. நல்ல வேளையில் அவனைக் கூட்டிக் கொண்டு போய்ச் சேருவதுதானே!" என்றேன்.

அன்று ராத்திரி சாப்பிடும்போது பரிசாரகன்தான் பரிமாற வந்தான்; மறுநாள் புறப்படும் வரையில் அவள் பச்சைத்தண்ணீர்கூடப் பல்லில் ஊற்றவில்லை. அதைப் பற்றி ஒன்றும் நான் காதில் போட்டுக் கொள்ளாமல் வழக்கம்போல் என் அலுவல்களைக் கவனித்துக்கொண்டிருந்தேன்.

ஊருக்குப் புறப்படும் சமயத்தில் சுந்தரம் என்னிடம் வந்து, "நானும் அக்காளும் ஊருக்குப் போய்வருகிறோம்" என்றான்.

"தாராளமாகப் புறப்படுங்கள் - உன் அக்காளை மாத்திரம் நான் வந்து அழைக்காமல், மத்தியில் இங்கு அனுப்பவேண்டாமென்று உன் அப்பாவிடம் சொல்லிவை" என்றேன்.

"வந்து அழைத்தாலும் வரத் தயாரில்லை என்று இப்போதே சொல்லிவிடு, சுந்தரம்!" என்று வெடுக்கென்று கூறிவிட்டு, கதவின் மறைவில் நின்ற செல்லம், அவன் கையைப் பிடித்துப் பரபரவென்று இழுத்துக் கொண்டு வெளியே வேகமாக நடந்தாள்.

* * * * *

அதிசயமான தாம்பத்திய வாழ்க்கை! - மீண்டும் எனக்கு அதே ஞாபகம்.

யாருடைய தாம்பத்திய வாழ்க்கை அதிசயமானது? என்னுடையதா, சிங்கமுத்துவினுடையதா? அல்லது இருவருடையதுந்தானா?

இருவருடையதுமே ஒரு வகையில் அதிசயமானது தான்; ஆனால் அதன் போக்குத்தான் ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத நேர் விரோதமானது. அறுபது வயசாகியும் சிங்கமுத்து தன் கிழட்டு மனைவியுடன் குடும்ப வாழ்க்கையில் சுகத்தைக் காண்கிறான். முப்பது வயசுக்குள்ளேயே நான் இவ்விளமை வாழ்க்கையில் சலிப்பையும் வெறுப்பையும் காண்கிறேன், - இதுதான் எங்கள் இருவருக்கும் உள்ள வித்தியாசம்.

ஆனால், என்னுடைய சொற்பகாலக் குடும்ப வாழ்க்கை முழுவதுமே இப்படித்தான் சுவையற்றுக் கழிந்திருக்கின்றதா? நான் இன்பமென்று எண்ணி மகிழ்ந்திருந்தேனே அதெல்லாம் துன்பந்தானா?

அப்படியானால், இதே தோட்டத்தில், இதே தனிமையில், இதே மாதிரி இரவில் என் அருகில் நின்று கொண்டு தன் குமுதச் செவ்வாயால் குழையக் குழையப் பேசி என் மனத்தை மயக்கி யிருக்கிறாளே செல்லம், அதெல்லாம் இன்பம் அல்லவா? இதே பால் நிலவு தன் இதயதாபத்தைக் கலைத்ததற்காக என்னெதிரே பொற் சிலைபோல் நின்று, மார்பகம் விம்மப் பெருமூச்செறிந்திருக் கிறாளே. இந்தக் காட்சியை யெல்லாம் குடும்பச் சுமையின் துன்பமென்றா சொல்வது?

சந்திரன் உச்சிக்கு வரும் வரையில் அவ்விடத்திலேயே இருந்துவிட்டுப் பிறகு எழுந்து படுக்கைக்குச் சென்றேன். மூன்று மணி அடித்த பிறகுதான் உறக்கம் வந்தது.

காலை ஒன்பது மணிக்குப் படுக்கையை விட்டு எழுந்திருக்கும்போது பரிசாரகன் காபியும் கையுமாக எதிரே நின்றுகொண்டிருந்தான்.

யோசனை எனக்கு ஒன்றிலும் ஓடவில்லை; முதல் வேலையாகச் சேவகனை அழைத்து, "உடனே புறப்பட்டு வா — அவசரம்" என்று செல்லத்துக்குத் தந்தி கொடுத்து விட்டு வருமாறு அனுப்பினேன்.

அவன் வாசற் கதவருகில் போவதற்குள் என் காதுகளில் சில வார்த்தைகள் தேவகானம்போல் ஒலித்தன.

"ராமா! எஜமானிடம் போய் அம்மா ஊரிலேருந்து வந்துட்டாங்க; உள்ளே வரலாமான்னு உத்தரவு கேட்கச் சொன்னாங்கன்னு கேளு" என்றாள் செல்லம்.

ராமனும் அவளிடம் உடனே உள்ளதை ஒளிக்காமல் அப்படியே சொல்லிவிட்டான். - "உங்களை வரச்சொல்லித் தானம்மா இப்போ எஜமான் தந்தி கொடுத்து வரச் சொன்னாங்க. நல்லா வரலாம்!" என்றான்.

நானே எழுந்து சென்று "வா, செல்லம்! உள்ளே வா. ஏன் வெளியே நிற்கிறாய்!" என்று அவள் கையில் இருந்த கூஜாவை வாங்கினேன்.

அன்றைக்கு இரவில் எங்களுக்கு நிலவொளி பிரம்மானந்தமாக இருந்தது. வானத்துச் சந்திரனைப் பார்ப்பதற்குப் பதிலாக என் அருகே உதயமாகியிருந்த செல்லத்தின் களங்கமற்ற மதிவதனத்தில் கண்களைப் பதித்திருந்தேன். 'ஆமாம், இன்றைக்கு ஒரு விஷயத்தில் நீங்கள் என்னை முற்றும் ஏமாற்றி விட்டீர்கள்!" என்றாள் செல்வம்.

"எந்த விஷயத்தில்?"

"வரவேற்பு விஷயத்தில்தான்? நான் நினைத்தது வேறு, நீங்கள் செய்தது வேறு."

"நீ மாத்திரம் உன்னுடைய எதிர்பாராத வரவால் என்னைப் பிரமிக்கச் செய்யவில்லையா?"

"ஓஹோ! இதற்கெல்லாம் காரணம்?"

"அதோ பார்; அந்தப் பொல்லாத சந்திரன்தான்!"

"உண்மையிலேயா? இதே சந்திரன்தான் நேற்று இரவு என் நெஞ்சைக் குலைத்து என்னை இங்கே இழுத்து வந்தான்."

"சரி, அது கிடக்கட்டும் - இங்கு அருகில் வா - ஒரு விஷயம்!"

தம்பதிகளின் தனிமையைக் காண வெட்கப்படுபவன் போல் சந்திரன் ஒரு சிறிய மேகத் திரையின் பின்புறம் ஒளிந்துகொண்டான்.

5

நொண்டிக் குப்பன்

சென்ற வருஷத்திற்கும் இந்த வருஷத்திற்கும் மத்தியில், இந்த உலகத்தில் ஏற்பட்ட எத்தனையோ மாறுதல்களில் எங்கள் ஊர் நொண்டிக் குப்பனின் வாழ்க்கையில் ஏற்பட்ட மாறுதலும் ஒன்று.

போன வருஷத்தில், உடுத்துக்கொள்ளப் போதுமான துணிமணி கிடைக்காத காரணத்தால், குப்பன் கிழிந்து போன கந்தல் துணிகளை ஒட்டுப்போட்டுத் தைத்துக் கட்டிக்கொண்டிருந்தான். இந்த வருஷத்திலோ அதே குப்பன், எப்பேர்ப்பட்ட நல்ல ஆடைகள் அவனுக்குக் கிடைத்தபோதிலும் அவைகளைக் கிழிக்காமல் கட்டிக் கொள்வதில்லை என்ற சபதத்துடன் இருக்கிறான்! முன்பெல்லாம் அதிகாலையில் எழுந்து, ஆற்றில் குளித்துவிட்டு,

விபூதியைப் பட்டை பட்டையாய்ப் பூசிக்கொண்டு தகரக் குவளை சகிதமாய்ப் பிச்சை எடுக்கக் கிளம்பிவிடுவான். இப்போதோ பசி, தாகம், உறக்கம், விழிப்பு ஒன்றையுமே கவனிக்காமல் அவன்பாட்டிற்குக் கட்டற்றவனாகத் திரிகிறான். இந்த உலகத்தில், வாழும் விவகாரத்திற்கு அவசியமான தேவைகளைப்பற்றி அவனுக்குச் சிறிதேனும் கவலையே இல்லை. காரணம், முன்பு அவன் பிச்சைக்கார நொண்டிக் குப்பன்; இப்போது பைத்தியக்கார நொண்டிக் குப்பன்!

கடந்துபோன இந்த ஒரு வருஷம் அவனுக்கு அளித்த முக்கியமான மாறுதல் இதுதான்.

அவனுக்கு ஏன் இந்த மாறுதல் ஏற்படவேண்டும்? அதுதான் நான் கீழே சொல்லப்போகிற கதை.

* * * *

"ரெண்டு நாலணா, மூணு ரெண்டணா, அஞ்சு காலணா ஆக மொத்தம் பதினஞ்சே காலணா; இன்னும் ஒன்பது தம்படி சேர்த்தால் ஒரு ரூபாய் - ஒரு முழு ரூபாய்!"

நொண்டிக் குப்பன் ஒரு பெரிய புளிய மரத்தின் வேர் ஒன்றில் உட்கார்ந்துகொண்டு, தன்னுடைய பணப் பையை மடியில் கொட்டி, அதில் இருந்த காசுகளை வாய்க்குள் மெதுவாக முனகியவாறே, ஐந்தாவது முறையாக எண்ணிப் பார்த்தான். ஐந்து தடவை கவனமாக எண்ணிய பிறகும் அந்தப் பணம் முதலில் இருந்த அதே தொகைதான் பதினைந்தே காலணாதான், கடைசித் தடவையும் இருந்தது!

"இன்னும் முக்காலணாச் சேர்க்க வேண்டும்: அது ஒரு பெரிய காரியமல்ல, இரண்டு மூன்று நாளைக்குள் சேர்த்துவிடலாம். ஆனால் அதன் பிறகு அதை என்ன

செய்வது? எப்படிச் செலவழிப்பது? - செலவழிப்பதா? இல்லை, சேர்த்துவைப்பதா?"

இப்போதுதான் நொண்டிக் குப்பனுக்கு அவன் வாழ்க்கையில் முதல் முதலாகப் பணம் சேமித்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அந்த எண்ணம் ஏன் தோன்றியதோ நமக்குத் தெரியாது; அந்தக் குப்பனுக்குக்கூடத் தெரியாதென்று சொல்லலாம். என்னவோ, ஆசை பிறந்தது; சேர்க்க ஆரம்பித்தான். அவ்வளவுதான் - உலகத்திலே பணம் சேகரிக்கும் ஒவ்வொருவரும் ஒரு காரணத்தைத் தேடி வைத்துக்கொண்டா சேகரிக்கத் தொடங்குகிறார்கள்? இல்லையே! அப்படி இருக்கையில் நம்முடைய குப்பனையும் அந்தக் கோஷ்டியில் ஏன் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளக்கூடாது?

குப்பன் தன்னுடைய கவைக்குச்சியின் உதவியால் நொண்டி நொண்டி நடந்துகொண்டு, தெருத் தெருவாய்ப் பிச்சையெடுக்க வருவான். அவன் பாடிக்கொண்டு வரும் ராமலிங்க சுவாமிகளின் அருட்பா அந்தத் தெருவெல்லாம் உருக்கத்தோடு கேட்கும். மணிமணியாகத் தெளிவாய்க் கணீரென்று ஒலிக்கும் அந்தப் பாடல்களைக் கேட்டு விட்டு, அநேகமாக அந்தத் தெருவில் உள்ள எல்லாருமே அவனுக்குப் பிச்சையிடுவார்கள். தன் வயிற்றைக் கழுவப் போதுமான பிச்சை அன்றைக்குக் கிடைத்துவிட்ட தென்றால், பேசாமல் தெற்குத் தெருவில் இருக்கும் ஒரு புளிய மரத்தடிக்கு வந்துவிடுவான். அங்கே ஒழிந்த நேரத்தில் தன்னிடம் இருக்கும் அருட்பா, பட்டினத்தார், தாயுமானவர் முதலிய புத்தகங்களை மெதுவாக மனப் பாடம் செய்வான்.

அவ்வப்போது அவனுக்குக் கிடைக்கும் சில்லறைக் காசுகளுக்கும், அவனுடைய சில்லறைத் தேவைகளுக்கும் சரியாக இருக்கும். நாளைக்கு என்ற கவலையே அவனிடம்

கிடையாது. கலக்கமோ, கட்டுப்பாடோ, சந்தோஷமோ, சஞ்சலமோ இவை ஒன்றிலும் அதிகமாக அகப்பட்டுக் கொள்ளாமல் சர்வ சாதாரணமாய் நாட்களை ஓட்டி வந்தான்.

இந்த ஒரு மாத காலமாகவே குப்பனின் அழுக்குப் பிடித்த துணிப்பையில் நாலு காசுகள் சேர்ந்தாற்போல் குலுங்க ஆரம்பித்திருக்கின்றன. அவனும் அவைகளை வைத்துக்கொண்டு ஆரம்பத்தில் என்ன எல்லாமோ யானை குதிரை வாங்கும் யோசனைகளைச் செய்துவிட்டான். ஆனால் யோசனைதான் பலமாக இருந்ததே தவிர, அத்தியாவசியமாகத் தோன்றிய இரண்டொரு செலவு களுக்குக்கூட அவனுடைய கைக்காசுகள் தாராளமாக முன்வரவில்லை.

"எல்லாம் முழு ரூபாயாய்ச் சேர்த்த பின்பு செலவைப் பற்றிக் கவனித்துக் கொள்வோம்" என்று சும்மா இருந்துவிட்டான்.

அவனுடைய பணப்பையை இடுப்பில் செருகப் போன அதே சமயத்தில், அந்தப் பக்கமாக ஒரு தோட்டி கையில் ஒரு நாய்க்குட்டியைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான். நாயின் கழுத்தில் கட்டியிருந்த கயிறு அதைச் சுருக்கிட்டுக் கொல்லுவதுபோல் அவ்வளவு இறுக்கமாகக் கட்டப்பட்டிருந்தது. குப்பனால் இந்தக் காட்சியைப் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை.

"ஏ, தோட்டி! இங்கே வா" - அவன் வந்தான்.

"நாய்க்குட்டியை இப்படிக் குரல்வளையிலே கட்டிப் போட்டா அது செத்துப் போகாது?"

"போனாப் போகுதே! ரெண்டு நாளையிலே சாகப் போற குட்டி இப்பவே செத்துப் போனாத்தான் என்ன? குடியா முழுகிப் போயிடும்?"

"ஏன்டா சாகுது ரெண்டு நாளையிலே?"

"இதைப் புடிச்சா இதோட சொந்தக்காரர் ஏதாவது தருவாருன்னு பார்த்தேன்; அவர் பைசாக் குடுக்கிற வழியா இல்லே. 'தாராளமாய்ப் புடிச்சுக்கோ; எனக்கு இது தேவை யில்லேன்னு' சொல்லிட்டார். நான் இதை முனிசிபாலிடிக்குக் கொண்டு போறேன்."

"முனிசிபாலிடியிலே இதை என்னடா செய்வாங்க?"

"ரெண்டு நாள் வச்சிருந்துட்டு, நாய்க்காரர் வந்து பணங் குடுக்காட்டி, சாகடிச்சுடுவாங்க."

"அட, பாவமே!"

இரக்கம் நிரம்பிய கண்களால் அந்த நாய்க்குட்டியை உற்றுப் பார்த்தான் குப்பன்; அந்த நாய்க்குட்டியும் அவனையே பரிதாபமாகப் பார்த்தது. "என்னை மரணத்தின் கையிலிருந்து தப்புவிக்க முடியாதா?" என்று அவனை நோக்கிக் கேட்பது போல இருந்தது அதன் பார்வை.

குப்பனுடைய முகம் திடீரென்று மலர்ந்தது.

"எனக்கு இதைக் குடுத்துட்டுப் போயேன்; நான் வளத்துக்கிறேன்" என்றான்.

"சரிதான்! அப்புறம் என்னோடை வரும்படி? எனக்கு ஒரு நாய்க்குக் கால் ரூபாய் தருவாங்களே முனிசிபாலிடியிலே"

"அதை நான் தர்ரேண்டா!"

"ஊஹூம், முடியாது; இதெல்லாம் சர்க்கார் சங்கதி!"

கடைசியில் வெகு நேரம் அந்தத் தோட்டியோடு வாதமிட்டுத் தன் கையில்இருந்த காசை யெல்லாம் கொடுத்து அந்த நாயை விலைக்கு வாங்கினான்.

2

பொன்னி - அந்த நாய்க்குட்டிக்கு அவன் இட்ட புதுப்பெயர் - குப்பனின் கைக்கு வந்ததிலிருந்து குப்பனின் தினசரிப் போக்கிலேயே ஒரு புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டது. அவனுக்கு வாழ்க்கையில் பற்றுதலும், நம்பிக்கையும், தேவைகளும் அதிகமாக வளர்ந்து கொண்டே வந்தன.

புளிய மரத்தடியை வாசஸ்தலமாகக் கொண்டிருந்த குப்பன், அவ்விடத்தை வெறுத்து, ஊருக்கு அப்பாலுள்ள ஒரு பாழடைந்த காளி கோவிலுக்கு ஒரு நல்ல நாள் பார்த்துக் குடியேறினன். இரண்டு மூன்று சட்டி பானைகள், ஒரு தகரக் குவளை, ஒரு துணி மூட்டை, இவைகள் இருந்த இடத்தில் இப்போது சிற்சில பித்தளைப் பாத்திரங்களும், ஒரு நாய்ச் சங்கிலியும் புதிதாகக் காணப்பட்டன.

அவனுடன் பிச்சை யெடுப்பதற்கு அவனுடைய பொன்னிடம் அவனைத் தொடர்ந்து செல்வது வழக்கமாகிவிட்டது. பொன்னி தன் வாயில் ஒரு தூக்குச் சட்டியைக் கவ்விக்கொண்டு அவனுக்குப் பின்னுல் ஓடி வரும். இருவரும் சேர்ந்து பிச்சை யெடுத்து முடிந்தவுடன் மெதுவாகத் தங்களது இருப்பிடத்திற்கு வருவார்கள். கிடைத்த பழைய சாதத்தைக் காலை ஆகாரமாக வைத்துக்கொண்டு, இருக்கும் அரிசியைச் சமைத்து மத்தியானத்திற்கும், ராத்திரிப் பொழுதுக்கும் வைத்துக் கொள்வார்கள்.

வழக்கம்போல் ஒருநாள் மத்தியான்னச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு, புத்தகமொன்றைக் கையில் எடுத்துப் படிக்கத் தொடங்கினுன் குப்பன்.

" தந்தை தாய் தமர் தார
மகவென்னு மிவை யெலாம்

சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேகமில்லை............

இதைப் படிக்கும்போது அவனுடைய கண்களில் நீர் ஊற்றுப் பெருக்கெடுத்து ஓடியது. அந்த வரிகளையே திரும்ப இதயக் குழைவோடு மெய்ம்மறந்து பாடினான். உணர்ச்சி எல்லையை மீறிவிட்டது.

இத்தனை தினங்களாய் அவன் மறந்துவிட்டிருந்த ஆசாபாசங்கள், இன்று அவன் நெஞ்சைக் கலைத்தன. அலைகடலில் அகப்பட்ட சிறு துரும்பைப்போல் உள்ளம் நிலையற்றுத் தவித்தது.

பத்துப் பதினொரு வருஷங்களுக்கு முன்பு இதே வார்த்தைகளை யார் சொல்லியிருந்தாலும் அவன் அதை அப்படியே நம்பியிருக்கமாட்டான். ஆனால் இன்றைக்கு அவன் அதை அப்படியே நம்பித்தான் ஆகவேண்டும். இவ் வார்த்தைகளின் கருத்தை அநுபவத்தின் வாயிலாக அவன் அறிந்திருக்கும்போது அவனால் அதை எப்படி மறுக்க முடியும்?

"எல்லோருந்தான் இருந்தார்களே, அவர்களெல் லாம் இப்போது எங்கே?...நான்தானே இருக்கிறேன் தனியாக!...ஆமாம், நான் உயிருடன் இருக்கும் வரையில் நான் மாத்திரந்தான் இருப்பேன் - நான் போகும்போது கூட நான் மாத்திரம் தான் போவேன்...என்ன பயங்கர மான தனிமை இந்த உலகத்தில்!" - வாழ்க்கையின் நிரந்தர ஏகாந்தத்தை எண்ணி ஏங்கியது அவன் மனம்.

இந்தச் சமயத்தில் திடீரென்று அவனுடைய பொன்னி குறுக்கே பாய்ந்து அவன் கையில் இருந்த புத்த கத்தைக் கீழே தள்ளியது. கீழே விழுந்த புத்தகத்தைத் திரும்பவும் எடுக்காமல் அப்படியே பொன்னியை மார்புடன் வாரி அணைத்துத் தன் ஆர்வமெல்லாம் தீர அதை முத்தமிட்டான்.

அவனுடைய இறந்துபோன தாய், தகப்பன், மனைவி, மக்கள் இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவனெதிரில் தோன்றியிருந்தால்கூட அவன் அவ்வளவு சந்தோஷப் பட்டிருக்கமாட்டான்; பொன்னியின் ஸ்பரிசம் அந்த நிமிஷத்தில் அவனை அவ்வளவு தூரம் உன்மத்தனாக்கிவிட்டது.

"நீதானம்மா எனக்குத் துணை, நான் செத்துப் போனப்பறங்கூட!......உன்னை நான் மறந்தே போயிட்டேன் பாத்தியா?......இப்படியேதான் நான் எல்லோரையுமே மறந்துபோறது!......ஆனால் இனி இந்த உயிர் இந்தக் கட்டையிலே கிடக்கிறமட்டும் உன்னை மறக்கவே மாட்டேன்."

அவன் படித்த வேதாந்தமெல்லாம் அவனுடைய புத்தகத்தளவிலேயே நின்றுவிட்டது.

சில தினங்களாகப் பொன்னிக்கு உடம்பு சுகமில்லை சுறுசுறுப்பற்று சோர்ந்துபோய் ஒரு மூலையில் சுருண்டு கிடந்தது. எழுந்து நடக்கக்கூடச் சக்தி இல்லை; வேளைக்குச் சாப்பிடுவதும் இல்லை.

இன்னதுதான் செய்வதென்று தெரியாமல் குப்பன் தன்னால் முடிந்த வைத்தியமெல்லாம் செய்து பார்த்து விட்டான். அந்தப் பக்கத்தில் வளர்ந்து கிடந்த செடி கொடிகளில் ஒன்று விடாமல், எல்லாவற்றிலும் சாறு பிழிந்து, அவன் சகோதரப் பிச்சைக்காரன் ஒருவனுடைய யோசனைப்படி அதையும் மருந்தாகக் கொடுத்தான். என்ன செய்தும் பலன் என்னவோ ஒரே மாதிரியாகத்தான் இருந்தது.

மற்றவர்களைப்போலத் தன்னுடைய நாய்க்குட்டிக்கு மிருக ஆஸ்பத்திரியில் வைத்தியம் செய்யலாமென்றாலோ அதை நினைக்கும்போதே அவனுக்கு அது 'வெறும் ஆசை' என்று தோன்றிவிட்டது. இருந்திருந்தும் ஓர்

ஏழைப் பிச்சைக்காரன், தன்னுடைய நாய்க்கு ஆஸ்பத்திரி வைத்தியம் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாமா ?

குப்பன் பிச்சை வாங்கும் நேரத்திலெல்லாம் அவனுக்கு நினைவு கோயிலில் தனியாகத் துவண்டு கிடக்கும் தன்னுடைய பொன்னியிடமே சுற்றிக்கொண்டிருக்கும். நாலு தெருக்கள்கூடச் சரியாகப் போய்ப் பார்க்காமல் அவசரம் அவசரமாக இருப்பிடம் திரும்பி விடுவான். வந்தவுடன் அதன் முகத்தை ஒரு தரம் பார்த்து, அன்றைக்கு யாரிடமாவது தான் கேட்டுவந்த ஒரு புது வைத்தியத்தை அதற்குச் செய்தால்தான் அவன் மனம் நிம்மதி அடையும்.

3

பொன்னி, தன்னுடைய நண்பன் கொண்டுவந்து கொடுத்த மருந்தின் காரணத்தாலோ, அல்லது அவன் வேண்டிக்கொண்ட அந்தக் காளிதேவியின் அருளினலோ கொஞ்சங் கொஞ்சமாகக் குணமடைந்துவந்தது. அதன் உயிருக்கு வந்த ஒரு பெரிய கண்டம் தனது காரியம் பலிக்காமல் தோற்றுப்போய் ஓடிவிட்டதென்று குப்பன் கருதினன். தோல்வியின் அதிர்ச்சியிலேதான் வெற்றி பிறக்கிறது என்பது அவனுக்குத் தெரியாது போலும் !

தனியாக ஒரு நாள் அவன் ஊருக்குள் சுற்றிவிட்டுத் திரும்பும்போது அந்தக் கோவிலில் அவனுடைய நாய்க் குட்டி காணப்படவில்லை. எங்கெங்கேயோ அலைந்து திரிந்து பார்த்தான்; "பொன்னி, பொன்னி" என்று கூவிக்கொண்டே அரைமைல் தூரத்திலுள்ள ஒவ்வொரு மூலை முடுக்குகளையும், புதர்களையும், பள்ளங்களையும் தேடிவிட்டான்.

தேடிக் களைத்த பின்புதான் அவனுக்கு இந்த யோசனை வந்தது :-"ஒரு வேளை, தோட்டியின் கையில்-

அகப்பட்டிருக்குமோ!...... லைசென்சு வாங்காத நாயாச்சே."

இதை நினைத்த மாத்திரத்தில் அவன் நெஞ்சு குபீரென்று பற்றிக்கொண்டு எரிவதுபோல இருந்தது.

எத்தனையோ ஆயிரந்தடவை அவன் தன்னுடைய பொன்னிக்கு லைசென்சு வாங்குவதைப் பற்றி எண்ணமிட்டிருக்கிறான். ஆனால் இந்த எண்ணமெல்லாம் அவனிடம் கீழ்க்கண்ட முடிவைத்தான் கொண்டுவந்தன.

"நொண்டிப் பிச்சைக்காரன், வீடு வீடாய்ச் சென்று ஒரு பிடிச் சோற்றுக்குக் கையேந்துபவன், தன்னுடைய நாய்க்குட்டிக்கு லைசென்சு வாங்கி யிருக்கிறதென்றால் அந்த ஊர் அவனைப்பற்றி என்ன நினைக்காது?...இருக்கிற பரதேசிப் பிழைப்பிலும் மண்ணைவாரிப் போட்டுக்கொள்வதற்கா இந்தக் குருட்டு யோசனை!"

அவனுடைய மனத்திற்குள் ஏதோ ஒன்று சொல்லியது, பொன்னி தோட்டிகளிடந்தான் அகப்பட்டு விட்டதென்று.

"ஐயையோ! நான் அப்பவே என் பொன்னிக்குத் தகடு வாங்காமல் இருந்து விட்டேனே!" என்று அலறினான்.

நாய்களை அடைத்து வைத்திருக்கும் அந்த முனிசிபல் கட்டிடத்திற்குப் போய்ப் பார்த்ததில், பொன்னி அங்கே தான் சிறை வைக்கப்பட்டிருந்தது.

4

இரண்டு கைகளுக்குள்ளும் தலையைக் கவிழ்த்துக் கொண்டு, அந்தக் காளிகோவில் மண்டபத்தில் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தான் குப்பன். "ரெண்டு ரூபாய் எட்டணாவாமே! நாளைக்குச் சாயந்தரத்துக்குள்ளே யாமே!...குடுக்காட்டி?"

"நாளன்னைக்கிக் காலே பத்து மணிக்கு என்னுடை பொன்னி கூண்டுக்குப் போயிடும். அதற்கப்புறம் நான் அதைப் பார்க்கவே முடியாது...இது, சர்க்கார் சட்டம்! ரெண்டரை ரூபாய் இல்லையென்றால் எமவாதனே! இந்த ரூபாய்க்கு நான் எங்கே போறது? யாரிடம் கேட்கிறது?"

தன்னுடைய துணிப்பையைத் தலைகீழாக உதறினான். ஐந்து தம்படிகள் நாலாபுறமும் உருண்டு ஓடின. தன் சாமான்களையெல்லாம் ஒரு தரம் கவனித்தான். ஒரு தூக்குச்சட்டி. ஒரு டம்ளர், ஒரு நாய்ச்சங்கிலி இவையே உருப்படியாக விற்பனைக்குத் தயாராக இருந்தவை. இவற்றை விலைக்குக் கொடுத்து வந்ததில் ஒன்னே முக்கால் ரூபாய் கிடைத்தது. இன்னும் முக்கால் ரூபாய் தான் பாக்கி.

இந்த முக்கால் ரூபாய்க்காகக் கெஞ்சாத இடமெல் லாம் கெஞ்சினான்; பிச்சைக்காரர் கூட்டத்தில் தனக்கு இருந்த செல்வாக்கையெல்லாம் பிரயோகித்து விட்டான். சிறிதேனும் பலனளித்தால்தானே?

"ஒரு நாய்க்குட்டிக்காக இப்படிக் கிடந்து உயிரை விடலாமா?" என்றார்கள் எல்லோரும்.

பொன்னியைக் கூண்டுக்குக் கொண்டுபோகிற தினம். ஒவ்வொரு நிமிஷத்தையும் பதைபதைக்கும் உள்ளத் தோடு எண்ணிக்கொண்டிருந்தான் குப்பன். மணி ஒன்பதுக்கு மேலாகிவிட்டது. அவனுடைய பொன்னியின் உயிர் அந்தக் கடைசி மணி நேரத்தையும், அவனது கையில் குறைவாக இருந்த சில சில்லறைக் காசுகளையும் எதிர் நோக்கி, அவை இரண்டிற்கும் மத்தியில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

காசு எப்படியோ கிடைத்துவிட்டது. தான் கடன் வாங்கியதைப்போல் பத்து மடங்கு திரும்பக் கொடுத்து விடுவதாக வாக்களித்து ஒருவனிடம் வாங்கினான். இந்த

மாதிரி ஆபத்தில் உதவிசெய்த அந்த நண்பனை தன் ஜன்மம் முழுவதும் மறந்துவிடக்கூடாதென்று சங்கல்பம் செய்துகொண்டான்!

கையில் காசை இறுக மூடிக்கொண்டு, வழியில் கால்கள் தரையில் ஊன்றுவதுகூடத் தோன்றாமல் அவ்வளவு வேகமாக ஓடினான். கால வேகத்தின் எல்லையை மீறி, அதைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது அவன் மனம்...ஆனால்?

"டான்! டான்! டான்!" - அடித்துக்கொண்டே இருந்தது மணிக்கூண்டு கடிகாரம். ஒன்று...இரண்டு... பத்து!'

பத்து மணி! குப்பனின் தலையில் ஒவ்வொன்றாய்ப் பத்து இடிகள் விழுவது போலிருந்தது. பெருமூச்சின் வேகத்தை அடக்க முடியாமல் பொங்கி வடியும் மார்போடு முனிசிபல் கூண்டின் எதிரே போய் நின்றான். கூண்டிற்குள் அவனுடைய பார்வை பாய்ந்தது.

அங்கே அவன் கண்ட காட்சி! ஐயோ! நாகரிக மனிதர்கள் வாழும் உலகந்தானா இது?

'கிளிக்' என்றெழுந்தது ஒரு சத்தம். கண்ணிமைக்கும் நேரங்கூட இல்லை. பொன்னியின் கண்கள், பாதங்கள், வாய், இவற்றிலெல்லாம் மின்னலைப் போல் ஓர் 'ஒளி' படர்ந்து மறைந்தது. அடுத்த கண நேரத்தில், இரும்புச் சங்கிலியில் மாட்டிய ஒரு வளையத்தில், தன் தலையைக் கொடுத்தவாறே ஊசலாடிக் கொண்டிருந்தாள் பொன்னி.

"என்னோட பொன்னி சாமி!" என்று கதறினான் குப்பன்.

"இந்தா உன்னுடைய பொன்னி..."

உயிரற்ற பொன்னி அவன் காலடியில் வந்து 'தொப்' பென்று விழுந்தாள்.

குப்பன் ஒரு பயங்கரச் சிரிப்புச் சிரித்தான். அந்தச் சிரிப்பொலியின் அலைகள் முனிசிபல் கச்சேரியின் காம்பவுண்டுச் சுவரிலெல்லாம் மோதி எதிரொலித்தது. அவன் இன்னமும் சிரித்துக்கொண்டுதான் இருக்கிறான்: அவன் பைத்தியக்காரன்!

* * * *

"பிச்சைக்கார நொண்டிக் குப்பனுக்குப் பைத்தியமாமே? அவனுடைய நாய் செத்துப் போனதால்தான் அவனுக்குப் பைத்தியம் பிடித்ததாமே? இது என்ன ஆச்சரியம்!"

"அதை அவன் நாயாய் வளர்த்திருந்தாலல்லவோ நாம் ஆச்சரியப் படுவதற்கு?......எவன் எவன் எந்தப் பொருளின் மீது அளவுக்கு மீறிய ஆசை வைக்கிறானே அதே பொருளால்தான் அவனுக்குக் கஷ்டமும் வருகிறது."

எங்கள் ஊர் வேதாந்திப் பஞ்சுவையர் கூறும் இந்த வார்த்தைகளைப் பற்றி, இவ்வுலகத் துன்பத்தையே மறந்து நிற்கும் குப்பன், இனிமேல் ஏதாவது அக்கறை எடுத்துக் கொள்ளப் போகிறானா?

6

கோஷா

துனுஷ்கோடி எக்ஸ்பிரஸ் எழும்பூரை விட்டுக் கிளம்பி மூன்று மணி நேரத்திற்கு மேல் இருக்கும். அதில் இரண்டாவது வகுப்பு வண்டியில் நான் மாத்திரம் இப்போது தனியாக உட்கார்ந்திருந்தேன். இதுவரையில் என்னுடன் இதே வண்டியில் பிரயாணம் செய்துவந்த

ஒரு வடநாட்டாருடைய குடும்பம் சற்று முன்புதான் ஏதோ ஒரு ஸ்டேஷனில் இறங்கிச் சென்றது.

அவர்கள் எந்த ஸ்டேஷனில் இறங்கிச் சென்றார்கள் என்பதைக்கூட நான் கவனிக்கவில்லை. என்னுடைய கவனமெல்லாம் ஏதோ ஓர் உலகத்தை - எனக்கே இன்ன தென்று சொல்லத் தெரியாத ஓர் அற்புத உலகத்தை - நாடிச் சுழன்றுகொண்டிருந்தது.

நான் விரும்பி வந்த தனிமை வெகு சீக்கிரத்தில் எனக்குக் கிடைத்ததால் ஒரு விதமான சந்தோஷத்தை வரவழைத்துக் கொண்டு, வண்டிக்குள் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு ஜன்னல் வழியாக வானவெளியை உற்று நோக்கினேன். அங்கே சந்திரனைக் காணவில்லை; அப்போதுதான் கிழ்த்திசையில் ஒரு மலைப்பிளவின் பின் புறமிருந்து பால்போன்ற நிலவொளி கொஞ்சங் கொஞ்ச மாகப் பரவிக்கொண்டிருந்தது.

'ஐயோ! இந்த மனத் தவிப்பின் கொடுமைக்கு அணு வளவேனும் நிம்மதி என்பதே இல்லையா? தனிமையை விரும்பி வந்த எனக்கு அந்தத் தனிமையிலும் சாந்தி கிடைக்கவில்லையே!' என்ற ஏக்கத்தோடு முனகிவிட்டு, ஜன்னலருகில் கையை மடித்து வைத்துக்கொண்டு மேல் வானத்து நக்ஷத்திரமணிகளையே வெறித்துப் பார்த்துக் கொண்டு வந்தேன்.

நிமிஷத்திற்கு நிமிஷம் இருதயம் கனத்துக்கொண்டே வந்தது; நிலைமை பொறுக்க முடியவில்லை. காலுக்குக் கீழே வைத்திருந்த கைப்பெட்டியை எடுத்து அதனுள் பத்திரமாக ஒரு புத்தகத்தில் மடித்துவைத்திருந்த ஒரு சிறு கடிதத்தை எடுத்து ஐம்பதாவது தடவையாகப் படித்தேன்:

"பிரியமுள்ள அப்துல் ரஹீமுக்கு,

உன்னுடைய கதிஜா அன்புடன் எழுதுகிறேன்:

நீ கல்கத்தாவுக்குப் போவதைப் பற்றி எனக்கு ரொம்ப சந்தோஷம். அங்கே போய்ச் சுகமாக இன்னும் இரண்டு வருஷமும் கவனமாகப் படித்துப் பரீக்ஷை தேறி இங்கு வரவேண்டுமென்று அல்லாவை முழு மனத்தோடு பிரார்த்திக்கிறேன். நீ அங்கே போனவுடன் புதுப் புதுச் சிநேகிதர்களுடன் சேர்ந்துகொண்டு என்னை முழுவதும் மறந்துவிடாதே. ஒரு நாளைக்கு ஒரு தரமாவது ஒரு நிமிஷ நேரம் என்னை ஞாபகத்தில் வைத்துக்கொள். இங்கே நீ படித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் நான் வந்து உன்னிடம் அடிக்கடி தொந்தரவு செய்வதுபோல் அங்கே வந்து என்னால் செய்ய முடியாது. அந்தமாதிரி உனக்கு ஒரு கஷ்டத்தை நிவர்த்தி செய்து வைத்ததற்காக வாவது. என்னைக் கட்டாயம் நீ ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத்தான். வேண்டும்!......இன்னும் உனக்கு என்ன எல்லாமோ எழுதவேண்டுமென்று நினைத்துவைத்திருந் தேன். ஆனால் இந்த அவசரத்தில் எனக்கு ஒன்று கூடச் சரியாக ஞாபகம் வரமாட்டேனென்கிறது. நீ மாத்திரம் இங்கே திரும்பிவரும்போது மறந்துவிடாமல் கல்கத்தாவி லிருந்து ஏதாவது விநோதமான சாமான் வாங்கிவா.

இவ்வளவுதான்!

உன் அன்புள்ள,

கதீஜா

13—7—39"

மூன்று வருஷங்களுக்கு முன்பு எழுதப்பட்ட கடிதம். நான் திருச்சிராப்பள்ளியை விட்டுக் கல்கத்தாவுக்குப் படிக்கப் புறப்படப்போகும் சமயத்தில் கதீஜா இதை எழுதி யிருக்கிறாள். ஆனால் என்னுடைய துரதிருஷ்டமோ அவளுடைய துரதிருஷ்டமோ, எனக்கு இக்கடிதம் மூன்று நாட்களுக்கு முன்புதான் கிடைத்தது!

என்னுடைய கைப்பெட்டியை வர்ணம் பூசுவதற்காக எடுத்துச் சுத்தம் செய்துகொண்டிருக்கும்போது, பெட்டியின் அடியில் வைத்திருந்த அட்டையின் பின்புறத்திலிருந்து இந்தக் கடிதம் விழுந்தது.

இதே கடிதத்தை நான் இந்த மூன்று வருஷங்களுக்கு முன்பு காண நேர்ந்திருந்தால் என் மனம் அப்போது எந்த நிலையில் இருந்திருக்குமோ எனக்குத் தெரியாது; ஆனால், இந்த மூன்று தினங்களாக என் இருதயத்தில் ஏற்படும் போராட்டத்தை என்னால் இன்னதென்றே விவரிக்க முடியவில்லை.

* * * *

அப்போது கதீஜாவுக்குப் பதின்மூன்று வயசு. ஹோலி க்ராஸ் கல்லூரியில் ஒன்பதாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தாள். நானும் ஜோஸப் கல்லூரியில் பி.ஏ. இரண்டாவது வகுப்பு மாணவனாக இருந்தேன். கதீஜாவின் தந்தை எனக்குத் தூரபந்துவாக இருந்தாலும் இறந்துபோன என் தந்தைக்கு நெருங்கிய நண்பராக இருந்ததால் அவருடைய பராமரிப்பிலேயே என்னை வைத்துக் கல்லூரிக்கு அனுப்பி வந்தார். அவருடைய மனைவி மக்கள் எல்லோரும் என்னை அவர்கள் குடும்பத்தில் ஒருவனாகவே பாவித்து நேசித்து வந்தார்கள். ஆனால் மற்ற எல்லோரையும்விட என்னிடம் தனிமையான அன்புடன் உயிருக்கு உயிராய் இருந்தவள் கதீஜா ஒருத்திதான்.

ஒரு நாள் இரவு என்னுடைய மாடி அறையில் தனியாக உட்கார்ந்து பரீக்ஷைக்காகக் கஷ்டப்பட்டுப் படித்துக்கொண்டிருந்தேன். மேஜையில் புஸ்தகக் கட்டுகளும், ஒரு 'பிளாஸ்க்' நிறையச் சூடான தேத்தண்ணீரும் இருந்தன. அடுத்த நாள் ஆங்கிலப் பரீக்ஷை ஆரம்ப

மாவதால் எனக்குப் படிப்பைத் தவிர மற்ற ஒன்றிலும் கவனம் செல்லவில்லை.

எரிந்துகொண்டிருந்த மின்சார விளக்கை யாரோ அணைக்கும் சத்தம் கேட்டது. உடனே அறை முழுவதும் இருள் பரவியதால் எனக்குக் கோபம் பொறுக்க முடியவில்லை. வேகமாக எழுந்து சென்று என் எதிரே குறுக்கிட்ட ஓர் உருவத்தின் தோள்களை இறுகப் பிடித்துக்கொண்டு, "யாரது?" என்று அதட்டியவாறே பலமாகக் குலுக்கினேன். பதில் ஒன்றும் பேசாமல் 'கொல்' லென்று சிரித்துவிட்டு, "இப்போது யாரென்று தெரிகிறதா?" என்று கேட்டுக்கொண்டே மறுபடியும் குலுங்கக் குலுங்க நகைத்தாள் கதீஜா.

"போதும், கதீஜா! விளையாடாதே, போய் விளக்கைப் போடு; நான் படிக்கவேண்டும்" என்றேன்.

"இதோ இங்கே வா. என்னுடன் வந்து நான் காண்பிக்கும் விளக்கைப் பார்; பார்த்துவிட்டு அப்புறம் வேண்டுமானால் உன் பாடத்தை விழுந்து விழுந்து படித்துக்கொள்" என்று கையைப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக்கொண்டே வந்து, மொட்டைமாடியின் கைபிடிச் சுவரருகில் நின்று கீழ்வானத்தைச் சுட்டிக் காண்பித்தாள்.

அங்கே, இன்றைக்கு நான் ரெயிலின் ஜன்னல் வழியாகப் பார்க்கும் காட்சியைப் போலவே காட்சியளித்துக்கொண்டு சந்திரன் கொஞ்சங் கொஞ்சமாக மேல் வானத்தில் எழும்பி வந்தான். கதீஜாவின் முகமெங்கும் சிறிது சிறிதாக அந்த நிலவொளியின் பொன்னிறம் படிந்தது.

"சரி கதீஜா, நேரமாகிறது; நான் போய்ப் பரீக்ஷைக்குப் படிக்கவேண்டாமா?" என்றேன்.

"நீ படித்துப் பரிசைஷ தேறினால்தான் அப்பா உன்னைக் கல்கத்தாவுக்கு அனுப்பப்போகிறாராமே; அப்படியிருக்கையில் நீ ஏன் கஷ்டப்பட்டுப் படிக்கவேண்டும்?"

"அப்படியானால் நான் அங்கே போய்ப் படிப்பதில் உனக்கு விருப்பம் இல்லையா?"

"விருப்பந்தான்...ஆனால்..." என்று இழுத்துக் கொண்டே வந்து என்னை ஒரு மாதிரி உற்றுப் பார்த்து விட்டு, திடீரென்று மாடிப்படிகளில் குதித்துக் கீழே இறங்கி ஓடிவிட்டாள். நான் அறைக்குள் புகுந்து ஒரு கோப்பைத் தேத்தண்ணீரை மேலே குடித்துவிட்டுத் திரும்பவும் படிப்பைத் தொடங்கினேன்.

கல்கத்தாவில் இரண்டு வருஷங்கள் படித்து முடித்து விட்டேன். அதனுடன் சேர்ந்தாற்போல் சென்னையிலும் ஒரு வருஷம் உத்தியோகம் பார்த்துவிட்டேன். இந்த மூன்று வருஷங்களிலும் இந்தக் கடைசி மூன்று நாட்களைத் தவிர, கதிஜாவைப் பற்றி என் மனத்தில் விசேஷமான எண்ணம் எதுவும் தோன்றியதே இல்லை. ஆனால் அந்தக் காரணத்தின் வேகந்தானோ என்னவோ, எனக்கு இந்தச் சில தினங்களும் யுகங்களைவிடக் கடுமையாகத் தோன்றுகின்றன.

* * * *

ரெயிலிலிருந்து இறங்கி, குதிரைவண்டி யொன்றை அமர்த்திக்கொண்டு பாலக்கரைக்குப் புறப்பட்டேன். மனத் துடிதுடிப்பின் வேகத்தை எதிரொலிப்பது போலவே குதிரையின் கழுத்துச் சதங்கையும் 'ஜல் ஜல்' லென்று சப்தித்துக்கொண்டே வந்து, வீட்டெதிரே வந்ததும் ஓய்ந்தது.

"வா, அப்பா ரஹீம், இப்போதாவது வீட்டிற்கு வழி தெரிந்ததா?" என்று சிரித்துக்கொண்டே வந்து என்னை

வரவேற்ருள் கதீஜாவின் தாய். அவள் கணவரும், "வா, அப்பா! எத்தனை நாள் லீவு எடுத்துக்கொண்டு வந்திருக் கிருய்? வருகிற சமாசாரம் தெரிந்தால் ஸ்டேஷனுக்குக் கார் அனுப்பியிருப்பேனே; ஒரு கடிதமாவது போட் டிருக்கக்கூடாதா?" என்ருர். பையன்கள் சுல்தானும் ரகூலும் படுக்கையை விட்டு எழுந்து, முகத்தைக் கூடக் கழுவாமல் ஓடோடியும் வந்து என்னுடைய கால்களைக் கட்டிப் பிடித்துக்கொண்டனர்.

வீட்டிற்குள் வந்து பரபரப்புற்ற மனத்தோடு ஓரிடத்தில் உட்கார்ந்து, கதீஜாவின் தாய் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சம்பந்தம் இல்லாமல் பதில் சொல்லிக்கொண்டிருந்தேன். என்னுடைய கண்களும் நினைவும் ஏதோ ஓர் உருவத்தைக் கவனிப்பதற்காக அந்த வீட்டிற்குள்ளேயே மூலைக்கு மூலை சுழன்று சுழன்று நோக்கிக் கொண்டிருந்தன. நான் அங்கே போய் அரைமணி நேரத்திற்கு மேலாகியும் என் கதீஜா இன்னும் என் எதிரே வரவில்லை!

காலையில் சிற்றுண்டி முடிந்தவுடன் சுல்தான் என்னை என் பழைய மாடி அறைக்கு அழைத்துச் சென்ருன். அந்த அறை இப்போது கதீஜாவின் ஆதிக்கத்தில் இருந்திருக்கவேண்டும். அறையில் எங்கே பார்த்தாலும் ஜன்னலுக்கு ஜன்னல், கதவுக்குக் கதவு, பின்னல் துண்டுகள் தொங்கிக்கொண்டு இருந்தன. ஒவ்வொரு துண்டின் மத்தியிலும் பூங்கொடிகள் பின்னப்பட்டு அவைகளினூடே கொட்டை எழுத்துக்களில் 'ரஹீம்' என்று அழகாக எழுதப்பட்டிருந்தது. கதீஜாவின் மேஜை டிராயரைத் திறந்து அங்கே அடுக்கிவைக்கப்பட் டிருந்த பழைய புத்தகக் கட்டுகளைப் புரட்டினேன். அவைகளின் மத்தியில் அங்கங்கே ஒரு காகிதத்தில்

படத்தைப் போட்டு அதன் கீழே 'ரஹீம் சாஹேப்' என்று எழுதிவைத்திருந்தாள் கதிஜா.

"எங்கே ரசூல், நான் வந்ததிலிருந்து கதிஜாவைக் கண்ணாலே கூடக் காண முடியவில்லையே!" என்று பையனிடம் ஒரு தரம் விசாரித்தபோது, "ஓஹோ! முன்னைப் போல் கதிஜா இப்போது உன்னிடம் பேச வருவாள் என்று நினைத்தாயோ! அவள்தான் இரண்டு வருஷத்திற்கு முன்பே கோஷாவாச்சே!" என்று குறும்புத் தனமாக ஒரு போடு போட்டான்.

என்னுடைய உள்ளத்திலிருந்து 'குபு குபு' வென்று பொங்கி வழிந்துகொண்டிருந்த கற்பனை ஊற்று அப்படியே அடைபட்டுப் போய், திடீரென்று நின்று விட்டது. அதற்குமேல் அவனிடம் பேச்சுக் கொடுக்கக் கூடாதென்று நினைத்து, அவனைக் கீழே அனுப்பிவிட்டுத் தனிமையில் பேசாது உட்கார்ந்திருந்தேன்.

ஐந்து நாள் லீவு வாங்கிவந்ததில் மூன்று தினங்கள் இரவும் பகலுமாய்ப் பயனற்றுக் கழிந்துவிட்டன. வீட்டை விட்டு வெளியே போகவும் மனமில்லாமல் வீட்டினுள்ளே தங்கவும் மனமில்லாமல் நிலையற்ற மனப் போக்குடன் ஒருவிதத் தீர்மானமும் இன்றி அந்த மாடி முழுவதும் தனிமையில் அங்கும் இங்கும் அலைந்து கொண்டே பொழுதை ஓட்டிவந்தேன்.

எப்போதாவது வீட்டின் கீழ்த்தளத்தில் 'குபீ' ரென்று கதிஜா வாய்விட்டுச் சிரிக்கும் சத்தம் கேட்கும். அத்துடன் முத்து முத்தான அவள் வார்த்தைகளும், 'கலகல' வென்று ஒலிக்கும் வளையொலியும் இடையிடையே என் காதில் விழுந்து இவ்வுலகையே மறக்கச் செய்யும். மௌனத்தோடு பெருமூச்செறிந்துகொண்டே அவ்வொலி களைக் கவனமாக உற்றுக் கேட்டு, என் நாற்காலியில் வந்து பொத்தென்று விழுவேன்.

ஐந்தாவது நாள் காலையில் சென்னைக்குப் புறப்படுவதற்குத் தயார் செய்துகொண்டிருக்கையில் ரசூல் என்னிடம் ஓடிவந்து, "கதீஜா உன் புகைப்படமொன்றைக் கேட்கிருள்; கொடுத்துவிட்டுப் போ" என்ருன் மெதுவான குரலில், "அவளுக்கு வேண்டுமானுல் என்னை நேரில் வந்து கேட்டு வாங்கிக்கொள்ளச் சொல்" என்று வெடுக்கென்று பதில் சொல்லுவதற்கு வாயெடுத்தேன். அதற்குள் கதீஜாவின் தாய் நான் இருந்த இடத்திற்கு வந்துவிட்டதால், உதட்டைக் கடித்துக்கொண்டு ஒன்றும் பேசாமல் ஒரு படத்தை எடுத்து ரசூலினிடம் ரகசியமாகக் கொடுத்து அனுப்பினேன்.

ஊருக்குப் புறப்படுவதற்கு முன் அங்கிருந்த ஒவ்வொருவரிடமும் சுமார் நாலைந்து தரமாவது உரத்த குரலில், "போய் வருகிறேன்" என்று சொல்லிக்கொண்டிருப்பேன்; அப்படி இருந்தும் என் மனம் சரியாகச் சாந்தப்படவில்லை. பெட்டி, படுக்கை முதலியவற்றை வேலையாள் வெளியே எடுத்துக்கொண்டு போனவுடன் தலையைக் கவிழ்த்துக்கொண்டே மெதுவாக வெளி வாசலுக்கு நடந்து வந்தேன். உள் வாசலைத் தாண்டியவுடன் வலது புறத்தில் இருந்த அறைக்கதவு மெதுவாகத் திறந்தது. காலில் போட்டிருந்த 'பூட்ஸி'ன் கயிற்றை இழுத்துக்கட்டும் பாவனையாக ஒரு கணம் தாமதித்தேன். திறந்த கதவின் பின்புறம் தொங்கிய மெல்லிய பட்டுத் திரை சற்று விலகியது. தனது முகத்தில் கவிழ்ந்திருந்த மற்ருெரு பூந்திரையை லேசாக அகற்றியவாறு, புன்னகை பூத்த முகத்தோடு என்னை அப்படியே பரந்த செவ்விழிகளால் க்ஷணநேரம் நோக்கினுள் கதீஜா. அவளது மார்பகம் விம்மி ஒரு பெருமூச்செறிந்து அந்தப் பட்டுத் திரையைச் சற்று அசைத்தது. அத்துடன் இரண்டு

கண்ணீர்த் துளிகளும் அவள் கன்னத்தில் உதிர்ந்து கீழ் நோக்கி வழிந்தன.

"இந்த விழிக்கோணத்தின் பார்வை ஒன்றே போதுமே, இந்த வாழ்க்கை முழுவதும் என்னைப் பரவசப் படுத்துவதற்கு" என்று நினைத்துக்கொண்டு, எனக்காக வாசலில் காத்து நின்ற காரை நோக்கி வேகமாக நடந்தேன்.

7

பெற்ற மனம்

ரத்தினம் பிள்ளையின் மனைவி சுப்பம்மாள், தன்னுடைய ஒன்றுவிட்ட தமையன் ராமசாமியிடம் அவனுடைய கல்யாணப் பந்தலிலேயே சம்பந்தம்போட ஆரம்பித்து விட்டாள்.

கல்யாண தினத்தன்று சாயங்காலம் ராமசாமியும் அவனுடைய புது மனைவி அலமேலுவும் மணக்கோலத் துடன் மஞ்சள் நீருக்காக ஆற்றுக்குச் சென்று திரும்பும் போது, கல்யாண வீட்டின் முன் கதவு தாழிடப் பட்டிருந்தது.

"என்னுடைய மகன் நாகராஜனுக்கு, உங்களுக்கு அடுத்த வருடம் பிறக்கப்போகும் பெண் குழந்தையைக் கலியாணம் செய்துகொடுப்பதாக உறுதி சொன்னால்தான் கதவைத் திறப்பேன்" என்று கதவுக்குப் பின்புறமிருந்து கொண்டு கூறினாள் சுப்பம்மாள்.

"அப்படியே ஆகட்டும்" என்று பெண்ணும் மாப் பிள்ளையும் ஒருதரத்திற்கு இரண்டுதரம் அழுத்தமாகச் சொல்லிய பிறகுதான் கதவு திறக்கப்பட்டது.

சுப்பம்மாள் விளையாட்டைப் போல் அன்று கூறிய ஜோசியம் இன்று அப்படியே பலித்துவிட்டது. அடுத்த வருடம் கல்யாணி பிறந்த அந்த நிமிஷத்திலிருந்து அந்தக் குழந்தையைத் தன்னுடைய சொந்த மருமகள் போலவே சுப்பம்மாளும் பாவிக்கத் தொடங்கினாள்.

கல்யாணியை முதல் முதலாகப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்போது நாகராஜன் ஐந்தாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்தான். அவனையும் அந்தச் சிறுமியையும் பார்த்து அவரவர்களுடைய பெற்றோர்கள் தங்களுக்குள் ஒருவிதமாகப் பேசிக்கொள்வதைப் பார்த்து குழந்தைகளும் தங்கள் இருவருக்குள்ளும் ஏதோ ஒரு சொல்லவியலாத பிணைப்பை உணர்ந்தார்கள். நாளுக்கு நாள் அவர்களது அன்பு வளர்ந்துவந்தது.

* * * * *

இப்போது நாகராஜனுக்கு வயசு இருபத்து மூன்று. தன்னுடைய தகப்பனாரை இழந்துவிட்டு, வேறொரு ஊருக்குச் சென்று சொற்ப சம்பளத்தில் டிரில் மாஸ்டராக ஒரு பள்ளிக்கூடத்தில் வேலை பார்த்துவருகிறான். இன்னும் இரண்டொரு வருடத்தில் கல்யாணியைக் கல்யாணம் செய்துகொண்டு அதே ஊரில் குடித்தனத்தை ஆரம்பித்துவிடலாமென்று அவன் நம்பியிருந்தான்.

கல்யாணியும் தன்னுடைய படிப்பை முடித்துக் கொண்டவுடன், ஒவ்வொரு நாளும் தன்னுடைய அத்தானின் வரவைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள். அவளுடைய பொழுதில் பெரும் பகுதி தன்னுடைய எதிர்காலத்தைப்பற்றிக் கனவு காண்பதிலேயே கழிந்தது. தன்னைப் படைத்த அந்தப் பிரமதேவன் தன் அழகு, யௌவனம், கல்வி, முதலிய யாவற்றையுமே அந்த நாகராஜனை மகிழச்செய்வதற்காகத்தான் ஏற்படுத்தியிருக்கிறான் என்பது அவள் எண்ணம்.

ஆனால் கல்யாணியின் தாயாரின் மனத்தில் திடீரென்று ஒரு மாறுதல் ஏற்பட்டு விட்டது. சிலோனிலிருந்து புதுச் சம்பாத்தியத்துடன் ஊருக்குத் திரும்பி வந்த ஒரு தூரத்து உறவினரின் மகனுக்குக் தன்னுடைய பெண் கல்யாணியைக் கொடுக்க அலமேலு ஒப்புக்கொண்டாள். அதற்காக அவளது கணவன் ராமசாமியையும் கரை வாய்க் கரைத்து அவன் மனத்தில் நாகராஜனைப்பற்றி ஏற்பட்டிருந்த நினைவை அடியோடு ஒழித்துவிட்டாள்.

கல்யாணிக்கும் நாகராஜனுக்கும் இவ்விஷயம் தெரிந்தபோது அவர்களுடைய தலையில் ஆயிரம் இடிகள் ஒரே சமயத்தில் விழுவதுபோல் தோன்றியது.

இந்த எதிர்பாராத அதிர்ச்சியை நாகராஜனால் தாங்க முடியவில்லை. ஒன்றுந்தோன்றாமல் சில தினங்கள் சுவாதீனமின்றிக் காலம் கழித்தான். அவனுக்குக் கல்யாணியைப்பற்றிய செய்திகூட அவ்வளவு கலக்கத்தைக் கொடுக்கவில்லை. தன்னுடைய அத்தை இப்படி ஒரேயடியாய் தன்னை நம்பிக்கை மோசம் செய்வாளென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. அவளது வஞ்சகம் பொய், துரோகம் இத்தனையும் சேர்ந்து அவனை நெருப்பைப்போல் வாட்டின. இந்த மாதிரி சூது நிறைந்த ஒரு ஜன்மத்தின் வீட்டில் இனிமேல் ஜலபானம்கூடச் செய்வது தகாதென்று நினைத்தான்.

நேரே கல்யாணியின் வீட்டிற்குப் புறப்பட்டுவந்து, அவளுடைய தாய் தகப்பனிடம் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் கல்யாணியிடம் மட்டும், "நீ என்னை நினைத்துக் கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பதில் பயனில்லை. இந்த ஆயுள் முழுவதும் உன்னால் என்னைக் கண்டுபிடிக்க முடியாது. உன் தாயாருக்குப் பிடித்த பணக்கார வாலிபனை மணந்து கொண்டு சுகமாக இரு" என்று சொல்லிவிட்டு

அவளுடைய பதிலே எதிர்பாராமல் விர்ரென்று வீட்டை விட்டுக் கிளம்பிவிட்டான்.

ஆனால் அவன் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்து சேருவதற்குள் அவனுக்காக அங்கே கல்யாணி காத்திருந்தாள். "நீங்கள் எங்கெங்கோ போகிறீர்களோ அங்கெல்லாம் நானும் வந்தே தீருவேன். தாயாயிருந்தாலும் சரி, தகப்பனாயிருந்தாலும் சரி, அல்லது நீங்களாகவே இருந்தாலும்சரி. யாராக இருந்தாலும் என்னை உயிருடன் உங்களிடமிருந்து பிரிக்க முடியாது" என்றாள் கல்யாணி.

அவளுடைய தீர்மானம் அவனைப் பிரமிக்கச் செய்துவிட்டது. என்றாலும் அதற்காக அவனால் அவளுடைய தாய் அலமேலுவின் வஞ்சகத்தைச் சகிக்க முடியவில்லை.

"இவ்வளவு உறுதியோடு இருக்கும் நீ, என்னுடன் வருவதாக இருந்தால், அடியோடு உன் தாயார் வீட்டை மறந்துவிட முடியுமா?" என்றான்.

ஒரு கணம் அவன் முகத்தைக் கல்யாணி திகிலோடு நோக்கினாள்.

"உன் அன்பு என் உயிரைவிடப் பெரிது; ஆனால் அந்தக் காரணத்தால் உன் தாயாரிடமிருந்து அணுவளவு அவமானத்தையும் என்னால் பொறுக்க முடியாது."

பதில் பேசாமல் கல்யாணி அவனுடைய ஆணைக்குக் கீழ்ப்படிந்தாள்.

இதற்குள் ரயில்வே ஸ்டேஷனுக்கு ராமசாமியும் அலமேலுவும் வந்துவிட்டார்கள். ஆனால், அவர்களால் ஆவேச ரூபத்தோடு விளங்கும் கல்யாணியின் முன் ஒரு வார்த்தைகூடப் பேச முடியவில்லை.

வேறு வழியில்லாமல் அலமேலு தன்னுடைய அடங்காப்பிடாரி கல்யாணியைப் பிடிக்காத மாப்பிள்ளை

நாகராஜனுக்கு வேண்டாவெறுப்புடன் திருமணம் செய்து கொடுத்தாள். தன் தாயார் வீட்டை விட்டுப் புக்ககம் கிளம்பிய கல்யாணி மறுபடியும் இன்றுவரை அந்தப் பக்கம் திரும்பிப் பார்க்கவில்லை.

* * * *

இரண்டு வருடங்கள் சென்று விட்டன. தம்பதிகள் இருவரும் மிகுந்த அன்னியோன்னியமாய்க் குடும்ப வாழ்க்கையை நடத்துகின்றனர். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துவதிலும் குடும்பப் பொறுப்பை உணர்ந்து பகிர்ந்து கொள்வதிலும் இரண்டு பேரும் சளைத்தவர்களாகத் தெரியவில்லை. நிம்மதியோடு நாட்கள் கழிந்தன

என்ன இருந்தாலும் கல்யாணியால் முழுவதுமே சந்தோஷமாக இருக்க முடியவில்லை. அவளுடைய இருதயத்தின் ஒரு மூலையில் ஏதோ ஒரு குறை இருந்து கொண்டு அவளைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குழப்பிக் கொண்டே இருந்தது. அதன் காரணத்தையும் அவள் நன்றாக அறிந்திருந்தாள்.

நாகராஜன் முன்னிலையிலும், மற்ற வீட்டுக் காரியங்களைக் கவனிக்கையிலும், அவளுக்குக் கொஞ்சமேனும் சஞ்சலமே தோன்றாது. ஆனால் தனிமையில் அவளால் அவ்வளவு சுலபமாகத் தன்னைத் தேற்றிக்கொள்ள முடியவில்லை. தன்னைப்பற்றித் தாயார் என்ன நினைக்கிறாளோ? எந்த விதமாக ஏங்கித் தவிக்கிறாளோ? என்றெல்லாம் நினைப்பாள் கல்யாணி.

ஆனால், என்னதான் வருத்தம் இருந்தாலும் அத்தனை வருத்தமும் தன்னுடைய கணவனின் முகத்தைக் கண்டவுடன் இருந்த இடம் தெரியாமல் பறந்து போய், அலாதியான முகமலர்ச்சி ஒன்று அவளை வந்து அடைந்து விடும்.

ஒரு நாள் சாயங்காலம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிவந்த நாகராஜன் எள்ளும் கொள்ளும் வெடிக்கும் முகத்துடன் வீடுவந்து சேர்ந்தான். அவனுடைய கோபத்திற்குக் காரணம் இதுதான். தன் வீட்டிற்கு நாலைந்து வீடுகளுக்கு அப்பால் ஒரு வீட்டில் அவனுடைய மாமி அலமேலு வந்திருப்பதை அவன் பார்த்துவிட்டான். அத்துடன் ஒரு பெரிய சந்தேகமும் அவனுக்கு உதித்தது.

அவன் வீட்டிற்குள் நுழைந்தபோது, அங்கே தன் மாமி தங்கியிருந்த வீட்டின் சொந்தக்காரியும் கல்யாணியும் எங்கேயோ புறப்பட ஆயத்தமாக இருப்பதைக் கண்டான். அவன் முகத்தில் ருத்திரகளை தாண்டவமாடியது.

"எத்தனை வருடங்களாய் இந்தக் கபட நாடகம்?" என்று கர்ஜித்தான் நாகராஜன்.

கல்யாணி அப்படியே ஸ்தம்பித்து விட்டாள்.

"இவ்வளவு நாளாய் நான் நம்பியிருந்ததெல்லாம் வெறும் வேஷந்தானா? நம்பிக்கை மோசமே உங்கள் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு வழக்கமா?"

அவளால் நிதானிக்க முடியவில்லை. "எதையும் புரியும்படி பேசுங்கள்; இந்தமாதிரி அர்த்தமற்ற பேச்சை இன்றைக்குத்தான் நான் உங்களிடமிருந்து கேட்கிறேன்" என்று பதறினாள்.

"நெஞ்சின்மேல் கையை வைத்துச் சொல். உன்னுடைய தாயாரை உன் கல்யாணத்திற்குப் பிறகு எத்தனை முறை இப்படித் திருட்டுத்தனமாய் சந்தித்திருக்கிறாய்?"

"என்ன!......நீங்களா இப்படிக் கேட்கிறீர்கள்?— அதன் பிறகு மறுமுறையாக நான் தாயாரின் முகத்தில் விழித்திருந்தால் நான் ஈன ஜாதியில் பிறந்தவள்!"

"அப்படியானால் இப்போதுதான் இந்த அம்மாளின் வீட்டில் வந்து தங்கியிருக்கும் உன் தாயாரை முதல்

கடவையாக ஆவலுடன் காணப்போகிருயாக்கும்!'' என்று குத்தலாகக் கூறினன் நாகராஜன்.

"இதோ பாருங்கள்; உங்கள்மீது ஆணை! இந்த விஷயம் ஒன்றுமே எனக்குத் தெரியாது. இந்த அம்மாள் இதுபற்றி என்னிடம் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. தெரிந்திருந்தால் நான் அப்போதே தகுந்த பதில் சொல்லி யிருப்பேன்'' என்று கூறி அனுப்பினுள்.

அன்று இரவு, ஆராய்ந்து பாராமல் தான் முரட்டுத் தனமாய் நடந்துகொண்டதைப்பற்றி நாகராஜன் தன் மனைவியிடம் கூறி மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். கல்யாணி தனது இரண்டுங் கெட்டான் நிலையை நினைத்துக் கண்ணீர் உதிர்த்தாள்.

* * * * *

சென்ற பத்து மாதமாய்க் கல்யாணி கண்டுவந்த கனவெல்லாம் நனவாக மாறப்போகிற சமயம். பிரசவ வேதனையால் மிகவும் சிரமத்திற்குள்ளாகி, ஒரு தனி அறையிலிருந்து முனகிக் கொண்டிருந்தாள். அண்டை அடுத்த வீட்டுத் தாய்மார்களும் மருத்துவச்சிகளும் அவளைச் சூழ்ந்திருந்தார்கள்.

அவ்வளவு சகிக்கவொண்ணுத் துயரத்தின் மத்தியிலும் அவள், "நாம் இன்னும் சில மணி நேரத்தில் ஒரு குழந்தைக்குத் தாயாகப் போகிருேம்'' என்ற எண்ணத் தால் மிகவும் ஆறுதலடைந்தாள். அதனுல் ஏற்பட்ட துன்பமனைத்தும் அவளது பொறுமையைச் சோதிக்க வலியற்றுவிட்டன.

மருத்துவச்சியும் சுற்றியிருந்தவர்களும் தங்களா லாகாது என்று கை விரித்துவிட்டார்கள்; பின்பு லேடி டாக்டர் வரவழைக்கப்பட்டாள். அவள் வந்து அரைமணி நேரத்திற்குள், "என்னைக் கொன்றுலும் கொன்றுவிடுங்கள்; என் குழந்தை மட்டும் உயிரோடு

இருந்தால் போதும்" என்ற ஈனமான கல்யாணியின் குரல் அறைக்கு வெளியே இருந்த நாகராஜனின் காதுகளில் விழுந்தது.

நல்ல வேளையாகத் தாய் வேறு, குழந்தை வேறாக உயிருடன் பிரிக்கப்பட்டனர். தனக்குப் புதிதாய்ப் பிறந்த பெண் குழந்தையைக் கண்களால் கண்டும் அதன் பச்சிளங் குரலைக் கேட்டும் கல்யாணி உலகையே மறந்தாள். அவளது வேதனையின் நினைவெல்லாம் இன்பகரமாக மாறியது.

நான்கு நாட்கள் சென்றன. "உடம்பை அதிகம் அலட்டிக்கொள்ளாதே" என்று டாக்டர் சொல்லிவிட்டுப் போனதைக்கூட கவனிக்காமல், கல்யாணி சதா காலமும் தன் குழந்தையிடம் கொஞ்சிக்கொண்டேயிருந்தாள். அதை வாரி எடுத்து உச்சி மோர்வதிலும், அதன் மெல்லிய கன்னங்களில் முத்தமாரி பொழிவதிலுமே அவளுடைய மனமெல்லாம் சென்றிருந்தது.

இந்தச் சமயத்தில்தான் நாகராஜன் ஒரு முறை தன்னுடைய சிசுவைப் பார்த்துவிட்டு, "குழந்தை உன்னையே உரித்துக்கொண்டு வந்திருக்கிறதே! அதனுடைய கண்களையும், அந்த மூக்கையும் பார்; உனக்கும் உன் குழந்தைக்கும் கொஞ்சங்கூட வித்தியாசமே காணோமே!" என்றான்.

கணவன் இப்படிக் கேட்டவுடன் அவளுக்குப் பெருமை தாங்க முடியவில்லை. ஆனால் அடுத்த நிமிஷமே ஒரு விபரீத எண்ணம் அவளிடம் தலை காட்டியது.

"ஆமாம்......நான் பிறந்தபோதுகூட எல்லோரும் என் தாயைப் பார்த்து அப்படித்தான் சொன்னார்களாமே!"

உடல் நிலைமை பலஹீனமாயிருக்கும் இந்தச் சமயத்தில் அவளுக்குத் தன் தாயின் நினைவு ஒரு

மின்னலைப்போல் தோன்றியது. "நம்முடைய அம்மாவும் நம்மை இந்தப் பத்து மாதங்களும் சுமந்து, இந்த அபாய கரமான வேதனைகளைச் சகித்துத் தானே பெற்றிருப்பாள்? அவளுடைய கனவும், கற்பனையும், அன்பும், ஆர்வமும் அப்போது நானாகத்தானே இருந்திருப்பேன்? இன்றைக்கு என் குழந்தையை நான் எவ்விதம் உயிருக்குயிராகக் கருதுகிறேனோ அது போலத்தானே அவளும் நினைத்திருப் பாள்?.... தன்னுடைய பெண் வேறொரு பணக்காரனை மணந்துகொண்டால் இதைவிடச் சுகத்தி இருப்பாள் என்ற குருட்டு நம்பிக்கையால்தானே என் கணவருக்குக் கொடுத்த வாக்குறுதியை மறந்துவிட்டாள்......ஆமாம், இப்போது எனக்குப் பிறந்திருக்கும் குழந்தையைப் பார்த் தால் அவள் மனம் எவ்வளவு குதூகலமடையும்!"

அன்றைக்கு மத்தியான்னம் ஆரம்பித்த ஜுரம் கல்யாணியை மணிக்கு மணி அதிகமாக வாட்டத் தொடங் கியது. இரவெல்லாம் ஜுரம் தாங்காமல் பிதற்ற ஆரம்பித்தாள்; உடல் நெருப்பைப்போல் காய்ந்துகொண் டிருந்தது. நாகராஜனுக்கு ஒன்றுமே புரியவில்லை; ஏதோ ஓர் அபாயம் தன்னை நோக்கிவருவதாக உணர்ந்தான்.

டாக்டர்களுடைய சாமர்த்திய மெல்லாம் கல்யாணி யின் ஜுரத்தினிடம் பலிக்கவில்லை. அவளுக்குத் திடீ ரென்று ஜன்னி கண்டுவிட்டது. அனலாகத் தகித்துக் கொண்டிருந்த தேகம் ஜில்லிட்டும் போயிற்று. எந்நே ரமும், 'அம்மா, அம்மா' என்று உளற ஆரம்பித்தாள். இரவிலும் பகலிலும் அந்த அம்மாவும், அவளுடைய குழந்தையைப் பற்றியுமேதான் பேச்சு.

"ஏண்டி கண்ணு! நீ என்னைப் போலவே பிறந்திருக் கிறாயாமே? நான்கூட என் அம்மாவைப் போலவேதான் பிறந்தேன்......எல்லோரும் அம்மாதாண்டி! என்ன இருந்

தானும் பெற்றவளல்லவா?... ஐயையோ பெற்ற வயிறு எப்படித் துடிக்குமோ?'

* * * * *

கல்யாணி கண்களை மிரள விழித்துப் பார்த்தாள். எத்தனை தடவை விழித்துப் பார்த்தாலும் அவள் எதிரே தெரிந்த அந்த உருவம் லேசில் மறைவதாக இல்லை.

"நீ யார்?......என் அம்மாவா?"

"ஆமாண்டி என் செல்வமே" என்று கல்யாணியின் முகத்தோடு தன் முகத்தை வைத்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள் அலமேலு.'

"ஊஹூம்; ஏமாற்றுகிறாய்; நீ என் அம்மா இல்லை!"

"இதோ நன்றாக என்னை உற்றுப்பார்!...உன்னைப் பெற்ற இந்தப் பாவி மனம் என்ன பாடு படுகிறது தெரியுமா?... இன்னும் அடையாளம் தெரியவில்லையா உனக்கு"

ஒரு நிமிஷம் பதில் இல்லை.

பிறகு, "ஆமாம் அம்மாதான்! - நீ எப்படி இங்கே வந்தாய்"

"மாப்பிள்ளை தந்தி கொடுத்திருந்தார்."

"உண்மையாகவா!" என்று கேட்பவைபோல் கல்யாணியின் கண் இமைகள் ஆச்சரியத்தோடு உயர்ந்தன.

எதிரே கண்ணீரை மாலை மாலையாய்ப் பொழிந்து கொண்டு, "உனக்கும் உன் அம்மாவுக்கும் செய்த துரோகத்திற்கு என்னை மனப்பூர்வமாக மன்னித்துவிடு கல்யாணி" என்று தடுமாறினான் நாகராஜன்.

"அம்மா, இந்தா உன்னுடைய பேரப்பெண்! இரண்டு மூன்று நாட்கள் இவளைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்.

அப்புறம் நான் பிழைத்துக்கொள்வேன் - ஆமாம். நிச்சயம் பிழைத்துக் கொள்வேன்!''

நாகராஜனும் அலமேலுவும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்கள்.

8

சினிமா வண்டி.

பொன்னம்மாள் அழகிதான். அவ்வளவு நல்ல சிவப்பு இல்லாவிட்டாலும் ரொம்பவும் கறுப்பல்ல; மாநிறம். கூந்தல் கருகரு வென்று வளர்ந்து அடர்ந்து கிடக்கும். முகமும் விழிகளும் கடைந்தெடுத்ததுபோல், பச்சைக்கிளி மாதிரி இருப்பாள்.

அவள் 'கீழ்ச் சாதி'யில் பிறந்திருந்தாலும் தகப்பன் சர்க்கார் சம்பளம் வாங்கியதால் அவளை ஐந்தாவது வரையிலும் படிக்க வைத்துவிட்டான். இப்போது அவளுக்குப் பதினேழு வயசு. பிராயத்திற்குத் தகுந்த ஓர் இன்பமும் ஒருவிதப் பூரிப்பும் அவளை வந்து தழுவிக் கொண்டன.

ஒரு நாள் சாயந்திரம் தலைவாரிப் பின்னிக்கொண்டே கண்ணாடியில் முகத்தைப் பழிப்புக் காண்பித்துக்கொண் டிருந்தாள். எங்கிருந்தோ 'கிளாரினட்' வாத்தியத்தின் இனிமையான கானம் கொஞ்சங் கொஞ்சமாக வந்து மிருதுவான தொனியில் ஒலித்தது. ஆச்சரியத்துடன் உற்றுக் கேட்டாள்; அதில் ஓர் உற்சாகம் கூடப் பிறந்து விட்டது.

மெதுவாக எழுந்து சென்று தெருக்கோடியைக் கவனித்தாள். சினிமா வண்டி அப்போதுதான் சர்வ ஆடம்பரத்துடன் ஆடி அசைந்து வந்துகொண்டிருந்தது.

தினம் தினம் பார்த்துச் சலிப்படைந்த அதே சினிமா வண்டி தான். அலங்காரங்கள் கூட ஒன்றும் அதிகப் பிரமாதமாக இல்லை. ஆனால், அந்தப் பாண்டு வாத்திய மும் அதன் இனிமையும் மாத்திரம் இன்று ஒரு புது தினுசில் அமைந்திருந்தது. என்றைக்கும் கேட்கும் விதத்தில் அந்தப் பழைய ராகங்கள் ஊதப்படவில்லை; அதற்குப் பதிலாக என்றுமே அவள் கேட்டிராத ஓர் இனிமையான ராகம் காற்றில் சுழன்று வந்தது.

ஒருவேளை, வேறே ஆள்தான் வந்து ஊதுகிறானே? அல்லது வாத்தியந்தான் மாறியிருக்கிறதோ!......கேட்கக் கேட்க அபூர்வமாக இருக்கிறதே!...... நிச்சயம் இதை ஊதுபவன் ஒரு புது மனிதனாகத்தான் இருக்கவேண்டும் ......சற்று நேரம் போனால் தானே தெரிந்துவிடுகிறது. அவசரம் எதற்கு?

வண்டி அருகில் நெருங்க நெருங்க அவளைக் கேட்காம லேயே அவள் கால்களின் மெட்டிகள் தரையில் தாளம் போட ஆரம்பித்தன. சந்தோஷம் அவளையும் மீறி விட்டது. ராக மயக்கத்தில் கட்டுப்பட்டு அப்படியே நின்றாள். வண்டி சீக்கிரத்தில் அவள் வீட்டைத் தாண்டிச் சென்றது; கவனித்தாள்.

தினந்தோறும் வண்டியின் மூலையில் உட்கார்ந்து வாசிக்கும் அந்தக் கிழவனுக்குப்பதிலாக, அதே இடத்தைக் கிராப் வைத்த ஓர் இளைஞன் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருந்தான்.

பொன்னம்மாள் முதலில் அவனைச் சிறு பிள்ளைபோல் ஆவலுடன் பார்த்தாள். அவனும் அதைப்போலவே

நோக்கினான். ஆனால் அவனுடைய அந்தப் பொல்லாத பார்வையில் ஏதோ ஒரு காந்த சக்தி கலந்திருந்தது.

திடீரென்று வெட்கம் பிறந்துவிட்டதால் உள்ளே ஓடிக் கதவைத் தாழிட்டுக்கொண்டாள் பொன்னம்மாள்.

இந்த முப்பது நாட்களுக்குள் பொன்னம்மாள் எவ்வளவோ தூரம் மாறிவிட்டாள். இப்போதெல்லாம் மாலை மூன்று மணிக்கு மேல் அவளுக்கு ஒரு வேலையிலும் இருப்புக் கொள்வதில்லை. எதற்கெடுத்தாலும் அவசரமும் பரபரப்புந்தான். ஒரு காரியத்திலாவது நிதான புத்தி கிடையாது. நொடிக்கு நூறு தடவை கண்ணாடியில் தன் முகத்தை அழகு பார்த்துக் கொள்வது தான் அவள் செய்யும் முக்கியமான வேலை

மணி நாலு அடிக்க வேண்டியதுதான் தாமதம்; கணக்குத் தவறாமல் தெருவின் மூலையில் சினிமா வண்டி வந்து கொண்டிருக்கும். பொன்னம்மாளும் எல்லா அவசர காரியங்களையும் விட்டுவிட்டு, நீர் தெளிப்பதற்காக வாசலுக்கு வந்துவிடுவாள்—அந்த வேலையைச் செய்ய அவளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நேரம் அதுதான்.

வாத்தியக்கார ஜான் முத்துசாமியின் உள்ளக்கிளர்ச்சிகள் பொன்னம்மாளைக் கண்டவுடன் அலைகள் போல் பொங்கி எழுந்து வாத்தியத்தின் வாயிலாக வெளியே சிதறும். தனக்குத் தெரிந்த அத்தனை ராகங்களையும் அள்ளி அள்ளிச் சொரிந்துவிடுவான். ஹிந்தி, இங்கிலீஷ், வங்காளி; இன்னும் என்ன என்னவோ ராகங்கள்! - அவையெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து பொன்னம்மாளின் உள்ளத்தை ஆட்டி அசைத்துக் குலுக்கிக் குலைத்துவிடும்.

கண்களுக்குக் கண்கள் பேசிக்கொண்ட விஷயங்கள் இப்போது கடிதத்தளவில் வந்துவிட்டன. பொன்னம்மாளின் தம்பி சின்னச்சாமி இந்த வேலையில் தீவிரமாய்

ஈடுபடுத்தப்பட்டான். காதற் செய்திகள் இறக்கை கட்டிக்கொண்டு கற்றை கற்றையாய்ப் பறந்து சென்றன.

நாட்கள் கழிந்தன; சங்கதி எப்படியோ அவள் தகப்பனுக்கு எட்டிவிட்டது. அவனும் உடனே எச்சரிக்கை செய்து வைத்தான். "இதோ பார் பொன்னம்மா! பேரைக் கெடுத்துப் போடாதே! அவன் சாதி கெட்டவன்; மதம் கெட்டவன்; வேதம் படிக்கிறவன். நம்ம சாதியாய் இருந்திட்டாலும் அவன் கும்பிடுகிற சாமி யெல்லாம் வேறே......என் பேச்சைக் கேட்காதபடி ஏதாவது செஞ்சியோ அப்புறம் உங்கப்பனைத் தலை முழுகிப்படவேண்டியதுதான்" என்றான்.

2

சினிமாக் கொட்டகைக்குள் நடந்து கொண்டிருந்த ஒரு சமூகத் தமிழ்ப் படத்தின் காதற் கட்டம் வந்தது. முதன் முதலாக நடிப்புக் காதலர்கள் ஒருவரை யொருவர் சந்தித்து, தங்களது ஆர்வத்தை வார்த்தைகளால் அள்ளிப் பொழிந்துகொள்ளுகிறார்கள். ருசிகரமான பாகமாதலால் ரசிகர்கள் வாயைத் திறந்தபடியே திரையிடம் மனத்தைப் பறி கொடுத்திருந்தார்கள்.

அதே நேரத்தில் கொட்டகையின் பின்புறத் தோட்டத்தில் உண்மையிலேயே இரண்டு காதலர்கள் சந்தித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால் இவர்களுடைய வாயிலிருந்து ஆர்வம் ததும்பும் அன்புப் பேச்சுக்களோ, கற்பனை மிக்க காதற் பாட்டுக்களோ ஒன்றும் வெளி வரவில்லை.

ஜான் முத்துசாமி பீடியைப் புகைத்துக்கொண்டே தலையைக் கீழே தொங்கவிட்டுக் கொண்டு நின்றான். அவனுடைய கண் நரம்புகள் சிவந்திருந்தன. அருகில் நடுங்கியபடியே ஒன்றும் தோன்றாமல் நின்றாள் பொன்னம்மாள்.

பைத்தியம் பிடித்தவன் மாதிரி முத்துச்சாமி தன்னையே ஒரு தடவை அங்கம் அங்கமாகப் பார்த்துக் கொண்டான். - இதற்காகவா அவ்வளவு அலங்காரங்கள்?......பட்டுக்கரை வேஷ்டி, சலவை கல்யாத சட்டை, விசிறிமடிப்பு அங்கவஸ்திரம் .....இதற்குத்தானு இவள் என்னை முதல் முதலில் தனியாகச் சந்திப்பதாக எழுதியிருந்தாள்? இந்தச் செய்தியைச் சொல்ல இவள் ஏன் நேரில் வரவேண்டும்?

மறுபடியும் மனத்திற்குள்ளேயே முத்துசாமி முணுமுணுத்துக்கொண்டான். 'அவளுடன் தனிமையில் நின்று பேசப்போகிறோம். அவளுடைய கொஞ்சும் மொழிகளைக் கேட்கப் போகிறோம். அவளுடைய மெல்லிய கரத்தைப் பற்றி இழுக்கப் போகிறோம்......இன்னும் என்ன எல்லாமோ எண்ணிக் கோட்டை கட்டினேமே...... ஆனல்? "நான் உன்னுடைய பொன்னம்மா அல்ல; என்னை மறந்துவிடு" என்கிருளே! அதெப்படி முடியும்'?

ஏக்கமும் ஏமாற்றமும் முத்துசாமியின் தொண்டையை அடைத்துக்கொண்டன. "பின்னே என்ன யோசனே, பொன்னம்மா? ஏன் உங்கப்பா வந்து எங்க கிறிஸ்தவ வேதத்துலே சேந்திடப்படாது? நீதான் கொஞ்சம் சொல்லிப்பாரேன்" என்றுன்.

"அவர் சங்கதி ஒங்களுக்கு ஒண்ணுமே தெரியாது" என்றுள் பொன்னம்மாள்.

"நானுச்சும் வந்து, பழையபடி ஒங்க சாமியையே கும்பிடப்படாதா? என்னை ஒங்க சாதியிலே சேர்த்துக்க மாட்டாங்களா? முந்தியெல்லாம் ...... நான் ... பொன்னம்மா! எனக்காக...உங்கப்பா கிட்ட......" அவனுடைய குரல் கெஞ்சும் பாவனையில் தழுதழுத்தது.

உள்ளிருந்து குமுறிவரும் வேதனையைப் பொன்னம்மாள் அறிந்து கொண்டாள். கன்னங்களில் தாரை தாரையாய் வழிந்து கொண்டிருந்த நீரைத் துடைக்க அவளுக்கு நினைவு இல்லை. ஏதோ ஒரு கனத்த பாரம் அவளது மார்பை அழுத்திக்கொண்டிருந்தது. என்னவோ பேச வாயெடுத்தாள், முடியவில்லை. குமுறினாள்; தேம்பினாள்; விம்மினாள். அதுதான் முதல் சந்திப்பின் கடைசிப் பேச்சு.

யாரோ தூரத்தில் இருமிக்கொண்டே வரும் சப்தம் கேட்டது. இருவரும் பிரிந்தனர். சினிமாவிலும் காதற் காட்சி முடிந்தது. வாழ்க்கைப் போராட்டத்தின் வலியற்ற பாகந்தான் அதன் தொடர்ச்சி.

சினிமா வண்டியின் பாண்டு வாத்தியம் தன்னுடைய மோஹன ராகங்களையெல்லாம் அடியோடு மறந்து விட்டது. அதற்குப் பதிலாகத் துக்கமும் துயரமும் அந்தக் குழாயின் வாயிலாக சதா சர்வ காலமும் பெருமூச்சாய்ப் பெருகிக்கொண்டே இருந்தன.

மாலை நேரத்தில் ஊதிவரும் சோகத்தின் எதிரொலியைக் கூட, பொன்னம்மாள் அநேக நாட்கள் கேட்கக் கொடுத்து வைக்கவில்லை. வெகு சீக்கிரத்திலேயே அவளுடைய ஒன்று விட்ட மாமன் மகன் பழனிவேலு அவளைக் கல்யாணம் செய்துகொண்டான். முறைப்படியே சில நாளைக்கெல்லாம் பெரம்பலூர் போய்ச் சேர்ந்தாள்.

ஜான் முத்துசாமியின் எண்ணத்தில் மண்ணைப் போட்டதுமல்லாமல், அவனுடைய வயிற்றிலும் மண்ணைப் போடுவதற்காக ஒரு புதுச் சட்டம் கிளம்பியது. 'நியூஸென்ஸ்' விதிப்படி சினிமா வண்டியில் வாத்திய கோஷங்கள் தடைப்படுத்தப்பட்டன. பிழைப்புக்கு வழியில்லாமல், பிடிக்குங்கூடக் காசு இல்லாமல் ஊர் ஊராய்ச் சுற்றினான்.

3

அதெல்லாம் பழங்கதை; மூன்று வருஷங்களுக்கு முன்பு நடந்தவை. பொன்னம்மாள் இன்றைக்கு ஒரு தாய். அவள் இடுப்பில் தங்கத்தால் உருக்கி வார்த்த பதுமைபோல் ஓர் இளம் குழந்தை காலை ஆட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறது. அதன் அழகில் ஈடுபட்டு, மனம் மயங்கியவாறே பொழுதைப் போக்குகிறாள் அவள்.

பொன்னம்மாளின் கணவன் பழனிவேலு ரொம்பவும் கவலையற்ற மனிதன்; சரள சுபாவமுடையவன். எல்லாம் அவள் இஷ்டப்படியே விட்டுவிடுவான். இந்த மாதிரி வீட்டுக்காரன் ஒருவன் அகப்பட்டதால் அவளுக்கே சந்தோஷம் தாங்க முடியவில்லை. அதே காரணத்தால் முத்துசாமியின் நினைவைக் கூட வெகு விரைவில் அகற்றிவிட எண்ணினாள்.

குழந்தை பிறந்து ஒரு மாதமானதும் ஒரு நாள் பழனிவேலு, "நம்ம பையனுக்குச் செல்லமுத்துன்னு பெயர் வைப்பமா?" என்று பொன்னம்மாளைக் கேட்டான்.

"என்ன! செல்லமுத்தா?" முத்து என்ற பெயர் காதில் விழுந்தவுடன் அவளுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ஒரே கலவரமடைந்துவிட்டாள்; நெஞ்சில் அந்த ஒரு சொல் சுரீலென்று தைப்பதுபோல் இருந்தது. அந்த வேதனையின் மத்தியில் பழைய நாடகங்கள் மின்னலாகத் தோன்றி மறைந்தன.

"முத்துசாமி என்று கூப்பிடுவோமே" என்றாள் தன்னையும் மீறிய உணர்ச்சியுடன். மறுவார்த்தை பேசாமல் பழனிவேலு அதை உடனே ஏற்றுக் கொண்டான்.

நாட்கள் வளர்ந்தன. குழந்தை முத்துசாமியின் வயசும் வளர்ந்தது. தள்ளாடித் தள்ளாடி நடக்கும்

சக்தியை அடைந்து விட்டான். எந்த நேரமும் வீட்டில் கொட்டிவைக்க முடியாத மழலையும் சிரிப்புந்தான். அவனுடைய தாய், கொஞ்சிக் குலவுவதற்குக் குழந்தை இருந்ததால் அதே பெயருடைய ஒருவன் இருந்தான் என்பதையும் கொஞ்சங் கொஞ்சமாக மறந்துவந்தாள்.

ஒரு நாள் பொன்னம்மாளின் கணவன் அவளையும் குழந்தையையும் அழைத்துக் கொண்டு, அடுத்த ஊரில் இருந்த அவள் தங்கை வீட்டிற்கு வந்திருந்தான். இரண்டு மூன்று நாட்கள் விருந்துச் சாப்பாட்டில் தடபுடலாகக் கழிந்தன. பழனிவேலு தன் தங்கை புருஷனை அழைத்துக் கொண்டு முத்துவுக்குச் சட்டைத் துணி வாங்கக் கடை வீதிக்குப் போயிருந்தான்.

வீட்டின் வாசற் பக்கத்துக் கதவு பாதி திறந்தும் திறவாமலும் வைக்கப்பட்டிருந்தது. கூடத்து நடையின் முன் பக்கத்தில் உட்கார்ந்தபடியே பொன்னம்மாளும் அவள் நாத்தியும் குழந்தையை வைத்து விளையாடிக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழிந்தது. குழந்தையும் அவர்களிடமிருந்து நழுவி வெளியே கதவின் பக்கமாய் நடக்க ஆரம்பித்தான்.

பையனைப்பற்றிப் பேச்சைத் துவக்கினர் மைத்துனிகள். இருவரும் தங்கள் தங்கள் குடும்ப விவகாரத்தை விஸ்தரிக்க ஆரம்பித்துவிட்டார்கள். ஒவ்வொருவருடைய பிறந்த கதை, வளர்ந்த கதை, வாழ்ந்த கதை எல்லாம் அடுக்கடுக்காகச் சபைக்கு வந்தன. சுவாரஸ்யம் அதிகமாகக் கிளம்பியது.

குழந்தை கதவிடுக்கில் ஒளிந்துகொண்டே தலையை மாத்திரம் வெளியே நீட்டி ஒரு முல்லைச் சிரிப்புச் சிரித்தான். அதை ஒருவரும் கவனித்துப் பார்க்கவில்லை. அவன் பாட்டில் மெதுவாகக் கதவை இழுத்து மூடிவிட்டு,

திண்ணையில் கட்டியிருந்த நாய்க் குட்டியுடன் விளையாடப் போய்விட்டான்.

வழக்கமாக அந்த ஊரைச் சுற்றிவரும் சினிமா வண்டி அந்த வீதி வழியே வந்துகொண்டிருந்தது. அரை பர்லாங் தூரத்திலிருந்து கொட்டு முழக்குச் சத்தம் அடக்கமாகக் கேட்டுக்கொண்டிருந்தது.

தினசரி நடக்கும் சாதாரண சம்பவமாதலால் அதை ஒருவரும் கவனிக்கவில்லை. "அப்படி அதில் சிரத்தை எடுத்துக்கொண்ட, பாழாய்ப்போன நாட்கள்தாம் தேய்ந்துவிட்டனவே" என்று பொன்னம்மாள் எண்ணினாள். அவளுடைய மனத்தில் ஒரு விதத் துடிதுடிப்போ போராட்டமோ ஏற்படவில்லை.

தெருத் திண்ணையில் கட்டிக்கிடந்த நாய், எதையோ கண்டு 'வள், 'வள்'ளென்று குலைத்தது. கவனம் அதிலும் செல்லவில்லை.

தன் தாய்வீட்டுப் பெருமையைப் பற்றிப் பொன்னம்மாளின் மைத்துனி மூச்சு விடாமல் பேசிக்கொண்டிருந்தாள். நிலபுலம் வீடுவாசல் முதலியவைகளைப் பற்றி விஷயம் போய்க்கொண்டிருந்தது. பொன்னியின் கண், காது, மனமெல்லாம் அவளுடைய வர்ணனையில் லயித்திருந்தன. சுற்றியுள்ள உலகைப் பற்றி அவளுக்குக் கொஞ்சமேனும் நினைப்பே வரவில்லை.

"ஐயோ!... ...குழந்தை போச்சே!" என்று திடீரென்று வாசலில் ஒரு கூச்சல் கேட்டது. சினிமா வண்டியும் 'சடக்' என்ற ஓர் ஆட்டத்துடன் நின்றது; வண்டிச் சக்கரத்தில் அடிபட்ட குழந்தை தரையில் மல்லாந்து கிடந்தான்.

"ஐயோ! அடபாவி! முத்துச்சாமி......சண்டாளா?" என்று பிதற்றிக்கொண்டே ஓடி, கிழே ரத்தத்தில்

விழுந்து கிடந்த குழந்தையை பொன்னம்மாள் இரண்டு கைகளாலும் வாரி யெடுத்தாள். அவள் தலை மயிர் அலங்கோலமாய் அவிழ்ந்து விட்டது. சிறுவனை அணைத்துக்கொண்டே கதறிப் புலம்பினுள்; துடியாய்த் துடித்தாள்.

"முத்துச்சாமீ......" என்ற குரல், வண்டியிலிருந்து கீழே குதித்துக் கொண்டிருந்த ஒருவனுக்கு, தலையில் ஆயிரம் இடிகள் விழுவனபோல் இருந்தது. பெரிய அதிர்ச்சியுற்றவன் போல் கலவரமடைந்தான். கையிலிருந்து கீழே விழுந்த வாத்தியத்தையும் கவனிக்காமல், உலுக்கி எடுத்த நெஞ்சுடன் அருகில் வந்தான்.

"முத்துசாமியா?...நான் என்ன செய்தேன்?"... அவன் வாய் குழறியது; கண்கள் சுழன்றன. நடுங்கிக் கொண்டே ஆவேசம் பிடித்தவன் போல் மிரள மிரள விழித்தான்.

குனிந்து பதறிய அவள் தலையை மேலே தூக்கினுள். இருவர் கண்களும் சந்தித்தன; இருவருடைய நெஞ்சுகளும் ஒரு கணம் 'பக்' கென்று துடிப்பற்று நின்றுவிட்டன. அசையாது நின்றார்கள்.

"உங்களையல்ல, என் பிள்ளை பெயர் முத்துச்சாமி..... அந்தப் பெயரிட்ட தண்டனைதான் இது!" என்றாள். அழுகையை அவளால் அடக்க முடியவில்லை; 'கோ' வென்று கதறிவிட்டாள்.

தாய் உருவத்தில் தன் எதிரே நின்று கண்ணீர் வடிக்கும் பொன்னம்மாளையும் அவளுடைய இறந்த குழந்தையையும் ஒருமுறை பிரேதக் களையுடன் நோக்கினான் ஜான் முத்துசாமி. அவனுடைய மார்பு, 'அடி பாவி!' என்று முணுமுணுப்பதுபோல் ஒரு பெருமூச்சை வெளியே தள்ளியது.

குழந்தைக்கு வாங்கிய புதுச்சட்டையுடன் வந்து கொண்டிருந்த பழனிவேலுவுக்கு வண்டியின் பின்புறம் உடைந்துகிடந்த இசை வாத்தியம் ஓர் அபசகுனமாகத் தென்பட்டது.

9

புயலுக்குப் பின்

"தெளளி, புயலுக்குப்பின் என்ன தெரியுமா? என்றாள் குமுதம்.

"அமைதி!" என்று நான் யந்திரம்போல் பதிலளித்தேன்.

"இரவு பூராவும் புயல்; கோரப் புயல்; - பொழுது விடியுமுன்னே அமைதி! ஆனால் நீ கூறியதைப் போன்ற அமைதி அல்ல; பயங்கரமான அமைதி; சாவைப்போன்ற அமைதி; - இல்லை, சாவின் அமைதியேதான்!" - என்று அவள் தொடர்ந்து சொன்னாள்.

எனக்கு ஒன்றும் அர்த்தமாகவில்லை. அவளை உற்று நோக்கினேன். அவளுடைய நிலைமை என் கண்களி லிருந்து காகரவென்று நீரைக் கொண்டுவந்து கொட் டியது.

குமுதம் நோய்ப் படுக்கையிலே புழுப்போல நெளிந்து கொண்டிருந்தாள். அவள் உடம்பெல்லாம் அளவாகத கதித்தது. அவளுடைய மூக்கில் நெருப்புப் புகை வீசியது.

"வீணாக உன்னை அலட்டிக்கொள்ளாதே, குமுதம். பேசாமல் கண்ணை மூடித் தூங்கு" என்றேன். அவள் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை.

"நான் சொல்வது உனக்குப் புரிகிறதோ?" என்றாள்.

"புரியவில்லை; நான் புரிந்துகொள்ளவும் வேண்டாம். நான் சொல்வதைக் கொஞ்சம் கேளேன்" என்று மெதுவாகப் போர்வையை அவள்மீது இழுத்துவிட்டேன்.

"அப்படிச் சொல்லாதே, கௌரி! உன்னிடம் சொல்வதற்குத்தான் இந்த ரகசியத்தை ஒளித்துவைத்திருக்கிறேன். இதை வெளியிடாவிட்டால் என் நெஞ்சு வெடித்துவிடும்; வெடித்த நெஞ்சுகூட வேகாது!" என்றாள்.

அவளுடைய கரங்களைப் பற்றி என் மார்பில் புதைத்துக்கொண்டு விம்மினேன். உணர்ச்சி உள்ளத்தை உருக் குலைத்துவிட்டது. "சொல்லு, குமுதம்; சொல்லு!" என்று மீண்டும் விம்மினேன்.

"அவர் சாதாரண மனிதரல்ல; தெய்வ புருஷர்; அவரைச் சோதனை செய்ய முயன்றேன். அதன் பலன்தான் இது. அவரும் போய்விட்டார்; இதோ நானும் போகப் போகிறேன்......நான் பாவி! சண்டாளி! கொலைபாதகி! எனக்கு இனி விமோசனமே கிடையாது!"

நான் பெருமூச்செறிந்தேன். அவள் திடீரென்று என்னை ஒரு கேள்வி கேட்டாள்.

"விசுவாமித்திர ரிஷியின் பிரம்மசரியத்திற்கு ஒரு தரம் பங்கம் ஏற்பட்டதே, அந்தக் கதை உனக்குத் தெரியுமா?" என்றாள்.

"தெரியும்" என்றேன்.

"எத்தனையோ வருஷம் கடுந்தவஞ்செய்து, இந்திரிய ஜயம் பெற்ற அந்த யோகீசுவரரே ஒரு பெண்பிள்ளையின் கணநேரக் கண்வீச்சில் கருத்தழிந்தாரென்றால், பாவம், இவர் எம்மாத்திரம்? - அதிலும் நான் செய்தது பரிபக்குவமறியாத பதற்றத்தின் சோதனை!"

எனக்கு அவள் இதுவரை கூறியது ஒன்றுமே சரியாக விளங்கவில்லை. "விளங்கும்படியாகச் சொல்" என்றேன். அவள் கூறினாள்.

கூறிவிட்டுக் கடைசியில், "இதை நான் உயிருடன் இருக்கப்போகும் இந்த இரண்டு நாட்கள் மாத்திரம் ஒருவரிடமும் சொல்லாதே. அதற்குப் பிறகு நான் உன்னைத் தடை செய்யவில்லை. உன் இஷ்டம்' என்றாள். அவள் தெரிவித்த பிரகாரமே, இரண்டு தினங்களில், என்னிடமிருந்து அவள் என்றைக்குமே பிரிந்துவிட்டாள். இனிமேல், என் உள்ளத்தைக் கருவண்டுபோல் துளைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கதையை அவளது பைத்தியக்கார முயற்சியின் பலனை - நான் உங்களுக்குச் சொல்லலாம்.

* * * * *

முதலில் அவளைப்பற்றி இரண்டு வார்த்தைகள்.

எங்களுடைய கலைவாணி கல்லூரியின் பெயருக்கே பிரகாசமளித்தவள் அவள்தான். அவள் அழகி. அவளுடைய அழகின் உயர்வை அநேகமாக எங்கள் கல்லூரி மாணவிகள் அத்தனை பேரும் உணர்ந்திருந்தோம். அவளுடைய அழகு சாதாரண உடலழகுடன் ஒப்பிடக் கூடியதல்ல; அது அசாதாரணப் பொலிவுடன் கூடியது. அது மாத்திரமல்ல. அவள் மதுரமான சாரீரக்காரி. லாகவமாக நடிக்கும் திறமையுடையவள். பெரும்பாலும் எங்கள் பள்ளிக்கூட நாடகங்களிலெல்லாம் அவளுக்குத் தான் கதாநாயகி பாத்திரம். அவள் என் பிராண ஸ்நேகிதி; நானும் அவளும் ஹாஸ்டலில் ஒரே அறையில் இருந்தோம். வகுப்பும் ஒன்றுதான்.

குமுதத்திற்குத் தாய் இல்லை; அவளுடைய தகப்பனார் மறுவிவாகம் செய்துகொண்டிருந்தார். குமுதத்தின் சித்தி வடநாட்டுக்காரி. அவள் பெயர் கிரிஜா. அவள் குமுதத்

தைத் தன் உயிர்போல் நினைத்து வந்தாள். அவளுக்கும் வேறு குழந்தைகள் இல்லை. ஹாஸ்டல் செலவுக்கெல்லாம் மாதந்தோறும் கிரிஜாவின் கைப்படத்தான் பணம் வரும். கடிதங்கள் இரண்டுபேரும் சேர்ந்தே எழுதுவார்கள்.

குமுதம் எங்கள் ஹாஸ்டலில் நாங்கள் நடத்திவந்த 'சக்திக் கழக'த்திற்குக் காரியதரிசியாக இருந்தாள். அவளுக்குப் பள்ளிக்கூடப் புத்தகங்கள் படிப்பதைவிடப் பத்திரிகைகளைப் படிக்கத்தான் பொழுது இருக்கும்.

பத்திரிகை உலகத்தில் அவளுடைய கவனத்தை மிகவும் கவர்ந்தவர் ஜம்புநாதன். அவர் அடிக்கடி 'தமிழ்க் குமரி'க்குக் கதையோ கட்டுரையோ எழுதிவருவார். அவருடைய எழுத்துக்களில் ஆழ்ந்த கருத்துக்களும் பரந்த நோக்கங்களும் காணப்படும். என்னைப் பொறுத்தமட்டில் நான் அவரை ஒரு வேதாந்தி என்றும் வயோதிகரென்றுமே கருதிவந்தேன். ஆனால், அவர் இளமை மாறாத யுவர் என்பது குமுதம் கூறிய பிறகுதான் எனக்குத் தெரிந்தது. இந்த விஷயத்தை அவள் எப்படித்தான் கொண்டிருந்தாளோ!

அவளுடைய வார்த்தையில் எனக்கு நம்பிக்கை ஏற்படும்படியாக அந்த ஆண்டில் 'தமிழ்க் குமரி' மலர் வெளிவந்தது. அதில் ஜம்புநாதனுடைய புகைப்படத்தைப் போட்டு, அதன்கீழ்ப் பத்திரிகையின் ஆசிரியர் ஜம்புநாதனைப் புகழ்ந்து நாலு வார்த்தைகள் எழுதியிருந்தார். அந்தப் படத்தையே, நான் அருகில் இருப்பதைக்கூட லக்ஷ்யம் செய்யாமல், அரைமணி நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள் குமுதம்.

2

ஒரு நாள் இரவு. நான் சாப்பிட்டு வந்தவுடன் படிக்காமல் படுக்கையை விரித்துப் படுத்துக்கொண்டேன்.

உடனே தூக்கம் வந்துவிட்டது. மறுபடியும் திடீரென்று சில மணி நேரத்தில் விழிப்பு வந்ததால் கண் திறந்து நோக்கினேன். அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மணி பன்னிரண்டு.

போர்வையைச் சரிவர விலக்காமல் குமுதம் உட்கார்ந்திருந்த நாற்காலிப் பக்கம் பார்த்தேன். அவளுடைய மடியில் அந்த 'மலர்' விரிந்து கிடந்தது. ஜம்புநாதனின் படம் வந்த அதே பக்கந்தான்! அவள் கைகளுக்குள் தலையைக் கவிழ்த்துக்கொண்டு கண்ணீரைச் சொரிந்த வண்ணம் இருந்தாள். நான் இதையெல்லாம் ஒன்றும் அறியாதவள்போல் மீண்டும் உறங்கிப்போய்விட்டேன்.

மறுநாள் அந்த மலரை எடுத்து அவர் எழுதியிருந்த அந்தக் கட்டுரையை இரண்டாவது தடவையாகப் படித்தேன். "ஒளியும் இருளும்" என்ற தலைப்புடன், ஒரு லக்ஷியவாதி இந்த உலகத்தில் தம்முடைய நெஞ்சுடன் நடத்தும் இடைவிடாத போராட்டத்தைப் பற்றி எழுதியிருந்தார்; கொடுமை நிறைந்த இந்த உலகப் போக்கை அந்த லக்ஷியவாதி அடியோடு வெறுக்கிறார். அதற்காக அவர் தம்மையே பலியிட விரும்பி, அந்தப் பலிப்பொருளாகத் தம்மை மாற்றிக்கொள்ள விரும்புகிறார். உலகத்தின் கவனங்களும், அவற்றின் வழிநோக்கும் ஐம்புல வேட்கைகளும் அவருடைய நோக்கத்திற்கு எதிரே நிற்கின்றன. சலிப்பும் சந்தோஷமும் நிறைந்த இந்த வாழ்க்கைக்கிடையே இருதலைக் கொள்ளி எறும்புபோல் அகப்பட்ட அவர், தம்மையும் உலகையும் இந்தத் துன்பத்திலிருந்து மீட்குமாறு இறைவனிடம் ஓலமிடுகிறார். கட்டுரையின் சாராம்சம் இதுதான்.

ஜம்புநாதன் தம்முடைய மன நிலையை இந்தக் கட்டுரையில் அப்படியே வெளிப்படையாகக் கொட்டியிருக்

கிருர். இப்போதுதான் நான் இதைத் தெரிந்து கொண்டேன்.

3

"இந்த வருஷம் நமது கழகத்தின் ஆண்டு விழாவின் போது ஜம்புநாதனைப் பேசுவதற்கு அழைக்கலாமா?" என்றேன்.

அவள் உடனே பதிலளிக்கவில்லை. யோசித்துவிட்டு, "உன் இஷ்டம்" என்றுள்.

ஆண்டு விழாவிற்காகத் துரிதமாக ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. எங்கள் கல்லூரியில் தலைவியின் தலைமையில் ஜம்புநாதனைச் சொற்பொழிவாற்றுவதற்கு அழைத்தோம். அவரும் ஒப்புக்கொண்டார். அன்றே நடத்துவதற்கு ஹாஸ்டல் மாணவிகளால் சிவ-பார்வதி நடனம் ஒன்றும் தயார் செய்தோம். குமுதந்தான் பார்வதி. விழா நெருங்க நெருங்க, நான் குமுதத்தின் போக்கை மறைவாகக் கவனித்துவந்தேன். அவள் இரவு நேரத்தில் வெகு நாழிகை வரையில் விழித்துக்கொண்டிருப்பாள். அப்படி நேரத்தில் படுக்கைக்குப் போய் விட்டாலும் சரியாகத் தூங்குவதில்லை. தூங்கும் சமயத்தில் ஏதேதோ அர்த்தமில்லாமல் பிதற்றுவாள். நான் காரணம் கேட்டால், "ஒன்றும் இல்லை" என்ற வார்த்தையுடன் அவள் வாய் அடைத்துவிடும்.

விழா அன்று காலையிலேயே ஜம்புநாதன் வந்திருந்தார். வட்டமான முகம், விசாலமான நெற்றி. நெற்றியில் ஓரிரண்டு மெல்லிய சிந்தனைக் கோடுகள். மத்தியில் வகிடு எடுத்த கிராப். பார்ப்பதற்கு அழகர்; ஆஜானுபாகுவாக வளர்ந்து வெள்ளைக் கதராடையுடன் விளங்கினர். அவர் முகத்தில் எப்போதும் புன்னகை தவழ்ந்தது.

அவரது பேச்சைக் கேட்பதற்காக எல்லோரும் துடிதுடித்துக் கொண்டிருந்தோம். நேரமும் வந்தது. அவரும் பேசினார்.

பத்திரிகைப் பைத்தியமாக இருந்த மாணவிகள் யாவரும் "அவர் எழுத்தின் இந்திர ஜாலத்தைத்தான் இது வரை அறிந்திருந்தோம். அவர் பேசி நேரில் கேட்டதில்லை. இன்றுதான் கேட்டோம். கார்வானத்தில் இடி முழங்கி மழை பொழியும் பெருமேகம்போல் அவர் அன்று கர்ஜித்தார். அவர் உணர்ச்சியோடு எங்கள் உணர்ச்சிகளை ஒன்றச்செய்து மெய்ம்மறந்திருந்தோம். நேரம் சென்றதே தெரியவில்லை. அன்று 'கலையும் கற்பும்' என்ற விஷயத்தைப்பற்றிப் பேசி முடித்தார்.

இரவில், எட்டு மணி வரையில் நடனம் நடந்தது. மாணவிகளின் கலைத்திறனை ஜம்புநாதன் மிகவும் பாராட்டினார். அன்றிரவு அவருக்காக ஹாஸ்டலில் ஒரு தனி அறை ஒழித்துக் கொடுக்கப்பட்டது.

அவர் மறுநாள் முற்பகலில் ஊர் திரும்புவதாக இருந்தார்.

"ஜம்புநாதனின் பேச்சைக் கேட்டாயா? எப்படி இருந்தது?" என்றேன் குமுதத்திடம்.

"பேச்சு நன்றாகத்தான் இருந்தது. ஆனால்......" என்றாள்.

"ஆனால் என்ன?"

"எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதோ: என்னால் யாரையுமே நம்ப முடியவில்லை. ஏன், என்னைக் கூடத்தான்!"

"விபரீதமாய்ப் பேசாதே, குமுதம்! உன் கற்பனையெல்லாம் தெய்வலோக வாழ்க்கைக்குத்தான் சரி. என்னவோ, எனக்கு அவர் அலாதியான சக்தி படைத்தவர்

என்று தோன்றுகிறது. ஒழுங்கான மனிதரென்றே எண்ணுகிறேன்.''

பகற் பொழுதெல்லாம் மும்முரமாக விழாக் கொண்டாட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டதால், அதி சீக்கிரத்திலேயே ஹாஸ்டல் உறங்கத் தொடங்கிவிட்டது. நானும் அறைக்கு வந்து களைப்பு மிகுதியால் கண்களை மூடிக்கொண்டேன். பொழுது விடிந்து எட்டு மணிக்குப் பிறகுதான் நித்திரை கலைந்தது.

கண்களைத் துடைத்துக்கொண்டு குமுதத்தின் படுக்கையைப் பார்த்தேன். அவளைக் காணவில்லை. கதவைத் திறந்து வெளியே வந்தேன். ஹாஸ்டல் முழுவதும் ஏகப் பரபரப்பாக இருந்தது. சிநேகிதிகளெல்லாம் கவலை தோய்ந்த முகத்துடன் என்னிடம் கூட்டமாக வந்து, ஒரு விஷயத்தைப் பதற்றத்தோடு தெரிவித்தனர். என் நெஞ்சின்மேல் ஒரு மலை பெயர்ந்து விழுவதுபோல் இருந்தது.

பரக்கப் பரக்க ஜம்புநாதன் தங்கியிருந்த அறைக்கு ஓடினேன். எனக்கு முன்பே அங்கே பெரியகூட்டமொன்று அடைத்துக்கொண்டு நின்றது. படுக்கையில், ஜம்புநாதன் மடித்த: கைகளுக்கிடையே தலையைப் போட்டுக்கொண்டு குப்புறப் படுத்திருந்தார். - ஆமாம். இறந்துபோன ஜம்புநாதன்! ஜம்புநாதனின் சடலம்! டாக்டர் வந்து பார்த்து விட்டு, "சுமார் இரவு ஒரு மணிக்கு இவர் மாரடைப்பால் செத்துப்போயிருக்கவேண்டும். அளவுக்கு மீறிய ரத்தக் கொதிப்புதான் காரணம்'' என்றார். நாங்கள் பெருமூச்சு விட்டோம், கண்ணீர் விட்டுக் கதறினோம்.

"அவர் செத்தே போய்விட்டாரா? இனி அவர் எழுந்திருக்கவே மாட்டாரா? இனி...அவர்......என்னோடு ......இல்லை, இல்லை......ஒன்றும் இல்லை!'' என்று என்னிடம் தனிமையில் தடுமாறினாள் குமுதம். அவளைப்

பார்க்கையில் எனக்குப் பகீரென்றது. அவள் ஏன் இப்படி உருமாறிப்போய், பேயறைந்த முகத்துடன், சாவின் சலனத்தைத் தன் விழிகளில் தாங்கி நிற்க வேண்டும்?

அவளுடைய மரணம் குமுதத்தை அன்றே நோய்ப் படுக்கையில் தள்ளியது. அவள் நிமிஷத்திற்கு நிமிஷம் சாவை எதிர்பார்த்திருந்தாள். அப்போது அவள் கூறிய கதையை இனித்தான் கூறப்போகிறேன்.

* * * *

ஜம்புநாதன் குமுதத்தின் கணவர். அவருடைய சாவிற்கும் குமுதந்தான் காரணம்!

குமுதத்தின் பத்தாவது வயசிலேயே அவளுக்கும் ஜம்புநாதனுக்கும் கல்யாணம் நடந்துவிட்டது. குமுதத்தின் தகப்பனார் சில வருஷங்களில் - கிரிஜாவை - வடக்கத்தியாளை இரண்டாம் தாரமாக மணந்துகொண்டார். அந்தக் குற்றத்திற்காக ஜம்புநாதனின் தந்தை குமுதத்தைப் புக்ககத்திற்கு அழைத்துக்கொள்ளவில்லை. ஜம்புநாதனுடைய நடைமுறையோ வேறு விதமாக இருந்தது. அவர் தம்மை முற்றும் பொதுநலப் பணிக்கே அர்ப்பித்துக்கொள்ள விரும்பினார். குமுதத்தைப்பற்றியும் அவளுடைய தற்போதைய நிலையைப்பற்றியும் அவருக்கு ஒன்றுமே தெரியாது.

குமுதத்தின் நெஞ்சிற்குள் என்னவோ ஒன்று அடிக்கடி குறுகுறுத்துக்கொண்டிருந்தது. 'என்றுயினும் ஒரு நாள், விரைவில் அவரை அடைந்துவிடுவோம். அது வரையில் அவருக்கு நம்மைப்பற்றித் தெரிவிக்க வேண்டாம். விதி எந்தக் காரணத்தால் என்னைப் பிரித்ததோ, அதே காரணத்தால் அவரிடம் என்னைச் சேர்த்துவிடும்' என்று நம்பியிருந்தாள். பேதை!

ஜம்புநாதனின் ஒழுக்கத்தைப் பரிசோதிக்க விரும்பினாள் குமுதம் ஆண்டு விழாவன்று. இரவு, அவருடைய இறுதிக்காலத்திற்கு அரைமணி முன்பு. அவளுடைய சோதனை நடந்தது.

அன்று இரவு நடுநிசி. ஜம்புநாதன் தங்கியிருந்த கோடி அறையில் மாத்திரம் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. மற்ற இடமெல்லாம் ஒரே அந்தகாரம்.

குமுதம் அவருடைய அறைக்குச் சென்று கதவருகே சிலைபோல் நின்றாள். படுக்கப்போகுமுன் கண்மூடித் தியானித்துக்கொண்டிருந்த ஜம்புநாதன் விளக்கை அணைப்பதற்காக எழுந்து கதவருகில் வந்தார். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. சில நிமிஷங்கள் கண் இமைக்காமல் குமுதத்தை விழித்து நோக்கினார்.

"நான் உள்ளே வரலாமா?" என்றாள் குமுதம். அவர் தயங்கினார். பின்பு, வரலாம்...ஆனால் எதற்காக?" என்றார்.

அவள் வாய்திறந்து பதில் சொல்லவில்லை. அவளுடைய கண்கள், 'எதற்காகவா?' என்று அவரையே மௌன பாஷையில் வினவின.

அவருடைய பார்வை தரையை நோக்கியது.

"என்னை உங்களுக்குத் தெரிகிறதா?" என நிச்சப்தத்தைக் கலைத்தாள் குமுதம்.

"ஆமாம், ஞாபகம் இருக்கிறது; இன்றைய நடனத்தில்......"

"நீங்கள் நன்றாகப் பேசினீர்கள்."

"நீங்களும் நன்றாக நடித்தீர்கள்...சரி, காலையில் பேசிக்கொள்வோம்;.....நான் பகல் பத்து மணிக்குத்தான் புறப்படுகிறேன்!" என்றார்.

அவள் அவ்விடத்தை விட்டு அசையவில்லை. வெளியில் ஒரே கும்மிருட்டு. அறையில் தனிமை வானத்தில் சிதறிக் கிடந்த ஒளிச்சுடர்கள்கூட மேகத்திற்குள் மறைந்து கொண்டன. அறைவிளக்கு ஒரு தரம் நின்று மீண்டும் ஒளி வீசியது.

ஜம்புநாதன் ஒரே குழப்பத்துடன் அங்கே நின்று கொண்டிருந்தார். அவளுடைய நடிப்பின் வேஷம் அவருக்குப் புலப்படவில்லை. அறையின் வெளிப்புறத்தைக் கவ்விக்கொண்டிருந்த இருள் அவர் இருதயத்தையும் சேர்த்துக் கவ்வியது.

ஜம்புநாதன் உயரிய லக்ஷ்யம் கொண்டவர்தாம். தம் ஒழுக்கத்தை ஒவ்வொரு கணமும் காத்து வருபவரே. அவருடைய முகத்தின் தேஜஸ் அவருள் கனிந்துகொண்டிருந்த வைராக்கியத்தை எடுத்துக்காட்டியது. ஆனால், அவருடைய முயற்சியில் அவர் பூரணமாக வெற்றி பெறவில்லை. அவர் ஐம்புலன்களை அடக்கிய மஹானாகிவிடவில்லை. அவர் இளைஞர். அவருள்ளே தலைவிரித்தாடிய பருவ நாகத்தின் விஷப்பல்லைப் பிடுங்கி எறியும் திறனை அவர் அப்போது முற்றும் இழந்திருந்தார். அவர் மனம் கொந்தளித்தது. மூச்சிலே புயல் சீறியது.

குமுதத்தை நோக்கி ஓர் அடி முன்னால் எடுத்துவைத்தார் ஜம்புநாதன். அவ்வளவுதான்! தன்னை எதிர்த்துப் போரிடத் துணிந்த மனிதப் புழுவைத் தாக்கத் தயாராக நிற்கும் பெண் புலிபோல் மாறிவிட்டாள் குமுதம். அவளுடைய கண்களில் ரத்தம் தெறித்தது.

"நில்லுங்கள்! - கற்புத் தெய்வம் கண்ணகியைப் பற்றிக் கதறிய வீரர்தாமே நீங்கள்? லக்ஷ்ய புருஷன் ராமனைப்பற்றிக் கர்ஜித்த சிங்கந்தானே நீங்கள்?...... ஐயோ! என் எண்ணமெல்லாம் மண்ணாகிவிட்டதே!" என்று குமுறினாள் குமுதம்.

திடீரென்று படுக்கையில் சாய்ந்தார் ஜம்புநாதன். மணி ஒன்று அடித்தது. கடைசி மணியோசை அவர் காதில் விழுந்ததோ என்னவோ!

சூறவளிபோல் தன் அறைக்கு வந்து படுக்கையில் புரண்டாள் குமுதம். படுக்கை முள்ளாக இருந்தது. தீயாகச் சுட்டது. காலையில் அவள் கேட்ட முதற் செய்தி அவள் கணவனின் மரணச் செய்தி!

சோகத்தில் முடிந்த தன் சோதனை நாடகத்தை என்னிடம் கூறிய குமுதம், "அவர் மலராத மல்லிகை! அதற்குள், நான் அவரிடம் மணத்தை எதிர்பார்த்தேன் பாவி! அந்த மொட்டையே கசக்கிவிட்டேன். அவரது சூக்ஷ்மமான இருதயப்பான்மையை அறியாத நான், அவர் படுக்கையில் விழுந்தபோது அவர் உயிரோடு இருப்பதாகவே எண்ணினேன், அன்றிரவெல்லாம் அவரைப் பழிவாங்கக் கோட்டைகள் கட்டினேன். அவரே என்னைப் பழிவாங்கிக்கொண்டார். இதோ, போகிறேன் அவரிடம்!" என்று முடித்தாள். இரண்டு நாட்கள் சென்றன. - அமைதி நிலவியது.

10

ஏழைப் பிள்ளையார்!

ஏழைப் பிள்ளையார் என்ற திருநாமத்தை எந்தப் புண்ணியவான், எந்த நல்ல நாள் பார்த்து எங்கள் ஊர்க் குளத்தங்கரைப் பிள்ளையாருக்குச் சூட்டினாரோ நமக்குத் தெரியாது. ஆனால் அவன் செய்ததென்னவோ முழுக்க முழுக்க சரியான காரியந்தான்.

பிள்ளையாருக்கு அநேகமாகத் தீபாவளிக்குத் தீபாவளிதான் எண்ணெய் ஸ்நானப் பிராப்தி கிடைக்கும். அதுவும் பெரும்பாலும் அரைகுறையான முறையில்தான்! வெயில், காற்று, குளிர், மழை இவைகளிலிருந்து ஒண்டிக் கொள்ள அவருக்கு ஓர் அரசமரத்தைத் தவிர, வேறொரு புகலிடமும் கிடையாது. அவரே இப்படித் திண்டாடும் போது, அவரைச் சூழ்ந்துள்ள மூஞ்சூறு, நாகர் முதலிய குட்டிப் பரிவாரங்களைப்பற்றிச் சொல்லுவானேன்?

ஏழைப்பிள்ளையாரை ஏழைகளைத்தவிர வேறு யார் கும்பிடப்போகிறார்கள்? பணக்காரர்கள் கும்பிடக்கூடிய பாக்யெத்தைப் பெற்றிருந்தால்தான் அவர் இத்தனை காலமும் பணக்காரப் பிள்ளையாராக மாறியிருப்பாரே! அப்படி எவனாவது ஒரு பணக்காரன் கும்பிட்டிருந்தாலும் அவன் பணச்செலவுக்கு அஞ்சிப் பசியா வரம் கேட்கும் வட்டிக்கடை முதலாளியாகத்தான் இருக்கவேண்டும்! இல்லாவிட்டால்தான் விநாயகருக்கு ஒரு கூரைக் கொட்டகையாவது கிடைத்திருக்குமே!

தீபாவளிக்கு முதல் நாள் மாலை. ஏழைக் குடியானவன் ஒருவன் பட்டணத்தில் வாசம் செய்யும் பெரிய உத்தியோகஸ்தர் ஒருவருக்குச் சொந்தமான நிலத்தில் உழைத்துவிட்டு, சோர்ந்துபோய்க் குடிசைக்குத் திரும்பிக் கொண்டிருந்தான். நிலத்திற்கும் அவன் குடிசைக்கும் மூன்று மைல் தூரம்.

அவனுக்குத் தாங்கமுடியாத ஒரு பெரிய கவலை. தீபாவளிக்காக அவன் தன் பையனுக்கு அவசியம் புதுத் துண்டொன்று வாங்கிவருவதாகச் சொல்லியிருந்தான். தீபாவளி நெருங்க நெருங்கப் பையனின் தொந்தரவு அதிகமாகிக் கொண்டிருந்தது. "கணக்குப்பிள்ளை ஐயர் மகன் கட்டியிருக்கே அது' மாதிரிப் பட்டுத் துண்டு

வேணும்" என்று பையன் தன் தகப்பனிடம் ஆசையை வெளியிட்டிருந்தான்.

பட்டுத் துண்டைத்தான் கனவிலும் நினைத்துப் பார்க்கத் தைரியமில்லையென்றால், சாதாரண நாட்டுத் துண்டாவது ஒன்று எடுக்கவேண்டாமா? அதற்குக்கூட அவனிடம் காசு இல்லை.

இந்த நிலைமையில்தான் அவன் ஏழைப்பிள்ளையார் கோவிலுக்கு வந்து ஒன்பது தோப்புக்கரணங்களைப் போட்டுவிட்டு, "சாமீ, துண்டு இல்லாமல் நான் வீடு திரும்பமாட்டேன். எனக்கு எப்படியாவது துண்டு கிடைக்கவேண்டும்! .... கிடைத்துவிடும் என்றால் கிழக்குப் பக்கம் சகுனம் சொல்லு; கிடைக்காதென்றால் மேற்கே சொல்லு" என்றான்.

உடனே கிழக்கே அரச மரத்தின் தாழ்ந்த கிளையிலிருந்து 'டக், டக், டக்' கென்று பல்லி சொல்லியது.

"நிச்சயம் கிடைக்கும் போலிருக்கிறதே! உன்னை நம்பலாமா?" என்றான் ஆச்சரியத்தோடு. சொல்லி வைத்தாற்போல் அதே சமயத்தில் மேற்கிலிருந்து பல்லி சொல்லியது!

"இந்தக் காலத்தில் கடவுளைக்கூட நம்ப வழியில்லை; உலகத்தில்தான் பித்தலாட்டம் பெருத்துவிட்டதென்றால், கடவுளும் அந்த உலகத்துடன் சேர்ந்து விட்டதே!" என்று வருத்தத்தோடு முனகினான். முனகிவிட்டுப் பக்கத்திலிருந்த குளத்தில் இறங்கி இரண்டுவாய் நீர் குடித்துவிட்டுக் குளத்தின் படிக்கட்டிலேயே படுத்துக் கண்களை மூடினான். வெறுங்கையோடு வீட்டிற்குத் திரும்புவதில் என்ன பிரயோசனம் என்ற எண்ணம் போலும்!

அரைத் தூக்கத்தில் அவனுடைய கனவில் விநாயகர் தோன்றித் தம் கஷ்டத்தை யெல்லாம் அவனிடம் சொல்லிக்கொண்டார்.

"பக்தா! அடுத்த நாள் பொழுது விடிவதற்குள் எனக்கு ஓர் அதிருஷ்டம் வந்திருக்கிறது. இந்த ஊர் மிராசுதார் தமக்கு ஏதாவது பகதூர் பட்டம் கிடைத்தால் எனக்குத் தீபாவளியின்போது பட்டுத் துண்டு பரிசளிப்பதாகத் தெரிவித்திருக்கிறார். சமீபத்தில் அவர் ராவ் பகதூர் ஆனார். ஆகையால் இன்றிரவுக்குள் ஒரு பட்டுத் துண்டு வந்துவிடும். அதை நீ தாராளமாய் எடுத்துக் கொண்டு போ! ஆனால் அதை நீ வீடு கொண்டு சேர்ப்பாயோ என்பதுதான் சந்தேகம்!" என்றார் விநாயகர்.

"பிள்ளையார் இவ்வளவு ஏழையாக இருந்தும், எவ்வளவு சுப நல மற்றவராக இருக்கிறார்!" என்று நினைத்து ஆச்சரியப்பட்டான் குடியானவன்.

"அப்படி நினைக்காதே பக்தா! ஏழைக்கு ஏழைதான் உதவுவான்!" என்றார் அவர்.

'உண்மை' என்று ஒப்புக்கொண்டு அவர் பேச்சை மேலே கேட்கத் தொடங்கினான்.

"கடவுளாக இருப்பதில் எவ்வளவு சிரமம் இருக்கிறது தெரியுமா? அதற்கு எவ்வளவோ காரணங்கள் காட்டலாம். உனக்குத்தான் தெரியுமே, கேவலம் பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் எனக்குத் தேங்காய் உடைப்பதாகக் கூறி அடிக்கடி ஏமாற்றும் விஷயம். அத்துடன் அவர்கள் விடுகிறார்களா? பரிக்ஷை தேறிவிட்டால் அவர்கள் பொழியும் வசைமாரி - ஏன் கல்மாரியுங்கூட-அப்பப்பா, என்னால் சகிக்கமுடியவில்லை!

"அது கிடக்கட்டும். இந்த ஊரில் இளம் காதலர்கள் இருவர் இருந்தார்கள். இப்போது அவர்கள் காதலர்களாயில்லை. இருவரும் கல்யாணம் செய்து

கொண்டு குடும்பத்தைத் தொடங்கிவிட்டார்கள். இப்போது தினந்தோறும் அவர்களுக்குள் ஆயிரம் சண்டை சச்சரவுகள்!

"அந்தக் காதலி இருக்கிறாளே, அவள் மிகவும் பொல்லாத பெண்.

"அவரையே கல்யாணம் செய்து வைக்கவேண்டும். இல்லாவிட்டால் பழியை உங்கள்மேல் போட்டுவிட்டு, இந்தக் குளத்தில் விழுந்து இறந்துவிடுவேன்!" என்று என்னைப் பயமுறுத்துவாள்.

"அவள் காதலனோ அவளை விடப் பொல்லாதவன். அவளைப்போல் தன்னையே மாய்த்துக்கொள்வதாக இவன் பயமுறுத்துவதில்லை. தன் காதல் மட்டும் நிறைவேறாத பக்ஷத்தில் என்னையே தூக்கிக் குளத்தில் எறிந்துவிடுவதாகக் கூறியிருந்தான். எப்படி பார்த்தாயா என் பக்தர்களின் வேண்டுகோளை! நல்ல வேளை, அவர்கள் இருவரும் சதிபதிகள் ஆகிவிட்டனர்.

"ஆனாலும் இன்னும் என்னை விட்டபாடில்லை. தங்களை ஒன்றாக்கியதற்காக இப்போது என்னைக் குறை கூறுகிறார்கள்.

"இன்னும் ஒரே ஒரு விஷயம்.

"என்னிடம் தீவிர அபிமானம் உள்ளவர்களில் அடிக்கடி இங்கு வந்து செல்லும் எழுத்தாளனும் ஒருவன். எழுத்தாளர்களைப்பற்றிச் சொன்னால் உனக்குப் புரியுமோ என்னவோ, புரிந்தால் தெரிந்துகொள்!

"எனக்கும் அவனுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தங்களை அவன் எழுதியிருக்கும் "பிள்ளையாரும் உடற் பயிற்சியும் அல்லது தோப்புக்கரண மாகாத்மியம்" என்னும் புத்தகத்தைப் படித்தால் தெரியும். உனக்குத் தான் படிக்கத் தெரியாது. படிக்கத் தெரிந்தாலும் நீ

அதைப் பார்க்க முடியாது. அதுதான் இன்னும் உருவாகி வெளிவரவில்லையே!

"அச்சுக்கூடத்தில் கையெழுத்துப் பிரதியாய் சிறை வைக்கப்பட்டிருக்கும் அந்தப் புத்தகத்தை அவன் எனக்குச் சமர்ப்பணம் செய்யப் போகிறானாம்!

"மூச்சு விட்டால்கூட ஒரு காரணத்தை வைத்துக் கொண்டுதான் அவன் மூச்சுவிடுவான்! என்னிடம் காலையும், மாலையும் தவறாது வந்து தோப்புக்கரணம், சாஷ்டாங்க நமஸ்காரம், அரசமரப் பிரதக்ஷிணம், இவை ஒவ்வொன்றிலும் பன்னிரண்டுக்குக் குறையாமல் செய்து விடுவான். இதையெல்லாம் என்மீது இருக்கக்கூடிய அளவு கடந்த பக்தியால் செய்கிறான் என்று நான் நினைத்துக்கொள்ள வேண்டுமாம். ஆனால் அவனுடைய புத்தகத்தைப் பார்த்தால்தான் உண்மை விளங்கும். அந்தக் கையெழுத்துப் பிரதியின் பதினேழாவது பக்கம், ஒன்பதாவது வரியில் பார்த்தால், "இந்த மாதிரித் தோப்புக் கரணம் போடுவதால் விநாயகர் நம்மைச் சிறந்த பக்தன் என்றும் நினைத்துக்கொள்வார்; அதே சமயத்தில் நமக்கு நல்ல உடல் வலிவும் ஏற்படும். விநாயகரைப்போல் வயிறு படைத்தவர்கள்கூட இந்தப் பயிற்சியில் ஈடுபட்டால், ஆலிலையைப் போன்ற வயிற்றைப் பெறலாம்" என்று எழுதியிருக்கிறான்!

"இன்னும் இதைப்போல உனக்கு எத்தனையோ கதைகளைச் சொல்லலாம். ஆனால் நாழிகைஆகிவிட்டது நான் எதிர்பார்த்த ராவ்பகதூரும் எனக்குத் துண்டைக் கட்டிவிட்டுப் போய்விட்டார். சீக்கிரம் எழுந்து குளத்தில் ஸ்நானம் செய்துவிட்டு என் பட்டுத் துண்டை எடுத்து உன் பையனுக்குக் கொண்டு போ. ஆனால் ஜாக்கிரதை, ராவ்பகதூரின் ஆட்கள் கண்ணில் பட்டுவிடாதே!"

குடியானவன் ஆச்சரியத்தோடு எழுந்து பிள்ளையார் கூறியதெல்லாம் உண்மைதானா என்று பார்க்க அவசர அவசரமாக வந்து பார்த்தான். உண்மையிலேயே அவர் ஒரு பட்டுத்துண்டை உடுத்திருந்தார்.

குளத்தில் இறங்கி ஸ்நானம் செய்துவிட்டு, "சாமி, உன் சொல்லை நம்பித்தான் இந்தக் காரியம் செய்கிறேன். என்னை மன்னிக்கவேணும்" என்று சொல்லிக்கொண்டே நடுங்கிய கரத்தால் விநாயகரின் துண்டை எடுத்துச் சுருட்டிக்கொண்டு வேகமாக நடந்தான்.

வெகு தூரம் போகவில்லை. அதற்குள் மிராசுதாரின் ஆட்கள் அவன் செய்கையை எப்படியோ கண்டுபிடித்து விட்டார்கள். அதற்கு அப்புறம் என்ன? தண்டனை தான்.

ஒரு மரத்தில் கட்டிவைக்கப்பெற்று சவுக்கினால் அடிக்கப்பட்டான். அடி தாங்கமாட்டாமல் வாய் விட்டு அலறினான் அவன். அதே சமயத்தில் அவன் வீட்டில், தகப்பனார் தனக்குப் புதுத் துண்டு கொண்டுவரவில்லையே என்று அவனுடைய பையன் வாய் விட்டு அலறினான். இருவருடைய அழுகுரலையும் கேட்டுக்கொண்டுதான் இருந்தார் பிள்ளையார். ஆனால் அவரால் அதற்குமேல் ஒன்றும் செய்ய முடியவில்லை!

அவர் ஏழைப் பிள்ளையார் மாத்திரமல்ல; கல்லுப் பிள்ளையாருங்கூட!

11

தாலிக் கயிறு

"எனக்கு ஏதாச்சும் வந்திருக்கா?"

"உனக்கா?"

தபால்காரக் கந்தையா மூக்குக்கண்ணாடியை நெற்றி மேட்டின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு, அவளை வெறுப்போடு பார்த்தான். ஏற்கனவே சுருங்கிப்போய் அவலக்ஷணமாக இருந்த அவன் கிழட்டு முகத்தில் இன்னும் எத்தனையோ கோரமான கோடுகள் தோன்றின. "இன்னிமே உனக்கு வரவேண்டியது வாந்திபேதிதான்!" என்று தன் வாக்கியத்தை முடித்தான்.

கந்தையாவின்மேல் குற்றமில்லை. அவனுக்குச் சலிப்புத் தட்டிவிட்டது. அதன்மேல் வெறுப்பும் ஏற்பட்டுவிட்டது. எத்தனை நாட்களுக்குத்தான் அவன் பாக்கியத்தின் "எனக்கு ஏதாச்சும் வந்திருக்கா?" என்ற ஒரே கேள்விக்கு, "உனக்கு ஒண்ணும் வரல்லே" என்ற ஒரே பதிலையே திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருப்பான்? பாக்கியத்தின்மேலும் குற்றமில்லை. அவள் ஆத்திரம் அவளுக்கு! பட்டாளத்தில் போய்ச் சேர்ந்த அவள் புருஷன் மூன்று மாதமாகியும் ஒரு கடிதமாவது போடவேண்டாமா?

தபால்காரக் கிழவனின் பேச்சு அவள் நெஞ்சில் ஊசியைப்போல் தைத்தது. தன்னுடைய சகிக்கமுடியாத நிலைமையை அவனிடம் வாய்விட்டுச் சொன்னாள். சொல்லிவிட்டு, "என்னமோ, என்னோட மனசு கிடந்து அடிச்சுக்குதுங்க. அதுக்காக வீணா உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கிறேன். இன்னிமே சாமி ஆணை உங்களை நானாக் கேக்கல்லிங்க" என்றாள். அப்போது

அவள் கண் இமைகளில் தேங்கிநின்ற கண்ணீர் பொல பொலவென்று உதிர்ந்தது.

கந்தையாவும் மனிதன்தானே? அதுவும் வாழ்க்கையில் அளவுக்கு அதிகமாக அடிபட்டு முதுமையைத் தானே வலுவில் வரவழைத்துக்கொண்ட கிழவன் அவன். அவனுக்கும் பாக்கியத்தின் நிலைமை ஒரு மாதிரியாக விளங்கியது. தன் கோபத்தை வேறு பக்கம் திருப்பினான்.

“தடிப் பசங்கள்! பட்டாளத்துச் சட்டையை மாட்டிட்டாலே இவன்களுக்கு இந்த உலகத்து ஞாபகமே வர்ரதில்லே! வீட்டிலே பெண்டாட்டி, பிள்ளை, குழந்தை, குஞ்சு இருக்கிறதுகளே என்ற கவலை கொஞ்சமாவது இருந்தால்தானே!.........அம்மா! பாக்கியம்! நீ ஒண்ணுக்கும் கவலைப் படாதே. உனக்கு ஏதாச்சும் வந்தால் நான் முதல்லே கொண்டுவந்து கொடுக்கிறேன்” என்று சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

மறு நாளிலிருந்து பாக்கியம் தபால்காரனிடம் ஒன்றும் கேட்பதில்லை. ஆனால் அவள் கண்கள் அவளையும் மீறிக் கந்தையா வரும் நேரங்களில் அந்தத் தெருப்பக்கம் அலையும். அதை அவன் உணர்ந்து கொள்வான். தானாகவே முன்வந்து, “உனக்கு ஒண்ணும் வரல்லேம்மா!” என்று சொல்லிவிட்டுப் போவான்.

அவனுக்குப் பிறந்த பெண்களில் பாக்கியத்தையும் ஒருத்தியாக அவன் பாவித்துவிட்டான்.

2

பாக்கியத்தின் புருஷன் குப்புசாமி அந்த ஊருக்குக் ‘கோட்டைக்காரப் பெண்பிள்ளை’ வருவதற்கு முன்பு மிகவும் யோக்கியமாய்த்தான் இருந்தான். ஆனால் அவள் குண்டுக்குப் பயந்துகொண்டு இந்த ஊருக்கு வந்தபி

விருந்து அவனுடைய நடத்தை பிசக ஆரம்பித்தது. வேலைக்கு வீட்டிற்கு வருவதில்லை. நில புலங்களைக் கவனிப்பதில்லை. பாக்கியத்திடங்கூடச் சரியாக முகம் கொடுத்துப் பேசுவதில்லை.

பாக்கியம் குப்புசாமியின் போக்கைத் தெரிந்து கொண்டாளே தவிர அதற்காக அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. தனக்குள் எண்ணி எண்ணி ஏங்கினாள். உருகி உருகிக் கண்ணீர் உதிர்த்தாள்.

விவரம் தெரியாத குழந்தை சுந்தரத்தை எடுத்து அணைத்துக்கொண்டு, "உன்னோட அப்பன் இப்படிக் கோட்டைக்காரி வீடே கதியின்னு கிடக்கிறாரே, நம்மோட கதி என்னடா ஆகிறது? கடவுளுக்குக் கூடக் கண் இல்லையே!" என்று அவனிடம் சொல்லிப் புலம்புவாள். குழந்தையும் அவளுடன் சேர்ந்து கதறுவான். இதுதான் குப்புசாமியின் மனமாற்றத்திலிருந்து அவர்கள் வீட்டில் தினசரி நடக்கும் சோக நாடகம்.

குப்புசாமி ஆடு மாடுகளை விற்றான், தோப்புத் துரவுகளை விற்றான். எல்லாம் வேறு யாருக்கு? அந்தக் கோட்டைக்காரிக்காகத்தான்!

வருடங்கள் சென்றன. இந்தமாதிரித் தலைகீழாக அவனைப்போல் ஒரு குடியானவனால் எத்தனை காலந்தான் ஆட்டம்போட முடியும்?

ஒரு நாள் அழுகையும் ஆத்திரமுமாய் வீட்டிற்கு வந்து தான் செய்த குற்றத்தை எல்லாம் தன் மனைவியிடம் தானாக ஒப்புக்கொண்டான். ஒப்புக்கொண்டு, "இன்னிமே நான் இந்த ஊரிலே நாலுகாசு இல்லாமல் தலை நீட்டக்கூடாது பாக்கியம்! பட்டாளத்தில் சேர்ந்து உனக்கு எப்படியாச்சும் பணம் அனுப்புகிறேன். நாமும் முன்னைப்போல் குடியும் குடித்தனமு

மாய் இருந்தால்தான் இந்த ஊரிலே இருக்கமுடியும்" என்ருன்.

தன் புருஷன் இவ்வளவு தூரம் மாறிப்போனதைப் பாக்கியத்தால் நம்பவே முடியவில்லை. ஆனால் அவனுடைய பட்டாளத்துத் தீர்மானம் அவள் தலையில் ஆயிரம் இடிகளை ஒரே சமயத்தில் விழச் செய்தது. "நீங்கள் பட்டாளத்துக்குப் போய் எனக்குப் பணம் அனுப்பவேண்டாம். பட்டினி கிடந்தாலும் இங்கேயே கிடப்போம். இந்தப் பிள்ளை முகத்தைப் பார்த்தாவது நம்மோட பசியை மறப்போமே!" என்ருள்.

ஆனல். குப்புசாமி ஒரே பிடிவாதத்தோடு புறப் பட்டான். பாக்கியம் தன்னை இத்தனை காலம் போட்டு வாட்டிய அதே விதியை இன்னும் நொந்துகொண்டு பேசாதிருந்தாள்.

3

பாக்கியத்திற்குப் பாக்கியம் வந்துவிட்டது. "இந்தா பாக்கியம், உனக்கு அதிருஷ்டம்!" என்று கந்தையா அவளிடம் ஒரு கவரை எடுத்து நீட்டினுன். பாக்கியத் திற்கு மனம் சந்தோஷப் பரபரப்பால் பொங்கித் தவித்தது. "எனக்குப் படிக்கத் தெரியாதுங்களே! நீங்களே கொஞ்சம் பார்த்துச் சொல்லிடுங்க" என்ருள்.

வெள்ளெழுத்துக் கண்ணுடியைத் துடைத்து மாட்டிக் கொண்டு கண்களுக்குப் பக்கத்தில் கடிதத்தை வைத்துத் தட்டுத் தடுமாறி வாசித்தான் கந்தையா.

"அருமை பாக்கியம்! நான் இங்கே சுகமாயிருக் கிறேன். நீ என்னை மறந்து விடாதே. கட்டாயம் உனக்கு அடுத்த வாரம் பணம் அனுப்புகிறேன். பணம் உனக்கு அங்கே பத்தாந்தேதி கிடைக்கும்."

இப்படிக்கு,
குப்புச்சாமி.

"பையனைப் பத்தி ஒண்ணும் எழுதல்லீங்களா?" என்றாள் வருத்தத்தோடு பாக்கியம்.

"இல்லையே!" என்றான் கந்தையா.

"அவனுக்குத்தாங்க முதுகுலே என்னமோ புறப்பட்டிருக்கு; எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல்லே" என்று சொல்லிக் கைகளைப் பிசைந்தாள்.

"எனக்கு இத்தனை நாளாய் நீ ஒண்ணும் சொல்லல்லியே! எங்கே, அவனைப் பார்க்கலாம்" என்று உள்ளே சென்று பையனைப் பார்த்தான். பார்த்துவிட்டு, "இது ரொம்பப் பொல்லாததம்மா, கோட்டைக்குக் கொண்டு போய் ஆஸ்பத்திரியிலே பார்க்கணும்" என்றான்.

"எல்லோரும் இப்படித்தான் சொல்றாங்க. கையிலே சல்லி காசுகூட இல்லிங்களே, நான் என்ன செய்வேன்?" என்று ஏங்கினாள் பாக்கியம்.

"பயப்படாதே அம்மா! இன்னும் ஒரு வாரத்திலே பணம் வந்திடும், வந்தவுடன் கோட்டைக்குக் கிளம்பலாம். அதுக்குள்ளே ஒண்ணும் ஆபத்து வந்திடாது" என்று ஆறுதல் சொல்லிவிட்டுப் போனான் கந்தையா.

4

அந்தப் பத்தாம் தேதியை எதிர்பார்த்துத்தானோ என்னவோ பாக்கியத்தின் குழந்தை முதுகிலிருந்த புறப்பாடு கனிந்து சிவந்துபோய் 'உடைந்துவிடப் போகிறேன்!' என்று பயமுறுத்திக்கொண்டு தன்னுடைய ரணவாயைத் திறப்பதற்குத் தயாராக இருந்தது. அதற்குள் பாக்கியம் கோட்டை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோவதற்கு வேண்டிய ஆயத்தங்களை

யெல்லாம் செய்து விட்டாள். பணம் வரவேண்டியது தான் பாக்கி.

பொழுது விடிந்து சூரியன் மேலே கிளம்பு முன்னரே தபாலாபீஸில் போய்க் காத்துக்கொண்டிருந்தாள் பாக்கியம். நிமிஷம் போவது எத்தனையோ யுகங்களாக இருந்தது.

மெயில் வந்தவுடன் பிராஞ்சு போஸ்ட்மாஸ்டர் 'கட்டை' அவிழ்த்துத் தபால்காரக் கந்தையாவிடம் வீசினார். கிழவன் அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தான். பார்த்துவிட்டு வெளியே வந்து, "அம்மா, பாக்கியம்! உனக்குப் பணம் வந்திருக்குதம்மா, இருபத்தைந்து ரூபாய்!" என்று பொக்கைப் பல்லைக் காட்டிக்கொண்டே கூறினான்.

நெஞ்சுச் சுமை தீர ஒரு பெருமூச்சு விட்டாள் பாக்கியம். அவள் வாய் தன்னையறியாமல், "அம்மா மாரித்தாயே! நீதான் துணை" என்று முணுமுணுத்தது.

பாக்கியத்தின் துடிதுடிப்பில் பாதிக்குமேல் கிழவனுக்கும் இருந்தது. பணத்தைப் போஸ்ட்மாஸ்டரிடம் வாங்கி முதல் காரியமாகப் பாக்கியத்திடம் கொடுத்தான். கொடுத்த பின்புதான் அவனுக்கு அவளிடம் கைரேகை வாங்கத் தோன்றியது. கையெழுத்துப் போடத் தெரியாதவர்களுக்குப் பணம் வந்தால் அவர்களுக்குச் சாக்ஷிக் கையெழுத்து யாராவது போடவேண்டும். அப்படி சாக்ஷிக் கையெழுத்துப் போடுவதற்கும் பாக்கியத்தின் அடுத்த வீட்டுக்காரன் அவளுடன் வந்திருந்தான். அவனைப் பார்த்துப் போஸ்ட் மாஸ்டர், "இவதானே கோட்டைக்காரப் பாக்கியம்? இவளை உனக்குத் தெரியுமா" என்றார்.

"கோட்டைக்காரப் பாக்கியமா?—கோட்டைக் காரிக்கா பணம் வந்திருக்கு?"—பிசாசு பிடித்தவன்

போல் தலையைப் பிய்த்துக்கொண்டு கூவினுள் பாக்கியம். அவள் கையில் இருந்த பணம் நாலு திக்கிலும் உருண்டு ஓடியது.

போஸ்ட்மாஸ்டருக்குக் கந்தையாவின்மேல் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. "உமக்கு வர வரக் கண்ணும் கெட்டுப்போச்சு. புத்தியும் கெட்டுப்போச்சு. யாருக்கு வந்த பணத்தை யாருக்கையா தானம் கொடுக்கிறீர்?" என்று சீறினர். "நான் உன்கிட்டே குடுத்த அந்தக் கடுதாசிகூட அவளுக்குத்தான் வந்திருக்கும் போலே இருக்கே!" என்று தணிந்த குரலில் தடுமாறினுன் கிழவன்.

பாக்கியத்திற்கு வெறி பிடித்துவிட்டது. "பாவிப் பயல்! அவன் என் புருஷனில்லே! அவன் கட்டின தாலி என் கழுத்திலே இன்னிமே சுருக்குக் கயிருகத் தொங்கவேண்டாம்!" என வெடுக்கென அறுத்தாள்.

அந்தத் தாலியை விற்ற பணத்தைக் கொண்டாவது அவளுடைய குழந்தை அந்தக் கடுமையான ரண ஜன்னியிலிருந்து தப்பிப் பிழைப்பாளு?

12

சிசுவின் குரல்

"அம்மா!"

அவள் திடுக்கிட்டாள்; லேசாகக் கண்களைத் திறந்து நாலுபுறமும் சுழன்று நோக்கினுள்; அவள் கண்களுக்கு அருகில் யாரும் தட்டுப்படவில்லை.

"அம்மா!" மறுபடியும் அதே குரல்.

ஓம் முறையும் அவள் வியப்போடு பார்த்தாள்; வலது பக்கத்தில் வரிசை வரிசையாக இரும்புக் கட்டில்கள்; அவைகளில் முனகிக்கொண்டும், புலம்பிக்கொண்டும் படுத்திருக்கும் கர்ப்ப ஸ்திரீகள்; இளம் தாய்மார்கள். தூரத்து அறையொன்றிலிருந்து யாரோ ஒரு பெண் பிரசவ வேதனை தாங்காமல் ஓலமிட்டுக் கொண்டிருந்தாள். ஆஸ்பத்திரிக்கென்றே அலாதியாக ஏற்பட்ட வாசனை தனது திவ்ய கந்தத்தை எங்கும் பரப்பிக் கொண்டிருந்தது.

மீண்டும் அந்தக் குரல் ஒலித்தது: - "அம்மா!"

"யாரது?" என்றாள் சற்று கலவரத்துடன்.

"நான்தானம்மா ஜோதி! - உனக்குப் பிறக்கப் போகும் பெண் குழந்தை."

"ஜோதியா!"

"ஆமம்மா! அப்பாவும் நீயும் சேர்ந்து எனக்கு ஏழு மாதங்களுக்கு முன்பு-நான் மூன்று மாதக் கருவாயிருக்கையில் பெயர் வைத்தீர்களல்லவா? அந்த ஜோதிதான்!"

தாய் ஆகப்போகிறவளின் வலி, வேதனை, ஆயாசம், அலுப்பு அத்தனையும் அந்தக் கணத்தில் எங்கோ பறந்து விட்டன. "பிறக்கப்போகும் குழந்தையா இப்படிப் பேசுகிறது? அதுவும் நம் கண்மணி!"

"ஞாபகம் இருக்கிறதா? அன்றொரு நாள் நீயும் அப்பாவும் பேசிக்கொண்டிருந்தீர்களே, அறையின் சன்னலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்து; அப்பாகூட வெளியே தோன்றியுள்ள பிறைச் சந்திரனைப் பார்த்துக்கொண்டே சொன்னார்: இந்தப் பிறை இப்படியே வளர்ந்து வந்து ஒரு நாள் பூரண சந்திரனாக மாறும்;- அது போலவே நீயும் நம் செல்வத்தை அந்தரங்கத்திலேயே வளர்த்து, ஒரு நாள் தாய்மையின் பூரணத்வம் பெறுவாய் என்று."

பெற்ற மனம் இதைக் கேட்டுப் பொங்கிப் பூரித்தது. குழந்தை தொடர்ந்து பேசினாள்.

"நீ கூடச் சொன்னாய், ஆண்பிள்ளை தான் பிறக்கும் என்று; அப்பா கூறினார், உன்னைப்போல ஓர் அழகான பெண் என்று. கடைசியில் இருவருக்கும் பெயர் வைப்பதில் வாக்குவாதம் வந்தது. 'ஆணாயிருந்தாலும் சரி, பெண்ணாயிருந்தாலும் சரி, ஜோதி என்றே பெயர் வைப்போம்; நம் வாழ்வின் இருளகற்றும் ஜோதியாக அது இருக்கட்டும்' என்று அப்பா சொல்லவில்லையா?"

"ஜோதி!" என்று தனக்குள் ஒரு முறை அந்தப் பெயரை மகிழ்ச்சியோடு உச்சரித்துக்கொண்டாள் தாய். ஜோதி பெண்ணாய்ப் பிறக்கப்போவதில் அவளுக்கு அளவற்ற ஆனந்தம். தன் கணவனின் ஆவல் நிறைவேறிவிடுமல்லவா? - பெண்மையின் வெற்றி, அது தன் துணைவனுக்காக ஏற்றுக்கொள்ளும் தோல்வியில்தானே இருக்கிறது?

"அம்மா!" என்றது குழந்தை.

"ஏண்டா கண்ணே!" என்றாள் தாய்.

"உலகம் எப்படிப்பட்டதம்மா?"

இந்தக் கேள்வி அவளைத் தூக்கி வாரிப்போட்டது. இந்தச் சிசுவிற்கு உலகத்தில் பிறக்கும் முன்பே, உலகத்தைப் பற்றி என்ன கவலை? பிறகு தன்னைத்தானே அவள் சமாதானம் செய்துகொண்டாள்: நாம்தான் இருக்கிறோம், எங்காவது ஒரு புது இடத்திற்குப் போவதென்றால் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள விரும்புவதில்லையா?

"உலகமா? உலகம் ஒரு பயங்கர நரகம்!" என்று வெடுக்கெனச் சொல்லத் தோன்றியது அவளுக்கு. ஆனால், அவள் அப்படிச் சொல்லவில்லை, ஆவலோடு கேட்கும்

அருமைப் புதல்விக்கு முதல் முதலில் உலகத்தை இம் மாதிரியா அறிமுகப்படுத்துவது?

"உலகம் மிக மிக அழகியதம்மா; இன்பம் நிறைந்ததம்மா; இயற்கை எழிலுக்கும் வளத்திற்கும் இங்கே குறைவே இல்லை. காலைக் கதிரொளியால் மலர் மலரும்; மலர்ந்த மலரின் மணத்தை வாரிச் செல்லத் தன்றல் எப்போதும் தயாராயிருக்கும். மாலையிலோவெனில் மஞ்சட் பொன்னொளி. அதன் பிறகு இரவில், நிலவு பூத்த பால் வெள்ளத்திலோ அல்லது நட்சத்திரக் கூட்டங்களின் கண்சிமிட்டலிலோ உலகம் மயங்கும். இங்கே காடும், மலையும், வனம் வளர்ந்தரங்களும், நதிகளும், கடல்களும் எத்தனையோ இருக்கின்றனம்மா!"

குழந்தை குறுக்கிட்டது: "மனிதர்களைப்பற்றிச் சொல்லவேண்டாமா?"

அவள் தயங்கினாள்; அவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. மனித வர்க்கத்தின் மேல் அவளுக்கு இருந்த வெறுப்பு அவளையறியாமல், எரிமலைபோல் வெடித்துக்கொண்டு கிளம்பிவிடும் போலிருந்தது. அடக்கி அடக்கிப் பார்த்தாள்; ஆனால் ஆத்திரந்தான் பொங்கியது.

அவள் நிதானமிழந்தாள்.

"மனிதர் கொடுமை நிறைந்தவர் அம்மா; அவர் உலகமும் கொடுமை நிறைந்தது. துன்பமும், துயரமும், அடிமைத்தனமுந்தான் உலகத்தை ஆட்சி செய்கின்றன. இல்லாவிட்டால் உன் அப்பா ஏன் இரும்புக்கம்பிகளுக்குப் பின்னால், இருட்சிறையில் வாடுகிறார்? நான் ஏன் இங்கு அநாதையாய் ஆஸ்பத்திரிக் கட்டிலில் வெந்து மடிகிறேன்?"

"அப்பா சிறையில் இருக்கிறாரா? - எதனாலம்மா?"

"காரணமா? அவர் ஓர் உத்தம புருஷர்; மனிதப் புழுக்களிடையே தவறிப் பிறந்த மாணிக்கம்; உண்மையைச் சொன்னதற்காக அவர் சிறைக்குப் போனார்! உலகத்தை உருக்குலைக்கும் அரக்கத்தனத்தைக் கண்டித்ததற்காக அவர் சிறைக்குப் போனார்."

"உண்மைக்குச் சிறையா?"

"அதற்கு மரண தண்டனை கூட உண்டு! பொய்யும், புளுகும், கொலையும், கொள்ளையும் மலிந்த இவ்வுலகத்தில் உண்மைக்கு இடமேது அம்மா!"

குழந்தை கூறியது "உலகம் பொல்லாததம்மா!"

"ரொம்ப ரொம்பப் பொல்லாதது; சுய நலங் கொண்டது; நன்றி கெட்டது. - இதில் இரண்டு வகை: ஒன்று, அவரைச் சிறைப்படுத்தியது; மற்றொன்று அவருக்கு மாலைபோட்டு, புஷ்பமாரி பொழிந்து அவரைச் சிறைக்கனுப்பியது. பிந்திய உலகத்திற்குச் சிறைக்கனுப்பத்தான் தெரியும்; சிறைக்குள்ளே அவன் படும் கஷ்டம், சிறைக்கு வெளியே அவன் குடும்பம் படும் வேதனை, இவைகளைப்பற்றி அதற்கு அக்கறை ஏது?"

'சிறை எப்படிப்பட்டதம்மா?'

"சிறையில் வேறு பல பிரிவுகள்! ஏழை உபாத்தியாயரான உன் அப்பாவுக்குக் கிடைத்த மூன்றாம் வகுப்புக் கொட்டடி இருக்கிறதே, அது மனிதனை மிருகமாக மாற்றும் விசித்திர யந்திரசாலை; திடமற்ற நெஞ்சு உள்ளவன் அங்கே தள்ளப்பட்டால், அவனுடைய உயர்ந்த குணங்கள் யாவும் உப்பரித்துப் போய் அவன் உளுத்துப்போன கீழ்த்தர ஆசைகளுடன் வெளியே வரவேண்டியதுதான். மனிதனை இவ்விதம் சித்திரவதை செய்து, அவன் லட்சியத்தைப் பாழாக்குவதற்காகத்தானே இவை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன?"

"சிறையில் உயர்வு தாழ்வு வேறு?

"எதில்தான் உயர்வு தாழ்வில்லை? இந்த வேற்றுமை தானம்மா தற்கால உலகத்தின் குறுக் மறைந்த ரகசிய ஆயுதம்."

குழந்தை நீண்ட பெருமூச்சு விட்டது. அதற்குப் பின்பு சில வினாடிகள் மௌனம். திரும்பவும் பேசியது:

"அப்பா சிறைக்குச் சென்றதனால்தான் நீ உபாத்தியாயினியாக இந்த ஆறு மாதகாலமும் வேலை பார்த்தாயோ? இனிமேல் நானும் பிறந்துவிட்டால், நீ என்னைக் கவனிப்பாயா? பிழைப்பைப் பார்ப்பாயா?"

தாயின் உள்ளம் கொந்தளித்தது; கண்களிலிருந்து அவள் கரகரவென்று நீரைக் கொட்டினாள். "உலகத்தில் பிறப்பதே பாவம்; அதிலும் பெண்ணாய்ப் பிறப்பது மாபெரும் பாவம்" என்று யாரோ அவள் மனத்திலிருந்து சொல்வதுபோ லிருந்தது.

"கவலைப் படாதே அம்மா! நான் உயிருடன் பிறந்தால்தானே உனக்குச் சிரமம்?"

இவ்வார்த்தைகளைச் சர்வ சாதாரணமாகத்தான் கூறியது அந்தச் சிசு. ஆனால் இவை தாயாரின் உச்சியில் ஆயிரம் இடிகளாய் இடித்தன. தழுதழுத்த குரலில், "அம்மா, ஜோதி! என் வயிற்றில் பாலை வார்ப்பமா! உன் அப்பா, உன்னைக் கொண்டுதான் உலகத்தில் எதையோ சாதிக்கவேண்டுமென்று அன்று கனவு கண்டார். அவர் கனவை வீணாக்கிவிடாதே! அவரிடம் உன்னை ஒப்புவிக்கும் வரையில் தெருத்தெருவாய்ப் பிச்சையெடுக்கக் கூட நான் தயாராயிருக்கிறேன்!" என்றாள்.

ஆனால், அந்த வார்த்தையினால் அவள் அடி வயிற்றில் மூண்ட தீ இன்னும் அடங்கவில்லை.

இந்த வேளையில்தான் ஆஸ்பத்திரியில் பிரசவத்திற்காக வந்திருக்கும், அவளது அரைத்தூக்கம் திடீரெனக் கலைந்தது. "கனவு உண்மையாகிவிடக்கூடாதே, கடவுளே!" என வேண்டிக்கொண்டாள். அதிக நேரமாகவில்லை; அவளுக்கு உண்மையிலேயே இடுப்பு வலி கண்டது. நிலைமை சகிக்கமுடியாமல் துடித்தாள்.

லேடி டாக்டர் அவளைத் தனி அறைக்குக் கொண்டு போனவுடன் ஜோதி பிறந்தாள்: ஆமாம், அணைந்து போய்த்தான்!

இந்த உலகத்தின் இருளைக்கண்டு அந்த ஜோதி பயந்துவிட்டாளோ, அல்லது உலகத்தின் இருளகற்ற அவளுக்கு மனம் இல்லையோ தெரியாது. ஆனால், அவளுடைய குவிந்த கண் இமைகள் மாத்திரம், 'இந்தப் பொல்லாத உலகத்தை ஒரு முறை பார்ப்பது கூடப் பாவம்' எனச் சொல்பவைபோல் ஒன்றையொன்று அவ்வளவு இறுகக் கவ்விக்கொண்டிருந்தன.

13

கடவுளின் பிரதிநிதி

[என்னிடம் அகப்பட்ட ஒரு லட்சியப் பைத்தியத்தின் டைரியில் உள்ள சில ஏடுகள் இவை.]

நாள் 1

கதா காலக்ஷேபம் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.

"ஈ, எறும்பு முதல், மாடு மனிதன் வரை, எத்தனையோ கோடி ஜீவராசிகளை உலகத்தில் கடவுள் படைக்கிறார்; காக்கிறார்; அழிக்கிறார். அவராலேதான்

உலகம் நடக்கிறது. கல்லினுள் தேரைக்கும், புல்லினுள் புழுவுக்கும், படி அளப்பவர் அவர்தான்..." இந்தமாதிரி என்னவெல்லாமோ பிதற்றிக்கொண்டு போனார் அந்தப் பாகவதர்.

"கல்லினுள் தேரைக்குப் படி அளக்கும் அந்தக் கடவுள், மனிதனைத்தான் மறந்துவிட்டார்போல் இருக்கிறது!" என்று நினைத்துக்கொண்டு, பேசாமல் நின்றேன்.

ஆனால், மேலும் மேலும் அவர் கடவுளின் புகழை அபாரமாக அடுக்கிக்கொண்டு போனபோது, என்னால் அதைக் கேட்கச் சகிக்கவில்லை.

"அந்தக் கடவுள் இப்போது உயிருடன் இருக்கிறாரா? அல்லது பஞ்சத்தில் அடிபட்டு உயிரை விட்டு விட்டாரா?" என்று பாகவதரைப் பார்த்து, ஆத்திரத்தோடு கேட்டேன். அப்போது அவர் முகத்தில் அசடு தட்டியதைப் பார்க்க வேண்டுமே! நான் மாத்திரம் அவரால் புகழப்பட்ட அந்தக் கடவுளாக இருக்கும் பட்சத்தில், அவரது நிலைமையைக்கண்டு நிச்சயம் இரக்கப் பட்டிருப்பேன்.

கூட்டத்தில் இருந்த பலர், எங்கள் இருவரையும் பார்த்துக் கொல்லென்று சிரித்தார்கள்......இந்த ஜனங்களே இப்படித்தான்: நல்லதற்கும் சிரிப்பார்கள்; கெட்டதற்கும் சிரிப்பார்கள்! நல்லது கெட்டதே இவர்களுக்குத் தெரியாது.

நான் கூட்டத்தை விட்டு வெளியே வந்துவிட்டேன்.

* * * *

நாள் 2:

இன்றையப் பத்திரிகையில் வெளியான செய்தி: எவனோ ஒரு மனிதன், வேலையில்லாத் திண்டாட்டத்தால்

தன் மனைவி மக்களுக்கு நஞ்சைக் கொடுத்து, தானும் அதைத் தின்று உயிரை விட்டானாம்! பாவி மனிதன்! அவனுக்குப் பிழைக்கத்தான் வழி தெரியவில்லை என்றால், சாகவாவது சரியான வழி தெரியவேண்டாமா?

தன்னைப் பட்டினி போட்ட சமூகத்துக்குப் பாடம் கற்பித்து அதன் பலனாக அல்லவா தன் உயிரை அவன் துறந்திருக்க வேண்டும்? அவன் கிடக்கிறான் முட்டாள்; இதோ, நான் இருக்கிறேன் அவனுக்குப் பதிலாக...

நான் சாகத் துணிந்துவிட்டேன்!

ஆனால், சாவை நான் விரும்பவில்லை; பிழைக்கவும் எனக்கு வழி தெரியும். என்னைச் சுற்றியுள்ள சமூகப் பெருச்சாளிகளை நான் உடனுக்குடன் பழி வாங்க வேண்டும் - கடுமையாக; என் இஷ்டப்படி, பழி வாங்க வேண்டும்!

இந்த மாதிரி உலகப்போக்கை என்னால் இனியும் சும்மாப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. முடிந்ததைச் செய்கிறேன். நிதானமாகத் தூங்கிக் கொண்டு மலைபோன்ற காரியத்தைச் செய்ய நான் விரும்பவில்லை. இதோ கிளம்புகிறேன், சூறவளியைப் போல! - அதன் பயன்? மரணம்! அதற்குத்தான் நான் துணிந்து விட்டேனே!

சரி, நமக்குத் தெரிந்த மனிதர்களில், எவனெவன் ஏழைகளின் ரத்தத்தை இரக்கமின்றி உறிஞ்சுகிறான்? எவனெவன் ஆடம்பரத்துக்கு ஆசைப்பட்டு, அடிமைத் தனத்தை மாலையிடுகிறான்? எவனெவன் ஆஷாடபூதி வேஷம்போட்டுப் பகல் கொள்ளை அடிக்கிறான்? - ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன். ஓ! இன்னரெல்லாம் தான்.

இவர்களை யெல்லாம் கொல்லக்கூடாது! மரண தண்டனை என்பது மனிதனின் சட்டத்திலேயே இருக்கக் கூடாதென்பது என் தீர்மானம்.....தங்கள் தங்கள் குற்றத்தை உணர்ந்து சீர்திருந்த விரும்பினால், செத்துப் போனதற்கப்புறமா சீர்திருந்துவது?

* * * *

நாள் 3

சாவதற்கும் நான் பயப்படவில்லை; ஒரே ஒரு விஷயம்......

என் அறையில் உட்கார்ந்து கொண்டு திறந்த ஜன்னல் வழியாகப் பார்த்தால், காலையும் மாலையும் இந்தக் காட்சியைக் காணலாம்:

கையில் ஒரு புத்தகக் கட்டுடன், காலையில் அவள் பள்ளிக்கூடத்தை நாடிப் போவாள். சாயங்காலம் திரும்பி வருவாள். அவள் யாரோ, எனக்குத் தெரியாது. அவள் பெயர், ஊர், ஜாதி...ஊஹூம், இவைகளைப் பற்றி யெல்லாம் நான் நினைத்துப் பார்த்ததுகூட இல்லை.

அவளது நிலைமையைக் கவனித்தால், மிகவும் ஏழை போல் காண்கிறது. ஏழை என்பதற்காக அழகு குறைய வில்லை! கடவுளுக்குத்தான் யோசனை கிடையாதே. ஏழைக்கு அழகு எதற்கு? அது தொலையட்டும். எனக்கு அழகு பிடிக்கிறது. அந்தப் பெண்! அவள் போகும் போதும் வரும்போதும், என்னைப் பார்க்கிறாள்; நான் அவளைப் பார்க்கிறேன். இருவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளுகிறோம்! - கொஞ்ச நாள் கழிந்தது. இப்போது நான் இறந்துவிட்டால், அப்புறம் அவளைப் பார்க்க முடியாதே என்ற ஒரு கவலை மாத்திரம் வந்திருக் கிறது.

ஆனால், அவளுக்காக என் தீர்மானத்தை, நான் கைவிடப் போவதில்லை.

வேலை செய்து, கூலி பெறாத கூலி ஒருவன், "கடவுள் தான் என் முதலாளிக்குக் கூலி கொடுக்கவேண்டும்!" என்கிறான். மிராசுதாரைக் கொழுக்க வைத்த ஏழைப் பண்ணைக்காரன், "கடவுளைத்தான், என் கஞ்சிக்கு நம்பியிருக்கிறேன்" என்கிறான்! இதைப்போலவே இன்னும் எத்தனையோ பேர், தங்களால் முடியாத காரியத்துக்குக் கடவுளையே துணை கூப்பிடுகிறார்கள்.

அந்தக் கடவுளால் ஒன்றுமே செய்ய முடியாதென்று தோன்றுகிறது. ஆதலால், அவருக்குப் பிரதிநிதியாகத் தானே, நான், கேவலம் ஒரு பெண்ணுக்காக என் லட்சியத்தைக் கைவிட முடியுமா?

* * * *

நாள் 4

இந்தப் பத்திரிகைக்காரர்கள் இருக்கிறார்களே, இவர்கள் ரொம்ப ரொம்ப நகைச்சுவை உள்ளவர்கள். 'சாகத் துணிந்தவனின் துணிகரமான செயல்' என்று ஒரு தலைப்பைப் போட்டுக்கொண்டு, "பிரபல ஹாலிவுட் இந்திய நடிகருக்குக் காது காணமல் போய்விட்டது! - இந்தியாவைப்பற்றிக் கீழ்த்தரமாக எடுக்கப்பட்ட படங்களில் அவர் நடித்ததற்காக, அந்தத் தண்டனையாம்!" என்று எழுதுகிறார்கள்.

அது மாத்திரமா?

"திலோத்தமா மில்ஸ் முதலாளி, கையைப் பறி கொடுத்தார்!"

"ராவ் சாகிப் ராஜாசாமி வீட்டில் நாற்பதினாயிரம் ரூபாய் அபேஸ்!"

"மட்ட ரக சினிமாப் படக் காண்ட்ராக்டர் மூக்குடைபட்டார்!" - இப்படியெல்லாம் எழுதித் தள்ளுகிருர்கள். இந்த யாவும், சாகத் துணிந்தவனின் - அதாவது என்னுடைய - சாகசம்தான்.

அந்தச் 'சாகத் துணிந்தவன்,' ஏழைகளின் வீட்டில் புகுந்து திடீர் திடீரென்று காசு பணங்களைப் போட்டு விட்டுப் போவதாக, வதந்தி உலவுகிறதாம். அந்தக் காசை எடுத்துக் கொள்ளக்கூடச் சில ஜனங்கள் அஞ்சுகிருர்களாம், நல்ல ஜனங்கள் இவர்கள்!

இதெல்லாம் கிடக்கட்டும்; நான் நல்லவனு? கெட்டவனு? - எனக்கே தெரியவில்லை!

போலிசார் புலன் விசாரிக்கிருர்களாம். விசாரிக்கட்டும்; விசாரிக்கட்டும். விசாரித்து என்னைப் பிடித்துத் தண்டனை கொடுப்பதற்குள், நான் இன்னும் எத்தனையோ பேருக்குத் தண்டனை கொடுத்துவிடுவேன்!

* * * *

நாள் 5

இன்றைக்கு ஒரு கூரை வீட்டுக்குள், கையில் பண முடிப்புடன், நான் நுழைந்தேன். கட்டிலில் ஒரு கிழவன் போர்வையுடன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்.

"யாரப்பா, அது! எழுந்திரு. 'சாகத் துணிந்தவன்' வந்திருக்கிறேன்; இந்தா. பண மூட்டை!" என்றேன். அவன் எழுந்திருக்கவில்லை - பணத்தை வாங்கிக்கொள்ள அவனுக்குப் பயம்போல் இருக்கிறது!

"அவர் சும்மாப் படுத்திருக்கவில்லை" என்று, பக்கத்திலிருந்த அறைக் கதவின் வழியாக, ஒரு பெண் குரல் கேட்டது.

"பின்னே எப்படிப் படுத்திருக்கிருர்?"

"செத்துப்போய்ப் படுத்திருக்கிறார்!"

"செத்துப்போய் விட்டாரா? அப்படியானால், நீ ஏன் அழவில்லை?"

"அழுதாலும் பிழைத்துக்கொள்ளமாட்டார் என்று எனக்குத் தெரியும்!"

ஏதேது! நான்தான் இந்த உலகில் அபூர்வப் பிறவியாக மாறியிருக்கிறேன் என்றால், என்னை முதுகுக்கு மண் காட்டக்கூடிய இன்னொரு லட்சியப் பைத்தியம் இங்கே இருக்கிறாளே?

"சரி; எனக்கு நேரமாகிறது. இந்தா, பணம்; எடுத்துக்கொள்" என்றேன்.

"பணம் இங்கே யாருக்குத் தேவை!"

"பின்னே என்ன வேண்டும்?"

"என் தகப்பனார் செத்துப்போய்விட்டார்; எனக்குத் துணை வேண்டும்!"

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"துணையா! யார் துணை!"

"உங்கள் துணைதான்!"

"என்னால் முடியாது. வேண்டுமானால் உன்னை யாரிடமாவது ஒப்படைத்து, வேண்டிய பணமும் கொடுத்துவிட்டுப் போகிறேன்."

"அது எனக்குத் தேவையில்லை."

"என் கழுத்தைக் கட்டியிறுக்க எந்த நிமிஷமும் தூக்குக்கயிறு துடித்துக் கொண்டிருக்கிறது. நான் எப்படி உனக்குத் துணையாக இருக்க முடியும்?"

"அதுவரையில் துணை இருந்தால் போதும்; அப்புறம் எனக்கு வழி தெரியும்?"

"என்ன வழி?"

"அப்போது கடவுள் காட்டுவார்."

"கடவுளா! அவர்தாம் ஒன்றும் செய்ய முடியாதவ ராயிற்றே?"

பேச்சில்லை.

"இழவு வீட்டிலே திருமணமா?"

"வெயிலுக்குத் தப்ப நிழல் கூடாதா?"

"அட எங்கே! வெளியில் வா. உன் முகத்தைப் பார்க்கலாம்."

கதவிடுக்கில் இருந்த அவள் வெளியே வந்தாள். அவள் வேறு யாருமில்லை; நான் தினந்தோறும் காலையும் மாலையும் சந்தித்த அதே புத்தகச் சுமைதாங்கி அநாம தேயந்தான்.

அப்புறம்?

அப்புறமென்ன! இனி நான் சாகத் துணியவில்லை. கடவுளின் வேலையை அவரிடமே ஒப்படைத்து விட்டேன். புலன் விசாரித்துவரும் போலீஸ் பூச்சிகளிடமிருந்து கடவுள்தாம் இனி என்னைக் காப்பாற்ற வேண்டும். அவர் என்னைக் காப்பாற்றினால் போதும். என் தர்ம பத்தினியை நான் காப்பாற்றிக் கொள்வேன்.

[டைரி இங்கே முடிந்துவிட்டது.]

14

கதையின் முடிவு

என்னுடைய கதை 'கோஷா'வைப் படித்த என் நண்பர் ஒருவர் என்னைச் சந்தித்தபோது, "அந்தக் கதைக்கு முடிவு என்ன?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டு என்னைத் திணற வைத்தார்.

"கதையை நீங்கள் முழுதும் படித்துப் பார்க்க வில்லையா?" என்றேன்.

"ஒருதரத்திற்கு இரண்டுதரம் படித்து முடித்த பிறகுதான் கேட்கிறேன்!"

"அவருக்கு நான் என்ன சமாதானத்தைச் சொல்லு வது? தற்காலத்தில் அப்படி முடிப்பதுதான் வழக்கம்" என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்த்தேன்.

"வழக்கமாம் வழக்கம்! ரஹீமையும், கதீஜாவையும் அப்படியே நடுத்தெருவில் விட்டுவிட்டு, இதுதான் வழக்கம் என்கிறீர்களே! - அதெல்லாம் எனக்குத் தெரியாது; சீக்கிரம் நீங்கள் அதற்கு ஒரு முடிவு எழுதித்தான் ஆகவேண்டும்!" என்று ஒரேயடியாய்ப் போட்டுவிட்டு அவ்விடத்தை விட்டுக் கிளம்பினர்.

அந்தக் கதையின் முடிவை அவருக்குத் தெரிவிக்கும் காலமும் வந்துவிட்டது. இதோ எழுதி அவரிடம் ஒப் பித்திருக்கிறேன். அவர் படிக்கத் தொடங்கிவிட்டார். இதுதான் கதையின் முடிவு:

* * *

நான் திருச்சியிலிருந்து சென்னைக்கு ரெயிலேறும் போது முற்றிலும் புதியவனாக மாறிப்போயிருந்தேன் கடைசி நிமிஷத்தில் சந்தித்த அந்தக் கதீஜாவின் முக மலர் என் நெஞ்சத்தில் அப்படியே ஆழமாகப் பதிந் திருந்தது. இன்பக் கற்பனைகள் கொஞ்சும் அந்த நீண்ட விழிகளை நினைத்துக்கொண்டே ரெயிலில் மெதுவாகச் சாய்ந்தவண்ணம் இருந்தேன்.

ரெயில் எழும்பூரை அடைந்துவிட்டது. இவ்வளவு வேகத்தில் என்னைச் சென்னைக்கு இழுத்துவரும் ஒரு ரெயில் வண்டியில் நான் இதுவரை பிரயாணம் செய்ததே இல்லை! நான் திருச்சிக்குப் புறப்பட்டபோது ஆமை

வேகத்தில் நகர்ந்த அதே வண்டிக்கு இப்போது எங்கிருந்துதான் இந்த ராக்ஷஸ வேகம் வந்ததோ?

சென்னையில் நான் கண்ட ஒவ்வொரு காட்சியிலும் ஒரு புதுமை பொலிவுற்று விளங்கியது. இதே நகரத்தின் சுறுசுறுப்பும், அவசரமும் ஒரு சமயம் யந்திரத்தன்மையாயிருந்த எனக்கு, இப்போது எல்லாமே இன்பச் சுழலில் லகப்பட்ட மனித நாகரிகத்தின் வேகமாகத் தோன்றியது. ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை அன்பினால் வெற்றிகொண்ட மன்னனைப்போல் என் அறையை அடைந்தேன்.

நாட்கள் பறந்தன. திருச்சியில் கதீஜாவின் தந்தையிடமிருந்து எப்போதாவது கடிதம் வரும். கதீஜா மாத்திரம் தன் பாவாவுக்குத் தெரியாமல் அடிக்கடி கடிதங்கள் எழுதித் தன் தம்பி ரசூலின் உதவியால் எனக்கு அனுப்பி வந்தாள். அந்தக் கடிதங்களில்தான் எத்தனை ஆர்வம், அன்பு, ஆனந்தம்! இந்த மாதிரி கடிதங்களுக்கென்றே அவள் எங்கேதான் வார்த்தைகளைத் தேடிப் பிடித்து எடுத்தாளோ, அதுவே ஒரு தேவ ரகசியந்தான்!

ஆனால் அவளுடைய கடிதங்கள் ஒன்றிற்கேனும் நான் பதில் எழுதும் நிலைமையில் இல்லை. அவளும் அதை நன்றாகத் தெரிந்துகொண்டுதான், "நான் என் நேரத்தையெல்லாம் செலவழித்து உங்களுக்கு நினைத்து நினைத்துக் கடிதம் எழுதுகிறேன். இந்தக் கடிதங்களுக்கு உங்களிடமிருந்து பதில் பெறவேண்டுமென்று எவ்வளவோ ஆவல். ஆனால் நீங்கள் கனவில்கூட மறந்துவிட்டுக் கடிதமெழுதி அனுப்பிவிடாதீர்கள்! பாவா கையில்தான் அவைகள் கிடைக்கும்! ஆகையால் எல்லாக் கடிதங்களுக்கும் பதில் எழுதி அடுத்த 'ரம்ஸானு'க்கு இங்கே வரும்போது ஒரு மூட்டைக் கடிதங்கள் கொண்டு வாருங்கள்!" என்று எழுதியிருந்தாள்,

"விசித்திரமான கடிதங்கள்!" என்று எண்ணிக் கொண்டு, "என்மீது இவளுக்கு எப்படி இவ்வளவு நம்பிக்கை பிறந்தது?" என்று ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். ஆனால் அவள்மீது எனக்கு ஏன் அத்தனை நம்பிக்கை பிறக்கவேண்டும்?

ஒரு நாள் இரவு திடீரென்று கதீஜா என் அறையில் கந்தர்வ குமாரிபோல் தோன்றினாள்.

"வாருங்கள் உலாவி வரலாம்" என்றாள்.

"எங்கே?"

"எங்கேயாவது போவோமே, மனசிற்குப் பிடித்த இடத்திற்கு!"

இருவரும் சேர்ந்து காடு, மலை, வனம் வனாந்தரமெல்லாம் உல்லாசமாகச் சுற்றித் திரிந்தோம். வயல் வெளிகளிலும், பசும்புற்றரையிலும், ஆற்றங்கரை மணற் பரப்புகளிலும் உட்கார்ந்து அளவளாவினோம். வான மண்டலத்தில், மேகக் கூட்டங்களுக்கிடையே கூட, வானவில்லின் வனப்பில் மயங்கியவாறே அலைந்து அலைந்து பொழுதை ஓட்டினோம். எல்லாம் பொழுது விடியும் வரையில்தான்! யாவும் க்ஷண நேரத்தில் தோன்றி மறைந்த ஓர் இன்பக் கனவு...வாழ்க்கை முழுவதுமே இந்த இன்பக் கனவில் கழிந்து போயிருக்கக் கூடாதா?

அன்றைக்குத் தபாலில் இரண்டு கடிதங்கள் வந்தன. ஒன்று கதீஜாவிடமிருந்து; மற்றொன்று அவள் தந்தையிடமிருந்து. அவள் எழுதியிருந்தாள்.

"இதுதான் என் கடைசிக் கடிதமாயிருக்குமென்று பயப்படுகின்றேன். என்னை லண்டனில் யாரோ படித்த காசிம் என்ற ஒருவருக்கு இன்னும் ஆறுமாதத்தில் நிக்காஹ் செய்து கொடுக்கப் போகிறார்களாம். அது வரையில் என்னை என் தாயாரின் கிராமத்திற்கு

அழைத்துச் செல்லப் போகிறார்களாம். நான் அம்மா விடம் என் விருப்பத்தைத் தெரிவித்தபோது, அவள் என்னைப் பைத்தியக்காரி என்கிறாள். இது விஷயம் பாவாவுக்குத் தெரிந்தால் வீட்டில் பெரிய ரகளை ஏற்பட்டுவிடுமென்று அவள் நடுங்குகிறாள். எனக்கு ஒன்றுமே புரியவில்லை; அல்லாவைத்தான் நம்பி யிருக்கிறேன்.''

அவளுடைய தகப்பனார் கதிஜாவின் விவாகப் பேச்சைக் குறிப்பிட்டு, "இந்தமாதிரி நல்ல இடத்துச் சம்பந்தம் நமக்குக் கிடைத்ததைப்பற்றி நீ மிகவும் சந்தோஷப்படுவாய் என நம்புகிறேன்" என்று எழுதி யிருந்தார்.

2

சாயந்தரம் ஐந்துமணி வரையில் மேஜையை விட்டு நகராமல் அந்தக் கடிதங்களையே திருப்பித் திருப்பிப் படித்துக்கொண் டிருந்தேன். பிறகு எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டு அறையைவிட்டு வெளியே கிளம்பி னேன். கால்கள் இழுத்த இடமெல்லாம் நடந்து, கடற் கரை வந்து சேர்ந்தேன்.

கடற்கரைத் தனிமையிலே அலைமேல் அலையாக எண்ணங்கள் எழுந்து, விரக்தி யடைந்திருந்த எனது மனப்பாறையில் வேகமாக மோதி, ஒரு பயனுமில்லாமல் அறுத்துளிகளாய்ச் சிதறி விழுந்தன. இன்னும் ஒரு விநாடி அதே இடத்தில் அதே நினைவுடன் இருந்தால் பைத்தியம் பிடித்துவிடும்போலிருந்தது. நிதானமில்லாமல் எனது அறைக்குத் திரும்பிவந்து படுக்கையில் சாய்ந்தேன்.

கடிகாரத் துடிதுடிப்பின் வேகம்மாத்திரம் அறையின் நிச்சப்தத்தைக் கலைத்துக்கொண்டிருந்தது. பெருமூச்சு களால் சுற்றுப்புறமெங்கும் வெப்பமாக மாற்றிக்கொண்

டிருந்தேன். அந்தச் சமயத்தில் படீரென்று அறைக் கதவு திறந்தது.

படுக்கையிலிருந்து நான் சரியாக எழுந்திருப்பதற்குள் என் பாலிய நண்பன் கமால் ஓடோடியும் வந்து, "அப்பா ரஹிம்!" என்று ஆவலோடு என்னைக் கட்டிக்கொண்டான்.

"வா, கமால்! இத்தனை வருஷங்களுக்கப்புறம் இன்றைக்காவது நாம் சந்திக்கிறோமே! இந்த நேரத்தில் நீ எப்படி இங்கே வந்தாய்?" என்றேன்.

"இனிமேல் இதே ஊரில்தான் எனக்கு வேலை. பாவாவும் 'பென்ஷன்' வாங்கிக்கொண்டு என்னுடன் வந்து விட்டார். இப்போது வந்தால்தான் உன்னைச் சந்தித்துத் தாராளமாய்ப் பேசலாமென்று வந்தேன்" என்று இத்தனை வருஷங்களாகப் பேசாத சமாசாரங்களை யெல்லாம் சேர்த்துவைத்துப் பேசினான்.

அன்றைய நிலைமைக்கு அவனுடைய வரவு எனக்குத் தெய்வ தரிசனமாக இருந்தது.

அடுத்த நாள் காலை நானும் கமாலும் அவனுடைய வீட்டிற்குச் சென்றபோது, எனக்கு முதல்முதலில் வரவேற்புக் கூறியவள் கமாலின் தங்கை ஸுலேகா தான்.

"வாங்கோ, ரஹிம் சாஹேப்! அடையாளமே தெரியல்லையே;— பாவா! அம்மா! ரஹிம் சாஹேப் வந்திருக்கார்; வந்து பாருங்கோ!"

"எனக்குந்தான் ஸுலேகா உன்னை அடையாளமே தெரியவில்லை; நீயும் முன்போல இப்போது சிறு பிள்ளையா யில்லையே!" என்றேன்.

அதற்குள் கமால் குறுக்கிட்டு, "ஸுலேகா இப்போது வயசில்மட்டும் வளர்ச்சி யடைந்திருக்கிரு ளென்று நினைக்காதே! அவளுடைய விஷமமும் அவளைப்

போலவே 'நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமு மாக' வளர்ந்துவருகிறது!'' என்ருன்.

"போ, அண்ணு! நீ எப்போதுமே இப்படித்தான்'' என்று கோபித்துக்கொண்டாள் ஸுலேகா.

முன்பெல்லாம் தென்னூர் பள்ளிவாசலுக்குப் பக்கத்தில் கமாலின் தந்தை குடியிருக்கையில், நான் அடிக்கடி அங்கே போவதுண்டு. அப்போது ஸுலேகா மிகவும் குறும்புக்காரப் பெண்ணுக இருந்தாள்; அவளால் எந் நேரமும் கமாலுக்குத்தான் கஷ்டம். அவளுடைய தாயார் நான் அவர்கள் வீட்டில் நுழைந்தவுடன் ஆரம்பத்தில் ஸுலேகாவின் சுட்டித்தனத்தைப்பற்றிக் கொஞ்சநேரம் பேசிய பிறகுதான் மற்ற விஷயங்கள் ஏதாவது இருந்தால் பேசுவாள்.

தென்னூரிலிருந்தாற்போல் கமாலின் தந்தையை, மிலிடரி சம்பந்தமாய் லாஹுருக்கு மாற்றிவிட்டார்கள். அங்கே சில வருஷங்கள் வேலை பார்த்துவிட்டு, உபகாரச் சம்பளம் பெற்ற பின்பு சில தினங்கள் முன்பாகக் குடும்பத்துடன் சென்னை வந்திருக்கிருர். அவருடைய சிபாரிசின்பேரில் கமாலுக்கு இங்கே உத்தியோகம் கிடைத்துவிட்டது.

எல்லோரும் மேஜையைச் சுற்றி நாற்காலிகளில் அமர்ந்தவுடன் ஸுலேகா கோப்பைகளில் சுடச்சுடத் தேநீர் கொண்டுவந்து வைத்தாள். அதைப் பருகிக் கொண்டே, "ஸுலேகாவுக்கு வயசாகிவிட்டதே! இன்னும் அவள் கோஷா இல்லையா?'' என்றேன்.

"இது ஔரங்கசீப் காலமல்ல - இருபதாவது நூற்ருண்டு!'' என்ருள் ஸுலேகா.

கமால், "அழகைத் திரையிட்டு மறைப்பது அறிவீன மல்லவா? நாமும் அப்படிச் செய்ய வேண்டுமா?'' என்ருன்.

"அழகென்றால் அழகு, சாதாரண அழகா?" என்று நான் சொல்வதற்குள் ஸுலேகா அவ்விடத்தை விட்டு மறைந்துவிட்டாள்.

3

கமால் இதோடு என்னைப் பலதடவைகள் விடாமல் கேட்டுவிட்டான். "நீ ஏன் எப்போது பார்த்தாலும் ஒரு விதமாகவே இருக்கிறாய்? உன் முகத்தில் பழைய உற்சாகத்தையே காணவில்லையே; காரணமென்ன?" என்று.

இந்த மாதிரிக் கேள்விகளின்போது எனக்கு கதீஜாவின் நினைவுகள் குமுறிக்கொண்டு வெளியே கிளம்ப முயலும். அவற்றை ஒருவாறு அடக்கிக்கொண்டு, "ஒன்றுமில்லை" என்று அவனுக்குப் பதில் சொல்லு வேன். ஆனால் அவனுக்கு என்னுடைய பதில் ஒருவகை யிலும் திருப்தியளிக்காது என்று எனக்குத் தெரியும். - அவளால் ஏற்பட்ட நினைவின் வேதனையைத்தான் என்றால் யார் முன்னிலையிலும் மறைக்க முடியவில்லையே!

ஒருநாள் கமாலின் தொந்தரவுக்காக அவனிடம் நடந்ததையெல்லாம் கூறி, "உன்னைத் தவிர இது ஒருவருக்கும் தெரியக்கூடாது" என்று சொல்லி வைத்தேன்.

மறுமுறை கமாலின் வீட்டிற்குச் சென்றபோது அவன் எங்கோ வெளியில் போயிருந்தான். ஸுலேகா கையில் ஒரு பத்திரிகையை வைத்துக்கொண்டு "வாருங்கள் கதை படிக்கலாம்" என்று தோட்டத்துப் பக்கம் என்னை அழைத்துச் சென்றாள். அங்கே போனவுடன் அவள் பத்திரிகையைப் பிரிக்கவுமில்லை, கதை படிக்கவுமில்லை. அதை மடித்து மூலையில் எறிந்துவிட்டு, "நான் ஒன்று

கேட்கப் போகிறேன்; நீங்கள் ஒளிக்காமல் பதில் சொல்ல வேண்டும்" என்ருள்.

"என்ன?" என்றேன்.

"நீங்கள் ஏன் எப்போதுமே ஒருவிதமாக இருக்கிறீர்கள்?" - அவள் அண்ணன் என்னிடம் கேட்ட அதே கேள்வி!

இதற்கு இவளிடம் பதில் சொல்லிக்கொண்டிருப்பதைவிட நேரே அறைப்பக்கம் புறப்படுவது நல்லதென்று மெதுவாக எழுந்தேன். அவள் லேசில் விட்டுவிடுவதாக இல்லை. "இதற்காக நீங்கள் வந்தவுடன் திரும்பலாமா? எல்லா விவரமுந்தான் நான் அண்ணனிடமிருந்து தெரிந்துகொண்டேனே!......அது சரி, இதற்கெல்லாம் உங்களைப் போன்றவர்கள் கவலைப்பட்டுக்கொண்டிருக்கலாமா? நாம் நினைக்கிறபடியே எல்லாம் நடக்கிறதா? துன்பத்தையெல்லாம் உடனுக்குடன் மறந்துவிடுங்கள்; அப்படியிருப்பதுதான் வாழ்க்கைக்கு நல்லது! - இதோ பாருங்கள் ஒரு கவிஞன் சொல்லுகிறதை" என்று தன்னுடைய குறிப்புப் புத்தகத்தில் எழுதிவைத்திருந்த 'லாங்பெலோ'வின் 'வாழ்க்கை கீதம்' என்னும் பாட்டை எடுத்துப் படித்து, அதற்குப் பதம் பதமாக அர்த்தம் கூறினாள்.

நான் மௌனம் கலையாமல் உட்கார்ந்திருந்தேன். 'ஸுலேகா கூடத் தத்துவ விசாரணையில் இறங்கிவிட்டாளே! இவளை நாகரிகத்தின் சிகரம் என்றல்லவோ கருதியிருந்தோம்" என்று நினைத்தபோது எனக்கு ஒரே பிரமிப்பாயிருந்தது.

4

ஸுலேகாவைப்பற்றி இந்தக் கணம் வரையிலும் என் மனத்தில் ஒரு நண்பனின் தங்கை - நட்பிற்குரியவள் -

என்ற எண்ணந்தான் பூரணமாக இருந்தது. வேறு விதமான நினைவிற்கே அங்கு அணுவளவும் இடமில்லை. அவளுடைய உள்ளமும் எப்படியிருக்கிறதென்று எனக்குத் தெரியாது. அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் நான் என் கனவிலேனும் விரும்பவில்லை. ஆனால் நாம் விரும்பவில்லையே என்பதற்காக இயற்கையாக நிகழும் சம்பவங்கள் யாவும் நிகழாமலேயே இருந்துவிடுகின்றனவா?

'கமாவின் அறையில் ஸுலேகா மாத்திரம் தனியாகச் சோபாவில் உட்கார்ந்துகொண்டு ஏதோ ஓர் உருதுப் பாட்டை லேசாகப் பாடிக்கொண்டிருந்தாள். அவள் கையில் பெரிய புத்தகமொன்று விரித்தபடியே இருந்தது. நான் பின்புறம் வெகுநேரம் நின்றும் அவள் என்னைக் கவனிக்கவில்லை யாதலால், மெதுவாக அருகில் நெருங்கி என்ன புத்தக மென்று பார்த்தேன். அது என்ன புத்தகமோ சரியாகத் தெரியவில்லை. அதை அவள் அக்கறையோடு தலைகீழாக வைத்துக் கவனித்துக்கொண்டிருந்தாள்!

"தலைகீழாகப் புத்தகம் படிக்கும் நவீன மாணவியை நான் இப்போதுதான் புதிதாய்ச் சந்திக்கிறேன்" என்று நான் சொல்லி முடிப்பதற்குள் அவள் படீரென்று புத்தகத்தை மூடியபடியே திடுக்கிட்டெழுந்தாள். புத்தகத்திற்குள்ளிருந்து ஒரு சிறிய புகைப்படம் வெளியே நழுவிக் கீழே விழுந்தது.

வேகமாக அவள் அதைக் குனிந்து எடுப்பதற்குள் படம் என் கையில் அகப்பட்டுவிட்டது. அதைக் கரத்தில் வைத்துக்கொண்டே, "நான் இதைப் பார்க்கலாமா?" என்றேன். அவள் வேண்டாமென்று சொல்லவில்லை; மௌனம் சாதித்தாள். அவள் கண்கள் என்னைக் கொஞ்சுவனபோல் விழித்தன.

படத்தை உற்றுப் பார்த்தேன். இருதயம் கட்டுக்கு மீறிப் படபடவென்று அடித்துக்கொண்டது. ஸுலேகா வின் முகத்தை ஏறிட்டு நோக்கினேன். அவள் என்னைப் பாராமல் தலையைக் கீழ்நோக்கிக் கவிழ்த்துக்கொண்டிருந் தாள். அவளுடைய முகமெங்கும் வெட்கத்தால் ரத்தம் பாய்ந்திருந்தது. படம் வேறு யாருடையதும் அல்ல; என்னுடையதேதான்!

"ஸுலேகா..." என்றேன் கம்மிய குரலில்.

பதில் இல்லை!

கடல் அலையிலே மோதுண்ட சிறு படகுகள்போல் விழிகள் மருட்சியோடு மேல் நோக்கிவிட்டுத் திரும்பவும் தங்களை இமைத்திரைக்குள் மறைந்துகொண்டன. முகம் அதிகமாகச் சிவந்துவிட்டது. எதற்கோ அவள் உதடு கள் துடித்தன.

உயிரோவியம்போல் நின்ற அவளுடைய தளிர்க்கரத் தைப் பற்றியபோது, அவள் அதைச் சிறிதேனும் விடு வித்துக்கொள்ள முயலவில்லை, அன்று மலர்ந்த பூங் கொடிபோல் அவ்விடத்திலேயே ஒரு நிமிஷம் நின்றாள்.

பிறகு சுய நினைவைப் பெற்றவுடன், "அந்தப் படத்தை இங்கே கொடுத்துவிடுங்கள்; அது எனக்கு வேண்டும்" என்று தடுமாறினாள்.

"எதற்காக ஸுலேகா?"

அப்போது அவள் பார்த்த பார்வையைப் பார்க்க வேண்டுமே!

5

ஸுலேகா தன் மெல்லிய குரலால் அன்று எனக்கு எடுத்துச் சொன்னாளே அந்த ஆங்கிலக் கவியின் முழு அர்த்தமும் எனக்கு இப்போதுதான் தெரிந்தது. அறைக்

குச் சென்று என்னுடைய புத்தகக் கட்டுகளைப் புரட்டி அந்தக் கவிதை வெளிவந்திருந்த புத்தகத்தை எடுத்துப் பிரித்தேன். கவிஞனுடைய அனுபவ மொழிகள் முன்னே நின்றன.

" எதிர்காலத்தை எதிர்பாராதே!
இறந்த காலத்தை எண்ணிப்பாராதே!
நிகழ் காலத்தை விட்டுவிடாதே!"

ஸுலேகா, அன்று இவ்வாக்கியங்களில் எத்தனை பொருள்களைப் புதைத்துவைத்துக் கூறியிருப்பாள்!

கதிஜாவின் பிரிவால் இருண்டு போன என் மனக்குகை கொஞ்சம் கொஞ்சமாக ஒளி பெற்றது.

அந்த ஒளியின் உள்ளொளியாய் ஸுலேகா கனிந்துகொண்டிருந்தாள்; ஒருவர் மற்றொருவரது கனவிலேயே காலத்தை மறந்தோம். வஸந்த காலமும், மாலைப் பொழுதுகளும், நிலவொளியும் எங்களுக்கு விநோதச் சிறுகதைகள் கூறின.

எங்களை நன்முக அறிந்த ஸுலேகாவின் பெற்றோர் கள் எங்களது நிக்காஹ் தினத்தைக் குறிப்பிட்டு விட்டார்கள்.

* * *

இந்த இடத்தில் கதையை படித்துக்கொண்டிருந்த நண்பர் கதையின் கடைசிப் பக்கத்தைப் பார்க்காமல், "ரஹிமுக்கும் ஸுலேகாவுக்கும் கல்யாணம் நடந்து விடுகிறது! இதுதானே கதை?" என்றார். "மேலே படித்துவிட்டுச் சொல்லுங்கள்" என்றேன். அவர் படித்தார்.

திருச்சிராப்பள்ளியிலிருந்து கதிஜாவின் தகப்பனர் எனக்கு ஒரு கடிதத்தை ரிஜிஸ்டர் செய்து அனுப்பி யிருந்தார். அதில் கதிஜாவுக்குக் குறிப்பிட்டிருந்த

அந்தக் காசிம் என்பவரைக் கதிஜா பிடிவாதமாக மணம் செய்துகொள்ள மறுப்பதாகவும், அந்த மாப்பிள்ளையின் போக்கு யாருக்குமே பிடிக்கவில்லையென்றும் எழுதியிருந்தார். எனக்கும் கதிஜாவுக்கும் நிக்காஹ் செய்ய விரைவில் ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறதாம்; உடனே நான் அங்கே புறப்படவேண்டுமாம்!

நண்பர் பெருமூச்சு விட்டுவிட்டு, "அப்புறம்?" என்றார்.

"இப்போது என் கண்ணெதிரே இரண்டு இளம் முகங்கள் தோன்றுகின்றன. ஒன்று எனது திருச்சிப் பிரயாணத்தின்போது முதல் முறையாகவும், கடைசி முறையாகவும், திரைமறைவிலிருந்து நோக்கினதே அந்தக் கதிஜாவின் கண்ணீர் தேங்கிய முகம். மற்றொன்று, என் கையில் புகைப்படம் கிடைத்தபோது முகமெல்லாம் குப்பென்று சிவக்க, வெட்கத்தால் விழிகளை இமைகளுக்குள் ஒளித்துக்கொண்டதே, அந்த ஸுலேகாவின் மருண்ட பார்வை, - இவற்றில் எந்த விழிகளின் மோஹன எழிலுக்கு நான் என் இருதயத்தை அடிமையாக்குவது?

* * *

"இவ்வளவுதானா கதையின் முடிவு" என்றார் நண்பர்.

"ஆமாம்."

"சரியான ஏமாற்றமாயிருக்கிறதே!"

"ஆமாம், எல்லாமே ஏமாற்றந்தான்!" என்றேன் நான்.

15

வழிப்போக்கன்

கொல்லிமலைச் சாரலில் விளைந்த சின்னஞ் சிறு மூங்கிலை, கோயம்புத்தூர் வாசியான சோமுவுக்கு யார் புல்லாங்குழலாகச் செய்து கொடுத்தார்களோ தெரியாது. ஆனால், அது அந்தப் பையனுக்குக் கிடைத்ததிலிருந்து, அவனையும் அவன் குழலையும் தனித்தனியே பிரித்துப் பார்ப்பது சிரம சாத்தியமான காரியமாகிவிட்டது.

ஒருநாள் சோமு கடைவீதியில் பாம்பாட்டி ஒருவன் மகுடி வாசித்துக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டான். அன்றிலிருந்து மகுடிக்குப் பிடித்தது சனியன்! இதே பைத்தியமாய் இருந்து ஒரு வாரத்தில் மகுடியைத் தன் குழலில் சாதகம் செய்துகொண்டான்.

அதன்பிறகு எப்போதெல்லாம் அவனுக்குத் தலை கால் புரியாத சந்தோஷம் வந்துவிடுகிறதோ அப்போதெல்லாம் அவனிடம் நிச்சயம் மகுடியை எதிர் பார்க்கலாம்.

சோமுவுக்கு இப்போது பத்தொன்பது வயசு. அவனுக்குத் தாய் தகப்பனார் இல்லை. நாலுபேர் தமையன்கள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோருக்கும் சோமுவின்மீது அளவுகடந்த பிரியம். என்ன இருந்தாலும் கடைசித் தம்பியல்லவா?

என்னதான் அவர்கள் சோமுவின்மீது பற்றுதலா யிருந்தாலும், அவனுக்கு என்னவோ அது ஒன்றும் லட்சியமாகத் தோன்றவில்லை. இருந்தாற் போலிருந்து, யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் வீட்டைவிட்டுக் கிளம்பிவிடுவான். மறுபடியும் அவனை வீடு கொண்டு

வந்து சேர்ப்பதற்குள் அவன் தமையன்மார்களுக்குப் போதும் போதுமென்றாகிவிடும்.

நாலைந்து தரம் இப்படி அவனால் கஷ்டப்பட்ட அவன் சகோதரர்கள், கடைசியில் மனமுடைந்து அவன் போக்கிலேயே போகட்டும் என்று விட்டுவிட்டார்கள்.

2

சோமு வீட்டை விட்டுக் கிளம்புவது இத்துடன் ஆறாவது முறை. அவன் அப்படிக் கிளம்பி ஆறு மாத மாகிறது.

கரூரிலிருந்து திருச்சி வரும் ரஸ்தாவில், நெருப்பாகத் தகிக்கும் சித்திரை வெயிலைக் கொஞ்சங்கூடச் சட்டை செய்யாமல் அவன் ராஜநடை நடந்து வந்தான். அவனுடைய நினைவெல்லாம் தன் இதழ்களிலிருந்து பெருகிக் கொண்டிருந்த மகுடியில்தான் லயித்துப் போயிருந்தது.

ரஸ்தா வடக்கே திரும்பி வளைந்து செல்லும் மூலைக்கு வந்தவுடன் சோமுவின் வாசிப்புத் திடீரென்று தடைப் பட்டது. சற்றுத் தூரத்தில் எழுந்த கூக்குரலை உற்றுக் கேட்டான். அத்துடன் ரஸ்தாவை ஒட்டினாற்போல் மரக் கூட்டத்திற்கு மேலே குபீரென்று புகை எழும்புவதையும் பார்த்தான்.

"யார் வீட்டிலோ நெருப்புப் பிடித்துக்கொண்டது போலிருக்கிறது......இதற்குத்தானா இவ்வளவு கூச்சல் அருமையாக வந்து கொண்டிருந்த என் வாசிப்பைக் கெடுத்துவிட்டார்களே!" என்று முணுமுணுத்துக் கொண்டு புல்லாங்குழலை இடுப்பில் செருகினான். அவனுடைய காதுகளில் பக்கத்தில் நின்று துடிதுடித்த ஒரு பெண்பிள்ளையின் வார்த்தைகள் விழுந்தன.

அவளுக்கு வயசு நாற்பது இருக்கும். அவள் பெயர் அலமேலு என்று சோமு பின்னால் தெரிந்துகொண்டான்.

"ஐயோ! மங்களம் காச்சலோடே மாடியில் கிடக்கிறாளே! இங்கே யாரும் ஆண்பிள்ளை இல்லையா?... அட தெய்வமே! இதோ நான் போகிறேன் அவளைத் தூக்குவதற்கு" என்று ஆவேசத்தோடு எரியும் வீட்டில் நுழையப் போனாள் அவள்.

"ஆண்பிள்ளை இல்லையா என்கிறாளே, என்னை இவளுக்கு ஆண்பிள்ளையாகத் தெரியவில்லையா!" - எனச் சோமுவுக்கு ரோஷம் குமுறிக்கொண்டு வந்தது.

"இதோ, நான் போகிறேன்" என்று அவளைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டு, அந்த வீட்டிற்குள் பாய்ந்தான்.

மாடிப்படியைத் தேடிப்பிடித்து, மேலே ஜுரத்தோடு படுத்திருந்த அந்தப் பெண்பிள்ளையைத் தூக்கிக்கொண்டு வெளியே வருவதற்குள் சோமுவுக்குப் பாதி உயிர் போய் விட்டது. அவளைக் கொண்டுவந்து தரையில் போட்டு விட்டுத் தானும் மூர்ச்சையாய் விழுந்தான்.

அவனுக்குச் சுய நினைவு வந்தபோது அந்த மாடியில் பற்றிக்கொண்ட தீ முழுவதும் அணைக்கப்பட்டுவிட்டது. அவனை வேறொரு கூரை வீட்டின் திண்ணையில் படுக்க வைத்திருந்தார்கள். அவனுக்குப் பக்கத்திலேயே திண்ணையின் மற்றொரு கோடியில் அந்தச் சிறுமியும் படுத்திருந்தாள். சோமு மெதுவாகத் திரும்பி அந்தப் பக்கம் நோக்கியபோது அவளும் இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

சோமுவின் மயக்கம் முழுவதும் தெளிந்துவிட்டது. துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு அவன் புறப்படச் சித்தமானான்.

"இரு, தம்பி! சாப்பிட்டுவிட்டுப்போகலாம்" என்று அவனை இருக்கச் செய்தாள். அவனுக்குச் சாப்பாடு போடும்போது அவனைப்பற்றி முழு விவரமும் கேட்டுத் தெரிந்துகொண்டாள் அலமேலு.

"எப்போதும் இங்கேயே இருந்துவிடு தம்பி!" என்றாள்.

"ஊஹூம்" என்று தலையை ஆட்டினான் சோமு.

"ஏன்?"

"நான்தான் ஒரே இடத்தில் தங்கியிருப்பதில்லையே!"

"எவ்வளவு நாள் உனக்கு இங்கே இருக்கப் பிரியமோ அவ்வளவு நாள் இரு."

சோமு யோசித்துவிட்டு, "சரி, இருக்கிறேன்" என்று சொல்லிவைத்தான்.

3

வைகாசி மாத ஆரம்பம். அலமேலுவின் புஞ்செய்க் காட்டில் அப்போது குடியானவர்கள் சோளக்கதிர் கொய்துகொண் டிருந்தார்கள். அவர்களுக்கு அருகே வரப்பின்மேல் அலமேலு மங்களத்துடன் நின்றுகொண் டிருந்தாள். பக்கத்திலிருந்த ஏரிகரைச் சோலையிலிருந்து சோமுவின் மதுரமான குழலோசை கிளம்பிக்கொண் டிருந்தது.

சோமு அந்தச் சோலையில், ஒரே ரத்தச் சிவப்பாய்ப் பூத்துக் குலுங்கி நிற்கும் பூவரசமரம் ஒன்றின் உச்சிக் கிளையில் உல்லாசமாக உட்கார்ந்துகொண்டிருந்தான். அவனுடைய குழலும் அப்போது மகுடியைத்தான் கொட்டிக்கொண்டிருந்தது!

"நானுந்தான் இந்தப் பிள்ளைக்கு எத்தனையோ தடவை சொல்லிவிட்டேன், மகுடி வாசிக்காதே, பாம்பு

வரும் என்று. ஆனால், கேட்டால்தானே? சாப்பாடுகூட வேண்டாம் போலிருக்கிறது, இந்தக் குழாய் கையிலிருந்து விட்டால்!" என்று அங்கிருப்பவர்களிடம் சொல்லி அங்கலாய்த்துக்கொண்டாள் அலமேலு.

தன் தாய் இப்படிச் சொன்னவுடன் மங்களத்திற்கு அங்கே இருப்புக்கொள்ளவில்லை. ஓடோடியும் வரப்புக் களின் வழியாய் 'ஏரிகரைக்கு வந்து, சோமு உட்கார்ந் திருந்த மரக்கிளையைத் தேடலானாள்.

மேலே, மரத்திலிருந்து அவளுடைய தலைக்கு நேராகச் சோமுவால் பிய்த்தெறியப்பட்ட பூங்கொத்து அவனுடைய இருப்பிடத்தை அறிவித்தது.

"சோமு மாமா, இதோ பாரேன்! மகுடி வாசிக்காதே; பாம்பு வருமாம்! நான் சொல்வதைக் கேள், மாமா!" நான் சொல்வதைக் கேள், மாமா!" என்று உரக்கக் கத்தினாள் மங்களம்.

"இல்லை, மங்களம்! நானும் இத்தனை நாளாய் வாசிக்கிறேன்; ஒரு பாம்புகூட வந்ததில்லை. அப்படி வந்தால்தான் நல்லதாச்சே!" என்று பதில் கொடுத்து விட்டு மறுபடியும் வாசிப்பதற்காக இதழருகில் கொண்டு போனான்.

மரத்தடியில் உட்கார்ந்து, "ஓ" வென்று அழத் தொடங்கினாள் மங்களம். கண்ணீர் குபு குபுவெனப் பாய்ந்தோடியது.

"இதேதடா தர்ம சங்கடம்!" என்று நினைத்துக் கொண்டு மரத்தை விட்டுத் துரிதமாகக் கீழே இறங்கி அவளிடம் வந்தான் சோமு.

"அழாதே மங்களம், இதோ நிறுத்திவிட்டேன்" என்றான் தாழ்ந்த குரலில்.

"இனிமேல் மகுடியே வாசிக்கக்கூடாது தெரியுமா?" என்றாள் மங்களம் கண்டிப்பாக.

சோமுவின் சுபாவம் திரும்பிவிட்டது. "அதுதான் முடியாது!" என்றான் அழுத்தமாக.

"இல்லாவிட்டால் அழுவேன்!"

சோமுவுக்கு இதற்கு என்ன பதில் சொல்லுவதென்று புரியவில்லை.

"அழுவேன் என்கிறாளே; என்ன செய்வது? அழுகைக்குப் பயந்துகொண்டு மகுடியை விட்டுவிடுவதா? மகுடிக்கு ஆசைப்பட்டு மங்களத்தின் மனத்தைப் புண்படுத்துவதா?......அது சரி, இவர்களுக்குள் எது சிறந்தது? மகுடியா? மங்களமா?......இரண்டுந்தான் உயர்ந்தது!"

சோமுவுக்கு அந்த ஊரைவிட்டுக் கிளம்பவேண்டுமென்கிற எண்ணம் ஒரே ஒருதரம் மட்டிலும் எழுந்தது. அப்போது அந்த வீட்டில் என்னவோ விசேஷம். அதற்காக வெளியூரிலிருந்து உற்றார், உறவினர்களெல்லாம் வந்திருந்தார்கள். அவர்களைக் கவனிப்பதற்கே பொழுது அலமேலுவுக்குச் சரியாக இருந்தது. ஆனால், சோமுவுக்கோ இந்தச் சில தினங்களாக அலமேலு தன்னை அசட்டை செய்வதாகத் தோன்றியது. அத்துடன் வந்த விருந்தினர்கள் அவனைப் பார்த்த பார்வையும் அவனுக்குப் பிடிக்கவில்லை.

பேசாமல் பத்திரமாகக் குழலை எடுத்துக்கொண்டு வெளியே நழுவினான்.

"எங்கே மாமா போகிறாய்? வீட்டில் அம்மா பலகாரம் பண்ணுகிறாள்; சிக்கிரம் வந்துவிடு" என்ற மங்களத்தின் குரல் உள்ளேயிருந்து கேட்டது.

சோமு நின்று நினைத்துப் பார்த்தான்: "முன்போ குழல் மாத்திரந்தான் இருந்தது; எந்தச் சமயத்திலும் எங்கே வேண்டுமானாலும் எடுத்துப் போகலாம். ஆனால், இப்போதோ...?"

மங்களத்தின் குரல் அவன் தீர்மானத்தைச் சிதற அடித்தது.

4

வருஷங்கள் சென்றன. மங்களம் அழகே உருவாய்த் திகழ்ந்தாள்.

ஒரு நாள் இரவு, காளியம்மன் கோவிலுக்கு எதிரே நடந்துகொண்டிருந்த அரிச்சந்திர நாடகத்திற்கு அலமேலுவும் சோமுவும் போயிருந்தார்கள். மங்களம் மாத்திரம் தன்னந்தனியாக வீட்டில் இருந்தாள்.

சோமுவுக்கு நாடகம் சுவாரஸ்யமாயில்லை. பாதியில் எழுந்து வீட்டிற்கு வந்துவிட்டான். வந்தவன் நேரே மாடிக்குச் சென்று படுக்கையில் படுக்காமல், சற்று நேரம் வான வெளியைப் பார்த்த வண்ணம் மாடியின் கைப்பிடிச் சுவரருகில் நின்றுகொண்டிருந்தான்.

நிலவு பாலைப் பொழிந்து கொண்டிருந்தது. அந் நிலவொளியில் அவனுள்ளத்தில் என்ன என்னவோ இன்பக் கற்பனைகள் ஊற்றெடுத்தன. இடுப்பில் இருந்த குழலை எடுத்துத் துடைத்துக்கொண்டே வாசிப்பதற்காகக் கட்டைச் சுவரில் சாய்ந்தான்.

"மாமா...!"

மங்களத்தின் மெல்லிய குரல் வீணையின் நாதம்போல் காற்றில் மிதந்து வந்தது.

ஆச்சரியத்தோடு குரல் வரும் திக்கைக் கவனித்தான். அப்போதுதான் மங்களம் மாடிப்படிகளிலிருந்து மேல் தளத்திற்கு வந்துகொண்டிருந்தாள்.

"நாடகத்திலிருந்து ஏன் மாமா பாதியில் வந்து விட்டாய்?" என்றாள்.

"பிடிக்கவில்லை; வந்துவிட்டேன்" என்றான் சோமு.

"மாமாவுக்குப் பிடிக்காவிட்டால் அம்மாவுக்கு நிச்சயம் பிடிக்கும். நாடகம் முடிந்தபின்தான் வருவாள்" என்றாள் மங்களம்.

இப்படிச் சொல்லிக்கொண்டே அவளும் சுவரின் சமீபத்தில் வந்து வானத்தை நோக்கினாள்.

"நாடகத்தைவிட எனக்கு இந்த நிலாதான் அதிகம் பிடிக்கிறது" என்றான் சோமு.

மங்களம் பெருமூச்சு விட்டாள். சற்று நேரம் கழித்து, "எனக்கும் அப்படித்தான்!" என்றாள்.

வெண்ணிலவின் அழகிய அமைதியில் இரண்டு இருதயங்களும் கட்டற்றுத் துடித்தன. அந்தத் துடிப்பின் சுமையை மங்களத்தால் அவ்வளவாகத் தாங்க முடியவில்லை.

"எங்கே மாமா, குழலை எடுத்துக் கொஞ்சம் மகுடி வாசி!" என்றாள். அவள் குரல் அவனைக் கொஞ்சுவது போல் இருந்தது.

சோமுவுக்குத் தன் காதுகளையே நம்பமுடியவில்லை.- மகுடி வாசிக்க வேண்டாமென்று மன்றாடிய அதே மங்களந்தானா இப்போது இப்படிச் சொல்லுகிறாள்!

சோமுவின் இதழ்கள் வேய்ங்குழலை முத்தம் இட்டுக் கொஞ்சின. மங்களத்து வீட்டின் கூரை வேய்ந்த மாடியிலிருந்து மகுடிநாத வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தது.

கந்தர்வ லோகத்திற்குத் தாவிக் கொண்டிருந்த சோமுவை மங்களம் திடீரென்று ஏறிட்டுப் பார்த்தாள். நிர்மலமான வானவெளியை அவன் கண்கள் ஊடுருவிக் கொண்டிருந்தன. கண்களிலிருந்து கண்ணீரும் இதழ்களிலிருந்து மகுடியும் ஒன்றாய்ப் பெருகிக்கொண்டிருந்தன.

"மாமா..." எனத் தடுமாறினாள் மங்களம்.

"மங்களம்..."

குழலோசை தடைப்பட்டது. வானத்தில் நிலவைச் சிறுமேகம் விழுங்கியது. வசந்தகாலத் தென்றல் லேசாக உள்ளே பாய்ந்தது. சோமுவின் மார்பு பொங்கி வடிந்தது.

விம்மிக்கொண்டே எழுந்து, முகத்தை மூடிய வண்ணம் திடுதிடென்று மாடிப்படி வழியாகக் கீழே ஓடினாள் மங்களம். பெருமூச்சுடன் குழலுக்கு அதன் இருப்பிடத்தைத் தேடிக்கொடுத்தான் சோமு.

5

அன்றைக்கு இரவே சோமு ஒரு கனவு கண்டான். பயங்கரக் கனவு. மங்களம் மாடியிலிருந்தவாறே சோமுவின் கரத்திலிருந்த குழலைப் பறித்துக்கொண்டு ஓடினாள். சோமு அவளைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்து பின்பற்றினான். கலீர் என்று சிரித்துவிட்டு மங்களம் மாடியிலிருந்து கீழே விழுந்து உயிரை விட்டாள். அவளுடனேயே அவள் கரத்திலிருந்த மூங்கிற் குழலும் உடைந்துவிட்டது! சோமு தேசாந்தரம் புறப்பட்டுவிட்டான்.

கனவு கலைந்து எழுந்தான் சோமு. படுக்கையில் தலையணை பூராவும் கண்ணீரால் நனைந்திருப்பதைக் கண்டுவிட்டு, தான் உண்மையிலேயே அழுதிருப்பதை உணர்ந்தான்.

"கனவு கண்டால் பலிக்குமென்று சொல்லுகிறார்களே! ஒரு வேளை அது உண்மையாகிவிடுமோ?" என்னும் கவலை அவனைப் பற்றிக் கொண்டது. எவ்வளவோ தன்னைச் சமாதானம் செய்துகொள்ள முயன்றும் அது பயனற்றுவிட்டது.

ஆடி அமாவாசை. விளக்கு வைத்த சமயம். வயல் வரப்புகளில் சுற்றித் திரிந்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பினான் சோமு. வாசற் கதவு வழியாக உள்ளே நுழையப் போகும் சமயத்தில், வீட்டிற்குள் மங்களமும் அவள் தாயாரும் ஆத்திரத்துடன் பேசிக்கொண்டிருந்த சொற்கள் அவன் காதில் விழுந்தன.

"பைத்தியம்! சோமு மாமாவைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்வாளாம்! என்ன அழுத்தம் உனக்கு! இன்னொரு தரம் இப்படிச் சொல்லாதே! கேட்பவர்கள் சிரிக்கப் போகிறார்கள்! உன் அம்மாவுடன் பிறந்த மாமனா கெட்டுப்போகிறான்? எவனோ ஒரு வழிப் போக்கன்..."

இதற்கு மேல் சோமுவுக்குக் காது கொடுத்துக் கேட்கப் பொறுக்கவில்லை. அவன் பாதத்திற்குக் கீழிருந்த பூமி பம்பரம்போல் சுழன்றது.

மங்களம் தன் தாயாருடன் தழுதழுத்த குரலில் எவ்வளவோ வாதமிட்டுப் பார்த்தாள். இதெல்லாம் அவன் காதில் விழுந்துகொண்டுதான் இருந்தது. ஆனால் அவன் நினைவு இதை ஒன்றும் கவனியாமல் எங்கெங்கே அலைந்தது.

வெளியே இருளை வெறித்துப் பார்த்தான். வான முகட்டிலே ஒரு மின்னல் தோன்றி, காரிருளில் 'வழிப் போக்கன்' என்று எழுதி, அழித்து, மறைந்தது. ஆடி மாதத்தின் ஆவேசக் காற்றும் அவனை அதே பெயரினால் அறைகூவி அழைத்தது.

புயலிலும் மழையிலும் அடிபட்ட பூங்கொடிபோல் கண்ணீரும் கம்பலையுமாய் நின்றுகொண்டிருந்த மங்களத்தைத் திறந்த கதவின் வழியாக நோக்கிவிட்டுச் சந்தடி செய்யாமல் திரும்பினான். திருச்சிராப்பள்ளி ரஸ்தாவில் அவன் கால்கள் நடந்தன.

தூரத்து இருளில் அவன் மறைந்தவுடன் அவனது குழலொலி தயங்கித் தயங்கி மெதுவாக எழுந்தது. கொஞ்சநாழிகை சென்றவுடன் அதுவும் 'படீர்' என்னும் சத்தத்துடன் நின்றது.

மங்களத்தை மறந்துவிட்டுப் போகும் வழிப்போக்கன் மகுடியை மறப்பதற்காகக் குழலையும் உடைத்தெறிந்தான் போலும்!

16

தாமரைப்பூ

குறுக்கே நின்ற இந்த ஐம்பது வருஷ வாழ்க்கையையும், இன்றைக்கு என் சொந்த கிராமத்தின் பொன்னேரியின் கரையில் நின்றுகொண்டு நினைத்துப் பார்த்தால், அது ஒரு புகை சூழ்ந்த கனவுப் படலம் போல் மனத்திரையில் காட்சியளிக்கிறது.

இந்த ஐம்பது வருஷங்களுக்கு முன்னால் எனக்கு வயசு பதினைந்து. அப்போது நான் இதே கிராமத்தில்தான் இருந்தேன். இப்போதும் நான் இங்கேதான் இருக்கிறேன். ஆனால் இடைவெளியே அகப்பட்ட அந்த அரை நூறு வருஷத்தில்தான் என்னுடைய சொந்தச் சரித்திரத்தின் சாரமற்ற பெரும் பகுதி அடங்கிக் கிடக்கிறது.

என்னுடைய பதினாறாவது வயசு ஆரம்பத்தில் நான் இந்த ஊரை விட்டுத் தனியாக ஒருவருக்கும் தெரியாமல் வடநாட்டுப் பக்கம் கிளம்பிவிட்டேன். என்ன காரணத்தினால் நான் அப்படிச் செய்தேனென்று எனக்குத் தெரியவில்லை; அதே போலத்தான் காரணம் தெரியாத ஒரு சக்தியால் உந்தப்பெற்றுத் திரும்பவும் இங்கேயே வந்து சேர்ந்தேன்.

என்னைப் பெற்று வளர்த்தவர்களில் ஒருவரேனும் இப்போது இங்கில்லை; நானும் அவர்கள் இத்தனை காலம் உயிரோடிருப்பார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. ஊருக்கு வந்தவுடன் ஒரு சிறிய கூரை வீட்டையும், அதைச் சுற்றிலும் தோட்டத்திற்குக் கொஞ்சம் இடமும் விலைக்கு வாங்கிக்கொண்டேன். கையில் இருந்த மீதிப் பணத்தைக் கொண்டு மூன்று ஏகர் நன்செய் நிலமும் வாங்கப்பட்டது. என்னுடைய இறந்துபோன தந்தையிட மிருந்த பழைய பண்ணைக்காரச் சந்ததியைச் சேர்ந்தவர் களே இன்று என் நிலபுலங்களைக் கவனித்து வருகிறார்கள். சமையலுக்கு மாத்திரம் ஒரு பையனை அமர்த்திக்கொண் டிருக்கிறேன்.

பட்டாளத்தில் சேர்ந்து யந்திரத்தோடு யந்திரமாய் வாழ்ந்த என்னுடைய உடலுக்கும் உள்ளத்திற்கும் இந்தக் கிராம வாசம் ஒரு நிம்மதியைக் கொடுக்கிறது. மற்றவர்கள் என்னை வியப்போடு உற்றுப் பார்த்துத் தங்களுக்குள் என்னைப்பற்றி நூதனமான அபிப்பிரா யங்கள் தெரிவித்துக் கொள்வதற்காக நான் ஒன்றும் கவலைப்படவில்லை. என் சொந்தக் கிராமவாசிகளில் சிலரே என்னை வடநாட்டுக்காரக் கிழவன்என்றும், 'தாடிக்காரத் தாத்தா' என்றும் தலைமறைவாகச் சொல்லிக்கொள்ளு கிறார்கள். ஏதோ அவர்களுடைய அரைகுறைப் பேச்சிலும் ஒரு சிறு பகுதியாவது உண்மை இருக்கத்தான் செய்கிறது.

ஒரு நாள் மாலை மூக்குக்கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு கைப்பிரம்புடன், பகவத்கீதை சகித மாய்ப் பள்ளன் குளத்தை நாடி நடந்தேன். குளத்தங் கரையில் இருந்த பரந்து வளர்ந்த அரசமரமும் அதனடியி லிருந்த கல்லுப் பிள்ளையாரும் என்னைத் தங்களது மோன மொழிகளால் வரவேற்றன. பாதரட்சைகளைத் தூரத்தில் கழற்றி வைத்துவிட்டு, விநாயகரை நமஸ்கரித்தபின்

அருகில் தாறுமாறுகக் கிடந்த குளத்தின் படிக்கட்டில் உட்கார்ந்தேன். கவனம் கீதையில் சென்றது.

சற்று நேரத்தில் பின்புறம் யாரோ நிற்பதுபோல் தோன்றியதால் மெதுவாகத் திரும்பிப் பார்த்தேன்.

சுமார் பத்தடி தூரத்தில் ஓர் அழகிய பெண் குழந்தை நின்றுகொண்டு இடுப்பில் வைத்த மண்குடத்தோடு என்னை நோக்கிக்கொண்டிருந்தாள்: அவளுடைய மருண்ட விழிகளில் அச்சம் கலந்தொளித்தது.

அவளுக்குப் பதினைந்து பதினாறு வயசுக்கு மேல் இராது. மாநிறத்தோடு நடுத்தர உயரத்துடன் சாதாரணப்பச்சை நிறப்புடைவை ஒன்றை உடுத்துக்கொண்டு சின்னஞ்சிறு பசுங் கொடிபோல் நின்றாள். அவளது முகத்தில் தோன்றிய பயம் இன்னும் அப்படியேதான் இருந்தது.

மூக்குக் கண்ணாடியை நெற்றியில் தூக்கி வைத்து விட்டு, "நீ யாரம்மா?" என்றேன்.

அவள் உடனே பேசவில்லை. துடிக்கும் உதடுகளோடு என்னை ஏறிட்டுப் பார்த்துவிட்டுத் திரும்பவும் கீழே குனிந்துகொண்டாள். அவளுடைய உடல் முன்னைவிடக் குறுகியிருந்தது.

"ஏனம்மா பேசாமல் நிற்கிறாய்? நீ யாரென்று சொல்லேன்."

"நான்—நான் வந்து பறைப்பிள்ளைங்க - தீண்டாத சாதி."

இதைக் கூறியவுடன் ஏதோ தவறு செய்துவிட்டவள் போல் இன்னும் இரண்டடி பின்னே நகர்ந்தாள்.

அந்தப் பெண்ணின் முகத்தை ஆச்சரியத்தோடு உற்று நோக்கினேன்; அதில் லக்ஷ்மீகரம் பொங்கி வழிந்தது— ஆனால் தீண்டாத சாதி!

"அதனால் பரவாயில்லை. தண்ணீர் மொள்ளத்தானே வந்திருக்கிறாய்? தாராளமாய் வந்து மொண்டுகொண்டு போ" என்றேன்.

என் வார்த்தைகளைக் கேட்டுத் திகைப்படைந்த அவள் கணநேரம் தாமதித்த பிறகு, 'விர்'ரென்று வேகமாய்க் குளத்திற்குள் இறங்கினாள். அங்கே அவள் ஒரு நிமிஷங்கூட நிம்மதியாக நிற்கவில்லை; அவசரம் பொறுக்க முடியாமல் சரியாகக்கூடக் குடத்தைக் கழுவாதபடி நீர் மொண்டுகொண்டு கரை ஏறினாள். அவள் கால்களின் மெட்டிகளின் ஓசையும், குடத்தின் வாய்பாட்டில் அலைமோதும் நீரொலியும் ஒன்றுகூடி இன்னிசையைக் கிளப்பின.

படிக்கட்டுகளில் ஏறி அவள் கரைக்கு வந்தவுடன், "உன்னுடைய பெயர் என்னம்மா?" என்றேன்.

"சீதா" என்று பதில் வந்தது.

"உன்னுடைய வீடு எங்கே இருக்கிறது?"

"அதோ பாருங்கள் அங்கே, அந்தச் சேரியில்தான் நாங்கள் குடியிருக்கிறோம்" என்று நெற்கழனிகளுக்கப்பால் மரக் கூட்டங்களுக்குப் பின்புறம் தெரிந்த பத்துப்பன்னிரண்டு கூரைக் குடிசைகளைக் காண்பித்தாள்.

"சரி, போய்வா" என்றேன்.

அடிமேல் அடிவைத்துத் திரும்பித்திரும்பிப் பார்த்துக் கொண்டே என் பார்வையிலிருந்து விலகினாள் சீதா.

அன்றைக்கு இரவு என் வீட்டின் எதிரே நக்ஷத்திரங்கள் பூத்த வானத்தின் அடியில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தவாறே மௌனத்தில் ஆழ்ந்திருந்தேன். அந்தச் சமயத்தில் என் மனத்தில் அன்று மாலை நான் சந்தித்த பெண்ணின் ஞாபகம் வந்தது.

"சீதா - தீண்டாத சாதி!"

மனிதவர்க்கத்திலே நம்முள் தீண்டப்படாத சாதியார் என்று ஒரு பகுதியினரை ஒதுக்கிவைத்திருப்பதை இத்தனை நாளும் நான் அறிந்து கொள்ளாமலில்லை. ஆனால் என் வாழ்நாட்களில் முக்கியமான பகுதியை மரக்கட்டைபோல் கழித்த இம்மாளிட ஜன்மமாகிய எனக்கு இதைப்பற்றி யெல்லாம் நினைத்துப் பார்க்க அப்போது அவகாசம் ஏது?

அன்பு, இரக்கம், அழகு, காதல் இவைகள் யாவற்றையும் நடைமுறையில் அநுபவித்துப் பார்க்க இட மில்லாத என் வறண்டுபோன இருதயத்தில் இப்போது தான் அவற்றைப்பற்றியெல்லாம் யோசிக்க இடம் கிடைத்தது.

பாலைவன யாத்திரிகன் தனது களைப்பு மிகுந்த பிரயாணத்தின் இறுதியில் ஒரு பேரீச்சம் பழச் சோலையைக் காணுவதுபோல் நான் இப்போது என்னுடைய கிராமத்தை மீண்டும் கண்டிருக்கிறேன். அந்தச் சோலையின் குளிர்ந்த காற்றை அள்ளிவீசும் தெளிந்த நீரோடைதான் இன்று எனக்குச் சீதா.

"சீதா! பாரபக்ஷமற்ற கடவுளால் படைக்கப்பட் டிருக்கும் நீ உன்னுடைய சகோதர சமூகத்தாலேயே கொடுரமான முள்வேலிக்குள் ஒடுக்கப்பட்டிருக்கிறாய். மற்றவர்களுக்கு நீ எப்படித் தோன்றினாலும் சரி. உன்னைக் கடவுளது படைப்பின் உன்னத அம்சமென்றே நான் கருதுகிறேன்."

இவ்வாறு எண்ணமிட்டுக்கொண்டே வானத்து மினிலங்களை நோக்கி இமைகளை உயர்த்தினேன்; அவற்றின் மத்தியில் நின்று தன் செவ்விதழ்களில் குறுநகை தவழ, "நான் தீண்டப்படாத சாதி தாத்தா!" என்று என்னிடம் சீதா கூறுவதுபோல் இருந்தது.

அடுத்தநாள் சாயங்காலத்திலிருந்து நானும் சீதாவும் நெருங்கிய சிநேகிதர்களாகிவிட்டோம். கவை காணாத ஓர்

இளம் கொடிக்குப் புதியதாக அருகில் ஒரு பட்டுப்போன கிளை அகப்பட்டதுபோல நான் அவளுக்குக் கிடைத்தேன். அவளது மாசற்ற குழந்தையன்பைப் பெற்ற இன்பத்தால் என்னுடைய தளர்ந்துபோன உடலில் மீண்டும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது.

தினந்தோறும் என்னிடம் கேட்பதற்கென்றே சீதா விதம்விதமான கேள்விகளைத் தயார் செய்துகொண்டு வருவாள். நானும் எனக்கு எட்டிய உலக ஞானத்திற்குத் தகுந்தாற்போல் அவளுக்குப் பதில் சொல்லி அவளுடைய சந்தேகங்களைத் தீர்த்துவைப்பேன்.

சீதாவிடமும் நான் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் எவ்வளவோ இருந்தன. அவற்றை அப்போதைக்கப்போது சிறிது சிறிதாகக் கேட்டுத் தெரிந்துகொண்டு வந்தேன். இல்லாவிட்டால் மேல் துண்டை எடுக்காமல், பெரியதனக்கார ஐயர் வீட்டுக் கொல்லைப்புறம் சென்றதற்கு அவளுடைய தகப்பன் கசையடி பட்ட கதையும் இன்னும் அதைப்போல அநேக விபரீத சம்பவங்களும் எனக்கு எங்கே தெரியப்போகின்றன?

"சரி தாத்தா! சாயந்தர வேளையில் நாங்கள் வயல் காட்டில் வேலை செய்துகொண்டிருக்கும்போது, அதோ அந்தக் கோவிலிலிருந்து மணியோசை கேட்கிறதே, அப்போது எங்களுடைய உடம்பெல்லாம் என்ன மாதிரி புல்லரிக்கிறது தெரியுமா! அவ்வளவு தூரத்திலிருந்து அதைக் கேட்கும் எங்களுக்கே அப்படி இருந்தால், அங்கே போய் நேரே சாமியைப் பார்த்துக் கும்பிடுகிறவர்களுக்கு எவ்வளவு ஆனந்தமாக இருக்காது!"

இவ்விதமான கேள்விகளின்போது என்னையறியாது துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டுவரும்.

"இல்லையம்மா! அங்கே போய்த் தரிசிக்கும் ஜனங்களில் அனேகம் பேருக்கு உனக்கு இருக்கும் பக்தி கூடக்

கிடையாது. கடவுள் அதற்காகத்தான் அவர்களை யெல்லாம் விட்டுவிட்டு உன் போன்றவர்களுக்காகத் தம் அன்பை அந்த மணியோசையின் வாயிலாக இந்தப் பக்க மெல்லாம் அனுப்புகிறார்" என்று அவளைச் சாந்தப்படுத்த முயல்வேன். ஆனால் என் மனச் சாட்சியின் எதிரே அவளுடைய கேள்வி அப்படியே பதிலளிக்காமல் நின்று விடும்.

2

இன்றைக்குச் சீதா குளத்தங்கரைக்கு வரும்போது தன் மண்குடம் நிறைய மல்லிகைப் பூ கொண்டு வந்திருந்தாள்.

"ஏது இந்தப் புஷ்பம்?" என்றேன்.

"வீட்டுக் கொல்லையில் பதியம் போட்டு இப்போது தான் மலர ஆரம்பித்திருக்கிறது. இனிமேல் பூவுக்குக் குறைவில்லை."

குடத்தில் இருந்த உதிரி மலர்களைக் கீழே கொட்டி அத்துடன் தான் நனைத்துக் கொண்டுவந்திருந்த ஒரு வாழை நார்ச்சுருளையும் எடுத்துப் போட்டாள்.

"என் தாத்தா, உங்களுக்குப் பூக்கட்டத் தெரியுமா?'

"ஓ! நன்றாகத் தெரியுமே!"

"அப்படியானால் எனக்கும் தெரியும்!"

இருவரும் சிரித்துக்கொண்டே பூத் தொடுத்து இரண்டு சிறிய பூமாலைகள் கட்டிவிட்டோம்.

"இந்தாருங்கள் தாத்தா, இந்தப் பூவையெல்லாம் அந்தக் கணபதிக்கே போடுங்கள் - இதுமட்டும் எனக்குப் போதும்" என்று தனக்குக் கொஞ்சம் பூவை எடுத்துக் கொண்டு மீதியை என்னிடம் கொடுத்தாள்.

"ஏன், நீயே வந்து உன் கையாலேயே விநாயகருக்கு மாலே போடுகிறதுதானே?"

"ஐயையோ! சாமி கண்ணைக் கெடுத்துவிடாதா?" என்று கண்விழிகளை உருட்டி விழித்து ஆச்சரியத்தோடு வாயைப் பொத்திக்கொண்டாள்.

"நீதான் போடவேண்டும். உன் கையால் மாலே போட்டால்தான் அந்த விநாயகர் ஏற்றுக்கொள்வார்" என்று சிறிது நேரம் பிடிவாதம் பிடித்த பிறகுதான் அவளுக்குத் தைரியம் பிறந்தது.

"சாமி! நான் செய்கிறது பாவமாக இருந்தால் அதற்காக என்னையும் தாத்தாவையும் மன்னித்துவிடு" என்று சொல்லிக்கொண்டே மாலேகளை அதன் கழுத்தில் சுற்றிவிட்டு விழுந்து விழுந்து நமஸ்கரித்தாள்.

அதற்கு அடுத்த நாள் அரச மரத்தடிக்கு வந்து பார்த்தபோது அங்கே சீதா காணப்படவில்லே. அவளு டைய மண் குடம் மாத்திரம் அங்கே கவிழ்த்து வைக்கப் பட்டிருந்தது. சுற்று முற்றும் பார்த்துவிட்டு விநாயகரை நோக்கினேன். சுமக்க முடியாத புஷ்பக் குவியலுக்கு மத்தியில் அகப்பட்டு அவர் திணறிக்கொண்டிருந்தார்! மல்லிகை ஆரத்தோடு அல்லாமல் ஆவாரை, கொன்றை, தங்க அரளி முதலிய புஷ்பங்கள் அவரைச் சூழ்ந்திருந்தன.

திரும்பிப் பார்த்தேன்; என் பின்னுல் தன்னுடைய மார்பு மறையும் படியாக ஒணுங் கொடியில் மலர்ந்த அழகிய மலர்க் கொத்துக்களை இரண்டு கரங்களாலும் பற்றிக்கொண்டு வனதேவதைபோல் வந்து நின்ருள் சீதா.

'அடி பைத்தியக்காரப் பெண்ணே!' என்று எனக்குள் நினைத்துக்கொண்டு, "இது என்ன சீதா வேஷம்?" என்றேன் புன்சிரிப்புடன்.

" இதுவா ? - இதுதான் நேற்று நீங்கள் சொல்லிக் கொடுத்த வேஷம் !" என்று குறும்புத்தனமாகப் பதில் அளித்துவிட்டு, விக்கிரகத்தின் எதிரே அமர்ந்து, அதை அழகுபடுத்தும் வேலையில் தீவிரமாக ஈடுபட்டாள்.

3

முதல் முதலாகச் சீதாவைச் சந்தித்து இப்போது எவ்வளவோ மாதங்கள் ஆகிவிட்டன. இந்த மாதங்களின் நாட்களெல்லாம் எனக்கு முன்போல அவ்வளவு உயிரற்றனவாகவோ உணர்ச்சியற்றனவாகவோ இருக்கவில்லை; மிகவும் வேகமாகச் சுழன்று செல்லும் வெள்ளப் பெருக்காகத்தான் இருந்தன.

இந்தக் கடைசிக் காலச் சுறுசுறுப்பும் புத்துணர்வும், அணைந்து போகுமுன் சுடர்விட்டுப் பிரகாசிக்கும் தீபத்தின் ஒளிபோல, வருங்காலத்தில் விரைவோடு காத்து நிற்கும் மரணத்தின் அறிகுறி என்று நான் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தேன். ஆனால் அதைப்பற்றிக் கவலை கொள்வதற்கோ, விசனப்படுவதற்கோ எனக்குச் சீதாவின் நட்பு, போதிய அவகாசம் அளிக்கவில்லை.

என்றைக்குமில்லாதபடி அன்று என் உடம்பை என்னவோ செய்தது; மனமும் அத்துடன் ஒன்று சேர்ந்து இன்னதென்று தெரியாத ஒரு விஷயத்திற்காகக் குழம்பிக் கொண்டிருந்தது.

காரணம் என்னவாக இருந்தாலும் எனக்காக அந்த அரசமரத்தடியில் காத்து நிற்கும் சீதாவின் முகத்தைப் போய்ப் பார்த்து வருவோம் என்ற எண்ணத்தோடு பாதரட்சைகளை மாட்டிக்கொண்டு பள்ளன்குளத்துப் பக்கம் கிளம்பினேன். வெயில் இன்னும் தணிந்த பாடில்லை; என் அவசரத்தால் வழக்கத்திற்கு விரோத

மாகச் சற்று முன்னதாகவே வந்துவிட்டேன். உட்காருகிற இடத்தில் இன்னும் நிழல் வராததால் நின்றுகொண்டே அங்குமிங்கும் கவனமில்லாமல் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தேன்.

எதிரே தெரிந்த குளத்து நீர்ப்பரப்பின் மத்தியில் தாமரை இலைகளினூடே இன்று ஒரு புதிய அதிசயம் முளைத்திருந்தது; ஆச்சரியத்துடன் கவனித்தேன். ஈட்டி போலக் கூர்மையாகவும், வண்ணக் குமிழ்போல் வனப்பாகவும் ஒரு சிறு தாமரை மொட்டு அங்கே தலைதூக்கி நின்றது. சுற்றிலும் தாமரை இலைகளில் நீர்த்திவலைகள் வைரமணிகள்போல் உருண்டுகொண்டிருந்த அழகும், அவ்வழகுக்குச் சிகரம் வைத்தாற்போல் அரும்பி நின்ற மலர்மொட்டும் என்னுள்ளே எண்ணற்ற எண்ணங்களை நிரப்பின.

"இருக்கட்டும்! இந்த மொட்டு நன்றாக விரிந்து மலர்ந்தவுடன் இதைச் சீதாவிடம் காண்பித்து, 'இதோ பார், உன்னுடைய முகத்தின் பிரதிபிம்பம் இந்தப் பள்ளன்குளத்து நீரில் தாமரையாக மலர்ந்திருக்கிறது' என்று சொல்லுவோம்" என்ற கற்பனையோடு கீழே உட்கார்ந்தேன்.

கொஞ்சங்கூடச் சந்தடி செய்யாமல் என் எதிரே வந்து உட்கார்ந்தாள் சீதா. அவளுடைய தலை என்னை நோக்கிப் பாராமல் குனிந்தவண்ணம் இருந்தது. ஒரு கரத்தைக் கீழே ஊன்றிக்கொண்டு மற்றொரு கரத்தால் மண்ணில் கோடு கிழித்துக்கொண்டிருந்தாள்.

ஐந்து நிமிஷமாகியும் தலை நிமிரவே இல்லை.

"என்ன சீதா, ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?"

ஒன்றும் பதில் வரவில்லை.

"சீதா! - இதோ பார்!"

"ஒன்றுமில்லை தாத்தா......" அவளுடைய குரல் தழுதழுத்தது.

"இதோ, என்னைப் பார்; ஏன் அழுகிறாய்?"- அவளது முகத்தை மெதுவாக மேலே உயர்த்தினேன்.

கண்களினின்று பொங்கிய கண்ணீர் என்னுடைய கரத்தை நனைத்தது; அத்துடன் அவள் சிரித்துக் கொண்டே என்னைப் பார்க்க வெட்கப்படுபவள்போல் வேறு பக்கம் திரும்பி நோக்கினாள்.

"என்ன சீதா! என்ன இது? - அழுகிறாயா, எனக்கு ஒன்றுமே புரியவில்லையே!"

"இல்லை... ..வந்து..."

"சொல்லேன்! என்னிடம் சொல்வதற்கா உனக்கு வெட்கம்?"

"வருகிற வெள்ளிக்கிழமை...... ..எனக்கு...... . க...லி...யா...ணம்."

"அசட்டுப் பெண்ணே! - யாரேனும் இதற்காக வருத்தப்படுவார் உண்டோ!"

"இல்லை, தாத்தா. நாளையிலிருந்து......உங்களைப்...... பார்க்க முடியாது......"

பிரிவின் சோகத்தைத் தாங்க முடியாமல் விம்ம ஆரம்பித்தாள்.

என் கண்முன் உலகமே இருண்டு வருவது போல் தோன்றியது. மௌனத்தோடு அவளை இமை கொட்டாமல் பார்த்த வண்ணமாகவே உட்கார்ந்தேன். நாழிகை சென்றதே தெரியவில்லை. சூரியன் தன் பொன் னொளியைச் சுருக்கிக்கொண்டு மேற்கே வான முகட்டில் தெரிந்த மலை வாயில் விழுந்துகொண்டிருந்தான்.

கடைசியாகச் சீதா குளத்திற்குள் இறங்கி நீரெடுத்துக்கொண்டுவந்து கரையில் வைத்துவிட்டு என்

கால்களில் விழுந்து நமஸ்கரித்தவாறே அவற்றைத் தன்னுடைய கண்ணீர் அருவியால் கழுவினாள்.

"போய் வருகிறேன் தாத்தா......"

தடுமாற்றத்துடன் அவள் குரல் எங்கேயோ மைல்களுக்கு அப்பாலிருந்து பேசுவதுபோல் ஒலித்தது.

"போய் வா சீதா! சகல பாக்கியமும் பெற்று உன் கணவனுடன் சுகமாயிரு!"-என்று பதறும் நெஞ்சத்தோடு அவளுக்கு விடை கொடுத்தேன்.

கணத்திற்கொரு முறை திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே தன் முன்றானையால் கண்களைத் துடைத்தவாறு மெதுவாக ஊர்ந்து சென்று செடி கொடிகளின் மத்தியில் மறைந்தாள்.

இன்றைக்கு வெள்ளிக்கிழமை; என்னுடைய தேகபலத்தை யெல்லாம் ஒன்றுசேர்த்துக்கொண்டு தள்ளாடித் தள்ளாடிப் பள்ளன் குளத்துக்கரைக்கு வந்துசேர்ந்தேன்.

எதிரே முதல் நாள் அவள் எனக்குத் தன்னுடைய சிறு கரத்தால் காண்பித்த சேரியிலிருந்து கொம்பு வாத்தியத்தின் சுழலொலியும், ஜால்ராவின் நாதமும் ஒன்று சேர்ந்து மங்களகரமான ஓசையோடு ஆகாய மார்க்கமாய் அந்தப் பிராந்தியம் பூராவும் பரவியது.

நான் சீதாவுக்காக என் சொத்து முழுவதையும் எழுதிவைத்திருந்த அந்த உயிலை அங்கிருந்த விநாயகரின் முன் ஒருமுறை மெதுவாகப் படித்தேன். அந்த விநாயகரும், அவரருகில் நின்ற அரச மரமும், ஏன் – அந்தப் பள்ளன் குளத்துத் தெளிந்த தண்ணீர்கூட என்னுடன் சேர்ந்து பெருமூச்சு விடுவதுபோல் தோன்றியது.

கடைசித் தடவையாக - ஆம் அதன் பிறகு மீண்டும் இந்த உயிரோடு இந்த இடத்திற்கு வர முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை-குளத்தை உற்றுப் பார்த்தேன்.

அன்றைக்கு அரும்பியிருந்த அம்மொட்டு இன்று கட்டவிழ்ந்து இதழ் விரித்துப் பெரிய மலராக மலர்ந்திருந்தது. அந்த மலரை நாடி எங்கிருந்தோ ஒரு வண்டு வந்து ரீங்காரமிட்டுக்கொண்டே அதைச் சுற்றி வட்டமிட்டது. ஆம், மலர் மலர்ந்தது; வண்டும் வந்தது.

17

தெரியுமா?

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸுக்குப் பேசுவதற்கு வாயோ, சிந்துவதற்குக் கண்ணீரோ, இரக்கப்படுவதற்கு இருதயமோ இருந்தால், ஒருவேளை அது தன் சென்னைத் தோழர்களிடம் தன் திருவாங்கூர்ப் பிரயாண அனுபவத்தைச் சொல்லிவிட்டு ஒரு மூச்சு அழுது ஓய்ந்திருக்கும். ஆனால் அதிருஷ்ட வசமோ, துரதிருஷ்ட வசமோ அதற்கு அந்தமாதிரி வசதிகளெல்லாம் கிடையாது.

செங்கோட்டையில் எக்ஸ்பிரஸுக்கென்று காத்திருக்கும் 'சோடா, லெமனேட்' காரர்கள், 'கரம் சாயா'க் காரர்களைத் தவிர, இன்னும் பல முக்கியமான தோழர்களும் அதற்கு உண்டு. அவர்களில் ஒருவன்தான் கோஷி.

கோஷிக்கு வயசு பத்துக்கு மேல் இருக்கும்; அவன் அந்தப் பக்கத்தைச் சேர்ந்தவன்தான். இரண்டு மூன்று வருஷமாய் அவனுக்குச் செங்கோட்டை ஜங்ஷன் வாசஸ்தலமாய் உபயோகப்பட்டு வருகிறது. சோறும் புகலிடமும் அவனுக்கு அதே இடத்தில்தான்.

மத்தியான்ன நேரத்தில் அங்கு வரும் எக்ஸ்பிரஸ், அதற்காகக் காத்திருக்கும் நாய்கள், காக்கைக் கூட்டம், இன்னும் அவனைப் போன்ற மற்றப் பிச்சைக்காரர்கள்

இவர்களையெல்லாம் அவனுக்கு நன்ருய்த் தெரியும். இவர்கள் அவனுடைய நண்பர்களுங் கூட ; - ஆம், பிச்சை எடுக்கும் நேரத்தில் மட்டும் இந்த நட்புக்குச் சற்று விதி விலக்கு உண்டு!

2

இதோ பாருங்கள், இவன்தான் கோஷி: இடுப்பில் ஒரு சுத்தமான கிழிசல் வெள்ளைத் துண்டு; எண்ணெய் என்ருலே என்னவென்று கேட்கும் பரட்டைத்தலை; கையில் குவளை ஒன்று.

"ஸாரே! ஸாரே! வெள்ளம் வேணுமோ ஸாரே?"- ரயில் வண்டியில் மூட்டைப் பூச்சிகள்போல் அடைந்து கிடக்கும் பட்டணத்துக்காரர்களைக் கேட்கிருன் கோஷி. அவர்களுக்கோ இவனைக் கண்டது தெய்வ தரிசனமாக இருக்கிறது.

"டே, பொடியா! எங்கே, ஓடிப்போய்க், கொஞ்சம் கொண்டுவா!"

சற்று நேரத்திற்குள் அருகில் இருக்கும் குழாயில் போய்த் தன் குவளையைத் தண்ணீரால் நிரப்பிக்கொண்டு திரும்புகிருன். அதற்குப் பதிலாக அவர்கள் அவிழ்த்துச் சாப்பிடத் தொடங்கும் சோற்று மூட்டையிலிருந்து ஒரு கவளம் சோறு கிடைக்கிறது. அதுவும் தீர்ந்தவுடன் அவர்கள் கீழே எறியும் எச்சில் இலைக்காகக் காத்திருந்து, அதற்காக (நண்பர்களுடன்) உரிமைப் போராடி, கடைசியில் அதை எடுத்துக்கொண்டு மரத்தடிக்கு ஓடுகிருன்.

ஏதேனும் அந்த இலையில் கொஞ்ச நஞ்சம் மிகுந்திருந்தால் உண்டு; இல்லையேல் பட்டாளத்துப் பசிக்கே பாகிகூடக் கட்டிவராத உணவாக இருந்தால், அந்த

இலையை வெறுப்போடு பார்த்துவிட்டுத் தன்னைப் பின் தொடரும் நாய்களிடம் அதை வீசுகிறான்.

இது அவன் தினசரி நாடகம்.

3

மனிதன் புலியையும், சிங்கத்தையும் நாளடைவில் பழக்கித் தனக்கு மண்டியிடச் செய்கிறான். ஆனால் பசி? நாளுக்கு நாள் அவன் அதனிடம் மண்டியிடவேண்டியது தான்.

கோவலி ஒரு நாள் முழுப்பட்டினி; ஒரு பிடிச் சோறு கூடக் கிடைக்கவில்லை. அதற்கு அடுத்த நாளும் அநேகமாக அப்படித்தான்; எச்சில் இலைகளையும் குழாய்த் தண்ணீரையும் கொண்டு தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்ள முயன்றான்.

மூன்றாவது நாள்: அந்தப் பாழாய்ப்போன நாளும், அதற்கு முந்திய நாட்களைப்போலவேயா விடியவேண்டும்?

செங்கோட்டை அவனுக்கு வெறுத்துவிட்டது. அந்த ஜங்ஷனையும், அங்கே கூடியிருந்த ஜனங்களையும் ஒருமுறை வெறுப்போடு பார்த்தான். மேலே 'கா, கா' என்று கூச்சலிட்டுக்கொண்டு காக்கைக் கூட்டமொன்று தன் சகாக்களுடன் எங்கோ கிடைக்கப் போகும் விருந்தை எதிர்பார்த்துப் பறந்தது. அவனும் ஒரு காக்கையாய்த் தான் பிறந்தானா; கூட்டத்தோடு கூட்டமாய்ப் பறந்து சென்று கிடைத்ததைப் பகிர்ந்துகொள்ள? அல்லது, இந்த நன்றி கெட்ட பணக்கார உலகத்திற்குத்தான் காக்கைக்கு இருக்கும் கருணையில் கால்வாசிப் பங்கேனும் இருக்கிறதா?

ஒரு வழியும் இன்றி, தயாராய்த் திருவனந்தபுரம் கிளம்பிக்கொண்டிருந்த ரெயிலில் போய்த் தொத்திக் கொண்டான். ரெயிலும் ஊதிக்கொண்டு நகர்ந்தது.

4

"ஐயாவுக்கு ரெயில் பிரயாணம் இல்லாமல் சரிப் படல்லையோ?—ஏண்டா, செங்கோட்டையிலேயே உன்னை எத்தனை தரம் ரெயிலடிக்கு வராதேன்று விரட்டியிருக்கி றேன்; காலிப்பயல்!"

டிக்கட் பரிசோதகனின் கையில் அகப்பட்டு, கோவி யின் காது படாத பாடு பட்டது. நல்ல வேளை, அது பிய்ந்துகொண்டு ரத்தம் பெருகுவதற்குள் கோவியின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளினான் அவன். அப்போது வண்டி மணிக்கு ஒண்ணேமுக்கால் மைல் வேகத்தில், மூச்சுத் திணறியபடி மலையைச் சுற்றி ஏறிக் கொண்டிருந்தது.

கீழே விழுந்த வலி தீர்ந்தவுடன் கோவி எழுந்து பார்த்தான். வண்டி தூரத்தில் போய்விட்டது. மெது வாய் நடக்க ஆரம்பித்தான். பாதையின் ஒரு பக்கத்தில் கிடுகிடு பாதாளம். அந்தப் பள்ளத்தாக்கில் எத்தனையோ விதமான செடி கொடிகள் அடர்ந்து ஒன்றுடன் ஒன்று பின்னிக்கொண்டிருந்தன. அவைகளில் ஒன்றும் செழிப் பைக் காணவில்லை; எல்லாம் வாடிப்போய்க் கருகும் நிலை யில் இருந்தன. மற்றொரு பக்கத்தில் உயர்ந்த மலை; அதன் உச்சியிலும் அதைப்போன்ற காடுகளே.

காலம் கோடைக்காலம்; பொழுது உச்சிப் பொழுது. சூரியன் தலைக்கு நேரே இருந்து அவனைத் தொடர்ந்து கொண்டே வந்தான்.

நோயின் தற்கால சாந்திக்காகச் சில வைத்தியர்கள் ஏதாவது மருந்தை எப்போதும் கைவசம் வைத்திருப் பார்கள். கோவியும் அதைப்போலப் பசிக்கு மாற்றாகச் சமய சஞ்சீவியாய்க் குளிர்ந்த ஜலத்தை வைத்திருந்தான்.

பசித் தொந்தரவுக்குப் பத்து நிமிஷமாவது பதில் சொல்லு மல்லவா?

இப்போது அவன் குவளையில் தண்ணீரும் கிடையாது. கோடைக்காலமாக இல்லாவிட்டால் அந்தப் பிரதேசத்தில் கொஞ்சமும் தண்ணீருக்குத் தட்டில்லை. மலைப் பிளவு களிலிருந்து கசிந்து நீர் சிறு சிறு வாய்க்கால்களாய் ஓடிக் கொண்டிருக்கும்.

அவன் வயிற்றைப்போலவே வறண்டு கிடந்தது சுற்று வெளி. அவன் மூச்சைப்போலவே அனலைப் பரப்பியது காற்று. அவைகளினூடே அவன் நடந்தான்.

5

சோற்றைக் காணமல் சுருங்கிய வயிறு; தண்ணீரைக் காணமல் தவிப்படங்கா நாக்கு; இவற்றுடன் அவன் மெல்ல மெல்ல நடந்து பக்கத்து ரெயில்வே ஸ்டேஷனை அடைந்தான். ஸ்டேஷன் மிகச் சிறியது. அதிலிருந்து ஊர் வெகு தூரம்.

ஸ்டேஷனுக்குப் பக்கத்தில் வீடுகள் ஒன்றும் கிடையாது. ரெயில்வே சிப்பந்திகளின் வீடுகள்கூட காணப்பட வில்லை. இந்த நிலைமையில் அவன் அந்த ஸ்டேஷனின் ஓரத்தில் தண்ணீர்க் குழாயைக் கண்டதும், வெகு ஆவலோடு, தன் பலமத்தனையும் சேர்த்துக்கொண்டு அதன் அருகில் சென்றான்.

குழாயில் தண்ணீர் இருந்தது. ஆனால் அது சுலப மாகத் திருக வரவில்லை. பசி நோயால் படபடக்கும் கோவியின் கைவிரல்களுக்கு அந்த வலுவேது?

குழாயருகில், மரத்தடியில் கவலையற்றுத் தூங்கும் போர்ட்டரை அதற்காக எழுப்பலாமா என்றுகூட அவனுக்கு ஆசை. ஆனால் போர்ட்டரின் கையில் அந்தத் தூக்கத்திலும் மறவாமல் பிடிபட்டிருக்கும் ஒரு மூங்கிற்

குச்சியைக் கண்டதும், அவன் மனமும் முதுகும் அதற்குத் தயாராயில்லை.

பிரயாணிகள் ஒருவர்கூட அன்றைக்குக் காணவில்லை. அவன் அதிருஷ்டம் அப்படி.. அதே குழாயருகில் சோர்ந்து போய் உட்கார்ந்தான். அவன் நெஞ்சில் கடைசியாக ஒரு நம்பிக்கை.

சீக்கிரம் அந்த ஸ்டேஷனுக்கு ஒரு ரயில் வரும். வந்து சிறிது நேரம் நிற்கும். அப்படி நிற்கும் ரெயிலிலிருந்து யாரேனும் தண்ணீர் குடிக்க வரமாட்டார்களா? அவர்களின் உதவி சற்று அவனுக்குக் கிடைக்காதா? இதுவும் ஸ்திரமற்ற நம்பிக்கைதான். நிச்சயம் யாரும் வருவார்கள் என்று சொல்ல முடியாதே.

6

ரெயிலும் வந்தது. ஓர் ஆளும் இறங்கி வந்தார். அவர் கையில் ஒரு வெள்ளிக் கூஜா. தம்முடைய பருமனை உடலைச் சுமந்துகொண்டு மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்கக் குழாயை நோக்கி ஓடிவந்தார்.

அவரது கரஸ்பரிசம் கண்டு நடுங்கியது இரும்புக் குழாய்; தண்ணீர் மடமடவென்று கொட்டியது. கூஜா நிரம்பும் சமயம்...

"ஸாரே! ரொம்பத் தாகம்; கொஞ்சம் வெள்ளம் ஸாரே!" - இரு கைகளையும் தன் வாயருகில் வைத்துக் கொண்டு, குனிந்த வண்ணம் கெஞ்சும் கண்களால் அந்த மனிதரைப் பார்த்தான்.

அவ்வளவுதான், வந்தது கோபம் அவருக்கு. எப்படி இவன் அவசரம் தெரியாமல் அவரிடம் போய்க் கேட்கலாம்!

"இந்த ரெயில் உனக்குத் தவறிவிடப் போகிறதோ? கேலியா செய்கிறாய்? - தடிப்பயல்!"

பாவம்! கோபம் தாங்காத பிரகிருதி. குபீரென்று எடுத்த நீரை அவன் தலையில் சாய்த்துவிட்டு, மறுமுறை பிடித்துக்கொண்டு ரெயிலில் பாய்ந்தார். அவசரத்தை உணர்ந்தவர் அல்லவா?

புலம்பிக்கொண்டே ரெயில் புறப்பட்டது. கோவிந்தன் அருகில் நின்று, தனக்காகச் சொட்டுச் சொட்டாய்க் கண்ணீர் வடிக்கும் குமாரையைத் தீனமாய்ப் பார்த்தான். அவனை அறியாமல் அவன் கண்கள் நீரைக் கக்கின. அந்தக் கண்ணீராவது உருண்டு வந்து அவன் உதட்டை நனைத்ததா? இல்லை. - இரண்டு நாட்களுக்குப் பிறகு அவன் செத்தே போனான்.

அவன் பட்டினியால் செத்த செய்தி எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை. ஏனென்றால், வங்காளத்தில் லக்ஷக்கணக்கில் செத்துக்கொண்டிருந்தவர்களைப் பற்றியே பிரசுரிக்க அவைகளில் இடமில்லாதிருந்தது.

18

மேக சஞ்சாரம்

அழகான ஒரு மாலைப் பொழுதிலே, இரண்டு மேகங்கள் ஆணும் பெண்ணுமாய் அடிவானத்தை விட்டு மேலே எழும்பி வந்தன. அப்போதுதான் கல்யாணமான புதுத் தம்பதிகள் போலும்!

பெண்மேகம் தன் உடலில் கதிரவனின் ஏழு நிறங்களாலான வானவில் சிற்றாடை உடுத்திருந்தது. ஆண் மேகமோ பளபளக்கும் பொன்னொளியாலான ஜரிகைக் கரை வஸ்திரங்களால் தன்னை அலங்கரித்திருந்தது.

இரண்டும் ஒளி படர்ந்த ஆகாய வீதியில் உல்லாசமாய்ப் பவனி வந்தன.

பெண் மேகம் சொல்லியது :

" இதோ! கீழே பாருங்கள், வஸந்தத்தின் வரவால் பூவுலகின் உள்ளம் எவ்வளவு தூரம் மலர்ந்திருக்கிறதென்று! ஓடும் நதியிடையே ஒய்யாரம், உயரும் மலையுருவில் உற்சாகம், ஆடும் மரங்களூடே ஆனந்தம். ஆஹா! மாயாவி வஸந்தனின் இந்திர மகேந்திர ஜாலங்களைப் பார்த்தீர்களா?"

"சரிதான்! அவனுடைய ஜாலத்தில் பூவுலகம் மட்டுமா மயங்கிவிட்டது? நீயுங்கூட மயங்கிவிட்டாயே! இந்தக் கற்பனை பொங்கும் கவிதையெல்லாம் அந்தப் பொல்லாத வஸந்தனின் விஷமத்தனத்தினால் அல்லவா உன்னிடமிருந்து பொங்குகின்றன? இவற்றை இத்தனை நாள் எங்கே ஒளித்து வைத்திருந்தாய்? "

பெண் மேகத்தின் மென்மலர் வதனம் நாணத்தால் வேர்த்தது. இரு மேகங்களும் சிறிது நேரம் வாய் பேசாமல் ஊர்ந்தன. சுற்றுப் புறத்தின் மனமோகனப் புதுமை அவைகளுள்ளேயும் புகுந்து, பேச்சுக்குப் புறம்பான மௌன இன்பத்தை நிலவச் செய்தது. தென்றலால் உந்தப்பட்ட அவ்விரண்டும் லேசாக அங்கும் இங்கும் ஆடியவாறே மிதந்தன.

மீண்டும் பெண் மேகமே மௌனத்தைக் கலைத்தது :

"இப்படியே மிதந்து மெதுவாய்த் திரிகூட பர்வதம் - குற்றாலம் - போய் வரலாம், வருகிறீர்களா? "

"திரிகூட பர்வதம்!" - ஆண் மேகத்தின் தேகத்தில் புத்துணர்ச்சி பரவியது. "அந்தக் குற்றாலத்தைப் பற்றி நான் என் பாட்டியிடம் எத்தனை கதைகள் கேட்டிருக்கிறேன் தெரியுமா? ஆஹா! அந்த அழகான மலைக்

கூட்டம், அவற்றை மூடிக் கிடக்கும் நானாவித மரங்கள் அடர்ந்த காடுகள், அந்தக் காடுகளையும் குன்றுகளையும் வளைத்துக்கொண்டு தாவிக் குதித்துச் சிரித்து ஓடும் அருவிகள் ......"

ஆச்சரியத்தோடு இதைக் கேட்டுக்கொண்டு வந்தது பெண் மேகம். தன் வர்ணனையை மேலே தொடர்ந்தது ஆண்.

"அங்கே வசித்து வந்த வனவேடர்கள், சித்தர்கள், ஞானிகள், பக்தர்கள், இன்னும் கூட்டம் கூட்டமாய்ப் பறந்து செல்லும் எண்ணற்ற பக்ஷி ஜாலங்கள், கண் விரித்து மேலே நோக்கும் நறுமண மலர்கள். - ஆஹா!"

மாலை நேரம் மங்கியது. ஒளியும் இருளும் ஒன்றையொன்று தழுவிக்கொண்டன. கடைசியாக இருள் தன் வைரமணி நீல வண்ணப் போர்வையால் ஒளியைப் போர்த்தி உறங்க வைத்தது.

மேகங்கள் இரண்டும் சுவாரஸ்யமான சம்பாஷணையில் தங்களை மறந்து மேலே மேலே போய்க்கொண்டிருந்தன. பகல் இரவாகியதைப் பற்றியும், பூவுலகில் வஸந்தனின் கோலக் காட்சிகள் கண்ணுக்கு மறைந்ததைப் பற்றியும் அவை கவலை கொள்ளவே இல்லை. அவற்றின் கவனமெல்லாம் இப்போது குற்றாலத்தின் வரவை நோக்கி இருந்தது.

2

மத்தியான்னம் உச்சிப்பொழுது. சூரியன் தலைக்கு நேரே பிரகாசித்தான். மேகத் தம்பதிகள் குற்றாலத்தின் அருகே வந்துகொண்டிருந்தன. அவை அருகில் வர வர, அவைகளைப் போலவே குற்றாலத்தை நோக்கி இன்னும் வேறு மேகங்களும் கூட்டம் கூட்டமாய் வந்துகொண்

டிருந்தன. அந்தக் கூட்டங்களுள் இளைஞர், யுவதிகள், முதியோர், சிறுவர், சிறுமி எத்தனையோ விதம்.

இந்தத் தம்பதிகளைப் பார்த்து இளைஞர் கூட்டம், "என்ன அழகான சேர்க்கை!" என்று வியந்து கொண்டது. யுவதிகளின் கூட்டமோ, "இவர்களைப் பாருங்களேன், இத்தனை பேர் மத்தியில் கொஞ்சங்கூடக் கூச்சமில்லாமல் சிரித்து விளையாடிக்கொண்டு போவதை!" என்று உள்ளுக்குள் பொருமைப் பட்டுக்கொண்டது. பொதுவாக எல்லா முகில்களுமே ஒரு கணம் தம் கண்ணோட்டத்தை இவற்றின் மேல் செலுத்தாமல் இல்லை.

வயசு சென்ற பாட்டி மேகமொன்று அருகிலே வந்து, "நீங்கள் எந்த ஊரிலிருந்து வருகிறீர்கள்? உங்களுக்கு எப்போது கல்யாணம் ஆயிற்று? குழந்தை குட்டிகள் இன்னும் பிறக்கவில்லையா?" என்று க்ஷேம சமாசாரம் விசாரித்தது. மற்றொரு கிழட்டு மேகமோ, "குழந்தை வரத்திற்காகத்தான் குற்றாலநாதனைத் தரிசிக்க வந்திருக்கிறார்கள்; இது தெரியவில்லையா உனக்கு?" என்று பரிகாசத் தொனியோடு அதற்குப் பதிலளித்தது. இவைகளின் கேள்விகளுக்கு விடை சொல்வதற்குள் பெண் மேகத்தின் பாடு போதும் போதுமென்று ஆகிவிட்டது. 'ஏன்டா இவர்கள் கண்ணில் பட்டோம்' என்று தோன்றியது.

ஒரு வழியாய்க் குற்றாலமும் சமீபித்துக்கொண்டே வந்தது. தம்பதிகளும் கண் இமைக்காமல் அந்தத் திக்கைப் பார்த்துக்கொண்டே வந்தன. மலைகள் தெரிந்தன; காடுகள் தெரிந்தன. மலர்களின் மணம் மனத்தை நிரப்பியது. அருவிகளின் ஓசை செவியில் பாய்ந்தது. பக்ஷிக் கூட்டங்கள் 'ஜிவ் ஜிவ்' என்று சிறகடித்துப் பறந்தன. குளிர்ந்து தவழ்ந்த தென்றல், தான் சுமந்து வந்த தேன் துளிகளை மேக தம்பதிகளின் கீழுதடுகளில்

படியவிட்டு வரவேற்றது. இன்னும் என்ன என்னவோ அற்புதக் காட்சிகளெல்லாம் தோன்றின. - ஆனால்?

ஆண்மேகம் ஊன்றிக் கவனித்தது. அதன் முகத்தில் சந்தேக ரேகைகள் படர்ந்தன. அந்த இடத்தைச் சுற்றியுள்ள சமவெளியில் அதன் பார்வை கூர்மையுடன் ஊடுருவியது. அங்கே புதிது புதிதாக முளைத்திருந்த பங்களாக்களும், அவற்றைச் சூழ்ந்திருந்த பூந்தோட்டங்களும் இப்போது அங்கே தெளிவாகத் தெரிந்தன.

பெருத்த ஏமாற்றத்தில் அது மூழ்கியது. அதன் நெற்றியில் 'ஆனால்?' என்ற வார்த்தைக்குப்பின் இருக்கும் கேள்விக் குறிபோல் ஒரு சுருக்கம் தோன்றியது.

3

ஆனால்......?

அந்த மேகம் நினைத்தது: சுதந்தரக் காற்றைச் சுவாசித்துக் கட்டற்ற காளையர்களாய்த் திரியும் வன வேடர்கள் எங்கே? ஐம்புலன்களையும் வென்று, வெற்றியொளி முகத்தில் ஒளிர, நிகரற்ற மன வலியோடு நடமாடும் ஞானிகள் எங்கே? அற்புத அற்புதமான திருவிளையாடல்கள் செய்து, உலகத்தின் போலி வேஷதாரிக் கூட்டத்தை நகைத்துப் புடைக்கும் சித்தர் குழு எங்கே? மாசற்ற பக்தியுடன் பரமனைப் பாமாலையாலும் பூமாலையாலும் பூசித்து, அன்பு வெறியால் மெய்ம்மறந்து நடமாடும் பக்த சிரோமணிகள் எங்கே? முள்ளையும் கல்லையும் பாராது வனமெல்லாம் சுற்றியலைந்து நல்மூலிகை கொண்டுவந்து மாந்தரின் உடற் பிணி போக்கும் கர்ம யோகியர்கள் எங்கே? நம் மூதாதையர் காலத்துடன் இவர்களும் போய்விட்டனரா? இவர்களுக்குப் பதிலாகவா இங்கே இந்த மாளிகைவாசிகள்?

மாளிகை வாசிகளைப் பற்றி நினைத்தவுடன் ஆண் மேகத்தின் உடலெங்கும் தீப்பற்றி எரிவது போல இருந்தது. அவர்களுடைய ஆடம்பர வாழ்க்கையும் குடியும், கூத்துக்களும், சூதுவாதுகளும் அதற்கு ஏற்கனவே தெரிந்திருந்தன. அவர்களைப் போன்ற ஒரு சிறு கும்பல் உலகில் இருப்பதால் கோடிக் கணக்கான ஏழைகள் கோவணத் துணிகூட இல்லாமல் அனாதைகளாகத் தெருத் தெருவாய் அலைந்து திரிவதை அது பார்த்திருக்கிறது. அரை வயிற்றுக்குப் போதுமான கஞ்சி இல்லாதபோது அந்த ஏழைகள் போட்ட அழுகுரல் வானில் எழும்பி அதன் காதுகளில் சுழன்றிருக்கிறது. ஆதலால் அதற்கு இப்போது என்ன செய்வதென்று தோன்றவில்லை.

"பணக்காரர்களின் வாசஸ்தலமா இன்றைக் குற்றாலம்?" என்று ஒரு முறை உறுமிவிட்டு, சற்றுத் தன்னைச் சாந்தப்படுத்திக்கொண்ட பிறபு, "அன்பே!" என்று தன் துணைவியை அழைத்தது.

"ஏன்?" என்றது இன்குரலால் பெண்.

"உண்மை அறியாத நம் சாதியினர் வருஷந்தோறும் கோடைக் காலத்தில் இங்கே வந்து மழை பொழிகிறார்கள்; அருவியில் நீரை நிரப்புகிறார்கள். அதை யார் அநுபவிக்கிறார்கள் என்று அவர்கள் கவனிப்பதில்லை; அதனால் சுகமடைகிறவர்களைப் பற்றியும் அவர்களுக்கு அக்கறை இல்லை. அவர்கள் செய்யும் பிழையையே நாமும் செய்யவேண்டாம். நமக்கு வேறு இடத்தில் வேலை இருக்கிறது. வா, போகலாம்" என்றது.

மகிழ்ச்சியுடன் கணவனைப் பின்பற்றியது மனைவி. இரு மேகங்களும் சஞ்சலத்துடன் திரும்புவதை மற்ற எல்லா மேகங்களும் கவனித்தன. அதன் காரணத்தையும் தெரிந்துகொண்டன. இத்தனை காலமாய்த் தாங்கள் செய்துவந்த பிழைக்காக வருந்தி, உடனே யாவும் ஒன்று

சேர்ந்து அந்த இளந் தம்பதிகளைப் பின் தொடர்ந்து சென்றன.

திரண்டெழுந்த கார்முகிற் கூட்டத்திற்குத் தலைமை வகித்தது அந்த இள மேகம். காடும், மலையும், வன வனாந்தரங்களும் தாண்டி அந்த முகில்களை அழைத்துச் சென்றது. பெரிய பெரிய பட்டணங்களிலே, பாட்டாளி மக்கள் யந்திர சாலைகளில் யந்திரம் போலப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களின் பெருமூச்சுக்களைக் கரிய புகையுடன் கலந்து வெளியே தள்ளிக்கொண்டிருந்தன புகைபோக்கிகள். அதற்கப்புறம் கிராமாந்தரங்களும், அவற்றிலுள்ள குடிசைகளும் தென்பட்டன. பாளம் பாளமாய் நீர் இல்லாமல் வெடித்துக் கிடந்த வயல் வெளிகளில் நின்று பஞ்சைக் குடியானவன் பரிதபித்தான். அவன் கண்கள் நிராசையோடும் ஏக்கத்தோடும் மேகத்திரளைப் பார்த்து வெறித்தன.

அவனைப் பார்த்துவிட்ட ஆண் மேகம் கீழ்க்கண்டவாறு கர்ஜித்தது :

"இதோ நாம் செய்யவேண்டிய கடமையை நமக்கு நினைப்பூட்டி நமக்காகக் காத்து நிற்கிறான் ஏழை. இது வரையில் நாம் உல்லாசப் பொழுது போக்குக்காக மழை பொழிந்தோம்; இனிமேல் உண்மை உழைப்பாளிக்காக மழை பொழிவோம்!"

அதனுடைய குரலில் இன்பம் ஒலித்தது; எழுச்சி குதித்தது. 'என்ன உயர்ந்த லக்ஷ்யம்!' என்ற ஞாபகந்தான் மேகங்களின் உள்ளத்தே பளிச்சிட்டது. உடனே எல்லா மேகங்களும் சந்தோஷ ஆரவாரம் செய்து மின்னல் மின்னின; இடி இடித்தன; அமுதப் பிரவாகம் பொழிந்தன. இதைக் கண்டு கோவணாண்டியான குடியானவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க வானை நோக்கிக்

கைகூப்பினான். ஆனால் அதே சமயத்தில் குற்றாலத்தில் கோடைக்காக வந்த கோடீசுவரன் ஒருவன், "இதென்ன இது? இந்த வருஷம் மழையே காணவில்லையே; மனிதன் வெந்து சாம்பலாய்ப் போய்விடுவான் போல இருக்கிறதே!" என்று முணுமுணுத்தான்.

19

நான்

இருள்; எங்கும் இருள்; ஒரே இருள்! - நான் பிறந்தேன்; அப்போதும் இருள். சிறு பிள்ளையாய் வளர்ந்தேன்; அப்போதும் இருள். இன்று யுவனாகி விட்டேன்; இன்றும் இருள்!

இந்தப் பொல்லாத இருளைப்பற்றி எனக்கு ஒரு சந்தேகம்: நான் பிறந்து வளர்ந்து, வாலிபனாகி விட்டேனே. என்னைச் சுற்றியுள்ள இந்த உலகம் முழுவதுமே இருள் மயமா? அல்லது, என் கண்கள்தாம் ஒளியிழந்துவிட்டனவா?

என் சந்தேகம் தீர்ந்தபாடில்லை.

உலகம் முழுவதுமே ஒருவேளை இருள்கடலில் மூழ்கியிருக்கலாம். அல்லது நானே குருடனாகவும் இருக்கலாம். இவை இரண்டுமே என் உண்மையாக இருக்கக்கூடாது? ஒளியற்ற உலகம்; அதில் ஒளியற்ற மனிதன்!

நான் இருளிலே தட்டுத் தடுமாறித் திரிந்தேன். கையில் ஒரு கோல் இல்லை. வழி நெடுகக் கிடந்த பள்ளம் படுகுழிகளில் விழுந்து மீண்டும் வெளியேறிச் செல்ல வகையறியாது தவித்தேன்.

பாதையில் குறுக்கிட்ட கருங்கற் பாறைகள் என்னை மோதிக் கீழே தள்ளின. உயிரற்று, உணர்வற்று, உடலிலும் உள்ளத்திலும் ரத்தம் சொட்ட தெருப் புழுதியில் சாய்ந்து கிடந்தேன். எழுந்து செல்லக் கரங்களை ஊன்றி முயன்றபோது அவை வலியிழந்து ஒடிந்தன. அருகில் ஏதேனும் பிடிப்பு அகப்படுமா எனத் துழாவினேன்; கைக்குக் கிடைத்தது ஒரு வஸ்து. ஆனால் அது ஒரு பாம்பு!

* * *

என் உலகத்தில் ஒரு மாறுதலைக் கண்டேன். அல்லது அது என் கண்களின் மாறுதலா என்றும் தெரியாது. எங்கு நோக்கிலும் சின்னஞ் சிறு ஒளிச் சுடர்கள் கூட்டங் கூட்டமாய்ப் பறந்து திரிந்தன. - ஏன், நானே அத்தகைய ஓர் ஒளிச் சுடராக மாறிவிட்டேன்! அப்போது எனக்கு எவ்வளவு ஆனந்தம் தெரியுமா?

ஒளித்திரள் கூட்டங் கூட்டமாய் வந்தன; கூட்டங் கூட்டமாய்ப் பறந்து திரிந்தன; கூட்டங் கூட்டமாய் அணைந்து மடிந்தன! ஆனால் ஓர் ஒளிச்சுடராவது அணையாமல் போவதை நான் பார்க்கவில்லை. - நானும் அப்படித் தானே! ஒரு நாள் யாருக்கும் ஓர் உபகாரமும் இன்றி அணைந்துவிடுவேன்?

இது எனக்குப் பிடிக்கவில்லை.

ஒளிச்சுடர் என்று என்னைப் பிரமாதப் படுத்திக் கொண்டேனே. அப்போது நான் யார் தெரியுமா? ஒரு மின்மினிப் பூச்சி! சாதாரண அற்பப் புழு!

அந்தப் புழுக்கள், அவைகளின் குறுகிய ஜீவிய காலத்திற்குள் என்ன பெருமையடித்துக்கொண்டன தெரியுமா? ஒவ்வொன்றும் தான்தான் உயர்ந்தது, தனக்குத்தான் உலகம், தன் கூட்டந்தான் வாழலாம் - அப்பா, அவை

பிறரிக்கொண்ட பிற்றல்! அதுமட்டுமா? அவைகளின் பொய்கள், பெருமைகள், பொருமைகள், போட்டிகள், போர்கள் -

மின்மினிப் பூச்சிகளின் ஒரு பகுதி மற்றப் பகுதிகளின் கொடுமைக்குள்ளாக்கப்பட்டது. ஒடுக்கப்பட்ட அவைகள் தங்கள் நிலைமை தாளாமல் அழுதன, ஓலமிட்டன, கதறின, கண்ணீர் வடித்தன.

"இந்த உலகத்தில் நாங்களுந்தானே பிறந்தோம்? எங்களுக்குப் பறந்து திரிய உரிமை இல்லையா? உண்டு களிக்க உரிமை யில்லையா? கூடிப்பேச உரிமை இல்லையா?" என ஏங்கித் தவித்தன.

எனக்கு இந்தக் கூட்டம் பிடிக்கவில்லை. ஏதோ ஒரு திக்கை நோக்கிப் பறந்துகொண்டே இருந்தேன்; கடைசியில் சிறகுகள் வலி எடுத்ததால் ஒரு மணல் திட்டில் உட்கார்ந்தேன். உட்கார்ந்து, கொடுமை நிறைந்த இந்தப் புழுக்களின் கூட்டத்தை நினைத்து ஒரு முறை அழுதுவிட்டு யோசனை செய்தேன்.

* * *

என் யோசனை ஆரம்பமாகியது.

"கோடிக்கணக்கான புழுக்களின் கூட்டத்திலே நானும் ஒரு புழுவாக நெளிந்து, அவைகளின் வெளிமினுக்கிலும் ஆடம்பரத்திலும் அடிமைத்தனத்திலும் கலந்து மடிய விரும்பவில்லை. உண்மைக்குக் கிஞ்சித்தேனும் இடமில்லாத இந்த மாய்மாலக் கும்பலைவிட்டு நான் தனித்து நிற்கவேண்டும். தனித்து நின்று என் சக்தியை எல்லாம் ஒன்று திரட்டித் துன்பத்திற்குள்ளாகிய ஜீவன்களின் கண்ணீரைத் துடைக்கவேண்டும். - ஆம், சக்திக்கு எங்கே போவது?

நான் குழம்பிவிட்டேன்; எங்கிருந்தோ இந்தச் சமயத்தில் இருளைக் கிழித்துக்கொண்டு ஓர் ஒலி பிறந்தது. இடி முழக்கம்போன்ற அவ்வொலியைக் கேட்டுப் பிரமித்தேன்.

அவ்வொலியின் வாக்கியங்கள் இவைதான்.

"உன் ஒளி உன்னிடம் உள்ளது; நீ எழுந்து பிரகாசி!"

ஒலி பிறந்த வழியே ஒளியும் பிறந்தது. நான் வியப்போடு கண்களை மலர விழித்து நோக்கினேன். தூரத்து வானிலிருந்து ஒரு நக்ஷத்திரம் என்னை இரக்கத்துடன் பார்த்துச் சிரித்தது.

"உன் குரல்தானா சற்று முன்பு ஒலித்தது? நீ யார்?" என்றேன்.

"நானா? - நான் ஏசு கிறிஸ்து."

என்ன ஆச்சரியம்! இப்போது அது நக்ஷத்திரமாக இல்லை; தாடியும் மீசையும் வளர்ந்த ஒரு தெய்விக புருஷனாக மாறிவிட்டது. அதன் கைகளும் கால்களும் சிலுவையில் அடிக்கப்பட்டு ரத்தம் பொங்கி வழிந்தது. அதன் இதழ்களில் அன்பின் அறிகுறியான புன்னகையா!

"ஏன் உனக்கு இந்தத் தண்டனை?" என்றேன் பயத்துடன்.

"உலகத்தின் போக்கைக் கண்டு மனமிரங்கி, அதற்குத் தொண்டு செய்யக் கிளம்பியதற்குத்தான்! சேவையின் பாதை எவ்வளவு கடினமானது, அதற்காகக் கிடைக்கும் பிரதியுபகாரம் என்ன மாதிரியானது என்று தெரிந்துகொண்டேன்."

"இவ்வளவு துன்பத்திலும் உனக்கு ஏன் அந்தப் புன்னகை?" என்றேன்.

"துன்பமா? எனக்கா துன்பம்? இல்லை; இந்தத் துன்பமெல்லாம் மற்றவரின் இன்பத்திற்காக என எண்ணும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?"

"அப்படியானால் இதோ நானும் தொண்டின் பாதையில் செல்கிறேன்" என்று கிளம்பினேன். ஆனால் அது நடக்கிற காரியமாயில்லை. என்னைப்போன்ற சகோதர மின்மினிகளின் கூட்டம் என்னைத் திரும்பவும் வந்து சூழ்ந்துகொண்டது.

"ஏன் உனக்கு இந்தப் பைத்தியக்காரக் கனவெல்லாம்? எங்களுடன் பறந்து வா! இருப்பவற்றை முடிந்த மட்டும் அனுபவித்துவிட்டுக் குதூகலமாய்த் திரிவோம். யார் எப்படி இருந்தால் நமக்கென்ன?-உம்; எழுந்து வா!" எனப் பின்னுக்கு இழுத்தன.

அவைகளுடன் நான் இதுவரையில் பழகிவிட்டேன். அவைகளின் ஆசாபாசங்கள் அத்தனைக்கும் நானும் பாத்திரமாக இருந்திருக்கிறேன்; அவைகளை முழுவதும் விட்டுப்போகவும் எனக்கு மனம் இல்லை. - இதுதான் இந்த மாய மனத்தின் விசித்திரம்!

ஆனால், - அந்த நக்ஷத்திரம் கூறியதே அந்தப் பாதை?

மீண்டும் ஒரு குழப்பம், நான் மின்மினிக் கூட்டத்துடன் கலந்து இருளில் சென்று மறையப் போகிறேனா? அல்லது ஒளியைப்பற்றி வானத்துத் தாரகைகளில் ஒன்றாய் ஜ்வலித்து உலகத்திற்கு வழிகாட்டப்போகிறேனா?

20

காசு மரம்

1

பணக்கார வீட்டு எலி பூனைகளுக்கு மாத்திரமல்ல, இன்னும் அவர்களுக்குச் சொந்தமான மேஜை, நாற்காலி, தட்டுமுட்டுச் சாமான்கள் முதலிய யாவற்றிற்குமே ஒரு செல்லப் பெயர் வைத்து அழைப்பது அவர்களுடைய

அந்தஸ்தை உயர்த்தக்கூடிய முக்கிய சாதனங்களில் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

எங்கள் ஊர்க் குடியானவர் தெரு மூலையில் குடியிருக்கும் 'கோடி வீட்டு நாகம்மாள்' அந்தப் பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவளல்ல; பிரபுக்களது வாழ்க்கையில் மலிந்து கிடக்கும் குபேர போகங்களைப்பற்றி அவள் கனவுகூடக் கண்டதில்லை. ஆனால், அவளுக்கும் மேற்கூறிய பிரபு வர்க்கத்தினருக்கும் ஒரே ஒரு வகையில் மாத்திரம் ஒற்றுமை இருக்கத்தான் செய்தது. தன்னுடைய வீட்டுக் கொல்லையில் வளர்ந்திருந்த ஒரு சிறு மாங்கன்றிற்கு அவள் காவேரி என்று பெயர் வைத்திருந்தாள்.

நாகம்மாளுக்கு இப்போது ஏறக்குறைய நாற்பது வயசாகிறது. இரண்டு வருஷங்களுக்கு முன்புதான், கண்டிச் சீமைக்கு ஓடிப்போயிருந்த அவளுடைய புருஷன் சுப்பையாவும் சொந்த ஊருக்குத் திரும்பி வந்திருந்தான். அவன் வீட்டிற்கு வந்ததிலிருந்து அவளுக்குக் கொஞ்சம் சாப்பாட்டுக் குறை நீங்கியது. கண்டியிலிருந்து கொண்டு வந்த பணத்தை நன்செய் நிலத்தில் போட்டுவிட்டு, அதன் வரும்படியால் இரண்டு பேரும் சிரமமில்லாமல் காலந் தள்ளினார்கள்.

நாகம்மாளும் சுப்பையாவும் சாயந்தர வேளைகளில் எத்தனையோ தடவை தங்கள் வீட்டுக் கொல்லையில் தனிமையாக உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் அவர்கள் தங்களுடைய மாங்கன்றாகிய காவேரியின் நிழலில்தான் உட்கார்ந்து பேசுவது வழக்கம்.

பேச்சு முடிந்து இருவரும் வீட்டிற்குத் திரும்பும் போது, நாகம்மாள் ஒருவிதமான சோகம் கலந்த பார்வையுடன் தன்னுடைய காவேரியை உற்று நோக்குவாள். உடனே வெப்பம் கலந்த பெருமூச்சொன்று அவளுடைய

மார்பை விம்மச் செய்துகொண்டு சீற்றத்தோடு வெளியே வரும். "அம்மா காவேரி! விளக்கு வைக்கிற நேரமாச்சு, வீட்டுக்குப் போய் வேலையைப் பார்க்கணும்; பத்திரமா இரு அம்மா" என்று அதனிடம் விடை பெற்றுக்கொண்டு வீட்டிற்குள் நுழைவாள்.

2

பத்து வருஷங்களுக்கு முன்பு; அப்போது நாகம்மாளின் வயிற்றில் காவேரி ஒன்பது மாதச் சிசுவாயிருந்தாள். கிராமத்தில் பஞ்சம் பொறுக்க முடியாததாக இருந்தது. வெகு நாளாகச் சேர்ந்தாற்போல் வானம் மழை பெய்யாததால் நிலபுலங்களெல்லாம் வறண்டு போய்ப் புழுதி படிந்து கிடந்தன. குடும்பத்தைச் சமாளிக்க முடியாமல் இரவோடு இரவாய் ஊரை விட்டுக் கிளம்பிச் சம்பாதிப்பதற்காக அக்கரைப் பிரதேசத்திற்குப் புறப்பட்டுவிட்டான் சுப்பையா.

காவேரி பிறந்து இரண்டு வருஷம் வரையில் நாகம்மாள் தன் பேரில் இருந்த ஒரு காணி நிலத்தையும் விற்று, அதைக்கொண்டு ஜீவனம் நடத்திவந்தாள். அந்தப் பணமும் அவளுக்கு அதற்குமேல் கட்டி வரவில்லை.

கணக்கப் பிள்ளை ராஜமையர் வீட்டில் அவளுக்கு மூன்று ரூபாய்ச் சம்பளத்தில் ஒரு வேலை கிடைத்தது. அதிகாலையில் எழுந்து சென்று, அவருடைய வீட்டைக் கூட்டி மெழுகிக் கோலமிட்டுப் பாத்திரம் பண்டங்களை விளக்கிக்கொடுத்து, மற்ற எடுபிடி வேலைகளையும் செய்து வந்தாள். சம்பளப் பணமும், அவர்கள் தினந்தினம் கொடுத்துவந்த பழைய கறி, சாதம், குழம்பு முதலிய பொருள்களும் நாகம்மாளின் அரை வயிற்றைக் கழுவப் போதியனவாக இருந்தன.

அந்த வருமானத்திலும் ஏதோ ஒரு பகுதியை வெகு சிரமத்தோடு மீதம் பிடித்து, அதனால் தன்னுடைய குழந்தை காவேரிக்கு விதவிதமான உடுப்புக்கள் வாங்கிப் போட்டு மகிழ்ந்து வந்தாள் நாகம்மாள். தான் வேலை பார்த்து வரும் வீட்டிலுள்ள பிராம்மணக் குழந்தைகளைப் போலவே தன்னுடைய குழந்தையும் வளர்ந்து வர வேண்டுமென்பது அவளது மனத்தில் இருந்த அந்தரங்க ஆவல்.

காவேரிக்கு வயசு வளர்ந்து கொண்டு வந்ததைப் போலவே, தாயின் மேல் அளவுக்கு மீறிய பாசமும் வளர்ந்துகொண்டு வந்தது. தகப்பன் என்ற ஒருவன் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதைப்பற்றி அவள் கொஞ்சமேனும் அக்கறை எடுத்துக் கொள்ள வில்லை. அந்த மாதிரி ஒரு விபரீத ஏக்கம் தன் மகளுக்கு ஏற்பட்டுவிடக் கூடாதென்பதற்காக நாகம்மாள் காவேரியைக் கவலையோடு கவனித்துவந்தாள்.

ஒரு நாள் சாயங்காலம் பள்ளிக்கூடம் கலைந்தபிறகு காவேரி ஒரு கையில் புஸ்தகத்துடன், மற்றொரு கரத்தில் அவிழ்ந்த பாவாடையைப் பிடித்துக்கொண்டு வீட்டை நோக்கிப் பரக்கப் பரக்க ஓடிவந்தாள். வீட்டின் வெளிப் பக்கத்துத் திண்ணையில் அழுதுகொண்டு உட்கார்ந்திருந்த அவளுடைய தாயைப் பார்த்தவுடன் காவேரியின் பரபரப் பெல்லாம் ஒரே நிலையாக மாறிவிட்டது. கொஞ்ச நேரம் கவலையோடு தாயையே பார்த்துக்கொண் டிருந்துவிட்டு, "என்னத்துக்காகம்மா அழுகிறே?" என்றாள் கொஞ்சலாக.

கண்களைச் சேலை முனையால் துடைத்துக்கொண்டே, "ஒன்றுமில்லேடி கண்ணு" என்றாள் தாய்.

"ஊஹூம்! ஏதுக்காகன்னு சொன்னாத்தான் உன்னை விடுவேன்" என்று சொல்லிக்கொண்டே நாகம்மாளின்

மார்பில் பாய்ந்து அவளை இறுகக் கட்டிக்கொண்டாள் காவேரி.

குழந்தையின் ஸ்பரிசம் தாயின் மேல் பட்டவுடன் அவளுடைய மனம் சற்று நிம்மதியடைந்த மாதிரி தோற்றியது. "எனக்கு இனிமே வேலை கிடையாதம்மா காவேரி; ஐயரை வேறே ஊருக்கு மாத்தியாச்சு; அவுங்க வீட்டிலே எல்லாரும் ஊருக்குக் கிளம்புறாங்க" என்றாள்.

"அதுக்காக நீ ஏம்மா அழுகிறே? ஐயர் வீட்டிலே வேலையில்லாட்டி, நீ இங்கேயே இருந்து என்னைப் பாத்துக் கோயேன்! நான் பள்ளிக்கூடம் போய்ப் படிச்சுட்டுச் சுருக்க சுருக்க வீட்டுக்கு வந்திடறேன்; அப்புறம் நம்ப ரெண்டு பேரும் நம்ப வீட்டு வேலையைப் பார்ப்போம்..."

நாகம்மாளுக்கு அழுகையோடு அழுகையாய்ச் சிரிப்பு வேறு வந்துவிட்டது. ஆர்வம் தாங்காமல் குழந்தையை இரண்டு கைகளாலும் சேர்த்து அணைத்துக்கொண்டு உச்சி மோந்தாள். சந்தோஷ மிகுதியால் அவளுடைய தாயுள்ளம் பூரிப்படைந்தது.

"கவலை யெல்லாம் மறக்கறத்துக்காக எனக்குக் காவேரியைக் கொடுத்திருக்கானே கடவுள்; அது ஒண்ணே போதும், இந்தப் பாவம் செய்த கட்டைக்கு" என்று சொல்லி ஒரு பெருமூச்சு விட்டாள்.

நாளுக்கு நாள் நிலைமை மோசமாகிக் கொண்டே வந்தது. தங்களுடைய காலக்ஷேபத்திற்கு நாகம்மாளால் ஒருவிதமான வழியும் கண்டுபிடிக்க முடியவில்லை. காரணம் தெரியாத கவலைகளும், எதைக் கண்டாலும் வெறுப்பும் அவளுக்கு அதிகமாயின. வெகு நாள் கஷ்டப் பட்டு அலைந்து விரக்தி அடைந்த பிறகு, தோப்பு மேஸ்திரியின் மனைவி அவளைத் தன் வீட்டில் வேலைக்கு அமர்த்திக் கொண்டாள்.

மேஸ்திரியின் வீட்டிலிருந்து சம்பளந்தான் ஐந்து ரூபாய் கிடைத்து வந்ததே தவிர, வேறு விதமான மேல் வரும்படி ஒன்றையும் நாகம்மாளால் எதிர்பார்க்க முடியவில்லை. உள்ள வருமானத்தைக் கொண்டு அப்படியும் இப்படியுமாகக் காவேரியுடன் பொழுதை ஓட்டிவந்தாள்.

பள்ளிக்கூடத்திற்குப் புறப்படப் போகும் சமயத்தில் தினந்தோறும் காவேரியின் கையில் காலணாக் கொடுத்து அனுப்புவது நாகம்மாளின் வழக்கம். கணக்கப் பிள்ளை வீட்டு வேலை தொலைந்துபோன பிறகு நாள் ஒன்றுக்கு ஒரு பைசாவாவது கொடுத்து வந்தாள். அந்தக் காசைக் குழந்தை எவ்விதம் செலவு செய்கிறாள் என்பதைப்பற்றி அவள் கவலை கொள்வதில்லை.

'மற்றப் பிள்ளைகளைப் போலத் தானே ஏதாவது மிட்டாய் வாங்கித் தின்னப் போகிறாள்?' என்று நினைத்தாள்.

ஆனால், காவேரி தினமும் மிட்டாய்க்காரனிடம் காசைக் கொடுப்பதில்லை; எப்போதாவது இரண்டொரு நாளைத் தவிர மற்ற நாட்களிலெல்லாம் அன்னை கொடுக்கும் காசுகளை அவளுக்குத் தெரியாமல் ஒரு மண் கலயத்தில் போட்டு வைத்திருந்தாள்.

ஒரு நாள் நாகம்மாளின் கையில் தம்படிக் காசுகூட இல்லை. "நாளைக்குத் தருகிறேன்" என்று சொல்லிக் காவேரியைப் பள்ளிக்கு அனுப்பிவிட்டாள். அடுத்த நாளும் அவளால் கொடுக்க முடியவில்லை. காவேரிக்குக் கோபம் கோபமாய் வந்தது; மனத்திற்குள்ளேயே பொருமிக்கொண்டு பதில் பேசாமல் படிக்கச் சென்றுவிட்டாள். மூன்றாவது நாள் வந்தபோது, "எப்படியாவது இன்றைக்கு அம்மாவிடமிருந்து காசு வாங்கிவிட வேண்டும்" என்று காவேரிக்குத் தோன்றியது. தாயை நச்சுப்படுத்தினாள் ;

இரண்டு நாளாகக் கிடைத்து வந்த அதே 'நாளைக்கு' என்னும் பதில்தான் அன்றைக்கும் கிடைத்தது. காவேரியால் இந்த ஏமாற்றத்தைப் பொறுக்க முடியவில்லை.

"போ, அம்மா! நீ என்னைக்குக் கேட்டாலும் நாளைக் கின்னே பொய்சொல்றே" என்றாள் முகத்தைச் சுளித்துக் கொண்டு.

நாகம்மாளின் ஞாபகம் அப்போது எங்கேயோ இருந்ததால் குழந்தை குறுக்கே பேசுவதைச் சகிக்காமல், "என்ன காவேரி, ஏன் தொந்தரவு செய்யறே? காசு காசுன்னு தினம் வம்பு பண்ணினா, நான் காசுக்கு எங்கே போறது? நம்ப வீட்டிலே காசு மரமா முளைக்குது!" என்று பொறுமையில்லாமல் குழந்தையின்மேல் எரிந்து விழுந்தாள்.

தன் தாய் தன்னிடம் இவ்வளவு வெடுவெடுப்பாகப் பேசி, காவேரி ஒருநாள் கூடக் கேட்டதில்லை.

தன்னால் எவ்வளவு எண்ணங்களை ஒரே சமயத்தில் எண்ணிப் பார்க்க முடியுமோ அவ்வளவு எண்ணங்களையும் எண்ணிக்கொண்டே, அவள் பள்ளிக்கூடத்தை நோக்கி ஊர்ந்து சென்றாள். அவளுடைய மனம் அன்றைப் பாடத்தில் ஊன்றவேயில்லை; பக்கத்துப் பிள்ளைகளின் பேச்சுக்குக்கூடப் பதில் சொல்லாமல் சுவரோடு சுவராய் உட்கார்ந்திருந்தாள்.

கோபம் கொஞ்சம் தணிந்தவுடன் தாயின் மேல் இருந்த வெறுப்பு முழுவதும் காவேரிக்கு அனுதாபமாக மாறிவந்தது.

"அம்மாளிடம் காசில்லை பாவம்! காசுக்கு அவள் எங்கே போவாள்? காசு முளைக்கிற மரம் அவளிடம் இருந்தால்தானே......? அந்த மரம் மட்டும் இருந்திருந்தால் நமக்குக் காசுக்குப் பஞ்சமே இல்லை. ரொம்ப

ரொம்பக் காசு தருவாள்; கோவிச்சுக்கவே மாட்டாள். அப்பறம் அம்மா பணக்காரிதான்; ஏன், நான்கூடப் பணக்காரக் காவேரிதான்."

காவேரியின் மனம் வெகு நேரம் வரையிலும் காசுகளைப் பற்றியும் காசு முளைக்கக் கூடிய மரங்களைப் பற்றியுமே நினைத்துக்கொண்டிருந்தது. தன்னுடைய கற்பனைக்குத் தகுந்தாற்போல் மானசிகமாக ஒரு காசு மரத்தைத் தனக்குள் உற்பத்தி செய்துகொண்டு, அதன் கிளைகளில் குலுங்கி நிற்கும் காசுகளைத் தன் மனக் கண்ணால் கண்டு அநுபவித்துக்கொண்டிருந்தாள். அந்த மாதிரி ஒரு மரம் தன்னுடைய வீட்டுக் கொல்லையில் அவசியம் இருக்க வேண்டுமென்று அவளுக்குத் தோன்றியது. அதைப்பற்றி யோசித்து யோசித்து, அன்றைக்குப் பள்ளிக்கூடம் விடுவதற்குள் ஒரு முடிவுக்கு வந்து விட்டாள்.

சாயங்கால நேரத்தில் வீட்டில் நாகம்மாள் இல்லாத சமயம் பார்த்து, காவேரி தன்னுடைய கலயத்திலிருந்து சில காசுகளை எடுத்துக் கொல்லையில் ஊன்றி வைத்தாள். வழக்கத்தை அநுசரித்துக் கொஞ்சம் தண்ணீரும் தெளித்தாள். அந்த இடத்திற்கு அடையாளமாக ஒரு சிறு குச்சியும் நட்டு வைக்கப்பட்டது. தினந்தோறும் மறந்து விடாமல் அதிகாலையில் எழுந்து அடையாளத்தைச் சுற்றி லும் தண்ணீர் வார்த்து வந்தாள். வாரம் ஒன்றுக்கு மேலாகியும் அந்தப் பொல்லாத காசுகளில் ஒன்றுவது முளை கிளம்பி வெளியே வரவேயில்லை! மண்ணைக் கிளறிப் பார்த்தபோது எல்லாக் காசுகளும் வேரும் விடாமல், தளிரும் விடாமல் முன்னைவிடக் கறுப்பாகப் பாசி பிடித்துப்போய்க் கிடந்தன. காவேரியின் நம்பிக்கை தளர்ந்து கொடுக்க ஆரம்பித்தது.

3

சில நாட்கள் சென்ற பிறகு காவேரியின் பள்ளிக்கூடத்தில் ஒரு சிறு சம்பவம் நிகழ்ந்தது.

அன்றைக்கு ஒரு பையன் ஆரஞ்சுப்பழ விதை ஒன்றை அப்படியே விழுங்கிவிட்டுப் பள்ளிக்கூடம் வந்திருந்தானும். மற்றக் குழந்தைகளெல்லாம், "நிச்சயம் அந்தப் பயலோட வயத்திலிருந்து ஆரஞ்சு மரம் முளைக்கப் போறது" என்று தங்களுக்குள் குசு குசுவென்று பேசிக்கொண்டார்கள். இந்தப் பேச்சு எப்படியோ காவேரியின் காதுகளில் விழுந்து திடீரென அவளுடைய மனத்தில் ஓர் ஆச்சரியமான மாறுதலை உண்டுபண்ணிவிட்டது.

மாலை பள்ளிக்கூடத்திலிருந்து போகும்போது காவேரி குதித்துக்கொண்டே ஓட்டமும் நடையுமாய் வீட்டை அடைந்தாள்.

அந்த நிமிஷத்திலிருந்து காவேரி நிதானத்தோடு தன்னுடைய வீட்டு நடவடிக்கைகளில் சிரத்தை கொண்டாள். எதற்கெடுத்தாலும் தாயிடம் குறுக்கும் நெடுக்குமாய்க் கேள்விகளைக் கேட்டுச் சந்தேகத்தை நிவர்த்தி செய்துகொண்டாள். சில தினங்களுக்குள் அவளுக்குப் பொதுவாக ஒரு விஷயம் புலப்பட்டுவிட்டது. "காசில்லே; காசில்லே" — அவளுடைய தாயின் வருத்தத்திற்கு இதுதான் முக்கிய காரணம்.

"அட, பாவமே! நமக்குத் தெரியற யோசனை கூட நம் அம்மாவுக்குத் தெரியமாட்டேங்கறதே!" என்று தன் மட்டில் காவேரி ஆச்சரியப்பட்டுக் கொண்டாள்.

தன் யோசனையில் காவேரிக்குத் தீவிரமான நம்பிக்கை இருந்தாலும் தன்னுடைய சிநேகிதி கண்ணம்மாவின் வாயிலாக அதைத் தெளிவுபடுத்திக்கொள்ள

விரும்பினாள். ஆனால் தான் செய்யப்போகும் காரியத்தை ஒருவருக்கும் சொல்லக்கூடாதென்ற பிடிவாதமும் அவளிடம் இருந்தது. ஆகையால் வெகு தந்திரமாகக் கண்ணம்மாவிடம் பேசினாள்.

"நான் ஒரு மாதுளங் கொட்டையை முழுங்கிவிட்டேண்டீ, கண்ணம்மா!" என்றாள் கண்களை அகலத் திறந்துகொண்டு.

"அப்படியானா உன் வயத்திலே யிருந்து கட்டாயம் ஒரு மாதுள மரம் முளைக்கும்" என்றாள் கண்ணம்மா.

உடனே காவேரி பேச்சை மாற்றினாள்: "இல்லேடீ, இல்லே! மாதுளங் கொட்டையை இல்லே; ஒரு காசைத் தான் முழுங்கிட்டேன்."

"சரி, சரி; காசையா முழுங்கினே? காசை முழுங்கினாக் காசு மரம் முளைக்கும்."

"மரம் முளைச்சா, காசு காய்க்குமோ?"

"போடீ, போ! காசு மாத்திரமா காய்க்கும்? ரூபா, அணா, பைசா, நோட்டு, இன்னும் எத்தனை பணம் பூலோகத்திலே இருக்கோ அத்தனையும் கொத்துக் கொத்தாய்க் காய்க்குமே!"

"மரம் எப்படிக் கண்ணம்மா முளைக்கும்?" என்றாள் காவேரி.

"வயத்திலேயிருந்து முளைச்சு, வாய் வழியா மேலே வரும்; வந்தவுடனே பூப்பூக்கும், காய் காய்க்கும்; அப்பறம் எங்கே பார்த்தாலும் கிளைக்குக் கிளை பணம் பணமாய்த் தொங்கும்."

"அந்தச் சமயத்தில் நான் உசிரோடே இருப்பேனா?" என்றாள் காவேரி கலவரத்தோடு.

"நீதான் வயத்திலே காசு முளைச்சு வர்றபோதே செத்துப் போயிடுவியே!" என்று சாவதானமாகப் பதில் வந்தது.

காவேரியின் முகம் சுருங்கிவிட்டது; இருந்தாலும் அதைக் காண்பித்துக் கொள்ளாமல், கண்ணம்மாவிடம் இது விஷயமாக அதிகம் பேச்சுக் கொடுக்கக் கூடாதென்று வீட்டிற்கு ஓடிவந்துவிட்டாள்.

இரண்டு மூன்று நாள் காவேரியின் நெஞ்சிற்குள் இந்தப் போராட்டம் இடைவிடாமல் நடந்துவந்தது: தான் உயிரோடு இருப்பதைத் தாய் அதிகமாக விரும்புவாளா? அல்லது பணந்தான் இப்போது அவளுக்கு முக்கியமாக இருக்கிறதா? கடைசியில் காவேரியின் முடிவுக்கு வந்த விஷயம் பணத்தைப் பற்றியதுதான்.

முதல் நாள் காலையில் ஒரு பைசாவை விழுங்கினாள்; ஒன்றும் பலன் தெரியவில்லை. இரண்டாவது நாள் காலணாவை விழுங்கிப் பார்த்தாள்; அப்போதும் ஒன்றும் தெரியக் காணோம். ஒருவேளை தன்னைக் கண்ணம்மா ஏமாற்றிவிட்டாளோ என்கிற சந்தேகங்கூட அவளுக்கு ஏற்பட்டுவிட்டது.

மூன்றாவது நாள் தன்னுடைய ஆத்திரத்தை எல்லாம் சேர்த்து வைத்து, தான் கலயத்திற்குள் போட்டு வைத்திருந்த அத்தனை காசுகளையும் அள்ளி வந்து ஒவ்வொன்றாகப் போட்டு விழுங்கினாள். போகாததற்குக் கொஞ்சம் தண்ணீரையும் குடித்து வைத்தாள்.

மரம் முளைக்க ஆரம்பித்தது!

அன்றைக்குச் சாயந்தரம் காவேரியின் தலை சுற்றியது; கிறுகிறுப்பு அதிகரித்தது; நிலைகொள்ளாதபடி அடிவயிற்றை இழுத்துப் பிடிப்பதுபோலிருந்தது. வாடித் துவண்டுபோய் மூலையில் உட்கார்ந்திருந்தாள்.

"நிச்சயம் மரம் முளைத்துவிட்டது" என்ற அந்த ஒரு நம்பிக்கை அவளை இத்தனை வேதனைகளையும் சகித்துக் கொண்டிருக்கும்படி செய்தது.

4

இரவு பாதிப் பொழுதுக்கு மேலாகி விட்டது. நாகம்மாளின் வீட்டு அடுப்பங்கரை மூலையில் இருந்த சிமினி விளக்கொன்று, 'உயிரை விடுவோமா, வேண்டாமா?' என்ற சந்தேகத்தில் இருப்பதுபோல் மினுக்கு மினுக்கென்று கண் சிமிட்டிக்கொண்டிருந்தது. நாகம்மாள் தலைவிரி கோலமாய் உட்கார்ந்து தேம்பிக்கொண்டிருந்தாள். அவளுக்கு அருகில் கீழே விரித்திருந்த கிழிசல் சமுக்காளத்தில் குழந்தை காவேரியின் உடல் அலங்கோலமாய்க் கிடந்தது. அவளுடைய உயிர் இன்னும் போகவில்லை. தொண்டைக்கும் நெஞ்சுக்குமாக இழுத்துக்கொண்டு சிமினி விளக்கின் நிலைமையில் இருந்தது.

காவேரியைச் சுற்றிலும் மஞ்சள் மஞ்சளாய் வாந்தி யெடுத்துக் கிடந்தது; அதன்மேலெல்லாம் நாகம்மாள் நெல் உமியை எடுத்துத் தூவி வைத்திருந்தாள்.

வைத்தியகாரப் பண்டிதர் சற்று முன்னே சொல்லிப் போன வார்த்தைகளை நாகம்மாள் நினைத்துப் பார்த்தாள்: "குழந்தைக்கு வயத்திலே களிம்பு ஊறி, பாசி பிடிச்சிருக்கு; ஏதோ என்னாலே முடிஞ்சதைச் செய்யறேன்; உசிரைக் காப்பாத்தக் கடவுளாலேதான் முடியும்."— நாகம்மாளுக்கு அந்த வார்த்தைகளை நினைத்துப் பார்க்கக் கூடப் பயமாக இருந்தது.

"குழந்தை எப்போதும்போலே இருக்கப்போறுள்னு நெனைச்சுத்தானே, இன்னிக்குக்கூட அவளுக்கு ஒரு மாம்பழம் வாங்கிட்டு வந்தேன். என்னை இப்படிச் சோதிக்

திருடோ கடவுள்! அம்மா, காவேரி! என் வயத்திலே பாலே வார்த்திடம்மா..." என்று கோவெனக் கதறினாள்.

காவேரிக்குக் கொஞ்சம் சுய நினைவு வந்தது; தாய் தனக்காக மத்தியானம் வாங்கி வந்த மாம்பழத்தைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு, "அம்மா" என்றாள் ஈனஸ்வரத்தில்.

"ஏண்டா, கண்ணு!" என்று ஆவலுடன் தன் முகத்தை அருகில் கொண்டுபோனாள் தாய்.

"இன்னிமே உனக்கு ரொம்பப் பணம் கிடைக்கும் அம்மா; நான் இன்னிக்கு நிறையக் காசு முழுங்கியிருக்கேன்; நான் செத்துப்போனவுடனே சீக்கிரம் காசு மரம் முளைக்கும். அப்புறம் உனக்குக் கஷ்டமே இல்லேம்மா!", என்று தன் முழுப் பலத்தையும் சேர்த்துக்கொண்டு ஒரே மூச்சில் காவேரி சொல்லி முடித்தாள்.

தாயின் நெஞ்சு ஆயிரஞ் சுக்கலாய் வெடித்து, நாலு பக்கமும் பிசிர் - பிசிராய்ச் சிதறி விழுவதுபோல் தோன்றியது. திகைத்த பார்வையோடு காவேரியைப் பார்த்துக் கொண்டே இருந்தாள்.

சிமினி விளக்கிலிருந்த எண்ணெயெல்லாம் தீர்ந்து போய்த் திரி எரிய ஆரம்பித்தது. ஒளியின் மஞ்சள் நிறம் மங்கிக்கொண்டே வந்து ஊதாவாக மாற்றமடைந்தது.

"நம்பளோடே காசு மரத்துக்குப் பக்கத்திலே இந்த மாம்பழத்தோடே கொட்டையும் நட்டு வச்சிடம்மா!"— அவ்வளவுதான்; கடைசியாக முணுமுணுத்துக்கொண்டே காவேரி தன்னுடைய கரத்திலிருந்த மாம்பழத்தை நழுவ விட்டாள்.

விளக்கு அணைந்தது.

காவேரியின் தேகத்தைப் பிடிவாதமாகத் தன்னுடைய கொல்லையிலே புதைத்துக்கொண்டாள் நாகம்மாள். அதனுடன் அந்த மாங்கொட்டையும் புதை குழியின் மேல் ஊன்றி வைக்கப்பட்டது.

நாகம்மாள் வார்த்து வந்த தண்ணீரினால்தானே, அல்லது அவள் தினந்தோறும் பெருக்கிவந்த கண்ணீரி னால்தானே தெரியவில்லை; எப்படியோ அந்த மாங் கொட்டை மாத்திரம் முளைத்து ஓர் இளங்கன்றாக வளர்ந்து விட்டது.

அந்த மாங்கன்றிற்குத்தான் காவேரி யென்று நாகம் மாள் பெயர் வைத்திருந்தாள்; அதுதான் காசுமரம்.

21

அழகி

சுடுகாட்டை நோக்கிப் புறப்பட்டேன் - வாழ்க்கையின் இறுதி முடிவைத் தேடிக்கொண்டல்ல; ஒருநாள் மாலைப் பொழுதின் சில மணி நேரத்தை அங்கே கழித்துத் 'திரும்பி வருவோம்' என்ற எண்ணத்துடன்தான்!

மயானக்கரை ஆற்றையடுத்தாற்போல் இருந்ததால் எங்கே பார்த்தாலும் சாம்பல் மூடிய மணற்குவியல்கள் திட்டுத் திட்டாய்க் காட்சி யளித்தன. அவைகளினூடே அங்கங்கே முழங்கால் - முழங்கை எலும்புகளும், மார்புக் கூடுகளும், மண்டையோடுகளும் சிதறிக் கிடந்தன. தெற்கு மூலையொன்றில் இப்போதுதான் புதிதாக வந்த ஒரு பிணம் மெதுவாக எரிந்துகொண்டே தன்னுடைய புகைப் படலத்தை அந்தப் பக்கம் பூராவும் பரப்பிக் கொண்டிருந்தது. அந்தப் புகையோடு சேர்ந்துவந்த காற்று, 'இதுதான் மனித தேகத்தின் கடைசி நாடகம்' என்று சொல்லுவதுபோல் தன்னுடைய ஒவ்வொரு அணுவிலும் அந்த உயிரற்ற சடலத்தின் துர்நாற்றத்தைச் சுமந்துவந்தது.

"நடை முறையிலே, சிலருக்குப் பொதுவுடைமை யென்றால் சிம்ம சொப்பனமாக யிருக்கிறது; சிலர்

அதையே 'பேரின்ப வாழ்க்கையென்று' போற்றிப் புகழ்கிறார்கள்; இன்னும் சிலருக்கோ அது ஒன்றிலுமே அடைய முடியாத பகற்கனவாகத் தோன்றுகிறது. ஆனால் அவர்களுக்கெல்லாம் சாவு தனது செங்கோல் ஆட்சியை நடத்தும் இந்த மயானப் பொதுவுடைமை உலகத்தைப் பற்றிக் கொஞ்சமேனும் கவலையே இருப்பதில்லை" என்று எனக்குள் எண்ணிக்கொண்டு என் காலடியில் தட்டுப்பட்ட ஒரு மண்டை ஓட்டை உற்றுப் பார்த்தேன்.

என்ன பயங்கரம்! கண்கள் இருக்கவேண்டிய இடங்களில் இரண்டு பெரிய பெரிய துவாரங்கள்; மூக்குக்குப் பதிலாக அங்கேயும் ஒரு விகாரமான ஓட்டை; முகவாய்க் கட்டையில் கீழுதட்டைக் காணவே காணும்-அந்தக் காட்சியை என்னால் சகிக்க முடியவில்லை.

நான் மேலே நடந்தேன்; என் நினைவு என்னுடன் தொடரவில்லை. அந்த மண்டை ஓட்டைச் சுற்றிச் சுற்றி வட்டமிட ஆரம்பித்தது......................இது யாருடைய மண்டை ஓடாக இருக்கலாம்?

இதற்குப் பதில் எப்படிச் சொல்வது? எந்த ஆதாரத்தை வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்வது? ஆனால் பாழாய்ப்போன நெஞ்சு இதையெல்லாம் லேசில் விட்டு விடுகிறேனென்கிறதா?

தன்னுடைய அர்த்தமற்ற ஆராய்ச்சிக்காக அந்த மண்டையோட்டை நோக்கிக் கேள்வி அம்புகளைச் சொரிந்தது என் மனம்.

"ஏ மண்டை 'யோடே! நீ யார்? எந்த ஊர்? என்ன சாதி? என்ன குலம்? என்ன கோத்திரம்?........ நீ ராவ் பகதூரா? திவான் பகதூரா? ராஜா சாகேபா? :.....ஏழையா? பணக்காரனா?......பிச்சைக்காரனா........ அது சரி, நீ என்னென்ன எண்ணி, என்னென்ன கனவுகள் கண்டு, எத்தனை எத்தனை மனமாளிகைகள் எழுப்பினாய்?........உண்மையைச் சொல்! உன்னுடைய சகோதர

சமூகத்திற்காக உனது வாழ்நாளில் ஒரு மூச்சையாவது நீ ஆண்டவனின் பெயரால் செலவு செய்திருக்கிருயா? ஒரு வேளை, நீ பெண்பிள்ளையோ என்னவோ! யார் கண்டார்கள்? இருந்தாலும் இருக்கலாம்......அதிலும் எந்த வகையைச் சேர்ந்தவளோ? பணத்திலே பிறந்து வளர்ந்து, பணத்திலே வாழ்ந்து, பணத்திலே கால்நீட்டிய பணக்காரப் பிரபுவின் மகளோ, இல்லை தெருத் தெருவாய்த் திரிந்தலைந்து நாள் பூராவும் உழைத்து, நாயினுங் கேடாக வாழ்க்கை நடத்துகிருளே அந்தப் பாட்டாளியின் மகளோ?.........உனது இன்ப துன்பம், இதய ஓலம், அனுபவ ரகசியம் இவற்றையெல்லாம் ஒன்றுகூட ஒளிக்காமல் நீ இந்த உலகத்தில் வேறு யாரிடமாவது மனம் விட்டுச் சொல்லியதுண்டா? அல்லது அவை யாவுமே உன் உடம்பைப்போல் மண்ணோடு மண்ணாய்ச் சாம்பலோடு சாம்பலாய் மடிந்துபோய் ஒன்று கலந்து விட்டனவா?.........சுத்த சூன்யம்!.........எவ்வளவுதான் உன்னைத் துருவித் துருவிக் கேள்விகள் கேட்டாலும், கொஞ்சங்கூட உனக்கு என்மேல் இரக்கமே இல்லை......கேள்விகளில் ஒன்றிற்கேனும் உன்னிடமிருந்து பதிலைக் காணும்......ஆனால், இதுமட்டும் உண்மை; இதை யாருமே மறுக்க முடியாது: நீ ஒரு இறந்துபோன மனித ஜன்மத்தின் மக்கிப்போன மண்டையோடு! நீயும் இன்னும் சிறிது காலத்தில் இருந்தவிடம் தெரியாமல் போகப் போகிருய்; ....ப்பூ! இவ்வளவுதானே உன் வாழ்க்கை!"

ஆரம்பமான இடம் எதுவோ அதே இடத்திற்கு ஒரு முடிவும் காணுமல் அலுத்துச் சலித்துப்போய்த் திரும்பி வந்தது என் மனம்.

மன மயக்கத்தின் காரணமோ, அல்லது பிண வாடையின் விளைவோ, தெரியவில்லை; இருந்தாற்போலிருந்து திடீரென்று என் தலை சுழன்றது. உலகமே நிலை தடுமாறி என் கண்ணெதிரே மிதப்பதுபோல் உணர்ந்தேன். சற்று

நேரத்திற்கெல்லாம் அருகிலிருந்த ஒரு நாணற் புதரை நாடி ஆயிரம் ஆயிரம் எண்ணங்களை ஒரே சமயத்தில் எண்ணிக்கொண்டே ஸ்மரணையற்றுக் கீழே விழுந்தேன்.

அதன் பிறகு நடந்ததெல்லாம் பகற்பொழுதின் அரைத் தூக்கத்தில் தோன்றிக் கலையும் சிறு கனவைப் போல் எனக்கு ஞாபகத்தில் இருக்கிறது.

அந்த மண்டையோடு உருண்டுகொண்டே என் பக்கத்தில் வந்து, "இப்போது என்னைப் பாருங்கள்!" என்றது இனிமையான குரலில்.

உற்று நோக்கினேன்; என் கண்களை என்னால் நம்பமுடியவில்லை - அங்கே மண்டையோட்டிற்குப் பதிலாக ஓர் அழகிய இளம் யுவதி என் முகத்தில் தன் பார்வையைப் பதித்தவாறே உட்கார்ந்திருந்தாள். அவளது பார்வையிலிருந்து என் விழிகளை அகற்ற எனக்குப் போதிய தைரியம் எழவில்லை. பிசாசைப் பற்றிய கதைகளில் நான் படித்த மோஹினியின் ஞாபகம் எனக்கு அப்போது வந்தது.

"நீ என்ன மோஹினியா?" என்று கேட்கலாமா என நினைத்தேன்; ஆனால் அவளது தோற்றந்தான் என்னுடைய வாயை அடைத்து என்னைப் பயத்தால் ஊமையனாக்கிவிட்டதே!

அவளுடைய அணியழகையும், உடையழகையும், அவளிடமிருந்து வீசிக் கொண்டிருந்த சுகந்தத்தின் இனிமையையும் அனுபவித்துக்கொண்டே சில நிமிஷங்கள் மெய்ம் மறந்து விட்டேன்.

மறுபடியும் அவள் தன்னுடைய குயில் போன்ற குரலில் பேச ஆரம்பித்தாள்.

"இவ்வளவு நேரம் என்னைப்பற்றி நீங்கள் வீண் ஆராய்ச்சி செய்து மண்டையை உடைத்துக் கொண்டீர்களே எனறு உங்களிடம் என் கதையைச் சொல்ல வருகி

கிறேன்; ஆனால் ஒன்று......" என்று அரை குறையோடு நிறுத்தினாள்.

"என்ன?" என்று கேட்பதுபோல் முகத்தை உயர்த்தினேன்.

"நான் என் கதையைச் சொல்லிக்கொண்டு போகும் சமயத்தில் அதற்குத் தகுந்தாற்போல் சிற்சில இடங்களில் என் உருவம் மாறிக்கொண்டு வரும்; அதைக் கண்டு நீங்கள் பயப்படக் கூடாது."

இதைக் கேட்டதும் எனக்குப் புதிதாக ஒன்றும் பயம் தோன்றவில்லை. ஏனென்றால், ஒரு மனிதன் ஒரு சமயத்தில் எவ்வளவு தூரம் பயப்பட முடியுமோ அவ்வளவு தூரம் ஏற்கனவே அந்த "மோஹினி"யைக் கண்ட மாத்திரத்தில் நான் பயந்திருந்தேன்!

ஆகையால் 'உண்டு - இல்லை' என்று ஒரு பதிலும் சொல்லாமல் அவளிடம் மௌனம் சாதித்தேன்.

அவளும் என் பதிலை எதிர்பாராமல் தன்னுடைய கதையை ஆரம்பித்தாள்:

"நான் ஒரு கோவிலுக்கு அடிமைப்பட்ட தாசி வயிற்றுப் பெண் - தாசியின் வயிற்றில் பிறந்தேனென்றால் 'தகப்பன் யார்?' என்று என்னைக் கேட்கக்கூடாது தெரியுமா? என்னுடன் கூடப்பிறந்தவர்கள் ஒருவருமே இல்லை. என்னுடைய பத்தாவது வயதுவரையில் எனக்கு இவ்வளவுதான் தெரியும்: எங்கள் வீட்டிற்கு அடிக்கடி பல 'பெரிய மனிதர்கள்' வருவார்கள். அவர்களிடமெல்லாம் என் தாய் என்னைப்பற்றி மிகவும் அக்கறையோடு பல விஷயங்களை விவாதிப்பாள் - 'நம்முடைய பெண் தங்கமணியை (அதுதான் என் பெயர்) என்னைப்போல் துரதிருஷ்டிசாலியாக வைக்கக்கூடாது. தகுந்த இடத்தில் விட்டு அவளுக்குப் பாட்டும் நாட்டியமும் சொல்லிக் கொடுக்கச் சொல்லவேணும். ஒரு காலத்தில் அவளுடைய

பாட்டி ஒரு பெரிய ஜமீனையே தன் கைக்குள் வைத்திருந்ததுபோல் இவளுக்கும் அப்படிப்பட்ட வல்லமை வரும்படி செய்யவேணும்' என்றெல்லாம் அவர்களிடம் கூறிக்கொண்டிருப்பாள்.

எனக்குப் பதினைந்து வயதானபோது என் குரல் சங்கீதத்தில் நன்றாகத் தேர்ச்சி பெற்றிருந்தது. அத்துடன் வீணையும் நடனமும் நன்றாகக் கற்றிருந்தேன். முதல் முதலாக - ஆமாம், அதுதான் கடைசித் தடவையும் - எனது நடனம் எங்கள் ஊர்ச் சிவன் கோவிலிலேயே ஆரம்பமாகி அரங்கேற்றப்பட்டது. அதற்கு என் தாயார் எங்கெல்லாமோ அழைப்பு அனுப்பியிருந்தாள்; கூட்டமென்றால் கூட்டம் சொல்லிமுடியாது. நாலா பக்கங்களிலிருந்தும் சனங்கள் ஏராளமாக வந்திருந்தார்கள். அத்தனை பேருக்கும் மத்தியில் என்னுடைய நடனத்தை வெற்றிகரமாக முடித்து வீட்டிற்குத் திரும்பிவந்தேன்.

அடுத்த நாளையிலிருந்து என் வீட்டிற்கு வந்து செல்லும் பிரபுக்களின் எண்ணிக்கை தினந்தோறும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ஆனால் முன்போல் அவர்களெல்லாம் இப்போது என் தாயாரைத் தேடிக்கொண்டு வரவில்லை. என்னுடைய சங்கீதக் கச்சேரிகளை வெளியூர்களில் நடத்துவதற்கும், வெவ்வேறு நகரங்களின் ஆடரங்குகளில் என் நடனத்தைக் கண்டு களிப்பதற்கும், இன்னும் என்ன என்னவோ பற்பல விபரீத காரணங்களுக்குமாக என் இருப்பிடத்தைச் சூழ்ந்து எந்நேரமும் மொய்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்னுடைய தாயாரின் கனவு நனவாகியது; எதிர்பார்த்ததற்கு அதிகமான பிரமுகர்கள் எனக்குப் பழக்கமானார்கள்; எதிர்பார்த்ததற்கு அதிகமான வரும்படியும் கிடைத்துவந்தது.

இந்தச் சமயத்தில்தான் ஒரு கோடீசுவரர் எனது வாழ்க்கையில் குறுக்கிட்டார். அவருக்கு வயது ஐம்பதுக்கு

மேலிருந்தாலும் என் தாயாரின் வேண்டுகோளை என்னால் மறுக்கமுடியவில்லை. 'அழகையும் அறுகையும் பார்த்தால் நாம் இந்தக் குலத்திலேயே பிறந்திருக்க வேண்டாமே!' என்று வேதாந்தம் பேசினாள். அதுவுமல்லாமல் அந்த மனிதர் இருந்ததுபற்றியும் எனக்கு ஒரு விதத்திலும் குறைவு ஏற்படவில்லை. - அவரிடமிருந்துதான் என் தாயார் எனக்கு எல்லா வழிகளிலும் 'சுதந்தரம்' வாங்கித் தந்திருந்தாளே!

நீங்கள் கேட்கலாம், 'பொழுதை இந்தமாதிரியே சாரமில்லாமல் ஓட்டிக்கொண்டிருந்ததில் நீ என்ன இன்பத்தைக் கண்டாய்' என்று. ஆனால் அந்த வயதில் இந்த விதமான கேள்வி என்னிடம் எழவேயில்லை. என்னுடைய தாயாரின் போதனைகள் இடைவிடாமல் என்னிடம் பணத்தின் பெருமையைப்பற்றியும் எனது அப்போதைய மதிப்பைப்பற்றியும் ஞாபகமூட்டி வந்ததால் எனக்கு அந்த வாழ்க்கையே மிகவும் திருப்திகரமாயிருந்தது. என்னையொத்த மற்ற பெண்களிலிருந்து நான் எவ்வளவு தூரம் மாறிப்போயிருக்கிறேனென்பதும் என்னுடைய செயல்கள் எவ்வளவு தூரம் பாபகரமான இயந்திரச் செயல்கள் என்பதும், எனக்கு என் தாய் உயிருடன் இருக்கும்வரையில் தோன்றவேயில்லை. - ஆனால் அந்தோ! எனது நாற்பதாவது வயதில் அவளும் மறைந்தாள். என்னைச் சனியனும் தொடர்ந்தது."

[அந்த 'மோஹினி' இப்போது மோஹினியாக இல்லை; அவளிடமிருந்து கம கமவென்று வீசிக்கொண்டிருந்த வாசனைத் தைலங்களின் வாடை இப்போது நின்றுவிட்டது. அவளது கருத்த கேசத்தின் ஊடே அங்கங்கே நரைமயிர்கள் விழுதோடியிருந்தன. சுருங்கிய நெற்றியுடனும், ஒட்டிய கன்னங்களுடனும், குழி

விழுந்த கண்களுடனும், காட்சி கொடுத்தாள் அவள்.]

"அதற்குப் பிறகு என் வாழ்க்கையை ஏன் கேட்கிறீர்கள்? துக்கமும், துயரமும் நாற்றமும் நிரம்பிய பயங்கரச் சாக்கடை அது.

அந்தப் பணக்காரக் கிழவன் சொல்லிக்கொள்ளாமல் என்னைவிட்டுக் கிளம்பிவிட்டார். மற்ற மனிதர்களும் என் இருப்பிடத்தை மிதிப்பதற்குக்கூட மனம் நடுங்கி அவர்களுடைய அலுவல்களைக் கவனிக்கத் தொடங்கிவிட்டார்கள். நான் கண்டும் கேட்டும் அறியாத நோய்கள் என்னைப் பட்டாளம் பட்டாளமாய் படையெடுக்க ஆரம்பித்தன. இந்தப் பரந்த உலகத்திலோ கடைசியாக என்னிடம் உறவுகொண்டவை என்னுடைய இறந்தகால நினைவுகளும் அக்காலத்தின் செய்கையாலேற்பட்ட வினையின் நிழலுந்தான். அவைகள் இரண்டிற்கும் தினந்தோறும் நடந்துகொண்டிருந்த போராட்டத்தில் எனக்கு ஒரு நிமிஷம் போவது ஒரு யுகமாகத் தோன்றியது."

[இந்தச் சமயத்தில் தங்கமணியின் சுருங்கிய தேகத்தில் எங்கே பார்த்தாலும் வியாதியின் குறிகள். அவைகளிலிருந்து துர்நாற்றம் சகிக்க முடியவில்லை; ஈயை விரட்டிக்கொண்டே தன் கதையில் ஈடுபட்டிருந்தாள் அந்த 'தாசிப் பெண்.']

"என்னுடைய பரம்பரைச் சொத்து, நான் தோன்றிச் சம்பாதித்தது. இன்னும் என் தாயாரின் வீடு வாசல் தோப்புத் துரவு அத்தனையும் இந்த தேகத்தைக் காப்பாற்றுவதற்காகச் செலவு செய்தேன். கணக்கற்ற வைத்தியர்களின் கையில் என்னை ஒப்படைந்தேன். ஆனால் பாபத் தொழிலால் ஏற்றுக்கொண்ட சுமை வெறும் மருந்துகளின் உதவியால் மாத்திரம் ஒருவாறுடையிருந்து

விடைபெற்றுக்கொள்ளுமா? அதையறியாது என்னுடைய கடைசிச் சல்லிவரையில் வைத்தியர்களுக்குக் கொடுத்த பிறகு என்னைப்பற்றி உன்னி உன்னியே காலங் கழித்தேன். கடைசியில் சாவு வந்து எனக்கு ஒரு வகையில் அவ்வுலக வாழ்விலிருந்து விடுதலை அளித்தது. இதுதான் என் கதையின் முற்பகுதி."

'அப்படியானால் இன்னும் இதற்குப் பிற்பகுதி வேறு இருக்கிறதா?' என்று கேட்பதுபோல் ஆச்சரியத்தோடு விழித்துப் பார்த்தேன். அந்தக் கிழவியை - தங்கமணியை - அங்கே காணோம்; எங்கேயோ மாயமாய் மறைந்துவிட்டாள். நான் முதன் முதலில் பார்த்த அந்தப் பழைய மண்டை ஓடுதான் அங்கே கிடந்தது.

"அதிகமொன்றுமில்லை; கொஞ்சந்தான் இருக்கிறது" என்று பதிலளித்துவிட்டு மேலே பேசத் தொடங்கியது மண்டையோடு.

"நான் இறந்துபோன அன்று இரவு இந்த மயானத்தில் எனது சிதையின்மேல் ஓர் அதிசய சம்பவம் நிகழ்ந்தது. காலை இளம் சூரியனைப்போல் முகமும், அதிலே கருணை ததும்பி வழியும் கண்களும், புன்னகை அரும்பிய மலரும் வதனமும் கூடிய ஓர் இளைஞர் இங்கு சோதியின் மத்தியில் தோன்றினர். தன்னை மறந்த நிலையில் அவரது இளந்தளிர்ப் பாதங்கள் 'ஜல் ஜல்'லென்று சிலம்பொலி இசைக்க சாந்தத்தின் மோனத்தோடு சேர்ந்து நடனமாடின. கார்முகில் போன்ற அவரது முடியில் பிறை மதியும், பெரு நதியும் இடம் பெற்றிருந்தன. கரங்களில் மானும், மழுவும், உடுக்கையும், சூலமும் தாங்கியிருந்தார். வெண்ணீறு பூத்துப் புலித்தோல் போர்த்த செஞ்சோதி மேனியில் எங்கே பார்த்தாலும் அரவங்கள் இழைந்தன.

நடனத்தின் முடிவிலே அவர் மலரிதழ்களிலிருந்து சில மணிமொழிகள் உதிர்ந்தன.

'மகளே! எங்கும் நிறைந்த நாம் உன்னை இந்த உலகிற்கனுப்பி உனக்குக் கல்வியும், கானமும், நடனமும் கற்பித்தோம். மாசற்ற அழகையும் யௌவனத்தையும் உன்பால் சொரியச் செய்தோம். மற்ற மனிதர்களைப் போல் உனக்கு அறிவையும் அளித்து அவ்வறிவிற்கறிவாக அவ்விடத்தே ஒரு மூலையில் நாமும் அமர்ந்தோம்.

'இவ்வுலகத்தைக் கலைகள் நிறைந்த பூஞ்சோலையாக்க நினைத்து உன்பாலளித்த கலைச் செல்வங்களத்தனையும் நீ கண்தெரியாத காமக்கடலில் கொண்டுபோய்க் கொட்டி விட்டாய். உனது உடலையும், உயிரையும், உணர்ச்சியை யும் செம்பிற்கும், வெள்ளிக்கும், தங்கத்துக்குமாக மாற்றி வைத்துக்கொண்டு விற்று அதனால் உன் வீட்டைத் தங்க மாளிகை யாக்கிக்கொண்டாய். எங்கும் நிறைந்து உன் னுள்ளே மனச்சாட்சியாக நின்ற என்னை உன்னால் கண நேரங்கூட நினைத்துப் பார்க்கமுடியவில்லை.

'உன் குற்றத்தை ஆரம்பத்திலேயே உணர்ந்து என்னைச் சரணடைந்திருந்தால் உனது பிற்கால வாழ்க் கையே வேறுவிதமாக இருந்திருக்கும். ஆனால் நடந்ததை நினைப்பதில் பயன் என்ன?'

'வினையின் விளைவை அனுபவித்துக்கொண்டு உன் னைப்போல ஆயிரம் ஆயிரம் உதாரணங்கள் இன்னும் உலகில் உழன்று கொண்டிருக்கின்றன. இவற்றைக் கண்டாவது எஞ்சிய மானிட சமூகம் விழிப்படைந்து தூய்மையான வழியில் என்னை வந்தடையட்டும்!'

"அதற்கப்புறம் அந்தப் பெருமான் திடீரென்று பேரொளியில் மறைந்துவிட்டார்" என்று சொல்லி அந்த மண்டையோடும் திடீரென்று காரிருளில் மறைந்து விட்டது!

* * *

"சாமி.........சாமி" என்ற முரட்டுக் குரலொன் றின் அதட்டலைக் கேட்டு எனது மயக்கத்திலின்றும்

திடுக்கிட்டெழுந்தேன். என் எதிரே ஒரு பருத்த ஆசாமி தலையில் கட்டிய பெரிய முண்டாசுடன் நின்றுகொண்டிருந்தான். அவன் கையில் நீண்ட மூங்கிற் கழியொன்றிருந்தது.

"என்னப்பா, நீ யார்?" எனக் கேட்கலாமா என்று நினைத்தேன். அதற்குள் அவனுடைய குரல் மறுபடியும் குறுக்கிட்டது.

"இந்த நேரத்திலே உங்களுக்கு சுடுகாட்டிலே என்ன சாமி வேலே?......நாணற் புதரிலே படுத்துக் கவலையில்லாமல் தூங்குறீங்களே!"

"நீ யாரப்பா? உனக்கு இங்கே என்ன வேலே?" என்றேன் கண்களைத் துடைத்துக்கொண்டே.

"இந்தக் காட்டிலே எனக்குப் பொணங்காக்கிற தொழிலுங்க......"

எனக்குக் கொஞ்சங் கொஞ்சமாக சுய நினைவு வந்தது.

"ஏன் சாமி! நீங்க நம்ப ஊருதானே?.........சரி, வாங்க போகலாம். மணி ஒம்பதுக்கு மேலே ஆச்சு."

மேலே வானத்தைப் பார்த்தேன்; பிறைச் சந்திரன் ஒரு மேகத்திற்குள் ஒளிந்துகொண்டு சுடுகாட்டுக் காட்சியைத் திருட்டுத்தனமாக அனுபவிப்பது தெரிந்தது.

"தங்கமணி சொல்லிய கதையில் அவளைப்பற்றியே தான் எல்லாக் குறைகளையும் சொல்லிக்கொண்டாளே தவிர, அந்தமாதிரித் தொழிலுக்கென்றே ஒரு சாதியை ஏற்படுத்தி வைத்திருக்கும் ஆண்களின் கூட்டத்தைப் பற்றி அவள் ஒன்றுமே குறைகூறவில்லையே!............ பாவம், இவ்விதக் கொடிய குணத்திற்கு ஆளாகும் ஆண் குப்பல் ஒன்று உலகத்தில் இருக்கும் வரையில் அவளைப் போன்றவர்களுக்கு விமோசனமே கிடையாதென்பது அவளுக்குத் தெரியாதுபோலிருக்கிறது" என்று எண்ணிக் கொண்டு, அந்தப் பிணம் காக்கும் பேர்வழியுடன் எழுந்து நடக்கலானேன்.

22

சுதந்திரப் பறவை

வாசலிலே இரும்புச் சங்கிலிகளின் சலசலப்புச் சத்தம் கேட்டது. கையிலிருந்த பத்திரிகையைத் திறந்த படியே வைத்துவிட்டு எழுந்திருக்காமலே வெளியே பார்த்தேன். நெஞ்சு ஒருகணம் திக்கென்று நின்றுபோய் மறுபடியும் கட்டற்ற வேகத்துடன் அடித்துக்கொண்டது.

"யாரது ரெத்தினசாமியா?" என்று ஆத்திரத்துடன் கேட்டுக்கொண்டே அவசரமாக எழுந்து வெளியே ஓடி வந்தேன். வெளி வாசற் கதவருகில் நான் வருவதற்கும், அந்த மூவரும் என் வீட்டு வாசலைக் கடந்து செல்வதற்கும் சரியாக இருந்தது.

"ரெத்தினசாமிதானே?" என இரண்டாவது தடவை நான் வாய்விட்டு உரக்கக் கத்தியபோது சிகப்புத் தொப்பி அணிந்த அந்த ஜெயில்போலீஸ் என்னைத் திரும்பிப்பாராமலே ஆம் என்பதற்கறிகுறியாக இயந்திரம்போல் தலையசைத்துவிட்டு முன்போலவே வேகமாக நடந்தான்.

அந்தப் போலீசுக்குப் பின்னால் முன்னும் பின்னுமாக இரண்டு கைதிகள் தங்களது தோட்களின்மேல் ரத்தின சாமியின் பிரேதத்தைச் சுமந்து சென்றனர். அவர்களது கைகளில் அப்போது விலங்குகள் காணப்படவில்லை. கால்களில் மாத்திரம் தாராளமாக நடந்து செல்லும் அளவுக்குத் தளைகள் போடப்பட்டிருந்தன.

விலங்குகளின் சலசலப்புச் சத்தம் கொஞ்சங் கொஞ்சமாய்க் குறைந்துகொண்டே வந்து கடைசியில் அறவே நின்றுவிட்டது. நான் கண் இமையாமல், அவர்கள் தொலைவில் சென்று மறையும் வரை பார்த்துக்கொண்டே

நின்றான். எனது பள்ளித்தோழன், மாஜி சிறைக் கைதி ரெத்தினசாமி, தற்போது சுதந்தர புருஷனாகித் தன் லைசிட் பிரயாணத்தை இரண்டு கைதிகளின் தோட்கள் வாயிலாக நடத்திக் கொண்டிருந்தான்! அவன் உடலைப் போர்த்தது இப்போது ஒரு கோடித்துண்டு; கழுத்துக்கு ஓர் ரோஜாப்பூ மாலை!

ஜெயில் போலீஸின் மனதில் என்ன சந்தேகமோ, என்ன பயமோ தெரியவில்லை; நொடிக்கு நொடி தன் கைத் துப்பாக்கியையும், கைதிகளையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடந்தான்.

என்னால் வெகுநேரம் இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. கண்களில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டு மறுபடியும் பார்த்தபோது, அவர்கள் எங்கோ தூரத்து ஜன சந்தடியில்ஒன்றாய்க் கலந்துவிட்டார்கள்.

சற்று நாழிகை சென்று என் மனம் தனக்குத்தானே சமாதானம் சொல்லிக்கொண்டது.

"இனி அவனுக்காகச் சிறிதேனும் வருந்தாதே! அவன்தான் காவற் கட்டுக்களையும், கோட்டை கொத்தளங்களையும் தாண்டிவிட்டானே! அவனை இனி முள்வேலிகளும், மதிற்சுவர்களும், இரும்புக் கதவுகளும் ஒன்றுஞ் செய்யமுடியாது, பிரம்படிகளின் வேதனையையும், துப்பாக்கி முனைகளின் அச்சத்தையும் அவன் தற்போது பொருட்படுத்தும் நிலையில் இல்லை; அவன் சுதந்திரப் பறவை!.........இத்தனை நாட்களாய் ஏங்கிக்கொண்டிருந்த இன்பத்தை இன்று அணைந்துகொண்டு, அவன், விடுதலைச் சிறகடித்து விர்ரெனப் பறந்து செல்கிறான். இனியும் அவனுக்காகக் கவலை ஏன்? கண்ணீர் ஏன்?"

பெருமூச்சு விட்டவண்ணம் திரும்பவும் வந்து திண்ணையில் உட்கார்ந்தேன். பத்திரிகை கீழே அலங்கோலமாய்க் கிடந்தது.

2

எங்கள் பள்ளிக்கூடத்தில் நடந்த சம்பவம் இது. அன்று மாணவர்களுக்குப் பரிசு வழங்கும் தினம். ரெத்தினசாமிக்கும் பரிசுகள் கொடுக்கும்போது தலைமை உபாத்தியாயர் பேசினார் :—

"விளையாட்டுக்களில் கெட்டிக்காரனாக இருப்பவன் அனேகமாகப் படிப்பில் சிரத்தை யில்லாதவனாய்த்தான் இருப்பான். படிப்பில் சூரப்புலி என்றாலோ, அனேகமாக அவனுக்கும் ஓட்ட ஆட்டங்களுக்கும் அதிக தூரமாய்த் தான் இருக்கும். இவ்விரண்டிலும் ஒன்றாய்த் தேர்ச்சி பெற்றவனைக் காண்பது மிகவும் அரிது. அத்தகைய ஒரு வனை நம் பள்ளிக்கூடம் அடைந்திருக்கிறது.

ரெத்தினசாமி வெறும் புத்தகப் புழுவல்ல ; எழுத்தில் உணர்ச்சி பொங்குகிறது. உண்மையில் எதிர்காலத்தின் சிறந்த தலைவனாவதற்கு அவனிடம் அறிகுறிகள் காணப் படுகின்றன. அவன் விரைவில் ஒரு பெரிய ஸ்தானத்தை நம்மிடையே வகிக்கப்போகிறான்..."

அவர் இன்னும் எவ்வளவோ அவனைப் பற்றிப் பேசினார். அவ்வளவிற்கும் அவன் தகுதியானவன் தான். அவனிடம் எங்களுக்கு ஒரு தனி மதிப்பு உண்டு ; செல்வாக்கு இருந்தது. அவனது தன்னலமற்ற சுபா வத்தால் நாங்கள் அனைவரும் அவன்பால் கவரப் பட்டோம்.

அப்போது அவனுடைய அப்பா பர்மாவுக்குச் சென்று ஒரு நல்ல உத்தியோகத்தில் இருந்தார். சம்பளம் நிறைய வந்துகொண்டிருந்தது. அவன் மட்டிலும் அங்கு செல்லா மல் இங்கேயே தங்கி விட்டான். அவனுக்கு அம்மா கிடையாது. அப்பா இங்கிருந்து புறப்படுவதற்கு முன் னரே, நாலைந்து வருடங்களுக்கு முன்பாக, இரண்டாம் கல்யாணம் செய்துகொண்டார். அவருக்கு இப்போது ஆணும் பெண்ணுமாக இரண்டு குழந்தைகள்.

மாதம் தவறாது ரெத்தினசாமிக்குப் பணம் வரும். நன்றாகச் செலவழிப்பான். கவலையில்லாமல் பொது விஷயங்களில் ஈடுபட்டுப் பொழுது போக்குவான். எப்போதும் ஹாஸ்டலில் அவன் அறை கலகலப்பாகவே இருக்கும்.

3

ரெத்தினசாமியின் முகம் பேயறைந்ததுபோல் இருந்தது. பித்துப்பிடித்தவன் போல் கலைந்த தலைமயிரை வாராமல் என் அறைக்கு வந்தான். அவனுடைய குரல் மிகக் கடுமையாக இருந்தது. "நான் இனிமேல் படிக்கப் போவதில்லை சேது! இன்றைக்கே படிப்பை விட்டுவிட்டேன்; ஏதாவது பிழைப்புக்கு வழி தேடப்போகிறேன்!" என்றான்.

சமாதானப் படுத்தி விஷயத்தைக் கேட்டேன். அவன் தகப்பனார் வெடி விபத்துக்குள்ளாகி ரங்கூனில் இறந்துவிட்டார். சித்தி குழந்தைகளுடன் கால் நடையாகவே பர்மாவைக் கடந்து இந்தியா வந்துசேர்ந்தாள். வழியில் பையன் தவறிவிட்டான்; பெண் குழந்தையோடு கல்கத்தாவில் ரயிலேறி இங்குவந்து சேர்ந்திருக்கிறாள். அவனுடைய படிப்பின் முடிவு யோசனையைக் கேட்டவுடன் தலைமை ஆசிரியர் நடுங்கிவிட்டார். "அடுத்த வருடத்திலிருந்து உனக்கு உபகாரச் சம்பளம் வாங்கித் தருகிறேன்; உன்னைப்பற்றிய எல்லா விஷயங்களையும் நான் கவனித்துக் கொள்கிறேன். எப்படியாவது கொஞ்ச நாள் பொறுத்துக்கொண்டிரு; படிப்பைப் பாதியில் விட்டுவிடாதே" என்றார்.

அவன் யாருடைய பேச்சையும் கேட்கவில்லை; யாருடைய உதவியையும் கோரவில்லை. அன்றே பெட்டி படுக்கைகளை எடுத்துக்கொண்டு ஹாஸ்டலை விட்டுக் கிளம்பினான். அப்புறம் அந்த வருடம் முழுவதும் அவன் எங்கள் ஊரில் காணப்படவில்லை.

4

நான் சென்னையில் மேல் படிப்பை ஆரம்பித்த சமயத்தில் ஒரு நாள் தினசரிப் பத்திரிகை யொன்றில் இந்தச் செய்தி காணப்பட்டது. அதைப் படித்தப்படியே அவ் விடத்தில் வாயடைத்து உட்கார்ந்துவிட்டேன். சில தினங்கள் வரை அடிக்கடி என் நினைவு அச் செய்தியைச் சுற்றியே சுழன்றுகொண்டிருந்தது.

'இளைஞனின் விபரீதச் செய்கை' என்ற தலைப்பின்கீழ் "ரெத்தினசாமி என்னும் வாலிபன் தனக்கு வேலை கொடுக்க மறுத்த காரணத்திற்காக திருச்சி பாங்கர் சுந்தரேசனைக் கடுமையாகத் தாக்கிவிட்டான். அருகிலிருந்த அவர் மனைவி கூச்சலிடவே, வீட்டு வேலைக்காரர்கள் ஓடி வந்து அவனைப் பிடித்துப் போலிசாரிடம் ஒப்படைத்தனர். பாங்கரின் நிலைமை கவலைக்கிடமாக இருக்கிறது."

மேற்கண்ட செய்தியைப் பிரசுரித்த அதே பத்திரிகை பின்னும் ஒரு மாதம் கழித்து, 'ரெத்தினசாமிக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது' என்னும் செய்தியையும் பிரசுரித்திருந்தது.

5

ரெத்தினசாமியின் செய்கையைப்பற்றிய விபரத்தை சென்னையில் என்னைப் பார்க்க வந்த நண்பன் ஒருவன் எனக்கு விபரமாகக் கூறினான்.

" அவன் பள்ளிக்கூடத்தை விட்டு நேரே தம் பந்துக்கள் வசிக்கும் ஒரு கிராமத்திற்குச் சென்றான். அங்கு ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தித் தன் சித்தி கொண்டுவந்திருந்த சொற்பப் பொருளைக்கொண்டு இரண்டு மூன்று மாதங்கள் வாழ்க்கையை நடத்துவதற்கான சாமான்களை வாங்கிவைத்தான். அதற்குள் எப்படியேனும் தான் ஒரு வேலையுடன் திரும்பிவந்து அவர்களைத் தன்னுடன் அழைத்துக்கொள்வதாகச் சொல்லிப் புறப்பட்டான்.

"எங்கெங்கோ வேலைக்காக அலைந்தான். சித்தியிடம் வாங்கிவந்த பணமெல்லாம் காலியாகிவிட்டது வேலை கிடைத்தபாடில்லை. கடைசியில் திருச்சி வந்து பாங்கர் சுந்தரேசனிடம் வேலைக்காக மன்றாடினான். ஆனால் பள்ளிக்கூடத்தின் பக்கமோ, மாணவ நண்பர்களிடமோ அவன் ஒருபோதும் வரவில்லை.

"நிர்க்கதியாக நிற்கும் சித்தியையும், அவள் குழந்தையையும் காப்பாற்றவேண்டும். உங்கள் பாங்கில் ஏதாவது ..."

"பாங்கர் நல்லவர்தான்; தன்னால் முடியாது என்று சொல்லி அனுப்பியிருப்பார். ஆனால் விதி அவரை விடவில்லை. தன்னுடைய இரண்டாந் தாரம் இளம் மனைவி அருகில் இருந்ததால் தனது ஹாஸ்யத்தை அவளுக்குக் காண்பிக்க விரும்பி, "ஆள்தான் வாட்டசாட்டமாயிருக்கிறாயே. இக்காலத்தில் பட்டாளத்திற்குப் போகலாமே!" என்றார்.

ரெத்தினசாமிக்குச் சுரீர் என்றது. ஆனால் அதைப் பொருட்படுத்ாதவன்போல் "இங்கு அவர்கள் இருவரையும் தனியே விட்டுவிட்டு, நான் கண்காணா இடத்திற்குப் போகவேண்டுமே என நினைக்கிறேன். இல்லாவிட்டால் ...." என்று இழுத்தான்.

"என்னப்பா பிழைப்புக்கு வழியில்லையென்றால் இதையெல்லாம் பார்த்து முடியுமா? உன் சித்தி என்ன அப்படி இளையவளா? அல்லது கோஷாவா?"

பக்கத்தில் நின்ற அவர் மனைவி குனிந்தவண்ணமே 'கொல்'லென்று சிரித்தாள்.

ரெத்தினசாமி காலையிலிருந்து இதுவரையில் பட்டினி; பசி மயக்கம் போதாதென்று அவனுக்கு அன்று வந்த கடிதமும் அப்படியிருந்தது. அவன் சித்தி எழுதியிருந்தாள், அடுத்தநாள் பொழுதுவிடிந்தால் என்ன செய்வதென்று!'

இந்தச் சமயத்திலா இந்தப் பரிகாசம்? அதுவும் ஒரு பெண்பிள்ளையின் எதிரிலா தன் ஏழ்மையைக் கண்டு, தன் பட்டினியைக் கண்டு, ஒருவன் இப்படிக் கேலி செய்வது? அந்தப் பெண்ணின் முகத்தை அப்போதுதான் ஏறிட்டுப் பார்த்தான். அவளும் அப்போதுதான் தன் கணவனைப் பார்ப்பதைவிட்டு, இவன் பக்கம் திரும்பினாள். அந்த முகம்! கல்லூரியில் எங்களுடன் ஒன்றாகப் படித்த பணக்காரப் பெண் யமுனா!

அவன் வெறிகொண்டான். பக்கத்து மேஜையில் கிடந்த ரூல் கழி பாங்கரை நோக்கிச் சுழன்றது. பின்பு? பத்திரிகையில் படித்த செய்திதான்!

6

சென்னையிலிருந்து திரும்பி வந்ததும், முதல் வேலையாய் அனுமதி பெற்றுக்கொண்டு அவனைச் சிறையில் பார்க்கச் சென்றேன்.

ஆ! ரெத்தினசாமிதானா அவன்? என் கண்கள் என்னைக் கேலி செய்தன. மாணவர்களின் கூட்டத்து மத்தியிலே, பின்புறம் கைகளைக் கட்டிக்கொண்டு போர்க்களத்து வீரன்போல் உணர்ச்சி பொங்கும் வார்த்தைகளைக் கொட்டும் என் ஆருயிர் நண்பன் ரெத்தினசாமி எங்கே? அதல பாதாளத்தில் சுழலும் பஞ்சடைந்த விழிகள் கொண்ட இந்த எலும்புக்கூடு எங்கே?

"நல்லவேளை! இத்தனை காலம் சென்றாவது உனக்கு என் நினைவு வந்ததே! அது கிடக்கட்டும்; இப்போது வந்ததே சரிதான். இன்னும் கொஞ்ச நாள் தாமதித்திருந்தாயானால், நான் உன்னைப் பார்க்காமலே கண்ணை மூடியிருப்பேன்.

அவன் நோய்க் கட்டிலில் படுத்திருந்தான். இவ்வளவு மோசமான நிலைக்கு அவன் வந்தவுடன் திரும்பவும் எழுந்திருப்பான் என்ற நம்பிக்கை எனக்கில்லை. நான் இவ்

வளவு நாள் அவனைப் பார்க்க முடியாததற்கு அவனிடம் காரணம் கூறிவிட்டு அவனைப்பற்றி விசாரித்தேன்.

அவன் திடீரென்று, பாதியில் நிறுத்தியவன் பேச்சை ஆரம்பிப்பதுபோல் ஆரம்பித்தான்.

"சேது! நான் இந்திரியங்களை வென்ற மகானுபாவனாகிவிடவில்லை. அவற்றை வெல்லும் வழிகளும் எனக்குத் தெரியாது. ஒடுக்கப்பட்ட என் ஒவ்வொரு உணர்ச்சியும் இந்த நாலு சுவர்களின் கடின மறைவுக்குப் பின்னே என்னென்ன உருவங்களுடன் வெளியேறிப் பேய்போல் என்னைப் பிய்த்துத் தின்கின்றன தெரியுமா? - என் ஆசைக்கொரு அளவில்லையப்பா! நாளுக்கு நாள் எத்தனை எத்தனை ஆசைகள் புதிது புதிதாய்த் தோன்றித் தலை விரித்தாடுகின்றன தெரியுமா? அந்த ஆசைகள் என் பள்ளிக்கூடத்து ஆசைகளைப்போல் அவ்வளவு மேன்மையானவை அல்ல. நாடு, தேசம், மக்கள், மொழி, முன்னேற்றம் இவைகளைப்பற்றியெல்லாம் எனக்கு இப்போது கவலை இல்லை. என் கவலை, கனவு, நினைவெல்லாம் இப்போது நான், நான், நான்!

"ஒருவேளை நல்ல சாப்பாட்டிற்காக, ஒருநாள் மாலை நேரத்தின் கடற்கரைக் காற்றுக்காக, ஒருநாள் பௌர்ணமி இரவின் சௌந்தர்ய நடைக்காக நான் எவ்வளவு ஏக்கம் ஏங்கித் தவிதவித்திருக்கிறேன் தெரியுமா ?

மனிதனைச் சிறையிலிட்டால் அவனைத் திருத்தி விடலாமென்று நினைக்கிறார்களே, அது வெறும் பொய்க் கனவு! எனக்கு மரண தண்டனை விதித்திருந்தால் நான் அதைச் சந்தோஷமாக ஏற்றிருப்பேன். என்னை இங்கு இவர்கள் சாகவும் விடவில்லை. பிழைக்கவும் விடவில்லை."

"ஒருமுறை நான் தப்பி ஓடப் பார்த்தேன். அதன் வெகுமதியைப் பார்!"

இப்படிச் சொல்லி அவன் தன் முதுகைத் திருப்பினான்' என் விழிகள் அம்முதுகைக் காணச் சகியாமல் வெடித்து

விடுவனபோல் விரிந்தன. என்ன கோரம்! ஒருகாலத்தில் நிகரற்ற தலைவனாய் வரப்போகிறானென நாங்கள் மனப் பால் குடித்த அந்த நண்பனது முதுகில், தென்னை மரத் தின் மட்டைகள் விழுந்த வரம்புகள்போல், பிரம்படித் தழும்புகள் காட்சியளித்தன.

நான் கண்ணீர் விட்டுக் கதறினேன். அதிகாரி என்னை வெளியே அனுப்பிவிட்டார். அவன் அன்றொருநாள் எங் கள் கூட்டத்தில் கர்ஜித்த சொல் எனக்கு அப்போது ஞாபகம் வந்தது. "மனித சமுதாயத்தின் தற்போதைய சட்ட திட்டங்கள் சுயநலக் கும்பலின் உற்பத்தியாகும். அவற்றை அடியோடு வேரறுத்துவிட்டு, நாம் ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டும்."

வாசலிலே திரும்பவும் இரும்புச் சங்கிலிகளின் சத்தம் கேட்டது. போய்ப் பார்த்தேன். கைதிகள் ஈர மண் ஒட்டிய மண்வெட்டிகளோடு தங்கள் சிறைக்கூடத்தை நோக்கி நடந்துகொண்டிருந்தார்கள்.

23

வஸந்த நினைவு

அது வஸந்த காலம். செடிகளும், கொடிகளும் பூத்துக் குலுங்கும் காலம். வண்டுகளும், வண்ணாத்திப் பூச்சிகளும் தேனுக்காகப் போட்டியிடும் காலம். ஏன்? எனக்கும் அவளுக்கும் கூட அப்போது வஸந்த காலந் தான்!

அந்த வஸந்தம் போய்விட்டது. அடுத்த வஸந்தம் வந்தது. ஆனால் எனக்கல்ல, வெளி யுலகத்திற்கு. அதன் பிறகு இப்படியே ஒன்பது வஸந்தங்கள் வந்து, வந்து போயின.

இவ்வருடமும், அதோ அந்தக் காம்பவுண்டிற்கு அப்பால் நிற்கும் அரசமரத்தைப் பாருங்கள். நேற்று

இலையுதிர்த்து, திக்கற்ற அனாதைபோல் மொட்டையாய் நின்றது, இன்றைக்குக் கணவனின் வரவு நோக்கிக் காத்திருக்கும் புதுப்பெண்போல, பசும் பொற் றளிர்களால் முகத்திரையிட்டுக் காத்து நிற்கிறது.

நான் பெரு மூச்சு விட்டேன்: எனக்கும் இனி வஸந்த காலம் வருமா?

1

நான் இந்தக் கிராமத்திற்குப் புதிது. இங்கிருக்கும் ஆஸ்பத்திரிக்கு டாக்டராக வந்து பத்து நாட்கள்தான் இருக்கும். நோயாளிகள் அதிகம்பேர் வராததால் பொழுதுபோவதே சிரமமாயிருந்தது.

அன்று பகல் முழுவதும் வழக்கம்போல் ஒரு வேலையு மில்லாமல் உட்கார்ந்திருந்தேன். இரவில்தான், பத்து மணிக்குமேல் யாரோ வந்து என் அறைக் கதவைத் தட்டினார்கள். வெளியே வந்து பார்த்தபோது ஒரு கூட்டம் எனக்காகக் காத்திருந்தது.

அந்த ஊர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வண்டியி லிருந்து கீழே விழுந்துவிட்டாராம். முழங்காலில் பெருத்த காயம். அதற்காகத்தான் அத்தனை ஜனங்கள் வந்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஒரு ஸ்திரீ, அவர் மனைவியாக இருக்கவேண்டும். குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு வந்திருந்தாள்.

கை விளக்கை வைத்துக்கொண்டு ஒரு விதமாகக் காயத்தைக் கட்டிக்கொண்டிருந்தேன். அவருடைய குழந்தைகள்-அவைகளுக்கு எப்படித்தான் தங்கள் தந்தையின் வேதனை தெரியுமோ - ஓயாமல் வீரிட்டழுதன. மனைவியும் துக்கம் தாங்காமல் கதறினாள். எனக்கு அவர்களுடைய நிலைமையைக் காண மனந்தாளவில்லை. விரைவில் வேலையைக் கவனித்து எல்லோரையும் வீட்டிற்கனுப்பினேன்.

ஆனால், அதன் பிறகு நான் படுக்கையில் சென்று படுத்தபோது எனக்குத் தூக்கம் வரவில்லை. விபரீதமான பல எண்ணங்கள் முளைத்துத் துன்புறுத்தின. அந்த ரெவின்யூ இன்ஸ்பெக்டரின் மனைவி மக்கள் அவருக்காக ஆஸ்பத்திரியில் அழுத குரல் இடையிடையே விட்டுவிட்டு ஒலித்துக்கொண்டிருந்தது.

"ஆமாம், உனக்கு இப்படி ஏதாவது துன்பம் நேர்ந்து விட்டால், உன் துன்பத்தைக் கண்டு கண்ணீர் விடுவதற்கு உனக்கு இப்படி ஒரு மனைவி வேண்டாமா?" என்று எனக்குள் ஒரு குரல் என்னையே கேட்பது போலிருந்தது.

சரியான கேள்விதான். எனக்கும் எத்தனையோ நண்பர்கள் இருக்கிறார்கள்; இருந்தாலும் அவர்களது அன்பு, நம் வாழ்க்கையிலேயே இரண்டற ஒன்றிப் போகக்கூடிய ஒரு பெண் ஜன்மத்தின் அன்புக்கு ஈடாகுமா? - இம்மாதிரி எண்ணத்திற்கு இன்றுதான் என் மனம் இடம் கொடுத்தது.

இதற்கு முன் ஒரே ஒரு தடவை என் உள்ளத்தில் பசுமை கண்டேன்; அதுவும் வெப்பத்தினால் வறண்டு போய்விட்டது; மீண்டும், இனியேனும் அதில் மழை பொழியுமோ என்னவோ!

2

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் சாம்பசிவத்திற்கு பூரண சுகமாகிவிட்டது. அவர் என்னுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தார். அவரைப்போல் ஒரு நண்பர் எனக்கு அந்தச் சமயத்தில் கிடைத்தது எவ்வளவோ சௌகரியமாக இருந்தது.

ஒருநாள் அவர் திடீரென்று என்னிடம், "என் சம்சாரத்திற்கு உங்களை ஏற்கெனவே தெரியுமாமே! நேற்றுத் தான் பத்மா இதை என்னிடம் சொன்னாள்" என்றார்.

"பத்மாவா!—"

என் ரோமம் சிலிர்த்தது. இதயம் நின்று நின்று அடித்துக்கொண்டது.

"நான்தான் அன்று கவனிக்கவில்லையென்றால், பத்மாவாவது என்னிடம் சொல்லியிருக்கக் கூடாதா?"

"அவளுக்கும் அப்போது உங்களைச் சரியாகத் தெரிந்துகொள்ள முடியவில்லையாம்; பெயரை விசாரித்துத் தெரிந்துகொண்ட பின்புதான் சந்தேகம் நீங்கியதாம்" என்றார்.

இன்னும் அவர் என்னிடம் ஏதேதோ பேசிக்கொண்டிருந்துவிட்டுப் புறப்பட்டார். அவர் அப்போது என்னிடம் என்ன பேசிக்கொண்டிருந்தாரோ தெரியாது. என் கவனமெல்லாம் பழையகாலக் குப்பைகளைக் கிளறுவதில் மும்முரமாயிருந்தன.

3

பத்மா பட்டணத்தைச் சேர்ந்தவள்; நானும் பட்டணத்தைச் சேர்ந்தவன். இருவரும் அவரவர்கள் சித்தி வீட்டிற்கு, அந்தக் கிராமத்திற்கு வந்திருந்தோம். அந்த ஊரின் சிவன் கோயிலில்தான் நாங்கள் முதல் முதலில் சந்தித்தது.

"ஏது! திடுதிப்பென்று இந்தக் கிராமத்தில்கூட ஒரு நவ நாகரிகம் காட்சியளிக்கிறதே!" என்று நினைத்தேன். அவளும் என்னைப் பார்த்தபோது அப்படித்தான் நினைத்திருக்கவேண்டும். அதை அவளுடைய பார்வை சொல்லியது.

எங்கள் சந்தேகம் உடனுக்குடன் தீர்ந்துவிட்டது.

"இதோ, இந்தப் பிள்ளையாண்டானும் பட்டணத்திலிருந்துதான் வந்திருக்கிறான்; இவனை உனக்குத் தெரியுமோ?" என்றாள் அவளோடு வந்திருந்த அவள் சித்தி.

"பட்டணம், இந்தப் பட்டிக்காட்டைப்போல் இல்லை சித்தி; இவரை நான் பார்த்ததே இல்லை!" என்று சொல்லி

விட்டு, "நீங்கள் பட்டணத்தில் எங்கே இருக்கிறீர்கள்?" என்றாள்.

நான் பதிலளித்தேன். அப்போது ஆரம்பமான எங்கள் பேச்சு, அன்றிரவு பத்துமணிக்குத்தான் முடிந்தது.

அடுத்த நாளிலிருந்து ஒன்று, அவள் என் வீட்டிற்கு வந்துவிடுவாள்; இல்லாவிடில் நான் அவள் வீட்டிற்குப் போய்விடுவேன். இருவருக்கும் பேச்சில் பொழுது போவதே தெரியாது.

என்னிடம் பேசிய நேரம்போக மற்ற சமயத்திலெல்லாம் அவள் கவனம் தையல் வேலையில் ஈடுபட்டிருக்கும். நான் பாரதி கவிதையில் ஆழ்ந்துவிடுவேன். அவளுக்குக் கலர் நூலும், கைக்குட்டைகளும் எப்படியோ அப்படி எனக்குப் பாரதி.

நாட்கள் பறந்தன; அதைப் போலவே என் நெஞ்சும் எதையோ நினைத்து உயர உயரப் பறந்தது. அதிகம் கூறுவானேன்? அவளை என் இதய தெய்வமாக்கினேன்; அத்துடன் அவளைப்பற்றியும் இபபடி நினைத்தேன்:

எனது உள்ள நெகிழ்வை அவள் இன்னும் தெரிந்து கொள்ளாமலா இருக்கப் போகிறாள்? அவள் என்னுடன் பழகும்போது எவ்வளவு சந்தோஷமாக, எவ்வளவு மலர்ச்சியுடன் ப்ழகுகிறாள்! அவளது கருவிழிகள்தான்,—பாற்கடலில் மிதக்கும் கரு நீலப்படகுகள்தான், என்னிடம் தினந்தினம் எத்தனையோ இன்பக் கதைகள் சொல்லுகின்றனவே! இன்னும் என்ன சந்தேகம்?

ஆனாலும் நான் நிம்மதியடையவில்லை. அவளை முற்றிலும் தெரிந்துகொள்ள வேண்டுமென்று, அதற்காக ஒரு முயற்சி செய்தேன். அது எவ்வளவு பைத்தியக்காரத்தனமென்று எனக்கு அப்போது தெரியவில்லை. வயது இருபத்திநான்கல்லவா?

4

இரவு பகலாய்க் கண்விழித்து ஒரு படமெழுதினேன்; பூஞ்சிட்டொன்று, சிவந்த ரோஜா இதழைக் கவ்விக் கொண்டு ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு 'ஜிவ்' வென்று தாவிச்செல்கிறது. அந்த இதழில் "என் அருமை பத்மாவுக்கு" என்று ஆரம்பித்துக் கீழ்க்கண்ட வரிகள் காணப்படுகின்றன. பாரதி பாட்டில் ஒரு சிறு மாற்றம். அவ்வளவுதான்.

காற்று வெளியிடைக் கண்மணி—நின்றன்
காதலை எண்ணிக் களிக்கின்றேன்.

இந்தக் கடிதத்தை எவ்வளவு அழகுபடுத்த முடியுமோ அவ்வளவு அழகு படுத்தி அவள் அறைக்குக் கொண்டுபோனேன். நல்லவேளை; அவளைத் தவிர அங்கு வேறு யாரும் இல்லை.

கடிதத்தை அவள் பார்த்தாள். பார்த்துவிட்டு, "இதோ பாருங்கள், பரசு!" என்றாள்.

அவள் குரல் என் நெஞ்சில் அறைந்தது. இமைகளை மெதுவாக உயர்த்தினேன்; அவைகள் அதே கணம், அவளைக் காண வெட்கிக் கீழே தாழ்ந்தன.

"நல்ல ஆண்பிள்ளைகள்!"-மறுபடியும் வெறுப்போடு, ஒரு சொல் அம்பு வெளிப்பட்டது.

நானாகத்தான் வீடு வந்துசேர்ந்தேனோ, அல்லது என் பாதங்களின்கீழ் இருந்த தரைதான், அதன் இருப்பிடத்திலிருந்து பெயர்ந்து என்னை என் வீட்டிற்குக் கொண்டு வந்து தள்ளியதோ தெரியாது.

பெட்டி படுக்கையுடன் அன்றே சென்னைக்குக் கிளம்பினேன். சித்தி ஒன்றும் தெரியாமல் கலங்கினாள்.

5

பத்து வருஷங்கள் ஆகப்போகின்றன. ஆனால் நேற்று வரையில் என்னிடம் தெளிவில்லை. காரணந்தெரியாத ஒரு புதிரைக்குறித்து எனக்குள் ஏங்கிக்கொண்டிருக்கிறேன். - இந்த ஏக்கத்திற்கு முடிவே கிடையாதா? சாகும்வரையில் இந்தச் சந்தேகம் தெளியாதா?

அந்தக் காலத்தில் அவள் பேச்சு, விளையாட்டு, சிரிப்பு, பார்வை இவற்றிற்கெல்லாம் என்ன பொருள்? நினைந்தவறினாலும், அவளது வருகை தவருதே, அவ்வளவு அன்போடு பழகினாளே!- இத்தனையும் செய்துவிட்டு என் புனிதமான வேண்டுகோளை உதாசீனம் செய்தாளே, இதன் அர்த்தமென்ன? அவளால், அத்தகைய வெறுப்புக் குள்ளாகும்படி நான் செய்த குற்றமென்ன?...... பாசாங்குக்காரி! அத்தனையும் வேஷமும், நடிப்பும், சாகஸமுந்தானோ?

சந்தேகம் தெளியும் நாள் வந்துவிட்டது. என் கேள்விகளுக்கு நான் பதிலறிந்துகொண்டேன். அவளே- நண்பர் சாம்பசிவத்தின் மனைவி பத்மாவே-இதை என்னிடம் தெரிவித்தாள். ஒரு நாள் அவள் தன் குழந்தைகளை அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்தபோது இந்தச் சந்தர்ப்பம் கிடைத்தது.

"உங்களுக்கு உயிருக்குயிரான ஆண் நண்பர்கள் இருக்கிறார்களே, அவர்களுடன் நீங்கள் நெருங்கிய தொடர்பு வைத்துக் கொள்வதில்லையா? அவர்கள் சுக துக்கங்களில் நீங்கள் கலந்து கொள்வதில்லையா? அவர்களுடன் பொழுது போக்குவதில் நீங்கள் உற்சாகம் கொள்வதில்லையா? ... யோசித்துப் பாருங்கள். ஆண் வர்க்கம், ஆண் வர்க்கத்துடன் மட்டுந்தான் சிநேகம் பாராட்ட வேண்டுமென்ற நியதி எங்காவது உண்டா?

"அந்தச் சமயத்தில், அந்தக் கிராமத்தில் உங்கள் நட்பு எனக்கு எவ்வளவோ அருமையாக இருந்தது. உங்களுடைய பெருந்தன்மையைப் பற்றியும், கண்ணிய சுபாவத்தைப்பற்றியும் என் மாமா பிள்ளையிடம் - இப்போது என் அகத்துக்காரராயிருப்பவரிடம் - பெருமை யடித்துக்கொள்ளவேண்டுமென்றிருந்தேன். ஆனால், கடைசியில்தான் தங்கள் மனம் எனக்குத் தெரிந்தது.

"உங்கள்மேலும் குற்றம் இல்லை; அது வயதின் கோளாறு. உங்களைத் திடீரென்று கோபித்துக் கொண்டதைப்பற்றி நான் எத்தனை நாட்கள் எனக்குள் வருத்தப் பட்டிருக்கிறேன் தெரியுமா? அன்றைக்கே உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும். நீங்கள் தான் உடனே ஊருக்குக் கிளம்பிவிட்டீர்களே!........... கிடக்கட்டும்; இதுவரையில் நடந்தவற்றை மறந்துவிடுங் கள். நானும் அவரும் சீக்கிரம் உங்கள் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்கிறோம்" என்று சொல்லி விடு சென்றாள்.

வாசலில் மலர்ந்த வஸந்த புஷ்பம் தன் மணத்தை உள்ளே வீசியது.

முற்றும்

